# திருநாவுக்கரசர்
## ஓர் ஆய்வு

முதற் பகுதி



வை. இரத்தினசபாபதி

இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு-40

பொதுப் பதிப்பாசிரியர் :
டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்

# திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு

முதற் பகுதி

# திருநாவுக்கரசர்

## ஓர் ஆய்வு

### முதற் பகுதி


டாக்டர் வை. இரத்தினசபாபதி

வித்துவான்., பி.ஓ.எல்., எம்.ஏ., பிஎச்.டி.

ரீடர்

இராதாகிருஷ்ணன்

மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்

சென்னைப் பல்கலைக் கழகம்



இராதாகிருஷ்ணன்

மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1984

© சென்னைப் பல்கலைக் கழகம், 1984

விலை ரூ. 14/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை, 600 013.

# பதிப்புரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெய்யுணர்வு ஆராய்ச்சித்துறை 1927 செப்டம்பர் மாதத்தில் நிறுவப் பெற்றது. 1964 ஆகஸ்டு மாதத்தில் இத்துறையைப் பல்கலைக் கழக மானியக் குழுவானது மேல் நிலைக் கல்வி மையமாக ஆக்கியது. 1976 முதல் இதன் பெயர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் என்பதாயிற்று. 1977 செப்டம்பரில் இத்துறையானது தன்னுடைய பொன்விழாவைக் கொண்டாடியது.

இந்நிறுவனத்தின் செயல் திட்ட அறிக்கையானது மூன்று கொள்கைகளை வரையறை செய்து வழிகாட்டுகிறது. 1. தமிழகம் தழுவிய 2. இந்தியநாடு தழுவிய 3. உலகந் தழுவிய தத்துவக் கொள்கைகளைத் தனித்தும் இணைத்தும் ஆய்வதுடன், மக்கள் வாழ்வுச் சிக்கல்களுக்குரிய விளக்கமும், அவைகளைத் தீர்ப்பதற்குரிய செயற்பாட்டு வடிவமும் கொடுத்து, அவர்களின் நல்வாழ்விற்கு ஆக்கவழியிலான அமைப்பையும் உருவாக்கித் தருதல் வேண்டும் என்பதே. இவ்வகையில், தமிழகத்தில் வரலாற்று மாந்தர்களாகவும் அதே சமயத்தில் சைவ சமய அருட்பெருங்குரவர்களாகவும் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்திய நால்வர் பெருமக்களின் சமுதாயத் தொண்டும், சைவப் பணியும், இந்நாளில் மக்கள் அவர்களை எவ்வாறு பின்பற்றுதல் வேண்டும் என்ற அமைப்பும் இணையச் சிந்தித்த சிந்தனையின் வடிவமாக நால்வர் பெருமக்களையும் பற்றிய நூல்களை வெளியிட வேண்டும் என்பது எம் நிலையத்தின் செயல் முறைத் திட்டப்பணி. அப்பணி வரிசையில் திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு இரண்டு பாகங்கள் முறையே 1981, 1982-இல் வெளிவந்தன. இப்போது திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு முதற்பகுதி இவ்வாண்டில் வெளிவருகிறது. இதனை எழுதியவர் இந்நிறுவனத்தின் துணைப்பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி ஆவர். இவருடைய வீரசைவம் என்ற நூல் இந்நிறுவனத்தின் பொன் விழா வெளியீடாக 1977-இல் வெளி வந்தது. அடுத்து, பன்னிரு திருமுறைகளையும் சிவஞான போதப் பன்னிரண்டு நூற்பாக்களையும் இணைத்துச் சிந்தித்து எழுதப் பெற்ற முதல் ஆய்வு நூலாகத் திருமுறைத் தெளிவே சிவஞான போதம் என்ற நூல் 1979-இல் வெளி வந்தது.

மெய்யுணர்வுத்துறை தொடங்கப் பெற்ற போது அதனை விரிவாகவும் உயர்வாகவும் அமைத்த பேராசிரியர் காலஞ்சென்ற S. S. சூரியநாராயண சாஸ்திரி அவர்களுக்கும், திட்டமிட்ட

கொள்கைகளைச் செயற்படுத்தி நின்ற பெருந்தகைகளாகிய, இந் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர்கள் டாக்டர் T. M. P. மகாதேவன், டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி ஆகியோர்களுக்கும் நிறுவனம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் ஆக்கவழிச் செயல்களை அவ்வப்போது உட னிருந்து அமைதியுடன் கேட்டும் அரவணைத்தும், ஆக்கவழிக் கருத் துக்களை வழங்கியும் நெறிப்படுத்தி வருகிற சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், மூதறிஞர், பேராசிரியர் எம். சாந்தப்பா அவர் களுக்கும், தனிப்பரிவுடன் எங்கள் திட்டங்களுக்குச் செயல்வழி ஆக்கம் புரிந்து வரும் பதிவாளர் அவர்களுக்கும், பல்கலைக் கழக ஆட்சிக்குழு / அலுவலக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவனத்தை மேல்நிலைக் கல்வி நிறுவனமாக உயர்த்திப் பத்து ஆண்டுகள் வரை பொருள் உதவி செய்ததோடு அமையாது, பின்னரும் இந்நிறுவனத்தின் முன்னேற்றத்தில் பரிவுகாட்டி அரவணைத்து வரும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் மொழிக் கொள்கையும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உயர் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றும் ஆகிய தமிழ்மொழி வளர்ச்சியை மனத்துட் கொண்டு இவ்வரிசை ஆய்வு நூல் தமிழிலேயே எழுதப் பெற்று வெளியிடப் பெறுகிறது.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த சென்னை, அவ்வை அச்சுக்கூடத்தாருக்கு என் நன்றி.

சென்னை —5
*15—3—1984*

**இரா. பாலசுப்பிரமணியன்**
இயக்குநர்
பொதுப் பதிப்பாசிரியர்

# ஆக்கியோன் முன்னுரை

திருநெறியத் தமிழ் என்னும் திருப்பதிகத் தமிழ் நெறியைத் தோற்றுவித்து, வளர்த்து நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர். அவ்வாறே திருநின்ற செம்மை என்ற பெயரில் திருத்தொண்டு நெறியைக் கொள்கையாகவும் செயல் முறைப் பட்டிகையாகவும் அமைத்த தோடன்றி, செயற்பாட்டு நிலையில் அமைந்த வரலாற்று வாழ்வியல் நிகழ்வுகளைக் கொண்டவர் திருநாவுக்கரசர். சமுதாயத்தில் நிகழும் சமயமாற்றம் என்பதன் பல்வேறு சூழல்களையும் காரணங்களையும் ஆய்ந்து விளக்கங் காட்டியும், தீர்திறன் என்ன என்றருளியும் சைவ சமயத்துக்குப் பல வகையான அரண்களை அமைத்துக் காத்தவர் திருநாவுக்கரசர். திருநாவுக்கரசரைச் செயற்படுத்திய திலகவதியார் திருத்தொண்டு நெறியினுக்குக் கட்டளைக் கல்லாக அமைந்தவர்கள்.

சேக்கிழார் எழுதிய பிறகு சைவசமய நாயன்மார்களின் வரலாற்றுண்மைகளை வேறு யாரும் எழுத வேண்டிய அவசியம் இல்லை. சேக்கிழாருக்குப் பிறகும் பலர் இத்துறையில் ஈடுபட்டுச் சைவசமய நாயன்மார்களின் வரலாறுகளை, கொள்கைகளை எழுதியுள்ளார்கள். அவர்கள் பணிகளுக்குப் பிறகும் இந்நிறுவனத்தின் சார்பில் எழுத வேண்டிய கட்டாயத் தேவை அமைந்துள்ளது. எழுத வேண்டிய கட்டாயத்தை உணரவில்லையானால் இந்நூல் தந்து நிறுத்தும் செய்திகள் தேவைதானா என்ற ஐயம் வரும். திருவருள் அத்தகையோருக்குத் துணை செய்யவில்லை என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை. காலம் பின்னின்று எழுப்பிய வினாக்களைச் சந்தித்தவர்களும் விடை அளிக்க முடியாமல் நின்றுவிட்ட பிறகு, எழுப்பப் பெற்ற வினாக்களுக்கு விடையளிக்கும் கடப்பாட்டில் இச்செயல் அமைகிறது.

'திருஞானசம்பந்தர் — ஓர் ஆய்வு' என்ற பெயரில் இரண்டு பகுதிகள் முறையே 1981, 1982 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. 'திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு' என்பதன் முதற்பகுதி இவ்வாண்டில் வெளி வருகிறது. அடுத்த ஆண்டில் இதன் இரண்டாம் பகுதி வெளி வரும். சைவசமய நாயன்மார்களின் வரலாற்றுப் பின்னணி, வாழ்வியல் நிகழ்வுகளின் விளக்கக் கொள்கைகள் என்பவைகளே உள்ளீடுகளாக அமைந்தன. இருவருடைய வரலாற்று நுட்பங்கள் வெளி வந்தபின் இருவரும் ஆற்றிய சமுதாயப் பணிகள், இருவரும் உலகத் தத்துவ, சமய, அற மையங்களுக்குத் தமிழகத்தின் சார்பிலும் சைவத்தின் சார்பிலும் நின்று வழங்கிய அருட்கொடைகள் யாவை என்பதை

விளக்கும் நூல் வெளியிடப் பெறும். இவ்வாறே நால்வர்களைப் பற்றியும் எழுதி வெளியிடுவது என்பது நிறுவனத்தின் திட்டப்பணி.

திருஞானசம்பந்தரின் திருநெறியத் தமிழை ஏற்று வெளிப்படுத்தும் பதிக்க்களமாகிய தென்திருக்குடித் திட்டையில் தம்மைக் குடியுரிமை செய்து கொண்ட பிறப்புரிமையும் 18—2—1981-இல் கோவை, பேரூர், சாந்தலிங்கர் திருமடத்தின் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் சார்பில் அளிக்கப் பெற்ற தத்துவ வித்தகர் என்ற சிறப்புப் பெயரின் அடிப்படையில் பிறவி தோறும் மரபுநிலை திரியா மாட்சியவாய் அமைந்த தத்துவஞான மரபுரிமையும் கொண்டு விளங்கும் எம்நிறுவன இயக்குநர் டாக்டர் இரா. பாலசுப்பிரமணியனார் அவர்கள், தமிழுலகில் திளைத்துக் கிடந்த என்னைத் தத்துவ உலகில் நெறிப்படுத்தி நிலைநிறுத்திய வகையில் நிறுவனத்துக்கேயன்றி எனக்கும் நெறியாளர். யான் பெருமை கொள்ளும் அளவுக்கு என்னுடைய தத்துவப் பேராசிரியராக விளங்கும் அவர்களின் இணையடிகளை வணங்குகிறேன்.

என் நெஞ்சுவக்கும் பணியில் யான் நிலைபெற்று நின்றுபணியாற்றுவதற்கு ஏற்றவகையில் திட்டமமைத்து நெறிப்படுத்திய, இந்நிறுவனத்து முன்னாள் இயக்குநர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணை வேந்தர், பதிவாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியன.

திருமுறைப் பணிகளில் எனக்குமுன் ஈடுபட்ட சான்றோர்கள் அனைவருடைய திருவடிகளையும் வணங்கிப் போற்றுகின்றேன். என் ஞானாசிரியராகிய ஞானியாரடிகளையும், அருள் ஞானத் தீட்சா குருவாகிய மயிலம் சிவஞானபாலய சுவாமிகளையும் போற்றி, அவர்தம் திருவடிகளே கண்ணாகக் கண்டு நிற்கும் நன்றியுணர்வினன். என்னுடனாய் நின்று இயக்கும் பேராசிரியர் 'ஆசி' அவர்களை வணங்குகிறேன்.

தட்டெழுத்துச் செய்யாத நிலையில், என்கையெழுத்தையே தம் தலையெழுத்தெனக் கொண்டு, அதனால் விளையும் தொல்லைகளைத் தாங்கி, பல்லாற்றானும் இது ஒருசிறந்த திருமுறைப் பதிப்பாக வெளிவர வேண்டும் என்ற உணர்வுடன் அல்லும் பகலும் அயராது உழைத்த அவ்வை அச்சுக்கூட உரிமையாளர் திரு. சேஷாசலம் அவர்களுக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும் என்றென்றும் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

சென்னை-5
15—3—1984

இங்ஙனம்
**வை. இரத்தினசபாபதி**

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | .. | v |
| | ஆக்கியோன் முன்னுரை | ... | vii |
| 1. | தோற்றுவாய் | ... | 1 |
| 2. | திருநின்ற செம்மை | ... | 13 |
| 3. | சைவநலம் | ... | 37 |
| 4. | அந்தணரும் போற்றும் அந்தண்மை | ... | 83 |
| 5. | சிவகதிச் செலவில் திருநாவுக்கரசர் | ... | 139 |
| 6. | முதற்பகுதியின் முடிப்புரை | ... | 167 |
| | பொருண்மை அகரவரிசை | ... | 171 |

## பன்னிரு திருமுறைகளுள்
## திருநாவுக்கரசர் அருளியவை

| | | | | |
|---|---|---|---|---|
| 4 ஆந் திருமுறை | 113 | பதிகங்கள் | 1069 | பாட்டுக்கள் |
| 5 ,, | 100 | ,, | 1015 | ,, |
| 6 ,, | 99 | ,, | 980 | ,, |
| | 312 | | 3064 | |

நான்காந் திருமுறை முழுவதும் பண்முறைகளின் அடிப்படையில் அருளப் பெற்ற தேவாரத் திருப்பாட்டுக்கள்.

ஐந்தாந் திருமுறை முழுவதும் குறுந்தொகை என்னும் யாப்பு முறையில் அமைந்தவை. "திருக்குறுந்தொகை" என்பது பொதுப் பெயர்.

ஆறுந் திருமுறை முழுவதும் திருநாவுக்கரசரால் மூல இலக்கியமாக அருளப் பெற்ற 'தாண்டகம்' என்ற யாப்பு முறையில் அமைந்தவை. 'திருத்தாண்டகம்' என்பது பொதுப் பெயர்.

# 1. தோற்றுவாய்

"ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங்களுக்கே"

என்பது திருநாவுக்கரசர் கல்லே தெப்பமாகக் கடல் கடந்து கரையேறிய இடமாகிய கரையேறவிட்ட நகருக்கு அணித்தாகிய திருப்பாதிரிப்புலியூரை அடைந்து வழிபடும்போது அருளிய திருப்பதிகத்தின் முதல் தமிழ்.

திருநெறியத்தமிழ்நெறி எனவும் ஞானவாரமுத மூட்டும் பெருநெறி எனவும் ஆறதேறுஞ் சடையான் அருள் மேவ வீறதுஏறும் தமிழால் கண்ட குருநெறி எனவும் திருப்பதிகத் தமிழ்ப்பெருநெறி எனவும் தமிழகத்து அருளாளர்களாற் பாராட்டப் பெற்ற தேவாரப் பெருநெறியில் திருஞானசம்பந்தரை ஒட்டிய காலஅளவையில் நின்றுவாழ்ந்தும் வென்றுவாழ்வளித்தும் விளங்கிய பெரியவரே திருநாவுக்கரசு சுவாமிகள் எனப் போற்றப் பெறும் அப்பரடிகள்.

சிவம்பெருக்கும் பிள்ளையாரெனவும் சிவானந்தத் தெள்ளமுது எனப்பெறும் ஞானவாரமுதமுண்ட பிள்ளையாரெனவும் ஞானத் தமிழாகரர் எனவும் போற்றப் பெறும் திருஞானசம்பந்தரால் 'அப்பரே' என அழைக்கப் பெற்ற பேறும், செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையினல் "**நாவுக்கரசு** என்று உலகேழினும் நின் **நன்னாமம்** நயப்புற மன்னுக" என்று யாவர்க்கும் வியப்பு எய்துமாறு கேட்கப் பெற்ற '**அடியார்த் திருவைந் தெழுத்தைத்** தாங்கியருளுதற்குரிய தவவாழ்வும் பெற்று வாழ்ந்த '**தாண்டக வேந்தரே**' அப்பரடிகள்.

சிவபரம் பொருளைத் துய்த்து வாழ்ந்த அருளாளர்களின் திருவாக்குக்கள் எனப்பெறும் பன்னிரு திருமுறைகளுள் திருஞானசம்பந்தரின் திருவருள் முழக்கங்களுக்கும் திருநாவலூரரின் திருவருள் வெளிப்பாடுகளுக்கும் இடைநின்ற 4,5,6 ஆகிய மூன்று திருமுறைகளையும் '**திருப்பாட்டு**' என்ற மரபுநெறிப்பெயர் தந்து போற்ற வேண்டும் என்றும் அவைகளை அருளிய தமிழாளியாரை **ஆளுடைய அரசுகள்** என்று பாராட்டி வணங்க வேண்டும் என்றும் ஞானப்பறை கொட்டுகின்றவர் திருவருட் பிரகாச வள்ளல் ஆர்? என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள்.

அருநெறிய மறைவல்ல முனியெனத் தம்மை நிறுத்தி, பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெருமானை ஒரு நெறிய மனம் வைத்து உணர்ந்த திருஞானசம்பந்தரின் திருநெறியத் தமிழ் மூலத்தைச் சிவனெனும் நாமம் தமக்கே உரிய செம்மேனி எம்மான் எனவும் "சிவனெனும் ஓசையல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மை உளதே" எனவும் எடுத்து நிறுத்திய தமிழ்மாமுனிவரே எண்பத்தோரகவைகள் இந்நிலவுகில் வாழ்ந்த பெரியவரென அனைவராலும் போற்றிவணங்கப் பெறுகிற தமிழ்நாவலர் அப்பரடிகள்.

'திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்' எனத் திருநாவலூரரால் அறிமுகம் செய்து வைத்தருளப் பெற்ற செம்மையும், சைவமாம் பெருநெறி உலகந் தழுவிய பொதுமைத் தொண்டுநெறி என்பதைத் தம்வாழ்வின்மூலம் உணர்த்திய காரணத்தால் "திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்" எனச் சேக்கிழார் பெருமானால் நிறைவு செய்தருளப் பெற்ற சீர்மையும் இருபக்கங்களில் நிற்க இடைநின்ற பெருமைக்குரியாராகத் திகழ்ந்த அப்பரடிகள், தம் தம்பியாரை 'உளர்' ஆக வைத்த தயையுடைய பெருந்தகையாகிய திலகவதியம்மையை முன்னிட்டுப் பின் போதும் திருவருள் பெற்ற திருநெறியத் தமிழாளியார் ஆவர்.

தேவாரத் திருமுறைகள் அருளாளர்களால் அருளப் பெற்றவைகளேயாயினும், அவைகளுக்கும் அழிவு வரும்

போலும், எரியாலும் நீராலும் களங்கப்படுத்தப்பெற இயலாத வகையில் நிலைபேற்றுத் தன்மை பெற்ற திருவமர் திருப்பதிகங்களுங்கூட, காலத்தால் மறைக்கப் பெறும் போலும் என்ற குறைதனை நீக்கி, அருளாளர்களின் திருவாக்குக்கள் காலங் கடந்த, காலத்தை வென்ற திருவுடையன என்பதை வரலாற்று நெறியில் நின்று உலகினர்க்கு விளக்கிக் காட்டிய பெருமை நம்பியாண்டார் நம்பிகளுக்கே உண்டு.

"என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்"

என்ற முதன்மொழியைத் **திருநாரையூர், பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை** என்ற நூலின் மூலம் எடுத்து வழங்கி, இவ்வுலகத்து இருள்நீக்கி, ஒளி பரப்பிய சைவ இளஞாயிறு எனத் திகழ்ந்தருளிய நம்பியாண்டார் நம்பிகள் அருளிய பத்து நூல்கள் பதினொராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று **திருநாவுக்கரசுதேவர் திரு ஏகாதச மாலை.** பதினொரு பாட்டுக்களைக் கொண்ட இந்த நூல் மட்டுமேயன்றி, நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய **திருத்தொண்டர் திருவந்தாதியில்** கீழ்வரும் இரண்டு பாட்டுக்களை அருளியுள்ளார்.

"நற்றவன் நல்லூர்ச் சிவன் திருப்பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்குள்
உற்றவன் உற்ற விடம் அடையார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக் கரசெனுந் தூமணியே.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர் பிரான்றன் அருந்தமிழே"

மேலே குறிப்பிடப் பெற்றவை இரண்டும் திருத்தொண்டர் திருவந்தாதியின் 24, 25 என்ற எண்களமைந்த திருப் பாட்டுக்களாகும்.

சைவ சமயஞ் சார்ந்த திருத்தொண்டர்தம் வரலாற்றுண்மைகளைத் தெளிவுற மக்களுக்குத் தெரிவித்தல்

வேண்டும் என்ற இன்றியமையாத நற்பணிக்குக் கால் கோள் விழா நிகழ்த்தப் பெற்ற இடம் திருக்கயிலை. திருக் கயிலைக் கிறைவனாகிய சிவபரம் பொருளே இத்திட்டத்தை வெற்றியுற முடித்தருள வேண்டும் என எண்ணி அப் பணியை முறையுறத் தொடங்கி வைப்பதற்காகத் திரு நாவலூரர் எனப் பெறும் சுந்தரமூர்த்தி நாயனாரை இவ் வுலகிற்கு அனுப்பிவைக்கிறது.

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்
தொண்டத் தொகை தரப் போதுவான்"

என்பது (பெரியபுராணம் — 35) சேக்கிழார் திருவாக்கு.

சைவசமயப் பெருந்தகைகளாகிய திருத்தொண்டர் தங்களின் திருப்பெருகு நல் வரலாற்றினை விளங்க எடுத்து நிலைநிறுத்தவும், அதனை மக்கள் உள்ளத்தில் நிலைநாட்ட வேண்டும் என்ற பணியைச் சிறப்புற நல்லாற்றுப்படுத் தவும், சைவ சமயத் திருத்தொண்டர்களை வணங்கினால் வாழ்வில் வளம் பெற முடியும் என்ற கருத்தைச் சைவ சமய அடிப்படை உண்மைகளுள் ஒன்றாக அமைத்துக் காட்டவும் வல்ல நலம் பெருகு திருத்தொண்டினை முதன் முதல் தொடங்கிய அருளாளர் நம்பியாரூரர் எனப் பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளே.

நம்பியாரூரரால் **திருத்தொண்டத் தொகை** என்ற தனிநூலின் மூலம் தொடங்கி வைக்கப் பெற்று, திரு நாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்தம் திருவருளினால் தொண்டர்களின் வரலாற்று நுட்பங்களை உணர்ந்து வணங்கும் பேறு பெற்ற நம்பியாண்டார் நம்பிகளால் **திருத்தொண்டர் திருவந்தாதி** என்ற நூலின் வாயி லாகத் தொகுத்துரை செய்யப் பெற்று, தொண்டர் சீர் பரவுவார் எனப் பெறும் தெய்வச் சேக்கிழார் பெருமானால் **திருத்தொண்டர் புராணம்** என்ற பெயரால் விரிவுரை யாக்கப் பெற்ற திருவுடை மரபு சார்ந்த வரலாற்றையுடை யவர் திருநாவுக்கரசர்.

நம்பியாரூரரின் ஒருவரியாலும், நம்பியாண்டார் நம்பி களின் இரண்டு திருவிருத்தங்களாலும், சேக்கிழார் பெரு மானின் நானூற்று இருபத்தொன்பது திருவிருத்தங்களா லும் உணரப்பெறும் வரலாற்றுப் பெருமையுடைய

திருநாவுக்கரசர் தாமே திருவாய் மலர்ந்த பதிகங்கள் 312; திருப்பாட்டுக்கள் எனப் பெறும் திருநெறியத் தமிழ் மூவாயிரத்து அறுபத்து நான்காகும்.

திருநாவுக்கரசரின் திருநெறியத் தமிழ் வரலாற்றைத் தொகை, வகை, விரி என்ற வகையில் முறையே நம்பியாரூரர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் பெருமான் விளக்கிய வகையில் மரபு நெறி வழுவாது அவர்தம் பின்வந்த கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளாரும், சிதம்பரம் இராமலிங்க வள்ளலாரும் எடுத்து விளக்கியருளியுள்ளார்கள்.

சைவசமய முதற்பெருங்குரவர்களாக நின்ற நால்வர் அருளாளர்களைப் போலவே அவர்கள் தொடங்கிய திருப் பதிகப் பெருவழியை விளக்கமுற எடுத்து விளக்கிய அரு ளாளர்கள் நால்வர் உண்டு. அவர்கள் முறையே திருநாரை யூர் நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழாரடிகள், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள், இராமலிங்க அடிகள் ஆவர்.

அவர்களை அடுத்து, **அப்பர் சுவாமிகள் சரித்திரம்** என்ற நூலை ஆக்கியருளிய பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை; **பன்னிரு திருமுறை வரலாறு** (இரண்டு பாகங்கள்) என்ற நூலை ஆக்கியருளிய திருமுறைக் கலைஞர், பேராசிரியர் வெள்ளை வாரணனுர்; **தேவார ஒளிநெறி** என்ற தலைப்பில் திருமுறை ஆய்வுப் பணியை அமைத்துக் கொடுத்தருளிய தணிகைமணி, டாக்டர் வ. சு. செங்கல் வராய பிள்ளை; **பெரியபுராண ஆய்வுரை** என்ற பொதுப் பெயரில் 'அப்பர் வரலாற்றின் ஆய்வுரை'யை ஆக்கித் தந்துள்ள அமரர், மறை திருநாவுக்கரசு என்ற நால்வரும் முன்னுள்ள நால்வரென நாம் எண்ணி மதிக்கத் தகும் பெருமை சான்றவர்களே.

திருமுறைப்பதிப்பு என்ற வகையில் தருமை, திருப் பனந்தாள் திருமடாலய வெளியீடுகளாக வந்தவைகள் திருமுறைகளின் தொகுதியேயன்றிப் பல நற்றமிழ்ச் சான்றோர்களின் கருத்துக் களஞ்சியமாகவும் நின்று திரு முறைப் பணியைப் பீடுபெற வைத்துள்ளன. அவ்வாறே திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடும், **அப்பர் பெருமான் வாழ்வும்**

**வாக்கும்** என்ற பெயரில் 1980-இல் வெளிவந்த பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி வெளியீடும் சிறப்பிடம் பெறத் தக்கவைகளே.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறை வெளியீடாக வெளிவரும் **திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு** என்ற இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். இவ்வகையில் **திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு** என்ற தலைப்பில் இரண்டு பாகங்கள் முறையே 1981, 1982 ஆண்டுகளில் வெளி வந்துள்ளன.

சைவசமய அருட்பெருங்குரவர் நால்வர் தம் வரலாற்றுண்மைகளைத் தத்துவ, சமய, அருளியல் அனுபவப் பின்னணியில் விளக்க முற்படும் பணியே இந்நூல்கள் எழுதுவதற்குரிய அடிப்படைத் திட்டம்.

காலவளர்ச்சியோடு விரைந்து வரும் கருத்து வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியினால் சேய்மை என்று கருதப் பெற்றனவெல்லாம் அண்மை என அணைய வந்து கொண்டிருப்பதை ஒட்டி எழுகின்ற உலகளாவிய இணைப்புச் சிந்தனை வளர்ச்சியும் காரணங்களாக நிற்க, அவ்விளைவினால் எழுகின்ற வினாக்களுக்கு விடைகாணும் இன்றியமையாப் பணி எனப் பெறும் பின்னணியும் இப்பணிக்கு உண்டு.

மேலும், திருப்பதிகப் பெருவழிஎன்னும் புதியதொரு பெருநெறியைத் தொடங்கி வைத்து, அதனைத் திறம்பெற நடத்திச் சென்று முடித்துத் தந்த அருளாளரே திருஞான சம்பந்தர் என்று நம்பியாண்டார்நம்பிகள் அருளிய அருளிப்பாட்டினை மூலமாகக் கொண்டு, திருஞானசம்பந்தரின் கொள்கைப் பணியின் பின்னணியும், திருவருளின் செழுங்கொடையும், திருநெறியத் தமிழ்ப் பதிகப் பெருவழிசார் கொள்கைகளும் விளக்கமுற நிலைநாட்டப் பெறல் வேண்டும் என்பதும் இவ்வாய்வுநூல் வரிசை அமையக் காரணமாகும்.

திருஞானசம்பந்தருடன் திருநாவுக்கரசரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் இணைந்து நின்று வரையறைப் படுத்தியும், நெறிப்படுத்தியும், அனுபவப்படுத்தியும் அமைத்த திருப்பதிகப் பெருவழியைத் திருஞானசம்பந்த

ரின் வழிநின்று ஓரளவே அவ்வாய்வு நூல்களில் வெளிப் படுத்த முடிந்தது. திருநாவுக்கரசரையும் இணைய நிறுத்தி ஆய்வு செய்யும் வகையில், இம் முதற்பகுதியானது திரு நாவுக்கரசரின் வரலாற்றுத் தத்துவ நுண்பொருள் விளக்க மாக அமைகிறது. இரண்டாம் பகுதியானது திருநாவுக்கரச ரையும் திருஞானசம்பந்தரையும் இணைத்த நிலையில் சைவ சமயக் கொள்கை விளக்கமாக, பெருநெறி என்றும் திரு நெறியத் தமிழ்நெறி என்றும் பதிகப் பெருவழி என்றும் போற்றப் பெற்ற குருநெறியின் தத்துவ, சமுதாய, சமய, அருளியல் விளக்கமாக அமையும் பின்னணியைக் கொண்டது.

இனி, திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்களைப் பதிப்பித்த முதற் குரவராகிய நம்பியாண்டார் நம்பிகளை உள்ளிட்டு இன்று வரை கிடைக்கக் கூடிய பதிக, பாட்டு எண்ணிக்கைகள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

| திருமுறை | பதிகம் | பாட்டுக்கள் |
|---|---|---|
| 1. நாலாந் திருமுறை | 113 | 1069 |
| 2. ஐந்தாந் திருமுறை | 100 | 1015 |
| 3. ஆறாந் திருமுறை | 99 | 980 |
| | 312 | 3064 |

1974-இல் கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் பார்வை யிட திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீட்டில் பதிகத்தொகை 313 எனவும் பாடற்றொகை 3065 எனவும் காட்டப் பெற்று உள்ளன. நாலாந் திருமுறையில், 'சிந்திப்பரியன' என்ற தொடக்கத்தையுடைய திருவையாற்றுத் திருப் பதிகம் இருபது பாட்டுக்களைக் கொண்டதாக உள்ளது. அதனை இரண்டு பதிகங்களாக அமைத்துக் கொண்ட காரணத்தால் பதிகத் தொகையில் ஒன்று கூடியது. அவ் வாறே நாலாந் திருமுறை இறுதிப்பதிகமும், 'பவளத் தட வரை' என்ற தொடக்கத்தையுடையதும் ஆகிய பொதுப் பதிகத்தில்,

"அந்திவட் டத்திளங் கண்ணிய ஞறமர் செஞ்சடையான்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றுனையும் பொய்யென்பனே
சந்திவட் டச்சடைக் கற்றை யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றைவ ளாவிய நம்பனையே"

என்ற திருப்பாட்டு இணைக்கப் பெற்றுள்ளது. அது முன்னுள்ள திருவையாற்றுப் பதிகத்திலேயே (98-கழக வெளியீட்டெண்) காணப் பெறுவதாதலின் ஏனைய பதிப்புக்களில் விடப் பெற்றுள்ளது. எனவே, மொத்தத் திருப்பாட்டுத் தொகையெண் 3064 எனக் கொள்ளலே நேரியதாம்.

ஆயினும், திருப்பனந்தாள் பதிப்பில் மூன்று திருமுறைகளுக்கும் 312 பதிகங்கள் எனவும் திருப்பாடற்றொகை 3066 எனவும் காட்டப் பெற்றுள்ளன. அவ்வாறே, திருமுறைக் கலைஞர், க. வெள்ளை வாரணனார் எழுதிய **பன்னிரு திருமுறை வரலாறு** முதற்பாகம், பக்கம் 332-ல்,

"நான்கு ஐந்து ஆறுகிய மூன்று திருமுறைகளிலும் முந்நூற்றுப் பன்னிரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றின் மொத்தத் திருப்பாடல்கள் மூவாயிரத்து அறுபத்தாறுகும்." என்று காட்டப் பெற்றுள்ளது.

திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் திருவுளப்பாங்கின்படி, சென்னை, மெய்கண்டான் கல்லூரித் தலைமையாசிரியர் வண்ணக்களஞ்சியம், காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்ற, மூவர் முதலிகள் செய்தருளிய **தேவாரத் திருமுறைகள்** (அடங்கல் முறை) என்ற நூலில் திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் 312 என்பதும் திருப்பாடல்கள் 3066 என்பதும் காணப்பெறுகின்றன.

முன்னே குறிப்பிட்டுள்ளவாறு "அந்திவட்டத்திடை" என்று தொடங்கும் திருப்பாட்டு இரண்டிடங்களிலும் காட்டப் பெற்றுள்ளன. அதற்கும் மேலாக, ஆறுந்திருமுறையில், 64-ஆம் பதிகமாகிய திருக்கச்சியேகம்பப் பதிகத்தில் "**அடுத்தானை உரித்தான்காண்**" என்ற ஒருவரி மட்டுமே ஒரு திருப்பாட்டாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. இவ்வகையில் "அந்தி வட்டத்திடை" என்பது இரண்டிடங்களிலும் சேர்க்கப் பெற்றதாலும், "அடுத்தானை உரித்தான்காண்" என்ற அரைவரியையே ஒருபாட்டாகக் கொண்டமையாலும் திருப்பாட்டு எண்ணிக்கை மொத்தம் 3066 ஆயின எனக் கொள்ளல் ஏற்புடையதாம். சுருங்கக் கூறின் திருப்பாட்டு எண்ணிக்கை 3064 எனக்கோடலே பொருத்தமுடையது.

திருநாவுக்கரசர் அருளிய பதிகங்களைத் தொகுத்த நிலையில் அவை நான்கு, ஐந்து, ஆறு என்ற மூன்று பகுதி

களாக அமைந்து பன்னிரு திருமுறை வரிசையில் இணைந்தன. நான்காந் திருமுறை முழுவதும் பண்ணமைந்த பாடற்றொகைகளாகவும், ஐந்தாந்திருமுறை திருக்குறுந் தொகை என்ற குறுகிய அமைப்புடைய பாடற்றொகை களாகவும், ஆறுந்திருமுறை நீண்ட சீர்களைக் கொண்ட 'தாண்டகம்' என்ற புதிய அமைப்புடைய பாடற்றொகை களாகவும் அமையத் தொகுக்கப் பெற்றுள்ளன.

'தாண்டகம்' என்ற யாப்பு வகையைத் திருநாவுக் கரசரே மூல இலக்கியமாக, முதன்முதலாகப் பாடியருளிய காரணத்தால் 'தாண்டக வேந்தர்' என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப் பெற்றார் என்பதையும் வரலாற்றால் அறிய முடிகிறது.

இவ்வகையில் திருநாவுக்கரசரின் வரலாற்று நுட்பம், அருளியல் நிகழ்வுகள் ஆகியவற்றின் மெய்ப்பொருளியற் பின்னணியையும் அதனை ஒட்டிய ஏனைய கொள்கைகளை யும் விளக்கும் வகையில், திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு என்ற தலைப்பின் முதற்பாகமாக மலர்கின்ற இந்நூல் திரு நெறியத் தமிழ் வழிவரு திருப்பதிகப் பெருவழியின் திருத் தொண்டு மலர்.

இவ்வாய்வுக்கு உறுதுணை செய்யும் வகையில் நம்பி யாண்டார் நம்பிகளால் அருளிச் செய்யப் பெற்ற "திரு நாவுக்கரசு தேவர், திருஏகாதச மாலைப் பாட்டுக்கள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

1. புலனொ டாடித் திரிமனத்தவர்
பொறிசெய் காமத் துரிச டக்கிய
புனித நேசத் தொடுத மக்கையர்
புணர்வி னலுற் றுரைசெ யக்குடர்

சுலவு சூலைப் பிணிகெ டுத்தொளிர்
சுடுவெ ணீறிட் டமண கற்றிய
துணிவி னன்முப் புரமெ ரித்தவர்
சுழலி லேயட் டிடுத வத்தினர்

உலகின் மாயப் பிறவி யைத்தரும்
உணர்வி லாவப் பெரும யக்கினை
ஒழிய வாய்மைக் கவிதை யிற்பல
உபரி யாகப் பொருள்ப ரப்பிய

அலகில் ஞானக் கடலி டைப்படும்
அமிர்த யோகச் சிவவொ ளிப்புக
அடிய ரேமுக் கருளி னைச்செயும்
அரைய தேவத் திருவ டிக்களே

2. திருநாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி
தெளிதேனைத் தினியசொல் மடவாருரப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மனம் உருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்
குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர்
குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே

3. குழிந்து சுழிபெறுநா பியின்கண் மயிர்நிரையார்
குரும்பை முலையிடையே செலுந்த கைநன்மடவார்
அழிந்த பொசியதிலே கிடந்தி ரவுபகல்நீ
அளைந்த யருமதுநீ அறிந்தி லைகொன்மனமே
கழிந்த கழிகிடுநாள் இணங்கி தயநெகவே
கசிந்தி தயமெழுநா றரும்ப திகநிதியே
பொழிந்த குளுதிருநா வினெங்க ளரசினையே
புரிந்து நினையிதுவே மருந்து பிறிதிலையே.

4. இலமா டென்றிடர் பரியா ரிந்திர
னேயொத் துறுகுறை வற்றலும்
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர்
நீள்சன் மக்கட லிடையிற்புக்
கலையார் சென்றரன் நெறியா குங்கரை
அண்ணப் பெறுவர்கள் வண்ணத்தின்
சிலமா டந்திகழ் புகழா மூருறை
திருநா வுக்கர சென்போரே.

5. என்பட்டிக் கட்டிய இந்தப்பைக் குப்பையை
இங்கிட்டுச் சுட்டபி னெங்குத்தைக் குச்செலும்
முன்பிட்டுச் சுட்டிவ ருந்திக்கெத் திக்கென
மொய்ம்புற்றுக் கற்றறி வின்றிக்கெட் டுச்சில
வன்பட்டிப் பிட்டர்கள் துன்புற்றுப் புத்தியை
வஞ்சித்துக் கத்திவி ழுந்தெச்சுத் தட்டுவர்
அன்பர்க்குப் பற்றிலர் சென்றர்ச்சிக் கிற்றிலர்
அந்தக்குக் கிக்கிரை சிந்தித்தப் பித்தரே.

6. பித்தரசு பதையாத கொத்தைநிலை உளதேவு
பெட்டியுரை செய்துசோறு சுட்டியுழல் சமண்வாயர்
கைத்தரசு பதையாத சித்தமொடு சிவபூசை
கற்றமதி யினனேசை யித்தரசு புகழ்ஞாலம்

முத்திபெறு திருவாள னெற்றுணையின் மிதவாமல்
கற்றுணையில் வருமாதி......
பத்தரசு வசைதீர வைத்தகன தமிழ்மாலை
பற்பலவு மவையோத நற்பதிக நிதிதானே

7. பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி அருளினு லமண்மூடர்
அவர்செய்வா தைகள்தீரும் அனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை உடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீசன் அடியரா குவர்வானம்
உடையரா குவர்பாரில் மனிதரா னவர்தாமே.

8. தாமரைநகும் அகவிதழ் தகுவன
சாய்பெறுசிறு தளிரினை அனையன
சார்தருமடி யவரிடர் தடிவன
தாயினும்நல கருணையை உடையன

தூமதியினை யொருபது கொடுசெய்த
சோதியின்மிகு கதிரினை உடையன
தூயனதவ முனிவர்கள் தொழுவன
தோமறுகுண நிலையின தலையின

ஓமரசினை மறைகளின் முடிவுகள்
ஓலிடுபரி சொடுதொடர் வரியன
ஓவறுமுணர் வொடுசிவ வொளியன
ஊறியகசி வொடுகவி செய்தபுகழ்

ஆமரசுயர் அகநெகு மவருள
ஞரரசதி கையினர னருளவ
ஞமரசுகொ ளரசெனை வழிமுழு
தாளரசுத னடியிணை மலர்களே

9. அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித்
தரியாவப் பசுதைச் சிறியோரிற் செறியும்
கொடியேனுக் கருளைத் திருநாவுக் கரசைக்
குணமேருத் தனைவிட் டெனையாமொட் டகல்விற்
பிடியாரப் பெறுதற் கரிதாகச் சொலுமப்
பிணநூலைப் பெருகப் பொருளாகக் கருதும்
செடிகாயத் துறிகைச் சமண்மூடர்க் கிழவுற்
றதுதேவர்க் கரிதச் சிவலோகக் கதியே.

10. சிவசம் பத்திடைத் தவஞ்செய்து
திரியும் பத்தியிற் சிறந்தவர்
திலகன் கற்றசிட் டன்வெந்தொளிர்
திகழும் பைம்பொடித் தவண்டணி

கவசம் புக்குவைத் தரன்கழல்
கருதுஞ் சித்தனிற் கவன்றிய
கரணங் கட்டுதற் கடுத்துள
களகம் புக்கநற் கவந்தியன்

அவசம் புத்தியிற் கசிந்துகொ
டழுகண் டத்துவைத் தளித்தனன்
அணகன் குற்றமற் றபண்டிதன்
அரசெங் கட்கொர்பற் றுவந்தறு

பவசங் கைப்பதைப் பரஞ்சுடர்
படிறின் றித்தனைத் தொடர்ந்தவர்
பசுபந் தத்தினைப் பரிந்தடு
பரிசொன் றப்பணிக் குநன்றுமே

11. நன்று மாதர நாவினுக் கரைசடி
நளினம்வைத் துயினல்லால்
ஒன்று மாவது கண்டிலம் உபாயமற்
றுள்ளன வேண்டோமால்
என்றும் ஆதியும் அந்தமும் இல்லதோர்
இகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற்
பொறியிலெம் புலனோடே.

# 2. திருநின்ற செம்மை

*முன்னுரை*

*"சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" என்றருளிய திருநாவுக்கரசர் "சிவன் எனும் ஓசையல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மை உளதே" என்று திருக்கச்சியேகம்பப் பியந்தைக் காந்தாரப் பண்ணமை நற்பதிகத்தினைத் தொடங்கியருளுகின்றார்.*

*சிவன் என்னும் நாமம் உடைய பரம்பொருளை இவ் வுலகில் அதே நிலையில் அழைத்தற்குரிய ஓசையுண்டு. மேலும், சிவன் என்னும் ஓசைக்குரியதாக இவ்வுலகில்* ***திருநின்ற செம்மையும்*** *உள்ளது என்று திருநாவுக்கரசர் இணைத்துக் காட்டியுள்ளார்.*

*திருநாவுக்கரசரின் திருவருள் வெளிப்பாடு எனத் தகும் இவ்வரியில் அமைந்த நுட்பங்களையெல்லாம் திருவருட் பேற்றினால் உணர்ந்த திருநாவலூரர்,*

***"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட***
***திருநாவுக்கரசன்தன் அடியார்க்கும் அடியேன்"***

*என்று தாம்பாடிய திருத்தொண்டத் தொகையில் திருநாவுக்கரசரின் அருளியல் வாழ்வு நுட்பத்தை விளக்கியருளினார். நம்பியாரூரர் அருளிய* ***திருத்தொண்டத் தொகையில்*** *உள்ள பதினொரு திருப்பாடல்களில் திருநின்ற திருப்பாடலாக அமைந்த பெருமையைத் தன்னகத்தே உடைய காரணத்தால் அப்பாடலில் வரும் சிவனடியார்களின் வரலாறுகள் எல்லாவற்றையும் விளக்கும் பகுதி திருநின்ற சருக்கம் எனவும் நிலை பெறுவதாயிற்று.*

*திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றுக்கு*

முற்பட நிற்கும் வாய்ப்பு உடையதாகிறது. "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன் நாளைப் போவானும்" என வரிசைப்படுத்திப் பாடும் திருநாவலூரர் திருத்தொண்டத் தொகையில் திருநாவுக்கரசரை முன் னிட்டு அடிமை கூறி, அடுத்த திருப்பாட்டில் திருஞான சம்பந்தர்க்கு அடிமை கூறுகிறார். இங்கே இதைக் குறிப்ப தன் நோக்கம் கால ஆய்வைக் கொள்வதோ சைவசமய மரபின் வண்ணம் அடிமை நெறிக்குப் பின்னர் மகன்மை நெறி வருவதாதலின் அடிமை நெறியில் நின்று இறைவனைப் போற்றிய திருநாவுக்கரசரை முன்னர்க்கூறி, மகன்மை நெறியில் நின்று இறைவனை வணங்கிய திரு ஞானசம்பந்தரை அவர்க்குப் பின்னர் அமைத்துக் கூறினார் என்பதை வலியுறுத்துவதற்காகவோ அன்று.

சிவனெனும் ஓசையையும் திருநின்ற செம்மையையும் இணைத்துக் காட்டிய ஒருவகைப் பொதுமை இணைப்பு நெறியை இவ்வுலகில் அமைத்துக் காட்டிய பெரியவர் என்ற வகையில் திருநாவலூரர் அப்பரடிகளை அறிமுகம் செய்து வைத்தருளுகின்றார்.

'திருநின்ற செம்மை' என்ற மூல மொழியைத் திரு வருளுணர்வால் உணர்ந்த சேக்கிழார் பெருமான் 'திரு' என்ற சொல்லுக்கு விளக்கம் எழுதிக் காட்டும் வகையில்,

"சிவம் பெருக்கம் திரு"

என அமைத்துக் காட்டுகின்றார். 'திருவாமூர்' திரு நாவுக்கரசர் பிறந்தருளிய பெரும்பதி. அதனை விளக்க வரும் சேக்கிழார்.

> "சைவநெறி எழுலகும் பாலிக்கும் தகைமையினால்
> தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்"

என்று (பெரியபுராணம்-1282) குறிப்பிட்டருளுகின்றார்.

'சிவம் பெருக்கும் திரு' எனவும் திருநின்ற செம்மை எனவும் வெளிப்பட்ட அருளாளர்களின் திருவாக்குக்களைத் தெளிவுற விளக்க முறுத்திக் கொள்ளலே இத்தலைப்பின் பின்னணி.

### திருவாமூர் திருவாமூர்

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள ஒருரே திருவாமூர். இந்நாளில் இது தமிழகத்தின் தென்னாற்காடு மாவட்டத்

தைச் சார்ந்ததாய், பண்ணுருட்டிக்கும் விழுப்புரத்திற்கும் இடைநின்ற சிற்றூராக அமைந்துள்ளது.

"மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகிற்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு"

என்று (பெரியபுராணம் 1281) சேக்கிழார் பெருமான் கூறுவதை நோக்குதல் வேண்டும். சைவசமய நற்குரவர்கள் நால்வருள் திருநாவுக்கரசரும் திருநாவலூரரும் பிறந்தருளிய பேறு பெற்ற நாடு திருமுனைப்பாடிநாடு என்பதாகும்.

திருநாவுக்கரசரின் வரலாற்றைக் கூறமுற்படும் சேக்கிழார் முதன்முதலாகத் 'திருநாவுக்கரசு' எனத் தொடங்கி, இடையில் வாகீசர் என்று கூறி, அவருடைய திருநாமச்சீர் பரவலுறுகின்றேன் என்ற முன்னுரையை நிறுவிக் காட்டியருளியுள்ளார். 'திருநாவுக்கரசு' என்ற தொடக்கம் ஒரு மறைமொழியெனும் நிறைமொழியாக அமைகின்றது. நாம் காணும் இந்நிலவுலகத்து மறைமொழியாக நின்றருளுகின்ற ஆற்றலுடைய 'திருநாவுக்கரசு' என்ற மறைமொழியினால் நிறைமொழி மாந்தர் எனப் பெறும் வாகீசரின் பெருமை உணரப் பெறும் என்ற நுட்பந் தோன்றும் முறையில் சேக்கிழார் அமைக்கும் நயம் போற்றியுணரப் பெற வேண்டும்.

'திருநாவுக்கரசு' என்ற மறைமொழியால் இந்நிலவுலகத்தில் நிறைமொழி மாந்தராக வாழ்ந்தவரே வாகீசர் எனவும் வளர் திருத்தொண்டின் நெறிவாழ வரு ஞானத் தவமுனிவரே அவர் எனவும் உணர்த்தி, அவர்தம் திருப்பெயர் மறை மொழியாதலின் அதனைப் பன்முறையும் உச்சரித்து அதன்சீர் பரவலுறுகின்றேன் எனவும் அமைத்து, திருக்குறள், நீத்தார் பெருமையில் அமைந்த

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்ற அறக் கோட்பாட்டினைச் சேக்கிழார் நினைவுறுத்துவாராயினர்.

திருவாரூரில் திருநாவுக்கரசு என்ற அடிப்படையில் வரலாற்றைத் தொடங்கும் சேக்கிழார், திருவாரூரில் வேளாண் குலத்தில், குறுக்கையர் குடியில் புகழனார் என்பவருக்கும் மாதினியார் என்பவருக்கும் முதன்மைத் தவ நெறியில் நின்ற திலகவதியாரும் அவருக்குப் பின்னர்ச் சில ஆண்டகன்றதற்பின் மருள்நீக்கியாரும் பிறந்தருளினார்கள் என்று முறைப்படுத்தினர்.

சேக்கிழார் திருவாக்கின் மூலம் ஓர் உண்மை விளக்கம் பெறுகிறது. திருஞானசம்பந்தரின் திருவவதார நுட்பத்தை விளக்க முற்படும் சேக்கிழார்,

> "தவம்பெருக்குந் சண்பையிலே தாவில் சரா சரங்களெல்லாம்
> சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்"

என்று (பெரியபுராணம் 1929) அருளிச் செய்துள்ளார். அவரே திருநாவுக்கரசரின் பிறப்பியல் நுட்பத்தை விளக்க வரும் போது சிவம்பெருக்கும் திருத்தொண்டினைத் திருவாரூருக்கு உரியதாக ஆக்கி,

> "அலகில் கலைத் துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
> உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்"

மருள்நீக்கியார் (பெரியபுராணம்-1288) திலகவதியாருக்குப் பின்னர்த் திருவவதாரம் செய்தார் என்று கூறியருளினார்.

'சிவம் பெருக்குதல்' என்ற ஒற்றுமை இருவர் வரலாற்றிலும் காணப்பெறுகிறது. உயிர்ப்பொருள், உயிரல் பொருள்; அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய எல்லாவற்றினும் உள்ளுறைந்து நிற்கும் சிவபரம் பொருளைப் பெருக வைத்தல், விளங்கவைத்தல் என்ற பொதுநெறித்தொண்டே இருவர் பிறப்புக்கும் அடிப் படைப் பொருண்மையாகிறது. 'சிவம் பெருக்கும் திரு' என்பதே தொண்டு நெறியாகிறது. 'சிவம் பெருக்கும் திரு' என்ன நின்ற ஊரே திருவாரூர் எனப் பெறுகிறது என்று உணர்த்துவதற்காகவே சேக்கிழார் "சிவம்பெருக்குந் திரு ஆம் ஊர் திருவாரூர்" என்று இணைத்துக் காட்டியருளுவாராயினர்.

**உளரானார் உளரானார்**

சேக்கிழாரடிகளால் அருளப்பெற்ற திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது

தொகையடியார்களையும் வரலாற்று நெறியுடன் உலகுக்கு அறிமுகப்படுத்துகிறது. எழுபத்திரண்டு வகையினருள் அறுவரைத்தான் சேக்கிழார் "உளர் ஆனார்" என்ற மொழியால் அறிமுகப்படுத்தியுள்ளார்.

"ஒப்பிலவர் நந்தனார் என ஒருவர் உளர் ஆனார்"

"எச்சதத்தன் (சண்டேசுரரின் தந்தை) உளன் ஆனான்"

"நீலநக்கர் என்பார் நிகழ்ந்துளார் ஆனார்"

"சிவபாத இருதயர்...இயல்பினால் உளர் ஆனார்"

மேலே குறிப்பிடப் பெற்ற நால்வருக்கும் அப்பால், திருநாவுக்கரசரின் தந்தையைக் குறிப்பிடும் போது,

"ஒக்கவரும் பெருஞ்சிறப்பின் உளரானார் உளரானார்
திக்கு நிலவும் பெருமை திகழவரும் புகழனார்"

என இரண்டுமுறை உளரானார் என்ற சொல்லை அமைத்துக் காட்டியுள்ளார். இதனையொட்டியே, திலகவதியார் தாம் இறவாது தம்பியாருக்காக நிலவுலகில் இருக்க முற்பட்டதைக் குறிப்பிட வரும் சேக்கிழார்,

"தம்பியார் **உளராக** வேண்டுமென வைத்த தயா என்று அமைத்து, 'உளராதல்' என்பது ஒருவகைச் செப்பம் நிறைந்த, சிவபரம் பொருளைப் பெற்றுவாழும் நிலையுடைய வாழ்வுநிலை எனக் கொள்ள வைத்ததாக நுண்ணிதின் உணர்தல் வேண்டும்.

'உளரானார் உளரானார்' என இருமுறை அடுக்கிக் காட்டுவதன் மூலம் புகழனார் மாதினியார் என்ற இருபெருந் தகையாளர்களின் வாழ்வியல் நுட்பத்தை உணரமுடிகிறது.

திலகவதியார் இருந்தவர்; திருநாவுக்கரசர் உளரானவர். திருநாவுக்கரசர் உளர் ஆக வேண்டும் எனத் தவமிருந்து அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி இருந்தவர் திலகவதியார். "தம்பியார் உளராக வேண்டும்" என உள்ளத்துக்கொண்ட தயையினால் தன் உயிரைத் தாங்கியவர். எல்லா உயிர்களுக்கும் வாழ்வியற்கை எனப்பெறும் உயிரிரக்கம் செயற்படுமாறு வாழ்ந்தவர்களாதலின் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி வாழ்ந்தவர் திலகவதியார் எனப்பெற்றார்.

திலகவதியார் தாங்கி இருந்தவர்; திருநாவுக்கரசர் உள்ளார் ஆனவர். திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டு, அப்பரம்பொருளைத் துய்த்து வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். துய்த்துத் துய்த்து அப்பரம்பொருளாயே ஆகிவிடும் அளவுக்குத் திருநாவுக்கரசர் பெருமானைத் தாங்கி இருந்தவர் ஆதலின் திலகவதியாரை "இருந்தார்" என்றார். திருநாவுக்கரசரை மட்டுமேயன்றி உலகத்துயிர்களெல்லாம் திருநின்ற செம்மைப் பரம்பொருளைத் துய்த்துப் பேரின்ப அனுபவம் பெறுமாறு நிறுத்தி அவ்வுயிர்களைத் தாங்கி இருந்தவரும் திலகவதியாரே.

"தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயா
உம்பருலக‌ணையவுறு நிலைவிலக்க உயிர் தாங்கி
அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதியா ரிருந்தார்.

என்பது (பெரியபுராணம்- 1304) சேக்கிழார் திருவாக்கு.

திருவாரூர் என்பதைத் திரு, ஆம், ஊர் எனப்பிரித்து நிறுத்தி, திருவாரூரின் பண்பினை உணர்த்திய சேக்கிழாரடிகள் புகழனார்க்கு உளராம் சிறப்பினையும் எடுத்துக் காட்டுகின்றார்.

திலகவதியார் உளராகுமாறு உளரானநிலையும் திருநாவுக்கரசர் உளராகுமாறு உளரானநிலையும் ஆகிய இவ்விருவகைச் சிறப்பும் ஒருங்கமைய வாழ்ந்த பெருமை புகழனார்க்கு உண்டு ஆதலின் உளரானார், உளரானார் என இரண்டுவகை அடுக்குத்தொடர் இலக்கணத்தால் தெரியவைத்தார்.

தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயை, அனைத்துயிரும் வாழவேண்டும் என வைத்த அருள் என்ற இரண்டையும் இணைத்துத் தாங்கியிருக்கும் திலகவதியாரை உளராக நிறுத்திய பெருமை புகழனார்க்கு உண்டு.

அதுமட்டுமேயன்றி, சிவனென்னும் ஓசையல்லது வேறு எந்த ஓர் ஓசையையும் ஏற்றுக்கொள்ளாமல் ஒழித்து விட்ட இவ்வுலகில் திருநின்ற செம்மையும் உளது எனக் காட்டி, அதனைத் துய்த்து நின்று தொண்டாற்றிய திருநாவுக்கரசர் உளராகுமாறு வாழ்ந்து நின்ற பெருமையும் புகழனார்க்கு உண்டு.

திலகவதியார், திருநாவுக்கரசர் என்ற இருவரையும் — இருவேறுநிலைகளைக் கொண்டு வாழ்ந்த இருவரையும் உளராக நிறுத்திய தகைமை உடையவர் ஆதலின் புகழ ஞரை உளரானர், உளரானர் என இருமுறை அடுக்கிக் கூறிச் சிறப்பித்தார் சேக்கிழார்.

### தம்பியும் தமக்கையும்

சிவன் எனும் நாமம் தமக்கேயுரிய செம்மேனி எம் மானைப் பரம்பொருளாகக் கொண்ட சைவமாம் உலகப் பொதுநெறியும் திருநெறியத் தமிழ் எனலாகும் உலகப் பொதுமைப் பயனும் என்றும் உலகில் வதிய வேண்டும் என்று தவமிருந்தவர்கள் மூவர். அவர்கள் மூவரும் 'வதி யார்' என்றே அழைக்கப் பெற்ருர்கள். அவர்கள் என் றென்றும் நிலவுலகில் இருப்பவர்களே. அவர்கள் முறையே திலகவதி, புனிதவதி, பதுமவதி என்போராவர். வர லாற்று முறையில் புனிதவதி, திலகவதி, பதுமவதி எனக் கொள்ளலாமாயினும், நம்பியாரூரர் அமைத்தருளிய வரிசை முறையில் திருநாவுக்கரசரை உள்ளிட்டுக்கொண்டு திலக வதியாரே முதலில் போற்றப்பெறுகின்ருர். திலகவதியார் திருத்தொண்டத்தொகையில் நேரே இடம்பெறவில்லை. ஆயினும், தம்பியாரை உளராக வைத்த பெருமை திலகவதி யாருக்கே உண்டு என்ற திருவருள் நுட்பத்தை அமைத்துக் காட்டியருளிய பெருமை சேக்கிழாருக்கு உண்டு.

"மானுடம் இவர்தாம் அல்லர், நற்பெருந்தெய்வமாதல் நான் அறிந்து அகன்றேன்" என்ற வணிகனின் வார்த்தை யைக் கேட்டதும், கொன்றைவார் சடையினுர்தம் குரைகழல் போற்றி, சிந்தை ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு, இவனுக்காகத் தாங்கிய வனப்புமிக்க தசைப் பொதி கழித்து, மெய்யில் ஊனடை வனப்பை எல்லாம் உதறி எற்புடம்பேயாக, வானமும் மண்ணும் வணங்கு பேய் வடிவம் பெற்று, தலையினுல் நடந்து திருக்கயிலை சென்று வணங்கியவர் புனிதவதியாராம் காரைக்கால் அம்மையார். "இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" என்று கயிலைக்கிறைவனுல் பாராட்டப்பெற்ற பெருமை நம் பேயார்க்கு உண்டு. ஆனல், கலிப்பகையாருக்காக அமைந்த வாழ்க்கையை அழித்து, என் உயிரை அவர்தம் உயிரோடு ஒன்றுவிப்பன் என எழுந்த திலகவதியார்

அக்கருத்தை மாற்றி இவ்வுலகில் வாழ்வது தேவை என அறிந்து, அதனைமேற் கொண்டதோடு தொண்டும் ஆற்றினர்.

ஆண்டவனைப் பேணும் பெருமை பேயார்க்கு உண்டு என்னின், சிவனடியவர்கள் எனப்பெறும் திருநெறியத் தமிழ்ப் பெருந்தகைகள் உளராக வேண்டும் என வைத்த தயைநிறை வாழ்க்கையை உடையவர் திலகவதியார். சிவனடியார்கள் உளராதல் வேண்டும் என்பதேயன்றி, அனைத்துயிர்களும் இறைவனடியார்களாக ஆக்கம் பெறுதல் வேண்டும் என்று அனைத்துயிர்களுக்காக அருள் தாங்கி வாழ்ந்த பெருமை திலகவதியாருக்கு உண்டு.

புல்லின் நுனியில் நின்ற நீரின் தன்மையே புல்நீர்த்தம் எனப்பெற்றுப் புனிதம் என்றாயது. புனிதம் என வதிந்தவர், உலகியலில் குறிக்கோளற்ற வாழ்வில் வதியாது, உயிர்கள் சிவபரம்பொருளில் நின்றுபேரின்பம் துய்ப்பதற்காகத் திருநெறியத் தமிழ் எனப்பெறும் சொற்கோயிலை அமைத்து வெளிப்படுத்தியவர் பேயார் எனப்பெறும் காரைக்காலம்மையார்.

''கீதம் முன் பாடும் அம்மை''

என நின்று, அறவன் ஆடும்போது அவன் அடியில் 'இருக்க' எனப்பெறும் இருத்தல் நிலைபெற்றார். திருநெறியத்தமிழ் உளவாக இருந்தவர் காரைக்கால் அம்மையார்.

சொற்கோயிலுக்கொத்த கற்கோயிலை, அத்தகு கற்கோயில் எழுபதினை எண்டோளீசற்கு எழில்பெற அமைத்து விளங்கச் செய்தவனாகிய பெருந்தகையை உரிய காலம் வரையில் வயிற்றில் தாங்குதலே அரியது எனினும் உரிய காலமும் கடந்து, சிவத்தொண்டு பேணுதற்குரியவனைத் தன்பிள்ளையை ஆக்கும் வகையில், அவன் அப்பணியை ஆற்றுதற்குரிய நாளும் கோளும் இணையும் கால அளவு வரையில், தலைகீழாகத் தம்மை நிறுத்தித் தவமிருந்து, அதனால் சிவந்த கண்ணுடையவனாகப் பிறந்த தன் மகனை ''இவன் என் கோச் செங்கண்ணனே'' என்று கூறி, கோச்செங்கணன் உளனாகுமாறு தவமிருந்து, வதியாரானவர் பதுமாவதி அம்மையார். அவ்வகையில் திலகவதியாரின் வாழ்வியல்நெறி இருவகையான அமைப்பியல்பு

களைக் கொண்டதாக அமைகிறது. தம்பியார் உளராக வாழ்ந்த நிலை ஒன்று. உலகத்துயிர்கள் சிவபரம் பொருளைச் செம்மைப் பண்பில் நிறுத்தி, துய்த்து, வாழ்ந்து உள்ளன வாம் நிலைபெறுவதற்கும் ஆன தொண்டு நெறியில் வாழ்ந்த நிலை மற்றொன்று. தமக்கையார் வாழ்வையும் தம்பியார் வாழ்வையும் இருவேறு நிலைகளிற்காணும் கருத்தினைத் திட்பமுற அமைக்கும் வகையில் சேக்கிழார் 'உளராஞர் உளராஞர்' என இருமுறை அமைத்தருளினர் எனக் கொள்ளல் வேண்டும்.

மேலே கூறப் பெற்ற மூவருமே வதியாராக (புனிதவதி யார், திலகவதியார், பதுமவதியார்) நின்று வதிந்து கொண்டிருப்பவர்கள். முத்தமிழெனை இன்றும் நின்று தொண்டு புரிந்து கொண்டு இருப்பவர்களே.

புகழனும் மாதினியாரும் குலமுதல்வர்கள். ஒருவர் பின் ஒருவர் போயினர். அறவாழ்வும் கற்புவாழ்வும் தெள்ளிதின் உணர்த்தப் பெறும் வரலாற்று நிகழ்வுகள் கொண்ட குடும்பமே அது. திலகவதியாருக்கு மணம் பேசிய அவ்வளவிலேயே குடும்ப இயல்பான நிகழ்வுகள் முற்றுப் பெற்று விடுகின்றன. மணமுடித்தல் நிகழாது போய் விடுகிறது. "எந்தையும் எம் அனையும் அவர்க்கு எனைக் கொடுக்க இசைந்தார்கள், அந்த முறையால் அவர்க்கே **உரியது** நான் ஆதலினுல் இந்த உயிரை அவருயி ரோடு இசைவிப்பன்" எனத் துணிந்தது தாய் தந்தை எனப் பெறும் இருபெருங்குரவர்தம் செயற்பாடுகளை ஒப்பி வாழ்ந்த அறம் வழுவா நற்பணி. திலகவதியார் மணப் பருவம் எய்தியதும் 'கலிப்பகையார்' என்பவருக்கு மணம் பேச, கலிப்பகையாரும் மன்னவனுக்காகப் போர் மேற்கொண்டு சென்று, அப்போரில் வீரமரணம் எய்திஞு ராக, திலகவதியார் எடுத்த துணிவு அறம் பிறழா அடிப் படைச் செம்மை வாழ்வு என்ற பின்னணியில் சிறிதும் பிறழாத நல்வளக் குடும்பமாக அக்குடும்பம் நிலவி வந்தது என நாம் உணரலாம்.

திலகவதியாருக்குப் பின்வந்த திருநாவுக்கரசருக்கு அறவாழ்வு அமைந்த முறைமையையும் நாம் தெளிதல் வேண்டும். அமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலிற் போடவும், அக்கல்லே தெப்பமாகக் கொண்டு

கரையேற விட்ட நகருக்கு உளதாந்தன்மைப் பெருவாழ்வு தந்து கரையேறிப் பாதிரிப்புலியூர்ப் பரமனைப் பார்க்கிறார் திருநாவுக்கரசர். தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் பெருமை பெற விளங்கும் திருப்பாதிரிப்புலியூரைக் காண்கிறார். தன்னுள் இருந்து, தன்னைக் காப்பாற்றிய தந்துணையை ஆராமை தழுவப் பாடிக் கசிந்து கண்ணீர் உகுக்கிறார். அங்கே பரம் பொருளை அமைத்துப் பாட முற்படும் திரு நாவுக்கரசர் ஓர் அருமையான இணைப்புக் கொள்கையை உருவாக்கிக் காட்டுகின்றார். மூன்றாய் நின்று உலகைப் படைத்துக் காப்பவன் எனக்கு மூன்றாய் நின்றான் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஈன்றாள், எந்தை, உடன் தோன்றினர் என மூன்றாகவும் நின்ற ஒருமைப் பொருள் உண்டு என இணைக்கிறார். இங்கே திருநாவுக்கரசர் உலகத்துக்கு ஈன்றாளுமாய், உலகத் தந்தையாகப் பெருமான் இருக்கிறான் என்று பேசவில்லை. ஈன்றாளுமாய் எனக்கு, எந்தையுமாய், உடன் தோன்றின ராய் எனத் தம்வாழ்வியல் உறவையே அமைத்துக் காட்டுகின்றார். தாயென, தந்தையென, தமக்கையென நின்ற பொருள் ஒன்றே என்று குறிப்பிடும் வகையில் தேவாரத் திருப்பாடல் அமைகின்றது.

ஈன்றாளும் எந்தையும் என நின்ற இருமையையும் தன்னுள் அடக்கி, இரண்டையும் கடந்த, இரண்டையும் இணையநிறுத்தி, மேற் பெருகி வளர்ந்து பீடுபெற நின்ற ஒருமை என்ற ஒன்று உண்டு எனக் காட்டி, அத்தகு பெருமைக்குரிய ஒருமையே திலகவதியார் எனத் திலக வதியாரைக் கொள்ளும் திருநாவுக்கரசர் வாழ்வியல் நுட்பத்தை உணர்தல் வேண்டும்.

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றுணர்க என்ற சாத்திர விளக்கம் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள அருமைத் தொடர்பை அறிவுறுத்தி நிற்கும் மூல வாக்கியம். ஆயினும், தந்தை தாயர்க்கும் மகனுக்கும் இடைநின்ற சிறு இடைவெளியுங்கூட, இல்லாமற்போகு மாறு, இணைந்து நின்று உயிர்களுக்குத் தொண்டாற்றும் இன்னொரு நிலையும் அப்பரம்பொருளுக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் முறையிலேயே '**உடன் தோன்றினராய்**' என்ற அரிய உறவுமுறை அமைகிறது.

பரம்பொருள் உயிர்களுக்கு ஒன்ருய் நின்று தொண்டாற்று தல், வேருய் நின்று தொண்டாற்றுதல் என்ற இருநிலைகளை உலகில் அனைத்துச் சமயங்களும் ஏற்று நிற்கவும், திரு நெறியத் தமிழ்வழிநின்ற — திருப்பதிகப் பெருவழி என நின்ற, தென்னுடைய சிவனெனும் திருநின்ற சைவ மானது 'உடனுய் நின்று தொண்டாற்றும்' மூன்ருவதாகிய ஓர் அரிய நிலைத் தொண்டினையும் அப்பரம்பொருள் ஆற்று வதாக அமைத்துத் தம்கொள்கையை வலியுறுத்துவ தாயிற்று. அக்கொள்கைக்கு மூல இலக்கியமாக நின்று வாழ்வளித்தவர் '**திலகவதியாரே**'.

உலகில் வாழ் உயிர்களுக்கெல்லாம் அம்மை அப்பர் என நின்று தொண்டாற்றும் நிலையையும் இணையநிறுத்திச் சீர்தூக்கி அளவை நெறிப் படுத்தவும் வாய்ப்பு அமைகிறது திருநாவுக்கரசர் குடும்பத்தில்.

போரில் உயிர் நீத்த கலிப்பகையாரின் உயிருடன் தம் முடைய, "அன்னையும் அத்தனும் அகன்ற பின்னையும் நான் உமை வணங்கப் பெறுதலினுல் உயிர் தரித்தேன், என்னை இனித்தனிக்கை விட்டு ஏகுவீர் எனில் யானும் முன்னம் உயிர் நீப்பன்" எனக் கூறுகிருர் மருள்நீக்கியார் என்ற இயற்பெயருடைய திருநாவுக்கரசர்.

உயிர்கள் தத்தம் தனிநிலைகளில் இருப்பனவாதல் வேண்டும். அது வாழ்வியல் சிறப்பு நிகழ்வுகளால் விளக்கம் பெற்று, அனைவராலும் மதித்துப் போற்றுமாறு உளவாவனவாகவும் அமைய வேண்டும். விளக்கம் பெற்றுச் சிறந்து நிற்கும் நிலையானது உயிர்களுக்குப் படிப் படியாய் வருவது. ஆனுல், உயிரானது ஒரு தனிப் பொரு ளாய் நிலைநிற்க வேண்டுமெனில், அது தன்னளவில் தனித்து நிற்க இயலாத போது, அது நிற்க வேண்டும் என்ற வகையில் அதனுடனேயே நின்று அதனைத் தாங்கிக் கொண்டு நிற்கும் பொருள் மிகமிக அவசியமானதாக அமைகிறது. எனவே, தாங்கி நிற்கும் மூலப் பொருள், அடி நிலை உண்மைப்பொருள் இல்லையானுல் உயிர் என்ற தனிப்பொருளே இல்லை; உயிர் என்ற பொருள் தனித்து நிற்கவில்லையானுல், அதன் இருப்பே இல்லாதபோது அது வாழ்ந்து சிறப்பதற்கு வழியே இல்லை. எனவே, உடனிருத் தல், உடனுதல் என்ற பரம்பொருள் நிலையே உயிர் நிற்

பதற்கு உரிய மூல முதல் துணையாக அமைகிறது என்ற கொள்கையை அடிப்படைக் கொள்கையாக அமைப்பதே திருநாவுக்கரசரின் வாழ்வியல் நுட்பம்.

திலகவதியாரின் 'இருத்தல்' இல்லையானல் திருநாவுக்கரசரின் இருத்தல் இல்லை. அன்னையும் அத்தனும் அகன்ற பின்னரும் திருநாவுக்கரசரால் இருத்தல் இயலுவதாயிற்று. ஆனல் திலகவதியார் அகன்ருல் திருநாவுக்கரசரின் இருப்பு இல்லையாகிவிடும். இந்நிலையில், திலகவதியார் இருக்க வேண்டும் என்று துணிகிருர். ஆனல், தம்பியார் இருக்க வேண்டும் என்பதற்காக மட்டும் திலகவதியார் இருக்கவில்லை; தம்பியார் இருப்பதோடு மட்டுமல்லாமல் உளராகவும் வேண்டும் என்பதற்காகத் திலகவதியார் இருக்கத் துணிகிருர். தம்பியார் இருக்க வேண்டும் என்பதற்குத் தன் இருப்புப் போதுமானது. தம்பியார் இருப்பை உள்ளிட்ட தன் இருப்புக்குத் தேவையானது தம்பிமேல் வைத்த தயையே. தம்பியார் இருப்பதோடு மட்டுமன்றி, உளராகவும் வேண்டும் என எண்ணிய போது அதற்குரிய தேவையாகத் திலகவதியார் கைக்கொள்வது அனைத்துயிர்களையும் உள்ளிட்ட அருட்டன்மை.

தனிஉயிரை இருப்புடையதாகச் செய்வது இறைவனின் தயவு; உயிர்கள் விளக்கமுற்று, வாழ்வியற்பேறு பெற்று, அவைகள் 'உளவாக' நிலைபெறுவதற்கு இறைவனின் தனிப்பெருங் கருணையே காரணமாக அமைகிறது என்ற நுட்பத்தையும் அமைத்துக் காணுதல் வேண்டும்.

எனவே, தயவு, உயிரிரக்கம் எனப்பெறும் கருணை என்ற இரண்டையும் இணைத்து நிறுத்தி விளக்கமுறுத்தும் "உடன்தோன்றினர்" என்ற தொண்டுமுறையை விளக்கும் பெருந்தகையாக அமைந்தவர் திலகவதியார் எனக் கொள்ளல் வேண்டும்.

தம்பியென்ற அந்நிலையில் நிறுத்திய தயவே திருநாவுக்கரசரின் இருப்புக்குக் காரணமாகிறது. அனைத்துயிர்களும் விளங்கி, சிவபரம் பொருளைத் துய்த்து இன்பமுற வேண்டும் என்ற நிலையில் நிறுத்திய அருள் தாங்கிய நிலையே திருநாவுக்கரசர் உளராக அமைதற்குக் காரணமாக இருந்தது.

மேலே குறிப்பிடப் பெற்ற இணைப்புச் சிந்தனையினால், உயிர்களிடத்தில் உடனாய் நின்று, உடன் தோன்றி நின்று தொண்டாற்றும் இறைவனின் தனிப்பேரறநிலை விளக்கம் பெற்றது எனக் கொள்ளலாம். மேலும் ஒரு நுட்பத்தைச் சேக்கிழார் அமைத்துக் காட்டுகின்றார்.

நாற்காலி இருக்கிறது, பேனா இருக்கிறது எனக்கூறும் உலக வழக்கை எடுத்துக் கொண்டு அவைகளை மேலும் நுட்பமாக அறிய வேண்டும். நாற்காலி என்று சொன்னாலே போதுமே, நாற்காலி இருக்கிறது எனவும் சொல்ல வேண்டுமா? இது ஒரு வினா. எந்த ஒருபொருளை எடுத்துக் கொண்டாலும், அது ஒரு பொருளாகத் தன்னை இருக்க வைத்துக் கொள்ளும் தன்மையோடுதான் இருக்கிறது. நாற்காலியானது தன்னை ஒரு பொருளாக இருக்க வைத்துக் கொள்ளும் இருப்புடையதாகத் தன்னை அமைத்துக் கொள்ளும் தன்மையோடு இருப்பதனால் 'நாற்காலி இருக்கிறது' என்ற வழக்கு உண்டாகிறது. நாற்காலி இருக்கிறது என்று சொல்லாமல் நாற்காலி என்று மட்டுமே சொன்னாலுங்கூட, அதே பொருளை அவ் வழக்கு உணர்த்தத்தான் செய்து விடுகிறது.

நாற்காலி இருப்பதற்குத் (நிலம்) தரை காரணமாக அமைவதை நாம் பார்க்கலாம். பிறகு தரை இருப்பதற்குக் காரணம் எது என்ற வினா எழும். முடிவாக, நாம் காணும் பொருள்களின் இருப்புக்கு உரிய மூல இருப்புப் பொருள் என ஏதேனும் ஒன்று உண்டா என்ற வினா எழும். முடிவாக, எல்லாப் பொருள்களின் இருப்புக்களும் தனித்தனி யானவைகளேயாயினும், அவைகளையெல்லாம் இணைத்த நிலையில் இறைவனின் இருப்பு அமைகிறது என்று பொது வாகச் சமய வழிச் சான்றோர்கள் ஒப்புதல் அளிப்பார்கள். இக்கொள்கையின் உண்மைத் தன்மையை ஆராய்வது இங்குள்ள நோக்கமன்று.

உயிர்கள், உலகப் பொருள்கள் ஆகிய எல்லாப் பொருள்களின் இருத்தல்களுக்கும் தாரகமாக, மூலமாக, தாங்கி நிற்கும் நிலையமாக இறைவனின் இருப்பு அமை கிறது. அவ்வகையில் இறைவன் இருப்பானது வேறொன்றைச் சார்ந்து நில்லாத தனித்த இருப்பு என்பதும் பிற எல்லாப் பொருள்களின் இருப்புக்களும்

இறைவன் இருப்பைச் சார்ந்து நிற்கும் இருப்புக்களே என்பதும் சமய உலகில் ஏற்கப் பெற்றுள்ள பொதுக் கருத்தாகும்.

உயிர்களையும் பிறபொருள்களையும் தாங்கி நிற்பவன் இறைவன் என இக்கருத்தைப் பொதுவாக விளக்குவது மரபு. திருநாவுக்கரசரும்

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கட னடியே னையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே"

என்று கூறியருளுவதைக் கொள்ளலாம்.

இனி, உயிர்களுடைய, உயிரல் பொருள்களுடைய இருப்புக்களுக்குத் தன்னுடைய இருப்பினைத் தந்து நிறுத்திய இறைவன் உயிர்களை விளக்க முறுத்தும் தொண்டில் ஈடுபடுகிறான். உயிர்களை விளக்கமுற வைக்கும் வாழ்வியற் பணியில் இறைவன் ஈடுபடும் போது, அவை களை முதன் முதலில் அறவழியில் நிற்கப் பயிற்சியளிக் கிறான். அறஞ்சார்ந்த நெஞ்சும் அறஞ் செய்தற்கு ஆற்ற லும் இணைந்து நிற்க, உயிரானது அறந்தலைநின்ற பணிகளை மேற்கொள்ளுகிறது. அறப்பயிற்சியின் அடிப்படையில் உயிர் விளக்கத்தை அமைத்தல் என்ற பொதுமை யறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது இறைவன் கடமை யாகிறது. இங்கே இறைவன் நடுநிலைநிற்பவனாக, பொது ஆட்டிற்கு வல்லவனாகச் சமயம் விரிவுரை செய்கிறது. இக் கருத்தினை,

வீட்டிற்கு வாயில் எனுந்தொடை
சாத்து சொல்வேந்தபொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு
ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய்
நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற் குநீயும் அவனும்
ஒப்பீ ரெப்படியினுமே"

என்ற, கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளின் நால்வர் நான்மணிமாலை இரண்டாம் பாட்டினால் தெரிய உணரலாம். அறம், அறப்பயன், அறப்பயிற்சியால் உயிர்கள் பெற்ற அறிவு முதிர்ச்சி ஆகியவைகளின் அடிப்

படையில்தான் உயிர்களுக்கு நற்பலன் வழங்குதல் என்பது இறைவன் அமைத்துக் கொண்ட பொதுமை நெறி.

உயிர்களுக்கு அருள் வழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் அடியவர்கள் இறைவனையும் விஞ்சிய நிலையில் தமக்கென்ற தனித்தன்மையை மேற்கொள்ளுகிறார்கள். திலகவதியார் தம்மை அடியவர் என நிறுத்திக் கொண்டமையால் அறத்தின் அடிப்படையில்தான் உயிர்களுக்கு நன்னிலை அளித்தல் வேண்டும் என்ற பொதுமை நெறியிலிருந்து சிறிதே வேறுபட்டு நின்று, உயிர்களுக்குத் திருவருட் பேற்றினை வழங்கி விடும் அருட்டன்மையில் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளுகிறார்கள்.

அற அடிப்படையைக் கடந்தும் அருள் வழக்கம் நடைபெறுவதை அடியவர்களிடத்தில் நாம் காண முடிகிறது. இதனைச் சேக்கிழாரின்

> "திருமறை நம்பர் தாம்முன்பு அருள்செய்த அதனைச் செப்பும்
> ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரா னார்பால் ஒக்க
> வரும் அருட் செய்கை தாமே வகுத்திட வல்லோர் என்றால்
> பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க்கு இடையீடு பெரிதா
> மன்றோ"

என்ற திருவாக்கின் மூலம் (பெரியபுராணம் 2495.) உணர முடிகிறது.

அறத்தின் அடிப்படையில்தான் உயிர்களுக்கு நற்பேறு வழங்குதல் இறைவன் நிலை. ஆயினும், திலகவதியார் போன்ற அடியவர்களின் நிலையானது சற்று வேறுபட்டது. அறஅடிப்படையைக் கடந்தும் அருள்வழக்கம் நடைபெறுவதை அடியவர்களிடத்தில் காண முடிகிறது. இதனைச் சேக்கிழார்,

> "அம்பொன்மணி நூல் தாங்காது
> அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி"

என்ற திருவாக்கினால் குறிப்பிட்டருளுகின்றார்.

கலிப்பகையார் இறந்தமையால் மணமங்கல நூல் தாங்காது உயிர்களுக்கு அருள் நோக்கம் காட்டும் திருவருள் நிலையை ஏற்று வாழ்ந்தார் திலகவதியார்

என்பது வரலாற்றுப் பொருள். அதே வரிக்குத் தத்துவப் பின்னணியில் வேறொரு பொருளும் உண்டு.

நூல் என்பது அறக் கோட்பாட்டு முறை. நூலொடு இணைந்த அருள் தாங்குதல் இறைவன் நிலை. நூல் தாங் காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்குவது அடியவர் நிலை. இங்கே நூல் எனப்பெறும் அறநெறிகளை எதிர்த்து நின்றவர் என்றோ அவற்றின் உண்மைத் தன்மையை மறுத்து நின்றவர் என்றோ கொள்ளலாகாது. அறம் மறம் என்ற இருமையையுங் கடந்து நின்றவர்கள் என்பது பொருள். கடந்து நின்றவர் ஆகையால் அவர்கள் "நீத்தார்" எனப் பெற்றனர். அவர்கள் அருள் என்னும் ஒருமையால் உலகை வென்றவர்கள்; ஊனம் மேல் ஒன்றும் இல்லாத வர்கள். அவர்களைச் செயற்கரிய செய்யும் பெரியோர் என்றும் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு நிற்பவர்கள் ஆதலின் அந்தணர் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடு கின்றார். அவர்கள் அறத்தை மறுத்தவர்கள் அல்லர் ஆதலின் அவர்களை 'அறவோர்' என்று நயம் பெறக் குறிப் பிட்டும் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

### இருத்தலும் உளதாதலும்

இருத்தல், உளதாதல் என்ற சொற்கள் இன்று மக்கள் பேச்சு வழக்கில் காணப் பெறும் சொற்களே. பேச்சு வழக்கில் அச்சொற்களுக்கு உரிய பொருளைத் தெரிந்து கொள்ளுதல் முதற்படியில் நின்ற அறிதல் நிலை. மேலும், இருத்தல், உளதாதல் போன்ற சொற்களை அருளாளர்கள், மறைமொழிச் சதுரர்கள் ஆகியோர் குழூஉக் குறியீட்டுச் சொற்களாகப் பயன்படுத்தி வழங்கியிருந்தமையையும் நாம் காண முடிகிறது. அத்தகைய குழூஉக் குறிச் சொற் பொருள்களையும் நாம் இணைத்து உணர்தல் இரண்டாம் படி நிலை அறிதல் எனக் கொள்ளவேண்டும்.

தமிழ்மொழி, அதன் மொழி இலக்கணம் என்ற இரண்டன் அடிப்படையில் நின்று ஆராய்ந்தால் 'இருத்தல்' என்பது தனிவினையாக இருந்து பின்னர் மெல்லத் துணை வினையாக அமைந்து விட்டது என்பதைக் காணலாம்.

இருத்தல் என்பது இக்கால வழக்கில் உட்கார்தல் என்பதோடு ஒத்த பொருளுடையது. இன்று செட்டி நாட்டு

நகரத்தார் வழக்கில் மட்டும் காணப் பெறும் இச்சொல்லும் பொருளும் தமிழர்களின் நாட் பேச்சுவழக்கில் இடம் பெற வில்லை.

முதல்நிலை வினையாக, தனிவினையாக நின்ற 'இருத்தல்' என்பது நாளடைவில் துணைவினையாக அமைந்து விட்டது. எழுந்திருந்தான், விழித்திருந்தான் என்றாற் போல்வன வற்றில் 'இரு' என்பது துணைவினையாக அமைந்து விட்டதைக் காணலாம்.

'இருத்தல்' என்ற சொல்லுக்கு வரலாற்றுப் பின்னணி யோடும் மரபு வழிப்பட்ட சால்பினோடும் அமைந்த பொருள் விளக்கம் உண்டு என நாம் அறுதியிட்டுரைக்கலாம்.

"இருத்தல்" என்ற சொல்லுக்குத் தத்துவ நூல்களில், அருளாளர்தம் திருவாக்குக்களில் வேறு வகையான பொருள் விளக்கம் அமையப் பெற்றுள்ளமையைக் காண லாம்.

மாணிக்கவாசகப் பெருமான் தாம் அருளிய திரு வாசகத்தில், திருவண்டப் பகுதியில் (வரி 179-183),

"என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமு தாக்கினன்
பிரமன் மால் அறியாப் பெற்றியோனே"

என்று கூறியருளுவதை முதலாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

'இருப்பதாக்கினன்' என்ற மணிவார்த்தையை எடுத்துக் காட்டி விளக்க முற்படும் வடலூர் வள்ளல் இராம லிங்கசுவாமிகள், தாம் அருளிய ஆளுடைய அடிகள் அருள் மாலை, 4 ஆம் திருப்பாட்டில்,

"உருஅண்டப் பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றுஎப் பெருந்தவரும் கூறுகின்ற கோவே நீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம் எனக் கியம்புதியே"

என்றும், 'இரு' என்ற தனிமொழியானது என்னையும் என் உடையவனையும் ஒன்றாக்கித் தருமொழி என்றும் விளக்கங் கூறியருளுகின்றார்கள்.

மேலும், வள்ளலார் 'இரு' என்ற நிலைமொழியாம் மறைமொழியை இணைத்து, பசித்திரு, தனித்திரு, விழித் திரு என்ற கொள்கை மொழிகளை எடுத்துக் காட்டி விளக்கி அருளியுள்ளார்கள்.

வரலாற்று முறையில் நமக்கு உரிய முழுமைச் சான்றாகக் கொள்ளும் பெருமிதத்துடன் கூடிய இருத்தல் ஒலி சிலம்பினுள் முழக்கம் பெறுகிறது. கோவலன் வெட்டுண்டானாக, அவ்விடத்துக்கு வந்துநின்று, அவனைக் கண்ணகி தொடுகிறாள். வெட்டப் பெற்ற தலையானது உடலுடன் இணைந்து நிற்க, கோவலன் வான்வழிச் செல்ல முற்படும்போது அவன் 'இருந்தைக்க' எனப் போனான் என்பது இளங்கோவடிகளின் செப்பம் வாய்ந்த தமிழகப் பண்பாடு.

"வாக்கிற்கு அருணகிரி" என்று பாராட்டப் பெறும் அருளாளராகிய அருணகிரிநாதர் — கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன எந்தை அருணகிரி நாதர் தாம் அருளிய கந்தரநுபூதியில் வரும்,

> செம்மான் மகளைத் திருடும் திருடன்
> பெம்மான் முருகன் பிறவான் இறவான்
> சும்மா இரு சொல்லற என்றலுமே
> அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"

என்ற திருப்பாட்டினுள் 'இருத்தல்' என்ற சொல் மந்திர மொழியாக அமைக்கப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

'இருத்தல்' என்ற சொல்லுக்குத் தனித்த ஒரு தத்துவப் பின்னணியைக் கொண்ட அநுபவப் பொருள் உண்டு என்பதைத் தெளிவாகத் தெரிவிப்பது மணி வாசகரின் மணிவார்த்தையே. 'என்னையும் இருப்பது ஆக்கினன்' என்று கூறுவதன் மூலம் அது இறைவன் அந் நிலைக்கு — ஆக்கம் தழுவிய ஒருவகை அநுபவப் பேற்றுக்குத் தன்னை ஆளாக்கினான் என ஐயத்துக்கு இடம் தராதவாறு அமைத்துக் கொடுத்துள்ளார் மாணிக்கவாசகர் என அறியலாம்.

'இருப்பதாக்கினன்' என்ற ஒருவகை அனுபவப் பேற்றைத் தெளிவுற அமைத்துக் கொள்வதற்குக் கீழ்க் கண்ட விளக்கம் பயனுடையதாக அமையும்.

"மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே"

என்பது புறநானூறு. உலகம் நிலையற்றது ஆகையால், நிலையற்ற உலகில் நிலையான தன்மையுடன் வாழ முயன்றால் நிலைத்து வாழ்தல் என்பதைப் புகழ் நிற்க வாழ்தல் என்ற அளவில்தான் அமைத்துக் கொள்ள முடியும் என்ற புறநானூற்றுப் புலவனின் கருத்து வரலாற்றுப் பின்னணியுடன் அமைந்த பொதுமைச் சிந்தனையின் விளைவு எனக் கொள்ளலாம்.

'இருத்தல்' என்பதைத் தத்துவப் பின்னணியுடன் அமைத்து விளக்கம் காண முற்பட்டால் 'இருத்தல்' என்பதை உடல், உயிர் என்ற இரண்டற்குள் எந்த ஒன்றற் குரியதாக ஆக்குவது என்ற வினா எழும்.

சைவசமயம் காட்டும் திருவைந் தெழுத்துப் பொருள் நுட்பங்களை அமைத்துச் சிந்தித்தால் உடல், உயிர் ஆகிய வைகளின் இருப்பின் திறம் எவ்வாறு என்பது விளக்கம் பெறும்.

'ஓம்' என்பது ஓரெழுத்து ஒருமொழி மந்திரம். அதனுள் ஐந்து உறுப்புக்கள் உள்ளன. அகரம், உகரம், மகரம், மகரத்தின் மேல் உள்ள புள்ளி எனப் பெறும் விந்து, அகரம் முதலிய உறுப்பு எழுத்துக்களின் கூட்டொலி என்பனவே அவை. அவற்றின் பொருள் கீழே அமைக்கப் பெற் றுள்ளது.

அ — இறைவன்
உ — திருவருள் என்ற சத்தி
ம, புள்ளி, ஒலி ஆகிய மூன்றும் மலத்தை உணர்த்துவன.

மூன்றாவதாக நின்ற மகரம், புள்ளி, ஒலி பற்றிய குழூஉக் குறி விளக்கத்தில் மாறுபடும் அருளியல் ஆய்வறிஞர்கள் உண்டு. இது தொகைத் திருவைந்தெழுத்து எனப்பெறும். இதன் விரிவாக — விரித்திருவைந்தெழுத்தாகச் 'சிவயநம' என்ற மறைமொழி மந்திரம் காட்டப்பெறுகிறது.

'சிவயநம' என்ற நுண் திருவைந்தெழுத்தில் முதலில் உள்ள சிகரம் சிவபரம் பொருளையும், வகரம் அருட்சத்தி

யையும் குறிக்கும். 'ஓம்' என்ற பிரணவ எழுத்தில் உள்ள அகரம் உகரம் என்ற இரண்டின் விரிவே 'சிவ' என்பது. இங்கே எண் இணைக்கப் பெறவேண்டும். சி, வ என்ற எழுத்துக்கள் அகரமும் உகரமும் என நின்றபோது அவை முறையே தமிழ்க் கணக்கு முறைப்படி எட்டு, இரண்டு என்ற எண்களைக் குறிக்கும். இவ்வகையில் பரம்பொருள் எட்டெனவும் இரண்டெனவும் பிரிந்து நின்றது எனக் கொள்ளுதல் வேண்டும்.

சிவநிலை பத்து என்ற எண்ணால் குறிக்கப் பெறுவதாயினும் பத்தென நின்ற அத்தனிநிலை எட்டும், இரண்டும் எனத் தனிநிறுத்திக் கூட்டி உணரப் பெறுவது எனக் குழூஉக் குறியாக அமைத்துக் காட்டப்பெற்றது.

"எட்டும் இரண்டும் உருவான இலிங்கத்தே"

எனவும்,

"எட்டு இரண்டு அறியாதேனை"

எனவும்,

"அ, உ அறியா அறிவில் இடைமகனே"

எனவும் வரும் இடங்களில் குறிக்கப் பெறுவனவெல்லாம் சிவநிலை தெரிதல் எனவும் அச்சிவநிலையும் எட்டும் இரண்டும் என நிறுத்தித் தெரிதல் வேண்டும் எனவும் விளக்கங் காணுதல் மரபு வழிப்பட்ட ஒன்றாகும்.

சிவநிலையானது எட்டும் இரண்டும் என நின்ற கூட்டின் தொகுதியாய், பத்தென நின்றது போலவே மலநிலையும் எட்டும் இரண்டும் எனநின்ற கூட்டின் தொகுதியாகிய பத்தென நின்றதாகவே உணரப்பெறுகிறது.

'சிவயநம' என்பதில் இறுதி நின்ற 'நம' என்ற இரண்டெழுத்துக்களும் மலத்தைக் குறிக்கும் எழுத்துக்களாம். மெய்யெழுத்து வரிசையில் நகரம் எட்டாவது எழுத்தாகவும் மகரம் எட்டுக்கு மேல் நின்ற இரண்டாவது எழுத்தாகவும் கொள்ளப் பெற்று, கூட்டு எண்ணாகிய பத்து என்பதனாலேயே மலத்தின் நிலையும் உணர்த்தப் பெறுகிறது.

முப்பொருள்களில் பரம்பொருள் எட்டும் இரண்டும் எனப் பிரிந்து நின்று, கூட்டு எண்ணாகிய பத்து என்பதால் உணரப் பெறுகிறது.

பரம் பொருளைப் போலவே மலமும் (நம) எட்டாவது எழுத்தும், அதன்மேல் இரண்டாவது எழுத்தும் எனப் பிரிந்து நின்று கூட்டு எண்ணுகிய பத்து என்பதால் உணரப் பெறுகிறது.

பதிப்பொருள் ஒருபுறம் நிற்க, பாசப்பொருள் ஒரு பக்கம் நிற்க, இடைநின்ற பசுப்பொருள் என்னும் உயிர்ப் பொருள் 'ய' என்பதால் உணர்த்தப் பெறுகிறது. தமிழ் எண்ணிக்கையில் பத்து என்பதற்குரிய அடையாளம் 'ய' என்பதாகும். உயிரானது பத்து என உணர்த்தப் பெறு தற்குக் காரணம் என்ன? 'சிவ' என்ற பரம் பொருளாகிய பத்தையோ, 'நம' என்ற பாசப் பொருளாகிய பத்தையோ சார்ந்திருப்பதேயல்லாமல் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதது என்ற நிலையில் 'பத்து' என்ற எண்ணுல் உயிர் குறிப்பிடப் பெறுவதாயிற்று.

உயிர்ப் பொருளின் இருத்தல் என்பது பரம் பொருளையோ பாசப் பொருளையோ சார்ந்ததாக அமை கிறது என்ற கருத்தை உணர்த்தும் வகையில் 'சிவயநம' என்ற திருவைந்தெழுத்துப் பொருள் நிலை அமைந்துள்ளது.

உயிரின் இருத்தல் நிலை இவ்வாருக, உடலின் இருத்தல் நிலையானது என்றும் மாற்ற முறுவதாகவே அமைந் துள்ளது.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு உயிர் ஏனைய இரண்டு பொருள்களில் அடங்கித் தன்னை மறைத்துக் கொள்வதோ உடலை விட்டு நீங்கிய நிலையில் தன்னை நிறுத்திக் கொள் வதோ 'இருத்தல்' என்பதற்குப் பொருளாக இருக்க முடி யாது. அவ்வாருயின் 'இருப்பதாக்குதல்' என்ற மணி வார்த்தையின் பொருள் யாதாயிருக்கும் என எண்ணி முடிவு செய்வது இங்கே வேண்டப் பெறுவதொன்று.

''என்னையும் இருப்பது ஆக்கினன்'' என்று அருளும் மாணிக்கவாசகர் அதனை விளக்கும் வகையில் வேறுசில செய்திகளையும் இணைத்துக் காட்டுகின்ருர்.

''அருட்பெருந்தீயினுல் அடியோமையும் அடிக்குடிலை யும் ஒருவர்கூட எஞ்சி நில்லாதவாறு எரித்து ஒடுக்கினுன்; செழுமையும் தண்மையும் வாய்ந்த பாற்கடலின் அலையினை

ஒத்து, உள்ளம் ததும்ப, வாக்கு இறக்க, அமுதத்தினை மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்; குரம்பை எனப் பெறும் என் உடலில் இனிய தேனமுதத்தைப் பாய்ச்சி, எலும்புத் துளைதொறும் அமுததாரைகளை ஏற்றினன்; அள்ளூறு யாக்கை அமைத்தனன்'' என்றெல்லாங் கூறியபின் என்னையும் இருப்பதாக்கினன் என்ற நிறைவுரையை அருளிச் செய்துள்ளார்.

மேலே குறிப்பிடப் பெற்ற விளக்கத்தின் அடிப்படையில் நோக்குவோமாயின் ''இருப்பதாக்குதல்'' என்பது காலத்தாலும் இடத்தாலும் தாக்கப் பெறாத நிலையில் காலத்தையும் இடத்தையும் கணித்தறியும் நிலையில் அமையப் பெறும் வாழ்வில் இருத்துதல் என்பதாகக் கொள்ளலாம்.

இருப்பதாக்குதல் என்பதை இறப்பு ஒழிந்த நிலை அல்லது சாகாமை நிலை எனவும் ஒரு பொருண்மைப் படுத்திக் காண இயலும். இதனைத் தேற்றமாக விளங்கிக் கொள்வதற்குக் கீழ்வரும் சான்று துணை செய்யும்.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினன்கனுள் முதல் இரண்டு நூல்களாக நின்றவை **திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும்** ஆம். திருவுந்தியாரை மூல நூலாகக் கொண்டு, அதன் விளக்கவுரை போல அமைந்துள்ள நூலே **திருக்களிற்றுப் படியார்**. இவ்விரு நூல்களையும் அருளிச் செய்த அருளாளர்கள் முறையே திருவியலூர் உய்யவந்த தேவநாயனுர், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுர் ஆவார்கள்.

> ''உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
> புணராதே நீபொதுவே நிற்கில் — உணர்வரிய
> காலங்கள் செல்லாத காதலுடன் இருத்தி
> காலங்கள் மூன்றினையுங் கண்டு.''

என்பது **திருக்களிற்றுப் படியார்** என்ற நூலின் 30ஆம் திருப்பாட்டு.

உயிரானது 'பொதுவில் நிற்றல்' என்ற நிலையில் செயற்படும் போது ''இருத்தல்'' என்ற அநுபவநிலை அமைகிறது. அங்கே, உயிரானது தன் முயற்சியில் எந்த ஒன்றையும் உணர முற்படாமலும், உறங்காமலும், ஒன்றை

நினைத்துக் கொண்டு சென்று ஒருபொருளை இவ்வாறு இது இருக்கும் என்பதாகக் கொண்டு அணையாமலும் தன்னைத் தனித்து நிறுத்திக் கொள்ளுமானால் அதுவே பொதுவில் நிற்றல் எனப் பெறும். அப்போது காலமாற்றங்களால் உண்டாகும் ஊறுபாடுகள் இல்லா தொழிய, காலங்கள் மூன்றினையும் (இறப்பு, நிகழ்வு, எதிர்வு) கண்டு, அவற்றைக் கணித்துக் கூறும் அறிவாற்றலும் பெற்று இருத்தல் இயலும் என்பதை மேலே குறிப்பிடப் பெற்ற **திருக்களிற்றுப் படியார்** திருப்பாட்டின் மூலம் உணரலாம்.

இருத்தல், இருப்பதாக்குதல் என்ற நிலையை விளக்க முற்படும் போது 'பொதுநிற்றல்' என்பதும் இணைத்துக் காட்டப் பெறுகிறது. அதனைத் தாழ்ந்த மணி நாவே போல் வாழும் நீத்தோர் நிலை என்றும் விளக்கியுள்ளார்கள். எனவே, உயிரானது அத்திப்பழத்தின் கொசுக்கள் போல எந்த ஒரு செயலாலும் தன்னுடைய இருப்பினை வரலாற்றுப் படுத்தாமல் சென்று பிறந்து இறந்து உழலுதல் உண்டு என்றும் அது செத்துப் பிறக்கும் நிலை என்றும் அவ்வாறு காலத்தோடும் இடத்தோடும் கரைந்து போகாமல் தன்னைத் தனித்த இருப்புடையதாக ஆக்கிக் கொள்ளும் குறிக்கோள் வாழ்வும் வாழ உயிரினால் இயலும் என்றும், அத்தகைய வாழ்வு நிலை காலத்தால் களங்க முறுத்தப் பெறாத உயர்நிலை என்றும், அந்நிலையே சாகா நிலை, இறப்பொழித்த நிலை என எதிர்மறைமுகமாகவும் இருத்தல் அல்லது இருப்பதாதல் என்ற உடன்பாட்டு முகமாகவும் அறியப் பெறுகிறது எனக் கொள்ளலாம்.

இருத்தல் என்பது அந்தவுயிர் நின்ற நிலை. அதனைப் பொதுமையில் நிற்கும் உயிர் எனவும் விரிவு படுத்தி அமைத்துக் கொள்ளலாம். சார்புணர்ந்து, சார்பு அழிய நின்ற நிலை; கால இடங் கடந்து, கால இடம் பற்றிய ஞானம் உணர்ந்த நிலை.

காரைக்காலம்மையார் ''அறவா நீ ஆடும்போது உன் உன் அடியின் கீழ் **இருக்க**'' என்று கூறியமைக்கு உரிய விளக்கமாகப் பொதுமையில் நிற்றல் என்பதை அமைத்துக் காணவேண்டும்.

அவ்வாறு நிற்றலே இருமையுங் கடந்து நின்ற நீத்தார் நின்றநிலை எனவும் விளக்க முறுத்திக் கொள்ள வேண்டும்.

நின்ற நிலையே இருத்தல் அல்லது இருப்பதாக்கிய நிலை. பொதுமையில் நின்றவர்கள், தாழ்ந்தமணி நாவே போல் நின்றவர்கள் செயற்படும் போது "உளராஞர்" ஆகிருர்கள். இருந்தநிலை எனப் பெறும் அம்முதல் நிலையி லேயே பல அருளாளர்கள் தம்மை நிறுத்திக் கொண்டு விடுவார்கள். ஒருசிலர் அந்நிலைக்கு அடுத்த நிலையிலும் சென்று ஏனைய உயிர்களுக்காகத் தொண்டாற்ற முற்படு வார்கள். அப்போது அவர்கள் "உளர் ஆஞர்கள்" என்ற தத்துவப் பின்னணியுடன் வழங்கப் பெறுவர்.

உளராதல் நிலை இருத்தல் நிலையை உடன் கொண்டதே. திலகவதியார் தம் தனிநிலையில் 'இருந்தார்' எனப் பெற்ருர். ஆயினும் "தம்பியார் உளராக வேண்டும்" என்ற அடிப்படையில் இம்பர்மனைத் தவம் செய்து திலகவதி யார் **இருந்தார்** என்று சேக்கிழார் திலகவதியாரை விளக்க முறுத்திக் காட்டிஞர் எனக் கொள்ளவேண்டும்.

இருத்தல், இருப்பதாதல், பொதுமையில் நிற்றல் இருமையுங் கடந்து நிற்றல் என்பன ஒரே பொருளை உணர்த்த வந்த பல்வேறு வழக்குக்கள். இதனைச் "**செம்மையுள் நிற்றல்**" என அமைத்துக் காட்டுவது திரு நாவுக்கரசரின் மரபு. "செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும் தானே" என்பது திருநாவுக்கரசரின் வாய்மொழி.

**முடிப்புரை**

திரு ஆம் ஊர் என்றும் திருநின்ற செம்மை என்றும் திருநாவுக்கரசருடன் ஒற்றுமைப் படுத்திக் கூறிய அருளாளர்தம் திருவாக்குக்களைச் சிந்தித்துத் தெளிந்த நிலையில் 'திருநின்ற செம்மை' என்பது ஒருவகைப் பொதுமை நிலையில் நிற்கும் நிலைபேற்று இயல்பு எனக் கொள்ள இடமளிக்கிறது என்பதும், திருநாவுக்கரசரின் தந்தையாரைச் சேக்கிழார் "உளராஞர் உளராஞர்" என இருமைப்படுத்தி வாழ்த்தியதன் பொருள் நுட்பம் உணர்ந்து போற்றுதற் குரியது என்பதும், தம்பியார் உளராகத் திலகவதியார் இருந்தார் எனவும் அம்பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி வாழ்ந்தார் திலகவதியார் எனவும் அமைந்த தெய்வச் சேக்கிழார் திருவாக்கினுக்கு நாம் தெளிந்து கொள்ள வேண்டிய பொருள் விளக்கம் இவை இவை என்பதும் காட்டப்பெற்றன.

# 3. சைவநலம்

*முன்னுரை*

"ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனக் கேவருஞ் சைவநலம்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே"

என்பது கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளின் நால்வர் நான்மணி மாலையில் உள்ள 34-ஆம் திருப்பாட்டு. வறுமையால் துன்புற்றவனிடம் பெருஞ்செல்வம் வந்தணையுமானல் அச்செல்வம் அவனிடம் சிறந்து வளரும் செழுமை பெறும். அவனும் அச்செல்வத்தின் பயனை ஓர்ந்து உணர்ந்து துய்க்கும் பேறு பெறுவான். அவ்வாறே, சமண் சமயஞ் சார்ந்து பின்னர் அச்சமயத்திலிருந்து மீண்டு மீளவும் சைவசமயம் சார்ந்த திருநாவுக்கரசருக்குச் சைவநலம் மேன்மேற் பெருக விளங்கும் என்பது அச் செய்யுளின் கருத்து. திருநாவுக்கரசர் தம் வரலாற்றுடன் சைவநலத்தை இணைத்தாய்வு செய்து தெளிதல் இத்தலைப் பில் அமையும் பொருட்பகுதியாகும்.

திருநாவுக்கரசரின் வரலாற்றுப் பகுதியோடு இணைந்து நின்று மணம் பரப்பும் சைவநலம் பற்றி ஆய்ந்து தெளிதல் இத்தலைப்பில் அமைந்த பொருட் பின்னணியாகும்.

*திருநாவுக்கரசரின் குடும்பம்*

திருவாமூரில் புகழனர்க்கும் மாதினியார்க்கும் திலகவதியார்க்குப் பின் பிறந்தருளிய திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள் நீக்கியார் என்பது. திலகவதியாரும் திருநாவுக்கரசரும் வாழ்ந்தமைக்குச் சான்று உண்மையால் அவர்தம் தாய் தந்தையர்களும் இருத்தல் வேண்டும் என்ற அளவில் அவர்தம் வரலாறு ஏற்கப் பெற்று, அவர்தம் இயற் பெயர் தெரியக் கூடாமையால் புகழனர், மாதினியார்

என்ற பெயர்கள் அவர்தம் புனைப் பெயர்களாக அமைந் திருக்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மருள் நீக்கியார் என்ற பெயரும் அப்பரடிகளுக்கு இயற் பெயராக அமைந்திருத்தல் இயலுமா என அவர்கள் கருது வதற்குக் காரணம் சேக்கிழார் தம் திருவாக்கினைத்தவிர வேறு சான்றுகள் இல்லாமையே.

திருநாவுக்கரசர் தம் தேவாரப் பாக்களிலிருந்து அவர் தம் தாய் தந்தையர் தம் பெயர்கள் அறியப் பெறுமாறு இல்லை. தமக்கையார் ஒருவர் உண்டு என்பதற்கும் நேர்ச் சான்று எனப் பெறும் அகச்சான்று ஏதும் இல்லை. எனினும்

"ஈன்றுளுமாய் எனக்கு எந்தையுமாய்
உடன் தோன்றினராய்"

என்ற அப்பரடிகள் திருவாக்கும்,

"எம்மை யாரிலை யானும் உளேனலேன்
எம்மை யாரும் இதுசெய வல்லரே
அம்மை யார் எனக்கு? என்று என்று அரற்றினேற்கு
அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே"

என்ற ஐந்தாந்திருமுறைத் திருஆரூர்த் திருப்பதிகத்து ஆறுந் திருப்பாட்டும் தமக்கையாரைச் சிறப்புறுத்தும் சான்றுகளாக அமைகின்றன.

அம்மையப்பராகக் காணும் இறைமைக் காட்சியானது திருநாவுக்கரசரைப் பொறுத்த வரையில் இரண்டைக் கடந்ததாய், இரண்டையும் உள்ளமைத்துக் கொண்ட தாய், மூன்றுவதாக நின்ற ஒரு கருத்தமைவு எனக் காண வேண்டிய வரலாற்றுச் சூழல் அப்பரடிகளுக்கு இயல் பாகவே அமைந்து விடுகிறது.

ஈன்றுளும் எந்தையும் இல்லாத நிலையில் உடன் தோன்றினராய் இருந்து காப்பாற்றும் ஒருமை நிலை அனுபவப்படுகிறது. உடன்தோன்றினராய் நின்ற நிலைகள் மறுக்கப் பெற்றன என்று கொள்வதற்கில்லை.

ஈன்றுள், எந்தை, உடன்தோன்றினர் என்ற மூவகை நிலைகளாகவும் ஒருபொருள் நின்று பணியாற்றுகிறது. எந்தையாக நின்று அருள்பாலிக்கும் இறைவன் தாயும் ஆனுன் எனக் கருதப் பெறுவதுண்டு. தாயாக நின்று பணி

யாற்றும் ஒருத்தி இல்லாதபோது தந்தையே தன்னுடைய கடமையுடன் தாயுமாகவும் நின்று அக்கடமையையும் செய் தளிக்கிறுன். இவ்விருநிலேகளே உடன் கொண்ட ஒன்ருகத் தமக்கையாரின் நிலேயை உலகுறு வழக்கில் கூறுவது இல்லே. ஆயினும் தாய், தந்தை என்ற இருநிலேகளும் இல்லாத போது, உடன் தோன்றினராக இருந்த நிலேயில் திலகவதியாரே தாயும், தந்தையும் எனநின்ற இருவகை நிலேகளேயும் தன்னுடன் இணைத்துத் தொண்டாற்றியிருக் கின்ருர்கள்.

தாயும் தந்தையும் எனநின்ற நிலே வேறு; தமக்கை எனநின்ற நிலேவேறு. மகன்மைப் பண்பை வளர்த்துக் காப்பாற்ற வேண்டிய நிலே தாய்தந்தையர் நிலே. கடமை என்ற வகையில் முழுமையாகச் செயல்பட வேண்டியநிலே தாய்தந்தையர்க்கு உண்டு. வரலாற்று முறைப்படி நோக் கிஞல், திருநாவுக்கரசரைத் தக்கவாறு வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பானது தாய்தந்தையரைச் சார்கிறது. பொறுப்பான நிலேயில் வளர்க்கப் பெறவில்லேயாஞல் அது ஒருவகையில் தாய்தந்தையரைக் குறைவுபடுத்திப் பேசக் கூடிய வாய்ப்பையும் உண்டாக்கக் கூடியது. பிள்ளேயின் செயல் மூலமாக அல்லது பிள்ளேயே மூலமாக அன்னே தந்தையரைத் தக்கார் தகவிலர் என்று மதிப்பீடு செய்தற் குரிய வாய்ப்பு இவ்வுலக மக்களுக்கு உண்டு. இதனேத்

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்ற திருக்குறளாலும் தெளிய உணரலாம். ஆஞல், அத்தகைய பொறுப்பைத் தமக்கையார் அல்லது உடன் பிறந்தார் மேல் அமைத்துக் கூற இயலாது. தந்தைதாயர் பொறுப்பில் நின்று செயற்படுவதை உடன்பிறந்தவர் ஏற் கலாம் அல்லது ஏற்காது போகலாம். ஏற்றுச் செயல் புரிந்தால் உலகம் வாழ்த்தும். ஏற்றுச் செயல் புரியவில்லே யாஞல் குறைகூறும் தகுதி இச்சமுதாய அமைப்பில் யாருக்கும் இல்லே.

மகன் என்ற பாசம் வேறு; உடன்பிறப்பு என்ற பாசம் வேறு. தந்தையானவன் தாயின் மனநிலேயை உய்த் துணர்ந்து, உணர்ந்த அந்நிலேயில் தாயாகவே நின்று செயல்படவும் முடியும். அவ்வாறே ஒருதாயானவள் தந்தை

யின் மனநிலையை உய்த்துணர்ந்து செயலாற்றவும் முடியும். ஆனால், உடன் பிறந்த ஒருவர் தாய்தந்தையர்களின் உள்ளத்துணர்வுகளையும் ஏற்று நின்று செயல்படுவது என்பது எத்துணையளவுக்குத் திறமைபெற அமையும் என்பது ஆய்வுக்குரிய ஒன்று. இவ்வகையில் உலகம் போற்றும் வரலாற்றை உண்டாக்கிக் கொடுத்த பெருமை திலகவதியாருக்கே உண்டு.

திலகவதியாரின் வரலாற்றினை விரித்துப் பாட முற்பட வில்லை சேக்கிழார். நம்பியாரூரர் எனப் பெறும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தனித்து அடிமைத் திறம் கூறியிருப்பின் சேக்கிழாரடிகள் மிக நுட்பமான வரலாறுகள் பலவற்றை அமைத்துக் கொடுத்துக் காப்பியமே அமைத்திருப்பார். ஆயினும், எளியேனுக்கு ஞான குருவாக அமைந்து விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் '**திலகவதியம்மை துதி**' என்ற பெயரில் ஏழு பாட்டுக்களை அருளியுள்ளார்கள். அவைகளுள் ஒன்று,

"நீயிலையேற் சைவமெனுஞ் சமயமெங்கே
அப்பரெங்கே நேய மெங்கே
கோயிலையாம் அடைவதெங்கே குறிக்கோளும்
கொள்வதெங்கே குருதா னெங்கே
காயிலைவேற் பரசிவனுத்தாங் கரனெங்கே
தேவாரங் கருத லெங்கே
மாயிரு ஞா லம்போற்றும் திலகவதீ
நின்னடியை வணங்கி வாழ்வாம்"

என்பது. திருநாவுக்கரசரின் திருவுள்ளக் கருத்தினை ஊன்றி நோக்கின் திலகவதியாரின் திருத்தொண்டினை நன்கு உணரலாம்.

"என் தமக்கையார் அல்லது எம்மையார் இல்லை யென்றால் யான் இல்லை (உளேன் அலேன்), என்னை இவ் வாறு நெறிப் படுத்துவதற்கு என் அம்மையைத் தவிர வேறுயாரும் செய்ய வல்லவரல்லர்; எனக்குத் தமக்கை யார் மட்டுமன்றி அம்மையாரே இவர் என்று பலமுறை அரற்றி நின்ற காலத்தில் எனக்கு என் தமக்கையை அம்மையாராகத் தந்தான்; அவ்வாறு தந்தவன் திருஆரூர்ப் பெருமான்" என்பது மேலே காட்டப் பெற்ற திருவாரூர்ப் பதிகத்து ஆறாவது திருப்பாட்டின் பொருள். திருநாவுக் கரசர் திருவாக்கில் வந்த நிறைமொழி "யானும் உளேன்

அலேன்'' என்பது. என் தமக்கையார் இருந்தமையால் இன்று யான் ''உளேன்''; என் தமக்கையார் இல்லையெனில் யானும் ''உளேன் அலன்'' என 'உளன்' என்ற சொற் பெய்துகாட்டினர். அப்பாடிகளின் இந்த உறுதிச் சொல்லின் விளக்கமாக, ''தம்பியார் உளராக வேண்டும்'' எனத் திலகவதியார் இருந்தார் எனக்காட்டினர் சேக்கிழாரடிகள்.

திருவாமூர்ப் புகழனாரும் மாதினியாரும் பெருஞ் செல்வர்களாக வாழ்ந்த திருவுடையவர்கள். மன்னவர் தம் படைக்குத் தலைமை தாங்கிச் சென்று போரிடும் அளவுக்கு வாய்த்த வன்மையும், வண்மையும், தனிமையும், தலைமை யும் பெற்ற கலிப்பகையின் குடும்பத்தோடு உறவுமுறை அமையும் அளவுக்கு ஒத்த பெருமையும் புகழும் நிதியமும் நீர்மையும் அமைந்த குடிவாழ்க்கை பேணுபவர்கள். திலகவதியம்மைக்கு மணம் பேசப் பெறுநாள் எனப் பெறும் பன்னிரண்டாம் அகவை அமைந்த காலத்தில் திரு நாவுக்கரசர் ஒன்பது அல்லது பத்து அகவையினராக இருந் திருக்கவேண்டும். அவ்வளவில் புகழனார் நோய் வாய்ப் பட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்நிலையில், அவர்தம் இன்னுயிரனைய மனைவியார் மாதினியார் சுற்றமுடன் மக்களையும் துகளாக எண்ணி, உயிர் நீத்துக் கற்புநெறி வழுவாது கணவனாருடன் சென்றார். இருமுது குரவர்களை யும் இழந்த நிலையில் ஆற்றொணுத் துன்பத்தில் மூழ்கியிருக் கும் பிள்ளைகள் இருவரையும் சுற்றத்தார் பலவாறு தேற்ற, தேறிய அவர்கள் தந்தை தாயர்க்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செவ்வனே செய்து முடித் தார்கள்.

ஊழ்வினையால் நோய்வாய்ப் பட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார் புகழனார். புகழனார் உயிர் நீத்ததும் மாதினியார் உயிரும் வாழ்நாள் முழுவதும் ஒன்றியே வாழ்ந்த நிலையில் உடனிருக்கும் இளங் குழந்தைகள் வாழ வேண்டுமே என்று எண்ணும் நிலையிலும் பிரிவுறாமல் கணவனாருயிருடனேயே சென்று விட்டது. புகழனார் இறந்த பின் உடன்கட்டை யேறல் போன்ற நிகழ்வுகளின் மூலம் தன் உயிரை நீக்கிக் கொள்ளவில்லை மாதினியார். அவ்வாறு நிகழ்வுகள் அமையப் பெற்றிருப்பின் பிள்ளைகளும் சுற்றத்தாரும் தடை செய்திருப்பர். பிள்ளைகளின் நலங் கருதி மாதினியாரின் இறப்பினைத் தவிர்க்கக் கூடிய சூழல் உருவாகியிருக்கும்.

புகழனர் உயிருடன் தம் உயிரையும் ஒன்றியிருக்குமாறு செய்து வாழ்ந்த வாழ்வைப் பெற்றிருந்தவர் மாதினியார். ஆகையினுல் புகழனர் உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் மாதினியாரின் உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் ஒரே நிகழ்ச்சியாகவே அமைந்து விட்டன. அவ்வகையில் ஈருயிர் ஒருரிமை கொண்டு வாழும் உயர் பேறில்லறப் பெரு வாழ்வு வாழ்ந்தவர்கள் புகழனர் மாதினியார் என்பது வெளிப்படை.

திருவாமூர்ப் புகழனர்க் குடும்பத்தைப் பாராட்ட வந்த கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள்,

"பெற்ருல் நினைப்பெற் றவர்போற் பெறலும்
பிறப்ப துண்டேல்
நற்ரு ரணியில் நினைப்போற் பிறப்பதும்
நல்லகண் டாய்
செற்ருர் புரமெரி செய்தவில் வீரன்
திருப்பெயரே
பற்ரு மறிவெண் திரைக்கடல் நீந்திய
பாவலனே"

என்று (நால்வர் நான்மணி மாலை-30) கூறியருளுகின்ருர். சிவப்பிரகாச அடிகளால் வாழ்த்தப் பெறுவது புகழனரும் மாதினியாரும் வாழ்ந்த உயிரொருமை வாழ்க்கையோடு 'பெற்றவர்கள்' என்பதற்கு முழுமையான இலக்கணம் அமையுமாறு வாழ்ந்த வாழ்க்கையே. புகழனரும் மாதினியாரும் கணவனும் மனைவியும் என வாழ்ந்த வாழ்க்கையானது பாராட்டுக் குரியதாகஅமையவில்லை. சிறந்த மக்களைப் பெற்ற தகுதியே சிவப்பிரகாச அடிகளால் பாராட்டப் பெறுகின்றது. அவ்வாறே திரு நாவுக்கரசரின் பிறப்பே பாராட்டுக் குரியதாகிறது. திருநாவுக்கரசரின் பிற அருளியல் வரலாறுகள் பாராட்டுப் பெற வேண்டியனவே யென்ருலும் "பிறந்தால் திருநாவுக் கரசரைப் போல் பிறக்க வேண்டும்" என்று பாராட்டு கின்ருர் சிவப்பிரகாச அடிகளார்.

பெற்றவர்களின் செயல் எனப் பெறுவதாகிய பெறு தலையும் பிறந்தவர்களின் செயல் எனப் பெறுவதாகிய பிறத்தலையும் நெறிப்பட நிறுத்திய பெருந்தகையாகத் திலகவதியம்மையார் அமைகிருர். பெற்ருர் இவரே எனப் பெறுவதற்குரிய புகழைப் புகழனர்க்கும் மாதினியார்க்கும்

தோற்றுவித்து, பிறந்தார் என்ற சொல்லுக்குரிய பேற்றைத் துய்த்தவர் திருநாவுக்கரசரே எனப் புகழுவதற் குரிய பெருமையைத் திருநாவுக்கரசருக்கும் அமைத்துக் கொடுத்த பெருமை திலகவதி அம்மைக்கே உண்டு.

திலகவதியம்மையார் இருந்தமையால் பெற்ருேர் உள ராஞர்; தம்பியார் உளராஞர். திலகவதி அம்மையார் இல்லை யேல் புகழனும் மாதினியாரும் என்ற பெற்ருேர் உளராதல் இல்லை; திருநாவுக்கரசர் என்ற பிறப்பாளரும் இல்லை. எனவே, புகழனர் மாதினியார் உளராக, தம்பியார் உளராக இந்நிலவுலகில் **இருந்தவர்** திலகவதியார். எனவே, திலகவதியாரை முன்னிறுத்திப் பின் திருநாவுக் கரசரைப் பெற்றதும், அவ்வாறே திலகவதியாரை முன்னிட்டுப் பின்னர்த் திருநாவுக்கரசர் பிறந்ததும் முறையே சிவப்பிரகாச அடிகளாரால் வாழ்த்தப் பெறு கின்றன எனக் கொள்ள வேண்டும்.

குழந்தையை நிலவுலகத்துக்குக் கொடுத்தவர் களுக்குப் பெற்ருேர் என்பது பெயராயிற்று; கொடுத்துத் தான் புகழ் பெறவேண்டும் என்பது அறம்; ஆனல் பெற்றுப் புகழனர் ஆஞர். அவ்வாறே பிறந்த அந்நிலையி லேயே பாராட்டப் பெறுதல் இல்லை. திருநாவுக்கரசர் பிறந்த பிறப்பே பாராட்டப் பெறுகிறது. இவ்விருவகைச் செயல்களையும் பெருமையுடைய செயல்களாக ஆக்கி, பெற்ருேரையும் தம்பியாரையும் உளராக வைத்துத் தொண்டாற்றிய திலகவதியாரின் நிலை **'ஆசான்'** என நின்ற நிலை எனக் குறிக் கொள்ளல் வேண்டும்.

'ஆசு' என்ற சொல்லுக்குரிய பொருளையும் ஆசான் என்ற சொல்லின் பொருளையும் தெளிவுறத் தெரிந்து துய்த்தல் வேண்டும். ஆசிரியன் என்ற சொல்லை ஆசு, இரியன் எனப் பிரித்து, ஆசு எனில் குற்றம், இரியன் எனில் ஓட்டுபவன் எனக் கூறி, ஆசிரியன் எனில் குற்றத்தை ஓட்டுபவன் எனப் பொருள் கூறுவர். 'ஆசான்' என்ற சொல்லும் ஆசிரியனையே குறிக்கும்.

> "ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும்
> மாணி போல"

என்பது கொங்குவேளிரின் தங்குமாக்கதை எனும் பெருங் கதை. 'ஆசான்' என்பதற்கு முன்னே சொன்ன அடிப்படை

யில் உரை சொல்ல இயலாது. ஆசான் என்பது 'ஆசு' என நின்றவன் என்பதே பொருள். ஆசு என்ருல் என்ன? ஒன்று பட்டு நிற்றற்கு ஒத்துவராத அல்லது இணையாத இரண்டு உலோகங்களை ஒற்றுமைப்படுத்தி இணையவைப்பதற்கு, அவ்விரண்டு உலோகங்களல்லாத வேறு ஒன்று வந்து இடைநின்று அவ்விரண்டையும் ஒன்ற வைத்து வாழ்வளிக்கும். இணையாத இருமைகளை இணைத்து இடைநின்று வாழ வைக்கும் அப்பொருளுக்குப் 'பற்ருசு' என்பது உலக வழக்கு, ஆசிடை நேரிசை வெண்பாவுக்குரிய இலக்கணத்தை ஆய்ந்து பார்த்தால் 'ஆசு எனநிற்றல்' என்பதன் பொருள் தெரியவரும்.

பெற்றநிலை, பிறந்த நிலை என்ற இருவேறு நிலைகளையும் இடைநின்று இணையவைத்து, இருவேறு நிலைகளையும் புகழ்பெறுமாறு இடைநின்று இணைத்து — ஆசு எனநின்ற, ஆசான் என இடைநின்று பெற்ருேருக்கும் பிறந்தோருக்கும் ஒற்றுமை நல்வாழ்வு வழங்கிய பெருமையால் ஆசான் என, குரு எனநின்ற பெருமை திலகவதியாரின் தொண்டு நிலைக்கு உண்டு. தந்தைதாயர் உளர் ஆக, தம்பியார் உளராக இடைநின்ற — 'நடுநின்ற நடு' எனப்பெறும் ஆசாளுக வாழ்ந்து தொண்டாற்றிய திலகவதியாரின் பெருமை அளவிடற்கரியதொன்று.

அம்மையப்பராக, சத்திசிவமாக, பரையிடமாநின்ற பதியாக அச்சிவபரம் பொருள் பசுக்களாகிய உயிர்களைப் பண்புறுத்துவதற்காக உலகைப் படைத்துக் காத்து அழித்து இவ்வாறு பல்வேறு பணிகளைச் செய்தருளுதல் ஒருவகை. அம்மையப்பராக நின்றநிலை—அனைத்துயிர்க்கும் பொதுமையில் நின்று தொண்டாற்றும் நிலை. அத்தகைய தொண்டில் பதிப் பொருளுக்கும் உயிர்ப் பொருளுக்கும் ஒருவகை இடைவெளி இருக்கின்றது. அத்தகைய இடைவெளியைத் தமக்கே உரிமையுடையதாக அமைத்துக் கொண்டு வாழ்பவர்களே சிவனடியார்கள். அவர்கள் பதிப் பொருளுக்கும் உயிர்களுக்கும் இடைநின்று தொண்டாற்றி இரண்டையும் இணைத்து ஒற்றுமைப் படுத்தும் 'ஆசு' என்ற நிலையில் நின்றவர்கள்.

உயிர்களுடன் இணைந்து பிறந்த உடன் பிறப்புரிமையும் சிவபரம் பொருளுடன் கொண்ட மகன்மை உரிமையும்

என்ற இரண்டையும் இணைத்து நின்று வாழும் பேறு பெற்றவர்கள் சிவனடியார்கள்.

தோடுடைய செவியன் எனவும் பெண்ணினல்லாளொடு பெருந்தகை இருந்தது எனவும் இருமையைக் கவினுறக் கண்டும் காட்டியும், அவ்வாறே இருமையை இணைக்கும் அருள் நிலையாகிய ஒருமையையும் அதன் பெருமையையும் உள்ளவாறு உலகில் நிலைநாட்டியும் வாழ்ந்த பெருமை திருஞானசம்பந்தர்க்கு உண்டு எனில், அம்மையப்பர் என, காதன் மடப்பிடியும்களிறும் எனக் கண்டும் துய்த்தும் நின்றகாட்சியேயன்றி, கண்டேன் அவர் திருப்பாதம் எனக் கண்டு, இரண்டாக நின்ற திருப்பாதங்களுக் கிடையில் கண்டறியாதன கண்டேன் என்றும் அது கயிலைக் காட்சியானாலும் என்னுள்ளத்தில் காணும் காட்சியே என்றும் ஒருவகை மூன்றும் நிலை அனுபவத்தை எடுத்துக் காட்டி, அது உடன் தோன்றினராய் நின்றநிலை எனவும் சுட்டிக்காட்டி, அதற்கு இலக்கியமாகத் தம் வாழ்வில் அமைந்தவர் 'திலகவதியார்' என அமைத்துக் காட்டியும் வாழ்ந்து காட்டியும் நிலைநிறுத்திய பெருமை திருநாவுக்கரசருக்கு உண்டு எனக் கொள்ளவேண்டும். அதனாலேயே திருநாவுக்கரசர் இறைவனை மூன்று தனிநிலைப் பொருளாகச் சுட்டியும் எண்ணிடைப் படுத்தியும் காட்டியுள்ளார்.

''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்
உடன்தோன்றினராய்
மூன்றாய்''

என்பது அப்பரடிகள் திருவாக்கு. எனவே, இருமையின் இணைப்பாகச் சிவபரம் பொருளை அமைத்துக்காட்டும் சைவ தத்துவக் கோட்பாட்டில் ஒருபுதிய இணைப்பு விளக்கத்தை எடுத்துக் காட்டி நிறுவினார். அப்பரடிகளின் தத்துவக் கொள்கையின் முதல் அடிப்படைக் கொள்கையாக மூன்றும் நிலை ஒன்று நிறுவுதல் ஆகிறது.

உடன்தோன்றி நின்ற நிலையே ஆசு எனநின்ற ஆசான் நிலை. அது முன்னுள்ள அம்மையப்பராம் நிலையை மறுத்துக் கடந்த நிலை அன்று; அவற்றை உடன் கொண்டு மேல் வளர்ந்து பெருகிய நிலை எனக் கொள்ளவேண்டும்.

அம்மையப்பராக நின்ற செயலில் ஒருவகை நிறைவை உண்டாக்குவதாகவும் உயிர்களால் தம்மளவில் கடக்க

இயலாமல் இடைநின்ற இடை வெளியைத் தமக்கே உரிய தாகக் கொண்டு தங்கியிருந்து உயிர்களை எளிமையாகப் பரம்பொருளோடு இணைக்கச் செய்து தொண்டாற்றும் ஆசான் ஆகவும் நின்று இருநிலைகளையும் பெருமை பெற வைத்த திருநின்ற செம்மை நிலையே திலகவதியார் இருந்த நிலை எனக் கொள்வது தத்துவப் பின்னணியில் திலகவதி யாரை விளங்கிக் கொள்ளும் முறையாகும்.

இருவேறு நிலைகளை இணைத்தல் என்பதைத் தத்துவ அடிப்படையில் மேலும் நன்கு சிந்தித்துத் தெளிதல் வேண்டும். இருவேறு நிலைகளை இணைத்தல் என்ற ஒரு வகைச் செயலில்தான் தத்துவ உலகம் அன்றுமுதல் இன்று வரையில் போராடிக் கொண்டிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. இருவேறு நிலைகள் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அவைகளை இணைத்த ஒருநிலை உண்டு எனவும், எந்த ஒன்றில் இருவேறு நிலைகள் இல்லையோ அந்த ஒன்றே உண்மை எனவும் இருவேறு நிலை களை அழித்துவிட்ட மூன்றும்நிலை உண்டாவதாக அமையும் எனவும் இன்னும் பலவாறான விளக்கமாகவும் அமைத்துக் காட்டிய தத்துவக் கொள்கைகள் உண்டு. அவையெல்லாம் திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு என்ற நூலின் இரண்டாம் பகுதியில் விரிவாக இடம்பெறும். இங்கே சிவபரம் பொருளையும் உயிரையும் இணைக்கும் நிலையில் உடன் தோன்றினராக அமைந்த சிவநிலை ஒன்று உண்டு எனவும் அத்தகைய மூன்றும் நிலையானது சிவத்துக்கும் உயிருக்கும் இடைநின்ற சிவனடியார் நிலை எனவும் அதற்கு முதல் இலக்கியமாக, மூல இலக்கியமாக நின்று காட்டி வாழ்ந்து காட்டிய பெருமைக் குரியவராக விளங்கியவர் "திலகவதி யார்" என்ற அளவுக்குக் கொள்ளுவதே இவ்விடத்தில் வேண்டப்பெறுவதாகிய சிந்தனை. அந்நிலையே அம்மை யப்பர் உளராதற்கும் தம்பியார் உளராதற்கும் இடைநின்ற 'நடுவிருத்தல்' எனப்பெறும் இருத்தல்நிலை.

'நடுவிருத்தல்' என்ற நிலையை மணிவாசகப் பெருமான் எடுத்துக் கூறி விளக்கியிருக்கும் நுட்பத்தையும் இங்கே இணைத்துக் காண்பது நலம் பயப்பதாகும்.

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி

அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானல் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கு மரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"

என்ற திருவாசகத் தேன்துளியின் பெருமையை ஓர்ந்துணர்க.

'ஆசான்' என நின்ற நிலையில், உயிர்களின் உடன்பிறப்பு எனவும் சிவனின் அடிமை எனவும் உள்ள இரு வகை நிலைகளையும் இணைத்து நின்று தொண்டாற்றியவர் திலகவதியார். திருநாவுக்கரசர் சமணத்திலிருந்து வந்த போது திருநீறு வழங்கியும், திருமந்திரம் அருளியும், திருத்தொண்டு நெறி தந்தும் சிவனுக்கு ஆட்படுத்தும் உரிமையும் பெற்றுத் தொண்டாற்றினர் எனக் கொள்ளவேண்டும். அவ்வாறே சிவபரம்பொருளையும் நெறிப்படுத்தி, திருநாவுக்கரசரையும் ஆட்கொள்ளச் செய்யும் வகையில் தொண்டாற்றினர் எனக் கொள்ளவேண்டும்.

### திருநாவுக்கரசரின் சமுதாயத் தொண்டு

திலகவதியம்மையாரை ஈன்றுளாகவும், தந்தையாகவும் உடன்பிறந்த தமக்கையாகவும் கொண்டு தம்முடைய இளமைக் காலத்தைக் கழித்துவரும் திருநாவுக்கரசர் 'மருள்நீக்கியார்' என அறிமுகப்படுத்தப் பெறுகிறார். புகழனர் மாதினியார் என்ற இருவரும் உயிரொருமை பூண்ட இல்லறம் பேணிய தோடன்றி, சிறந்த செல்வராகவும் திகழ்ந்துள்ளார்கள் எனத் தெரிய வருகிறது. அந்நிலையில் இயல்பான செல்வக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் நல்லறங்கள், சமுதாயத் தொண்டுகள் பலவற்றை விருப்பினெடு செய்து வரும் மரபு நெறியைப் பின்பற்றி வருபவரானர் மருள்நீக்கியார்.

இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையுடையன வல்ல என்பதை உணர்ந்து, அவைகள் நீங்குதற்கு முன்னமே நிலையுடைய நல்லறங்கள் பலவற்றைச் செய்தார் மருள்நீக்கியார். அவர் செய்த சமுதாயத் தொண்டினை வகைப்படுத்தி விரித்துரைக்கிருர் சேக்கிழார்.

உலகத்தில் புகழ் விளங்கித் தோன்றுவதற்குரிய வகையில் நன்கொடைகள் அளித்தார்; உலகத்துயிர்கள் நல்வாழ்வு அடையவேண்டும் என்ற கருணையின் அடிப்படையில் அறநிலையங்கள், தண்ணீர்ப் பந்தர் ஆகியவைகளை அமைத்துக் கொடுத்தார்; இவ்வடிப்படையிலேயே சோலைகள் பலவற்றை உண்டாக்கியும், திருக்குளம் வெட்டியும் தொண்டு செய்தார். தம் இல்லம் நோக்கி வந்தவர்களுக்குக் கடப்பாடு வழுவாமல் அவர்கள் விரும்பியவைகளைக் கொடுத்தார்; விருந்தினர்களுக்கு விருந்து பேணும் அறத்தில் வழுவாது நின்று தொண்டாற்றினர். நாவன்மை வாய்ந்த புலவர்களுக்குப் பெருவளம் நல்கினர். மேலே குறிப்பிடப் பெற்றவையாவும் யாதேனும் ஒரு திறமையின் அடிப்படையில் அல்லது சமுதாய நலம் என்ற அடிப்படையில் செய்யப்பெற்ற அறச்செயல்கள். இறுதியாகச் சேக்கிழார் கூறுவது, இவ்வுலகில் உள்ள யாவருக்கும், எந்த ஒரு அடிப்படைத் தகுதியையும் அளவு கோலாகக் கொள்ளாமல், எந்த ஒருவரும் விட்டுப் போய்விடாத வகையில் அனைவரையும் உள்ளிட்ட 'ஈகை' என்ற பேரறத்தையும் செய்து வருவாராயினர்.

அறவாழ்வில் தலைநின்று தொண்டாற்றுகின்றார் மருள் நீக்கியார். திலகவதியார் திருவாமூரை விடுத்துத் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்து, தூய சிவ நன்னெறியே சேரும் தகைவு உள்ளத்தினல், சிவசின்னம் தாங்கி, தம் கையினாலேயே திருப்பணிகள் செய்யத் தொடங்கினர். திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலைப் புலர்வதன் முன் சென்று திருவலகிட்டு, திருமெழுக்கிட்டுத் தூய்மை செய்தலையும், நறுமலர் கொய்து மாலைகள் தொடுத்துக் கொடுத்தலையும் உள்ளிட்ட திருக்கோயில் திருப்பணிகளைச் செய்து வருவாராயினர்.

திலகவதியாரும் மருள் நீக்கியாரும் தத்தம் தொண்டு நெறிகளில் தனித்து நிற்கின்றார்கள். சிவபரம் பொருளை நேர் நிறுத்திய நிலையில் திருக்கோயில் திருத்தொண்டுகளை முறைப்படுத்திச் செயல் மேற்கொள்ளும் நிலை திலகவதியாருடையது. அத்தகைய தொண்டு நெறிக்காகவே திலகவதியார் திருவாமூரை நீங்கித் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்து தங்கிவிடுகின்றார்கள். ஆனல், மருள் நீக்கியார்

மேற்கொண்ட தொண்டு நெறியானது தூய அறநெறியைச் சார்ந்தது.

திலகவதியாரின் சிவஞ்சார் செந்நெறித் தொண்டானது முதலில் வினைவல்லவர்கள் மூலம் திருக்கோயில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூமாலை புனைந்து சாத்துதல் முதலியவைகளைச் செய்யவைக்கும் நிலை அமைந்திருத்தல் வேண்டும் என்றும், பின்னர்த் தாமே நேர் நின்று, தம் கைகளாலேயே அவைகளைச் செய்தல் வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியிருக்க வேண்டும் என்றும், அவ்வெண்ணம் அழுத்தமாகப் பற்றவே, திருவாமூரை விடுத்து, திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்து சிவநெறித் திருத்தொண்டில் ஈடுபடலானார் திலகவதியார் என்றும் அறிஞர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள்.

> "சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
> குன்றை அடிபணிந்து கோதில் சிவசின்னம்
> அன்று முதல்தாங்கி ஆர்வமுறத் தங்கையால்
> துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார்"

என்பது (பெரியபுராணம்-1312) சேக்கிழார் திருவாக்கு.

செல்வச் செழிப்பு இருப்பினும், பணியாட்கள் பலர் பலராக நின்று செய்யும் உழைப்பு இருப்பினும் அவைகளைத் துணைக் கொண்டு சிவனுறையும் திருக்கோயில் திருத்தொண்டு செய்தல் உண்மைத் திருத்தொண்டாக அமையாது என்று கருதி, தாமே தம்கையால் திருப்பணி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார் திலகவதியார்.

> "விரத முதலாய பலமெய்த் தவத்தின் உண்மைச்
> சரியை கிரியா யோகம் சார்வித்து"

என்பது குமரகுருபரரின் கந்தர் கலி வெண்பாவின் கண்ணி. விரதம், பொதுவான நிலையில் செய்யப் பெறும் அறங்கள் ஆகியவைகளை ஒருவன்தன் வாழ்நாளில் மேற்கொள்ளல் இயலும். ஆனால், அறவாழ்வு சமய வாழ்வாக மலர்வதற்குரிய அடிப்படை மாற்றம் இங்கே தான் தொடங்கிவைக்கப் பெறுகிறது.

அறவாழ்வு உயர்ந்த வாழ்வே. மருள்நீக்கியார் சமூக நலத் தொண்டினை மேற்கொண்டார். பல்வகை அறங்களுக்

காகப் பெருநிதியம் அளித்தார். தன்னை நோக்கி வந்தவர்களின் தகுதியறிந்து வளம் பெருக நிதியம் அளித்தார். கடப்பாட்டில் வழுவாமல் விருந்து பேணினார். எல்லாவற்றுக்கும் மேலாக எந்த ஓர் உயிரும் விடுபட்டுப்போகாதவாறு அனைத்துயிருக்கும் நன்மை பெருகுமாறு 'ஈகை' என்ற நல்லறம் மேற்கொண்டார். பெருநிதியம் இருப்பதால் சமூக, சமுதாயத் தொண்டினை மேற்கொள்ளல் ஒரு வகை; உடம்போடு கூடி வாழும் எந்த ஓர் உயிரும் வறுமை முதலிய காரணங்களால் எடுத்த உடம்பை விட்டுப் பிரிகின்ற சூழல் உண்டாகாதவாறு, அவ்வுயிர் அவ்வுடம்பில் நின்று வாழ்வதற்குரிய நன்மைகளைச் செய்தல் என்ற வகையில் சமூக நலத் தொண்டுகள், ஈகை முதலிய நல்லறச் செயல்களை மேற்கொள்ளல் இரண்டாவது வகை. உயிரை நோக்கிச் செய்யப் பெறும் தொண்டுகள் இவை. உயிரின் பெருமையைப் பல்லாற்றானும் உணர்ந்து, பெருமை வாய்ந்த அவ்வுயிர் நின்று வாழவேண்டும் என்ற அடிப்படை நிலையில் செய்யும் அறங்கள் நன்மையானவைகளே. உயிரின் தகுதியறிந்து, உயிரின் நன்மைக்கெனச் செய்யப் பெறும் அதே அறங்களை, ஒரு மாற்றுச் சிந்தனையோடு செய்ய முற்படும்போது சமய வாழ்வு முகிழ்க்கிறது. நம்மால் காணப்பெறும் உடலோடு கூடிய உயிரானது சிவமெனும் பரம்பொருளைத் தன்னகத்தே கொண்டது என்ற ஒரு மாற்றுச் சிந்தனையோடு அறச்செயல்களை மேற்கொள்ளும் நிலை மனத்தகத்து அமையுமானால் அது சமய வாழ்வு. பார்க்கப்பெறும் எந்த ஒரு பொருளும் சிவபரம் பொருள் தங்கியிருக்கும் இடம் என்ற எண்ணம் வந்து அமையுமானால், அப்பொருளின் உடலுக்குரிய நன்மை பயக்கும் தொண்டினைச் செய்தாலும் அது சிவபரம் பொருளுக்குரிய தொண்டாகவே அமையும். மருள்நீக்கியார் செய்த அறங்கள் யாவும் உயிரிரக்கம் நோக்கியே செய்யப் பெற்றவை. திலகவதியார் செய்யும் தொண்டுகள் நேரே சிவபரம் பொருளைப் பற்றியனவாக அமைந்துள்ளன.

திருமுனைப்பாடி நாட்டில் திலகவதியாரைப் போலவே பாண்டிநாட்டில் மங்கையர்க்கரசியார் திருக்கோயில் திருத்தொண்டினைத் தனியொருவராகவே மேற்கொள்ளுகின்றார்கள். பூமாலை தொடுத்தல் போன்ற திருத்தொண்டுகளைச் செய்வதற்குரிய வினைவல்லவர்களை அமைத்துத் திருக்கோயில் திருத்தொண்டு செய்யும் வாய்ப்பு

மங்கையர்க்கரசியாருக்கு அமையவில்லை. ஏனெனில் மதுரையில் மங்கையர்க்கரசியார் வாழ்ந்த காலத்தில், மதுரையில் சைவர்களாக இருந்தவர் இருவரே. அரச மாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச் சிறையாரும் மட்டுமே. ஆனால், திலகவதியார் திருத் தொண்டினைத் தம்கையால் செய்யவேண்டும் என்று எண்ணினார்கள்; அவ்வாறே செயல் மேற் கொண்டும் தொண்டாற்றினார்கள்.

திலகவதியார் திருவதிகை வீரட்டானஞ் சென்று திருத் தொண்டு மேற்கொண்ட காரணத்தினால் மருள்நீக்கியார் சமண சமயஞ் சாரநேர்ந்தது என்று கொள்வது அவ்வளவு பொருத்த முடையதாகத் தோன்றவில்லை.

மேலும், மருள்நீக்கியார் அடிக்கடி பாடலிபுத்ரம் எனப் பெறும் பாதிரிப்புலியூர் சென்று வரும் கொள்கையரா யிருந்திருத்தல் வேண்டும். பெருஞ்செல்வராக இருந்தமை யாலும் பல்கலைகளையும் கற்றும் அவ்வக்கலைத்துறைகள் தழைக்குமாறு வாழ்ந்த கலைச்செல்வராக அமைந்தமையா லும் அவர் பாதிரிப்புலியூர் செல்வதும், அங்கே உள்ள கலை தெரிகழகத்தில் தொடர்பு கொண்டு கலைகள் பயில்வதும் அமைந்தன. அவ்வகையில் ஆங்கிருந்த சமண் சமய வல்லார்களிடத்தில் சமணம் பற்றிய ஆய்வுரைகள் பல வற்றையும் செவிமடுத்து வாழ்ந்திருக்கிறார்.

மருள்நீக்கியாருக்கு அவருடைய குடும்பச் சூழல் காரணமாக ஒருவகை வெறுப்புணர்ச்சி தோன்றியிருத்தல் இயல்பே. தந்தை தாயர் இறப்பு; தமக்கையாரின் கணவர் இறக்கவே அவர் மேற்கொண்ட தவவாழ்வு ஆகியவை அவருக்கு நிலையாமையை உணர்த்தியிருத்தல் இயல்பே. அவ்வளவில் நிலையாமை காரணமாக அவர் துறவு மேற் கொள்ள எண்ணியிருக்கலாம். ஆனால், வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளுக்குரிய காரணங்களை முறையுற ஆராய முற் படும் செயல் அவருடையதாக அமைகிறது.

வாழ்வியல் நுட்பங்களுக்குச் சமயங்கள் கூறும் விளக்கம் என்ன என்ற அடிப்படையில் சமயப் பொரு ளாய்வு செய்யமுற்படுகிறார். சமயங்களானவற்றின் நல் லாறு தெரிந்துணர வேண்டும் என்பது அவர் கொள்கை.

*மருள்நீக்கியார் தருமசேனராதல்*

சமயங்கள் கூறும் வாழ்வியல் விளக்கங்களிற் கருத் துணர வேண்டும்; நல்லாறு தெரிந்துணர வேண்டும்; என்ற அடிப்படையில் இயங்கினுர் மருள்நீக்கியார்.

கொள்கை விளக்கம், செய்முறைப் பயிற்சி என்ற இரண்டும் முறையே தத்துவம், சமயம் என்ற பெயர்களைப் பெற்று விளங்கும். இரண்டும் ஒன்ருேடு ஒன்று பின்னிப் பிணைந்து செல்வன, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங் களைப் போல இயங்கும் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றி மட்டும் கருத்துச் செலுத்தி வாழ்பவர்களும் உண்டு. கொள்கை நுட்பங்களையும் விளக்கங்களையும் தெளிவுற அறிந்தவர்கள் செய்முறைப் பயிற்சிகளை மேற்கொள் வார்கள் என்று சொல்வதற்கில்லை. செய் முறைப் பயிற்சி களில் தேர்ந்த அனுபவம் பெற்றவர்கள் ஓரளவு கொள்கை விளக்கம் தெரிந்தால் போதும் என்ற அளவுக்கு நிறுத்திக் கொள்பவர்களும் உண்டு. தத்துவஞானிகள் பொதுவாகக் கொள்கை விளக்கங்களை அளவையியல் முறையில் அறியும் திறனை நாடுபவர். செய்முறைப் பயிற்சியில் செல் பவர்கள் பெரிதும் நம்பிக்கையை மட்டுமே கொண்டு செயல்மேற் கொள்ளவும் செய்வர். கொள்கையாலும் செய்முறை அமைப்பாலும் இணைந்து ஒருமைப்புற்று அறிவா லும் அநுபவத்தாலும் நிறைவுபெற்ற சமயம் தான் மக்களின் வாழ்வியல் விளக்கமாக அமைந்து மக்கள் மன்றத்தை நிறைவு செய்வதாக இருக்கும்.

சமயங்களின் நல்லாறு தெரிந்துணர்தல் வேண்டும் என்ற வேட்கையில் கிளர்ந்துநின்ற மருள்நீக்கியார் கொல் லாமை என்ற அறத்தை மூல அறமாகக் கொண்டு, அதன் அடிப்படையில் ஏனைய அறங்களையும் கொள்கைகளையும் விளக்கும் சமண்சமயத்தை முதல் முதலில் அறியவும் ஆராயவும் முற்பட்டார்.

"கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகினுர்"

என்பது சேக்கிழார் திருவாக்கு. பாடலிபுத்ரம் என்னும் பதியை அணைந்து சமண்பள்ளியின் பக்கம் சென்றவுடன், அங்கிருந்த சமணர்கள் "வீடறியும் நெறி இதுவே" என விளக்கினுர்கள். ஆனுல், மருள்நீக்கியார் சமண் சமயஞ்

சார்ந்த கலை நூல்கள் அனைத்தையும் பொங்கும் உணர்வுறப் பயின்றார். சமண நெறி பற்றிய பேரறிவு வாய்க்கப் பெற்றார். சமணர்களே அவர்தம் சமண சமய அறிவுத் தேர்ச்சியைக் கண்டு "**தருமசேனர்**" என்ற சிறப்புப் பெயர் அளித்துப் பாராட்டினார்கள். பின்னர், அவர் பௌத்தத்தின் ஒரு பிரிவாகிய தேரநெறி சார்ந்தோரை வாதில் வென்ற காரணத்தால் சமண சமயத் தலைமைப் பதவியும் பெற்றுச் சிறந்தார். சமண் சமயக் கொள்கையில் அவர் உய்த்த உணர்வுடன் விளங்கினார். உய்த்த உணர்வு என்பதற்குச் செயற்பாட்டுப் பயிற்சி முறையினால் பெற்ற விளக்கவுரைப்படும் அறிவு. உலகின்கண் ஒளியுடைய வித்தகராய் விளங்கினார்.

## தூண்டுதவ விளக்கும் சுடரொளியும்

திருவதிகை வீரட்டானத்துச் சுடரொளியை நாளும் தங்கையால் திருத்தொண்டு செய்துவரும் தூண்டு தவ விளக்கென நின்ற திலகவதியார் திருவதிகை வீரட்டானத்து இறைவனை நோக்கி, "என்னை ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை, ஈண்டு வினைப் பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்" எனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்வாராயினர். அவ்விண்ணப்பத்திற்குச் செவிமடுத்த வீரட்டானத் திறைவன் திலகவதியார் கனவில் தோன்றி "உன் மனக்கவலையை ஒழி; உன் உடன் பிறந்தான் முன்னமே முனியாகி எமை அடையத் தவம் முயன்றான்; அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வம்" என அருளி, அத்தகு செயன்மேற்கொண்டருளினன். சூலை தந்து ஆளவேண்டும் என்று கருதியமைக்குக் காரணம்,

> "பண்டுபுரி நற்றவத்துப் பழுதின் அளவு இறை வழுவும்
> தொண்டரை ஆள"

என்பது. முன்பிறப்பில் சிவனை அடையத் தவம் செய்தார். அத்தவத்தில் சிறு வழுவுதல் நடந்ததாதலின் இப்போது சூலைநோய் தந்து ஆளாகக் கொள்ளவேண்டும் என்பது குறிப்பிடப் பெறுகிறது.

திலகவதியம்மையாரின் வேண்டுகோள்; சிவன் கனவில் வந்து உரைத்தது; சூலை மடுத்து ஆள்வம் எனக் கூறியது; சூலை தருதற்குக் காரணம் ஆகியவை சேக்கிழார்

தம் திருவாக்கினுல் நமக்குக் கிடைத்த வரலாற்றுக் குறிப்புக்கள்.

*முற்பிறவி வரலாறு*

''முன்னமே முனியாகி எமையடையத் தவம் செய்தான், முற்பிறப்பிற் செய்த தவத்தில் சிறு வழுவுதல் நடைபெற்று விட்டது ஆதலின் அவனை இனிச் சூலை மடுத்து ஆள்வம்'' என்று இறைவன் திலகவதியார் தம் கனவில் கூறிய சொற்களுக்கு விளக்கம் அளிக்கும் முறையில் இரண்டு வரலாறுகள் பேசப் பெறுகின்றன.

(1) மருள்நீக்கியார் முற்பிறப்பில் திருக்கயிலையில் வாகீச முனிவராக இருந்தார் என்றும் திருக்கயிலையைத் தன் தோள்வலியால் எடுத்த இராவணன் சிவபெருமான் திருவடி ஊன்றுதலால் தோள் நெரிந்து துன்புற்று அழுது கொண்டிருந்ததைக் கண்ட வாகீசமுனிவர் சிவன் சாம கீதப்பிரியன் என நினைவுறுத்தியதாகவும் அதனுல் இராவணன் தன்னுடைய ஒரு தலையைக் கிள்ளி யாழாக அமைத்துச் சாமகீதம் பாடி, இறைவனை மகிழ்ப்பித்து, விடுதலை பெற்றுன் என்றும், இராவணனுக்கு மறைமுகமாக ஓர் உபாயம் சொன்ன குற்றத்துக்காக இப்பிறவியில் சூலைநோய் மடுத்து ஆட்கொள்ளப் பெற்றுர் என்றும் கூறப் பெறுகிறது. முற்பிறப்பு வரலாற்று நிகழ்வினை எடுத்துக் காட்டும் முறையிலேயே தாம் பாடிய பதிகங்களின் இறுதியில் இராவணனுக்கு அருள் செய்த நிகழ்ச்சியை அமைத்துப் பாடுவதை வழக்கமாகக்கொண்டார் என்றும் விளக்குவர்.

(2) முற்பிறப்பில் இவர் சமணப் புலவர் ஒருவருடன் சேர்ந்து கொண்டு, சமய நூல்கள் பலவற்றையும் கற்றுத் துறைபோகிய சைவமுனிவர் ஒருவருக்கு எதிராக வாது செய்த காலத்தே அச்சைவ முனிவர் வெகுண்டு, வெஞ்சொற் கூறியதாக ஒருவரலாறு காணப்பெறுகிறது.

மேலே கூறப்பெற்ற இரண்டு வரலாறுகளும் சான்றுகளாக நிற்கும் தகுதியுள்ளவை என்ற குறிப்பானது தெய்வச் சேக்கிழாருக்கு ஏற்பட்டிருக்குமேல் அவ்வரலாறுகளை வெளிப்படையாகவே எடுத்துக் கூறத் தயங்கார். சேக்கிழார் தம் திருவாக்கினை வைத்தே இவ்வரலாற்று

விளக்கங்கள் கூறப் பெறுகின்றன. முன்னமே செய்த தவத்தில் சிறிது தவறு என்ற அளவுக்கே சேக்கிழாரின் ஏற்பு அமைகிறதேயன்றி, அதன் விளக்கமாகிய வரலாற்றுக் குறிப்பானது சேக்கிழார் காலத்தில் வழங்கப் பெற்றிருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம், வழங்கப் பெற்றிருந்து சேக்கிழார் கூறுதிருந்தாரெனில், வழங்கற் பாட்டுக்கு வரலாற்றுருக் கொடுக்கச் சேக்கிழார் தயக்கங் கொள்ளுகிறுர் என்பது புலனுகும். சேக்கிழார் காலத்தில் வழங்காமல் பிற்காலத்து வழங்கப் பெற்றதெனின் அவ் வழங்கற் பாடுகளைச் சேக்கிழார் வாக்கின் விளக்கமாக அமைத்துக் கூறுவது பயனில் செயல் எனக் கொண்டு தள்ளிவிடுதலே பொருத்த முடையதென்க.

### சூலை மடுத்தாளும் செயல்

சூலை நோய் தந்து ஆட்கொள்ளுதல் என்பது சிவன் மேற் கொள்ளும் செயலாக 'இரண்டிடங்களிற் காணப் பெறுகின்றது. மருள்நீக்கியார்க்குத் தந்தது போலவே கலிக்காமர்க்கும் கொடிய வயிற்றுவலியைத் தந்திருக் கின்றுன்.

திருநாவலூரரிடம் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) கொண்ட கருத்து வேறுபாடு காரணமாகக் கலிக் காமர்க்குக் கொடிய சூலைநோய் கொடுக்கப் பெறுகிறது. கருத்து வேறுபாடு நீக்கம் பெறுதற்குரிய ஒருவகைத் துணைக் கருவியாகச் சூலைநோய் பயன்படுகிறது. இச்சூலை நோய் ஊழ்வினை காரணமாக வருதல் இல்லை.

சமய உண்மைகளைத் திருவருளின் வழிநின்று விளக்க முறுத்திக் கொள்ளுதல் வேண்டும். உய்த்துணர்தல் மூல மாக விளக்கம் அமைக்கும் போது தவறு நேரலாம். உய்த்துணர்தல் மூலமாகப் போதரும் கருத்தைத் திரு வருளின் வழிநின்று சிந்தித்த பின்னரே முடிவு செய்ய வேண்டும். அவ்வாறின்றி, உய்த்துணர்தல் மூலமாகச் சில உண்மைகளை முடிவு செய்து, பின்னர் அவைகளையே முடிந்த முடிபாகக் கொண்டு மற்றவர்களுக்கும் விரிவுரை செய்தல், மேலும் வலியுறுத்துதல் போன்ற செயல்களை மேற்கொள்ளும்போது பிழை நேர்ந்து விடுகிறது. திரு வருளின் வழிநின்று உணராமைக்கு முற்செய்தவம் இல்லை

என்ற காரணம் பொதுவாகக் கூறப்பெறும். சிறிது நேரம் திருவருளை வழுத்தி நில்லாத குறையினல், உய்த்துணர்தல் முறை வலிவுடையதாகி, மேலும் அதனையே வலிவுறுத்திக் கூறும் செயலை மேற்கொண்டு விடுவதுண்டு. இத்தகைய கருத்துச் சிக்கல்களுக்கு முற்செய் ஊழ்வினையைக் கொண்டுவந்து இணைத்து விளக்கம் கூற இயலாது. அதனை இறைவனும் நேர் நின்று செய்தல் இல்லை. யாரேனும் ஒரு திருத்தொண்டர் வேண்டுவாராயின் அதன் அடிப்படையில், கருத்துச் சிக்கலை நீக்கி ஆட்கொள்ளும் முறையை மேற் கொள்ளுகின்ருன். அதற்குச் சூலைநோய் ஒருவகைக் கருவி யாகப் பயன் பெற்றிருக்கிறது. சிவன் நக்கீரருக்கு அமைத்த ஒறுத்தலையும் கூட இவ்வாறு அமைத்துக் காண லாம். மரபுவழி வழுவாது அவனுக்குத் திருத்தொண்டுக் கடம் பூண்டு வரும் செந்நெறியாளர்களிடத்திலுங் கூட, மிகச் சிறு நேரம் திருவருட் பிடிப்பிலிருந்து விலகி நிற்றல் அமையுமேயானுல், விலகி நின்ற அந்த அளவுக்கு நேர்ந்த இடையூறே சூலை நோயாக உருப் பெறுகிறது எனக் கொள்ளவேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனுர் இறைவனைத் திருவாரூர்த் தெருவில் தூதாக நடக்கச் செய்தது தவறு எனக் கருது கிருர் கலிக்காம நாயனுர். கலிக்காம நாயனுருக்குச் சூலை நோயைக் கொடுத்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கொண்டே அது தீர்க்கப் பெறும் என்றும் குறிப்பிடு கின்ருர். அடியவர் திறத்தும் ஆண்டான் திறத்தும் நடை பெறும் நிகழ்வுகளுக்கு உரிய விளக்கம் அமைத்துக் காணும் போது திருவருளின் வழிநிற்றல் வேண்டும். உய்த்துணர்தல் காரணமாக விளக்கம் செய்யும்போது பிழை நேர்ந்து விடுகின்றது. அத்தகைய பிழையை முன் வினைக் காரணமாக அமைத்து மூலம் தேடுதல் இல்லை. திரு வருளானது நேர்ந்த அப்பிறவியிலேயே அதனைச் சரிசெய்து விடுகின்றது எனக் கொள்ளலே நேரியதாம்.

### வாழ்வு தந்த நிலை

"பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில்
சமண் நீசர் புறத்துறையாம்
அவ்ஆழ் குழியின்கண் விழுந்து எழுமாறு
அறியாது மயங்கி அவமே புரிவேன்

மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன்
மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கு எதிர்செய்
குறை என் கொல்! எனத் தொழுவார்''

என்பது திருநாவுக்கரசரின் திருப்பதிகச் செஞ்சொல்லை உள்ளடக்கிய சேக்கிழாரடிகள் (பெரியபுராணம் 1343) திருவாக்கு.

சமண் சமயக் குழியில் வீழ்ந்து ஆழ்ந்து போய்க் கொண்டிருக்கும் என்னை இறைவன் திருவடிகளுக்கு ஆளாக்கும் இத்தகைய உயர்ந்த வாழ்வைத் தந்த சூலை நோய்க்கு என்ன கைம்மாறு செய்யத்தகும்! என்று தொழுதார் நாவுக்கரசர்.

அகநிலையிலிருந்து பாழ்செய்யும் உட்பகையானது புறச் சமயத் தாக்குதலை விடக் கொடுமையானது. தத்துவக் கொள்கையாலும் செயற்பாட்டு நெறிச் செழுமையாலும் பண்பட்டு முதிர்ந்த கட்டுக் கோப்புடன் நின்ற சைவசமயத்துள்ளும் உட்பகை தோன்றி விரிசல் வீழ்ந்து புறச்சமயம் உள்ளே மெல்ல நுழைந்து தாக்கம் உறுத்தும் என்ற கேடு நேரும் சமயத்தில் அப்பரடிகள் வாழ்வும், அவர் அருளிய ''கூற்றாயினவாறு'' என்ற முதற்பதிகமும், மறுமாற்றத் திருத்தாண்டகமும், சைவசமயத்தில் உட்பகையை நீக்கி ஒளிபெறச் செய்வனவாகும்.

''கூற்றாயினவாறு விலக்ககிலீர் எனநீடிய
கோதில் திருப்பதிகம்
போற்றால் உலகேழின் வருந்துயரும் போமாறு
எதிர்நின்று புகன்றனரால்''

என்ற சேக்கிழார் வாக்கினையும், ''நாமார்க்குங் குடியல்லோம்'' எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகத்துள் நாலாந்தாண்டகத்தில்

''தீமைதானும் நன்மையாகச் சிறப்பதே''

எனவரும் திருநாவுக்கரசரின் திருவாக்கினையும் இணைத்துச் சிந்தித்தல் வேண்டும்.

சூலைநோயால் தாக்குண்டபின்னர், தருமசேனர் அமண் சமயஞ் சார்ந்தோர் செய்த பரிகாரம் பயன்படாமை

கண்டார். 'இது நம்மாற் போக்கரிதாம்' என்று கைவிட்டுப் போதலைக் காண்கின்றார். தம்மை உளராக் கொண்ட தமக்கைபால் ஊட்டுவான்தனை அனுப்பினார். அவன் திலகவதியாரைக் கண்டு, அவர் கூறியவைகளைக் கேட்டுவந்து சொன்னபின், தாமே திருவதிகை செல்ல முற்படுகிறார்.

திருவதிகை வந்து அணைந்து, திலகவதியார் அடி மேலுற வணங்கி, **நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன் அனையீர்!** இந்த உடற் கொடுஞ் சூலைக்கு இடைந்து அடைந்தேன், இனிமயங்காது உய்ந்து கரை ஏறுநெறி உரைத்தருளும் எனவேண்டினார். திலகவதியம்மையார் தம்பியை நோக்கினார், ஆளுடைய தம்பெருமான் அருளை நினைந்தார், "**எழுந்திரீர்**" என மொழிந்தார். தமக்கையார் சொன்ன மொழிப்படி உடல்நடுங்க எழுந்து நின்றார். இறைவனைத் திருக்கோயிலினுள் சென்று பணிவதற்காகத் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார்.

> "திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
> பெருவாழ்வு வந்தது எனப் பெருந்தகையார் பணிந்து
> ஏற்று அங்கு
> உருவார அணிந்து தமக்கு உற்ற விடத்து உய்யும் நெறி
> தருவாராய் தம்முன்பு வந்தார் பின் தாம் வந்தார்.

என்பது சேக்கிழார் பெரியபுராணத் (1337) திருவாக்கு.

திருத்தொண்டு நெறியில் நின்ற திலகவதியம்மையார் அருளிய திருவாக்கே "**எழுந்திரீர்**" என்பது.

திருஞானசம்பந்தப் பெருமான் கூன்பாண்டியனின் கூன் தீர்ந்து, நிமிர்ந்து நிற்கும் பேற்றினை அவனுக்கு வழங்கும் நிலையில் "வேந்தனும் ஓங்குக" என்ற திருவருளாசியை வழங்கினாராக, சமண் சமயக் குறுக்கம் நீங்கியதோடு, இயற்கைக் கூனாக நின்ற நிலையும் நீங்கிடவே, நிமிர்ந்த பாண்டியனாக, நீதிப்பாண்டியனாக, செழுமைப் பாண்டியனாக நிமிர்ந்து நிற்கும் பேறு பெற்றான். மங்கையர்க்கரசியாரின் திருத்தொண்டினை அடிப்படையாகக் கொண்டு அருளாளராக நின்ற திருஞானசம்பந்தரின் திருவருளாசியானது கூன்பாண்டியனை நிமிர்ந்து நிற்கச் செய்தது. இங்கே உள்ளத்தாலும், கொள்கையாலும், நோயாலும்

நேர்ந்த இடையூறுகாரணமாக அனைத்துங் குறுகிக் கூன் பட, "எழுந்திரீர்" என்று அருளிய திருவருள் மறைமொழி யானது நிறை மொழி எனநின்று, அவரை அனைத்துப்பேறு களோடும் எழுந்து நின்றும் உளராக இருந்தும் வாழ்கின்ற பெரும்பேற்றுக்கு உரியவராக்குகின்றது. திலகவதியம்மை யாரின் தொண்டுநெறிச் செழுமை சார்ந்த திருவருள் வாக்கே மருள் நீக்கியாரைத் திருநாவுக்கரசராகவும் அப்ப ராகவும் உளராக வைக்கிறது என்று திருவருளால் நினைந்து திலகவதியம்மையின் தொண்டுநெறி சார்ந்த திருவடி களைப் போற்றி வணங்குதல் வேண்டும்.

புறச்சமயத்திலிருந்து சைவசமயம் வருவோர்க்கெல் லாம் திருவாளன் திருநீறு கொடுத்தல் என்ற அளவிலேயே மதமாற்றச் சடங்கு முற்றுப்பெற்றுவிடுகிறது என்ற அளவுக்கு, கி. பி. 7ஆம் நூற்றாண்டிலேயே திருத் தொண்டின் தலைமைக் காவல் ஏற்று, திருநீறு கொடுத்துத் திருக்கோவிலுக்குள் புகவைக்கிறார் திலகவதி. அம்மையா ரால் தொடங்கிக் கொடுத்த திருக்கோயில் திருத்தொண்டு நெறிதான் "பின்னர், திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்" என்று உலகெலாம் போற்றும் அப்பரடிகளை உயர்த்திப் போற்றும் திருத்தொண்டு நெறியாக மலர்ந்தது என்று கொள்ள வேண்டும்.

திருத்தொண்டு நெறிக்கு மூலமாக நின்றவர் திலகவதி யாரே. தங்கையால் திருத்தொண்டு செய்தல் என்பது அடிப்படை விதி. திருநாவுக்கரசரைப் பிறசமயத்திலிருந்து சைவசமயம் மீளுமாறு செய்யவும், எல்லாத் தடைகளையும் நீக்கி, சைவராம் பேற்றிேைடு எல்லாப் பேறுகளையும் அளிக்கவல்ல பெருமையுடையது திருவாளன் திருநீறே என்று நிறுவியும், திருநீறுபூசுதலும் திருத்தொண்டு செய் தலும் என்ற இரண்டே 'சைவன்' எனற்கு உரிய அடிப் படை அடையாளம் என்பதை உலகறியக் காட்டியும் சைவ சமயத்தைப் புறச்சமயத் தாக்குதல்களிலிருந்தும், அகப் பகை அழிவிலிருந்தும் நீக்கிக் காத்து நிறைவு செய்தும் வாழ்ந்த, வாழ்வித்த பெருமை திலகவதியாருக்கே உண்டு என்று பறைமுழங்கி அவர்தம் திருவடிகளை வணங்கிப் போற்றுதல் செய்வோமாக.

### திருநாவுக்கரசு என்னும் திருப்பெயர்

தம்பியாரை உடனழைத்துக் கொண்டு திருக் கோயிலினுள் புகுகிறார் திலகவதியார். திருவலகும் திரு மெழுக்கும் தோண்டியும் கொண்டு புகுகின்றார். தமக்கை யாருடன் சென்ற தம்பியார் திருக்கோயிலை வலம் வந்து, திருமுன் வீழ்ந்து பணியும்போது, தமிழாற்பாமாலை சாத்த வேண்டும் என்ற உணர்வு எழ, அப்போது "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என எடுத்த கோதில் திருப்பதிகம் பாடினார். சூலைநோய் அகன்றது. பெருவாழ்வு வந்தது என மகிழ்ந்தார்.

"மேவுற்ற இவ் வேலையில் நீடியசீர் வீரட்டம்
அமர்ந்த பிரான் அருளால்
"பாவுற்று அலர் செந்தமிழின் சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினல்
நாவுக்கர சென்று உலகேழினும் நின்
நன்னாமம் நயப்புற மன்னுக" என்று
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறை வானிடையே
ஒரு வாய்மை எழுந்ததுவே"

என்பது சேக்கிழார் பெரியபுராணத் (1344) திருவாக்கு.

### முதற் பதிகப் பொருண்மையும் ஆய்வும்

'கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற தொடக்கத்தை யுடைய முதற்பதிகம் சூலைநோய் தீர்க்க வேண்டும் என்று வேண்டிப் பாடிய பதிகம். இதற்கடுத்தநிலையில் திருவடி சூட்ட வேண்டும், மூவிலைச் சூலம் இடபக்குறி பொறித் தருள வேண்டும் என்று எடுத்துக் கூறிய பதிகங்கள் தவிர ஏனைய பதிகங்கள் யாவும் ஒன்றை வேண்டிப் பெறுதல் என்பதை உள்ளீடாகக் கொள்ளாத பதிகங்கள்.

முதற்பதிகத்தில் சூலைநோய் பற்றிய விளக்கம், தான் செய்த குறை, சமண சமயத்தில் இருந்தபோது தான் செய்த வைகள், சைவசமயத்திலிருந்து சமண சமயம் சென்றதற் குரிய காரணங்கள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தெளிவாக எடுத்தமைத்துக் கூறும் பகுதியாக இப்பதிகம் அமைகிறது.

முதற்பதிகமாகிய 'கூற்றாயினவாறு' என்ற தொடக்கத்தினையுடைய பதிகம் பாடியபின், அப்பதிகத்

தில் உள்ள செந்தமிழ் நடை, சொல்வளம், பதிக அமைப்பு ஆகியவைகளைக் கருத்திற் கொண்டு "நாவுக்கரசு" என்ற சிறப்புத் தகுதிப் பெயர் கொடுக்கப் பெறுகிறது.

மருள்நீக்கியார், தருமசேனர் போன்ற பெயர்கள் நில்லாமற் போக, 'திருநாவுக்கரசு' என்ற பெயரை நிறை மொழியாகவும் மறைமொழியாகவும் நிறுத்தி, தன்னாலும் தன் குடும்பத்தாலும் விளக்க முறுத்திய பெருமை அப்பூதி அடிகளுக்கே உண்டு. திருஞானசம்பந்தரால் தெய்வநலங் கனிய அழைக்கப் பெற்ற பெயரே 'அப்பர்' என்பது.

'என் சொல்லிப் பாடுகேன்' என்று இறைவனைக் கேட்டு, பின் அவன் அடி எடுத்துக் கொடுக்க, அதன் துணைக் கொண்டு இறைவனைப் புகழ்ந்து பாடுதல் முதலிய முறைகள் திருநாவுக்கரசரிடம் காணப் பெறவில்லை. இறைவனை எப்பொழுதும் தமிழால் இசையுடன் இசைத்துப் பாடும் பணியை மேற் கொண்டிருந்தார் என்பதும் தெரிய வருகிறது. ஆயினும், இவர் பாடிய "தாண்டகம்" என்பது சுத்தத்தாளத்தில் பாவுற்று அவர் செழும்பதிகத் தொடையாக, மிக நீண்ட சீர்களைக் கொண்டதாக, தாண்டகம் என்ற வகைக்குரிய மூல இலக்கியமாக அமைந்த பெருமையுடையது.

மருள்நீக்கியார் என நின்ற தம்பியார் தாம் மேற் கொண்ட அனைத்துத் துறைகளிலும் சிறந்த ஆற்றல் பெற்று விளங்கியவரேயாயினும் ஒருவகை மயக்கம் அவர் மேற் கொண்ட எல்லாத்துறைகளிலும் அவருக்கு இருந்து வந்தது. திலகவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து வேண்டும் போது, இதுவரையிலும் மயங்கி உய்ந்து வாழ்ந்தேன்; இனி **மயங்காது** உய்ந்து கரை ஏறும் நெறி உரைத்தருளும் என வேண்டுகின்றார்.

> "வந்தணைந்து திலகவதியார் அடிமேலுற வணங்கி
> நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன் அனையீர்!
> இந்த உடற் கொடுஞ்சூலைக்கு இடைந்து அடைந்தேன் இனி மயங்காது
> உய்ந்து கரை ஏறுநெறி உரைத்தருளும் என உரைத்து"

என்பது தம்பியார் தமக்கையாரின் அடிபணிந்து வேண்டுவதை எடுத்துக் காட்டும் வரலாற்றுண்மை ததும்பும்

சேக்கிழார் (1333) திருவாக்கு. திலகவதி அம்மையார் தம் அருள்வாக்கு வெளிப்பட்ட நிலையில்.

"எழுந்திரீர்"

எனக் கேட்டது. தம்பியாரைத் திருநாவுக்கரசராக ஆக்கும் ஆணை மொழியாக நின்றது "எழுந்திரீர்" என்பதே. வாழ்வில் இருந்த அனைத்து வகையான குறுக்கங்களும் மயக்கங்களும் ஒழிந்து போக விரிந்து, எழுந்து, பரந்து, விளக்க முற்றும் விளக்க முறுத்தியும் 'தாண்டகம்' என்ற மூல இலக்கியத்தைத் திருவருள் விரிவு நெறியின் இலக்கிய மாகப் பாடி அமைக்கும் அந்த அளவுக்கு, பல்கதிர் விரித்துத் தோன்றிப் பாடுசெய் கதிரே போல எழுந்து இருந்தருளும் நிலை பெற்றார். மறை மொழிந்த திருவாயால் எடுத்துக் கொடுக்கப் பெற்ற 'பித்தா' என்பது போன்ற மறையொலி போலவே திருத்தொண்டு ஒன்றே பேணி நின்று சைவப் பெரும்பயிர் வளர்த்த திலகவதியாரின் 'எழுந்திரீர்' என்ற ஒலியானது பரநாதப் பேரொலியாக நின்று, தம்பியாருக்குப் பல்லாற்றானும் வளர்ந்து, வளர்ந்து அனுபவப் பயன் துய்க்கும் மொழியாக அமைந்து விடுகிறது.

'எழுந்திரீர்' என்ற மறை ஒலியால் அனைத்து வாழ்வியற் கூறுகளிலும் உயர்ந்து ஓங்கி நிற்கும் பெருமையும் தலைமையும் பெற்றுநிற்கும் ஞானநிலையும், திருநீற்றைக் கொடுத்ததும் பெருவாழ்வு வந்து அனுபவப்பட்டு இணைந்து நிற்கும் பொருளனுபவச் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறார் தம்பியார். அந்நிலையில் மலர்ந்த திருப்பதிகம் ஆண்டவனைக் குருவாகக் கொண்டமையின் மலர்ந்த திருப்பதிகம் அன்று; திருத்தொண்டரைக் குருவென நின்று ஏற்றநிலையில், திலகவதியாம் திருத்தொண்டர் அருளிய திருவருள் மொழியால் மலர்ந்த திருப்பதிகம் ஆயிற்று எனக் கொள்ளவேண்டும். தமக்கையார் குருவென நின்று அருளிய திருவருள் மொழியை அநுபவித்து அநுபவித்து உருகிப்பாடும் தம்பியார் அவ்வனுபவத்தை,

"வார்த்தை இதுவொப்பது கேட்டறியேன்"

என முதற்பதிகத்தில் ஐந்தாம் திருப்பாட்டிற் கூறுவாராயினர்.

தமக்கையார் அளித்த திருவினுல் வெளிப்பட்டது மறு மாற்றத் திருத்தாண்டகம்; திலகவதியார் அளித்த திருநீறு தந்த பெருவாழ்வு அனுபவமே நீற்றறைப் பதிகமாகவும், நல்ல நாமப் பதிகமாகவும் அனுபவப்பட்டு வெளிப்படலாயின. சிவன் என்னும் பரம்பொருள் நேர்நின்று தந்த வளமைகள் 'சிவநலம்' எனப்பெற்றன. சிவபரம்பொருளைக் குனிய வலமாம் அடிமை கொண்டாடப்பெற்று, அடிமை என்னும் சீர் வல்ல தாயத்தால் தம்முள்ளத்தே அடைத்துத் தொண்டு பேணி நின்று துய்த்த சான்றோர்கள் சைவத் திருப் பெற்றவர்களாதலின், அத்தகைய திருத் தொண்டர்கள் நேர்நின்று அளிக்கும் திரு சைவத் திருவாதலின் அது 'சைவநலம்' எனப் பெற்றது. எழுந்திரீர் என்ற அருள்வாக்காலும் திருநீறு என்னும் பெருவாழ்வுக் கொடையாலும் ஆட்படுத்திய திலகவதியார் தந்த வளம் 'சைவநலம்' எனப் பெற்றது. திருநாவுக்கரசாக வளர் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர் எனநின்று இவ்வுலகில் ஆக்கிய தொண்டுகளெல்லாம் 'சைவநலம்' எனப் பெற்றுச் செழித்தோங்கின எனக் கொள்ளவேண்டும்.

சிவநலம் அறநெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்க வல்லது. நன்மையும் தீமையும் ஆம்பொருள்கள் அவ்வத்தன்மையில் நின்று சிறப்புப் பெறுவது சிவநலத்தின் விளைவு.

திருத்தொண்டின் உறைப்பினுல் தன்னை நன்னெறியில் நிறுத்திக் கொண்டதோடன்றி, தன்னைச் சார்ந்த பொருளின் தீமையை நீக்கி, அதனையும் நன்னெறிப்படுத்தி வாழ்பவர்களே திருத்தொண்டர்கள். உலகப் பொருள்கள் எவையும் கொடியவை அல்ல. ஆயினும், அவை கொடுமையுடையனவாக நிற்கும் நிலையை மாற்றி, உலகப் பொருள்களாக உள்ளவை தத்தம் எல்லையில் தத்தம் பயனைக் கொடுப்பதன் மூலம் நன்மை பயப்பவைகளே என்ற கருத்தில், உலகப் பொருள்களை நன்னிலையில் வாழ வைக்க வேண்டும் என்ற வகையில் முதற்குரல் கொடுத்தவர் அப்பரடிகள். இக்கருத்தினை அப்பரடிகள் நாமார்க்கும் குடியல்லோம் எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகத்துள் நாலாம் திருப்பாட்டில்,

"தீமைதானும் நன்மையாகச் சிறப்பதே"

என்று கூறுமாற்றால் தெளியலாம். இவ்வகையில் சூலை நோயையும் வாழ்த்தியமைத்த பகுதியை இங்கே நினைவிற் கொள்ளலாம். இவ்வகையில் சூலைநோய்க்கு ஊழ்வினை காரணமாக உள்ள முன்பிறவிக் காரணம் எதையும் கூற இயலாதநிலை சமண் சமயத்துக்கு உண்டாகிய இடர்ப்பாடு. இதனைத் திருநாவுக்கரசர் "தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்" என்று கூறும் பகுதியில் 'தோற்றாது' என்பதற்கு ஊழ்வினை என்றாற்போன்ற காரண காரிய அமைப்புக்களின் அடிப் படையில் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளாமல் துன் புறுத்தும் நிலையில் மட்டுமே தன்னைத் தோற்றிக் கொள் வதாயிற்று என்று குறிப்பிடுகின்றார்.

## ஒருவர் தலைக்காவல் இலாமை

கோதில் திருப்பதிகம் எனச் சேக்கிழார் பெருமானால் சிறப்புச் செய்யப்பெற்ற 'கூற்றாயினவாறு' எனத் தொடங் கும் பதிகம் திருநாவுக்கரசர் அருளிய முதற்பதிகம் ஆகும். அப்பதிகம் அன்றிலிருந்து இன்று வரையில் சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு சீரழிவுகளுக்கு விளக்கமும் வழி யும் அருளுவதாக அமைந்துள்ளமையை எளிதிற் காண லாம். திருநாவுக்கரசர் தம்முடைய வாழ்வியல் நிகழ்வு களின் அடிப்படையில் பல்வேறு செய்திகளை எடுத்து வைத்து ஆராய்ந்து கூறுதல் நமக்கும் இன்று கடைப்பிடிக் கும் வழிவகைகளைக் கொண்டதாக அமைகிறது. முதன் முதலாக அவர் புறச்சமயம் சார்வதற்கு உரியதாக அமை கின்ற சூழல் என்ன என்பதைத் தெளிவுற எடுத்துக் காட்டுவதை நாமும் முதலில் அமைத்துச் சிந்திக்கலாம்.

அப்பரடிகள் பிறப்பால் சைவசமயத்தவர். சைவ சமயத்தோடன்றி ஏனைச் சமயங்களையும் உணர்ந்து தெளியவேண்டும் என்ற கருத்துடன் இருந்தவரே. சைவ சமய உண்மையை உணர முற்பட்ட போது அவர்பெற்ற அனுபவத்தை ஓர் உவமை மூலம் முதற்பதிகத்திலேயே குறிப்பிட்டருளுகின்றார்.

"காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி

> நீத்தாய கயம்புக நூக்கியிட
> நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
> வார்த்தை இது வொப்பது கேட்டறியேன்''

என்பது நாலாந்திருமுறை முதற்பதிகத்தின் ஐந்தாம் திருப்பாட்டு.

கயம்-குளம். குளத்தைக் காத்து ஆள்பவர் உண்டு எனவும் அவர்களுடைய காவலை மதியாமையால் கரை நின்றவர் செயல்படும் நிலை உண்டு எனவும் குறிப்பிடுகின்றார்.

காத்தலும் ஆளுதலும் ஆகிய இருசெயல்களைச் செய்பவர்களைக் ''காத்தாள்பவர்'' என்றார். குளத்துநீரைக் கெடுதி வாராவண்ணம் காத்தல் ஒருவகை. அது குளத்து நீரைக் கெடுக்க வருவாரைத் தடுத்து, நீரைக் கெடுக்கும் கெடுதிகள் குளத்துநீரை அடையாமல் காத்துநிற்கும் செயலை அடிப்படையாகக் கொண்டது. மேலும், குளத்து நீரை நன்மையுடைய நீராக ஆக்கும் ஆக்கப்பணியில் ஈடுபட்டுச் செயலாற்றுவது இன்னொருவகை. தீமைநீக்கமும் நன்மை ஆக்கமும் என்ற இருவகைச் செயல்களிலும் ஈடுபட்டுக் குளத்து நீரைக் காப்பவரைக் 'காத்தாள்பவர்' என்று குறிப்பிடுகின்றார்.

சைவ சமயத்தைக் குளம் என்ற உவமையில் எடுத்துக் காட்டி விளக்குவதாக அமைத்துக் கொண்டால் சைவ சமயத்தைக் காத்து ஆள்பவர் உண்டு என்பதை ஒப்புகின்றார். அடுத்து, ''காத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்'' என்று கூறுகிறார். இது இருவகைப் பொருள்தரும் ஒருதொடர். காத்து ஆள்பவரின் காவற் செயலை மற்றவர்கள் மதியாமல் நடந்திருக்கலாம். காத்து ஆள்பவர்களே காவல் செயலை மதியாமல் இகழ்ந்து ஒதுக்கியிருக்கலாம்.

சைவசமயத்தைக் காத்து ஆள்பவர்களின் செயல்களை அச்சமயத்தைப் பின்பற்றுவோர், பின்பற்றப்படவேண்டியவர்கள் மதியாமல், அவர்தம் காவலை இகழ்ந்து செயற்பட்டிருக்கலாம். அல்லது சைவ சமயத்தைக் காத்து ஆள்பவர்களே தம்முடைய காவற் செயலைச் செயற்படுத்தாமல் புறக்கணித்திருக்கலாம். எவ்வாறாயினும் சமயக் காவலரை ஒட்டிச் சைவசமய வழிப்படுவோர் செல்லவில்லை என்ற

நிலை உருவாகிவிட்டது. காத்தாள வேண்டியவர் தம் கடமையைச் செய்யவில்லை என்றும் கொள்ளலாம் அல்லது காத்தாள்பவரின் காவற் செயலை மற்றவர்கள் புறக் கணித்தும் இருக்கலாம். இவ்வகையில் சமய உண்மைகளை உரிய முறையில் அறிந்து கொள்ளவும் சமயச் செயற் பாட்டு முறைகளை உண்மையாக உணர்ந்து செயற்படவும் இயலாத நிலை உருவாகி விடுகிறது. சமய உண்மைகளை முறையுறத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று வருபவர் களுக்குச் சமய உண்மைகளை உள்ளவாறு உணர்த்து பவர்கள் இல்லாமற்போய் விடுகின்றார்கள். அவர்கள் இருந் தாலும் சொல்லவோ கேட்கவோ இயலாத சூழ்நிலை உண்டாகி விடுகின்றது. இந்நிலையில், குளத்தின் கரையில் நின்று கொண்டிருக்கும் சிலரைப் போல, சமயத்தின் நுழை வாயிலிலும் சிலர் இருக்கிறார்கள். குளத்தின் கரையில் நின்றார் என்ற தொடர்பைத் தவிர, குளத்தின் முழுமையான உண்மைகளைத் தெரிய அவர்க்கு வாய்ப்பு இல்லை. காத்தாள் பவர் இல்லாதபோது அல்லது இருந்து செயற்படாத போது கரையில் நின்றவரே தகுதியுடையவராக மதிக்கப் பெற்று விடுகிறார். அவரும் செயற்பட முற்படுகிறார். கரைநின்ற வரைக் கேட்டதும், அவர் அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும், அனுபவம் சொல்லில் ஆக்க முடியுமா என்றெல் லாம் விந்தை உடையன பேசி, வந்து கேட்டவரை அலமந்து அலறவைத்து விடுகிறார். நீரைத் தொட்டு, அதன் ஆழம் கண்டு, பின் அதன் ஆற்றலை அனுபவிக்க வேண்டும் என்று ஆற்றுப் படுத்துகிறார். அவர் பேச்சை நம்பி அக்கயத் தினுள் புக்கேனுக (அப்பரடிகள் கூறுவது) இறங்கிய அந்த இடத்திலேயே நீந்த வேண்டிய தன்மைக்கு ஆளாகி விட்டேன். குளத்தின் ஆழம், தொன்மை, குளத்துநீரின் தன்மை ஆகியவைகளைத் தெரிந்து கொள்வதைவிட, குளத் தில் இறங்கிய என்னையே காத்துக் கொள்ள முடியாத வனாக ஆகி, நிலைக்கொண்டு நிற்கும் வழிவகை அறியாத வனாகத் தத்தளிக்கிறேன். இவை கயம், காத்தாள்பவர், கரை நின்றவர், அவர் கூறியதைக் கேட்டதால் வந்த விளைவு என்பவைகளை இணைத்து நிறுத்தி அப்பரடிகள் கூறிய செய்திகள்.

காத்து ஆள்பவரைத் திலகவதி அம்மையாராகக் கொண்டு அவர்தம் கூற்றை மதியாமல் கரைநின்றவர்

பேச்சைக் கேட்டுச் சமணசமயம் புக்கதாக இப்பகுதிக்கு அறிஞர்கள் விளக்கம் கண்டுள்ளார்கள். காத்தாள்பவர் செயலை உடன் கொண்டு அப்பரடிகள் அதே பதிகத்தின் ஏழாந் திருப்பாட்டில்,

"ஒருவர் தலைக் காவல் இலாமையினால்"

என்றும் கூறியுள்ளார். தலைமைக் காவல் பூண்ட ஒருவர் இல்லை என்றே வெளிப்பட எடுத்துக் கூறுகிறார்.

சமயத்தைக் குளத்தோடு ஒப்பிட்டுக் காட்டும் அப்பரடிகள் சமய நுண்பொருளை அறிந்து துய்க்கவும் அடைந்து துய்க்கவும் வேண்டிய நிலையில் அது ஒரு குளமாக இருந்து தன்னை அடைந்தவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்கி, அரிய துய்ப்பு அனுபவத்தைக் கொடுத்து வாழவைப்பது என விளக்கிக் காட்டும் உண்மையை முதலில் உளங் கொள்ளவேண்டும். ஊருணி நீர் நிறைந் தற்றே என்ற வள்ளுவரின் உவமையைப் போல ஊருணி போன்றது சமயம் என்ற உவமையை ஆழமாகச் சிந்தித்து அமைத்துக் கொள்ளல் வேண்டும். கயம் கட்டுக் கோப்பாக இருக்கிறது; காத்தாள்பவர் இருக்கிறார்கள் என்று அதன் அமைப்பு நிலையையும் தெளிவாக விளக்குகின்றார். காத் தாள்பவர்களோடு கரை நின்றவர்களும் இருக்கிறார்கள் என்று கவல்கின்றார். கயத்தை அடைந்து அதன் நீரை அறிந்தும் அடைந்தும் துய்க்க வருபவர்களுக்குக் காத்தாள் பவர்களின் அறிவுரை, ஆதரவு கிடைக்க இயலாத சூழல் உருவாகியுள்ளது என்று குறிப்பிடுகிறார். காவல் இகழ்ந்தமையை இரண்டிடத்திலும் உள்ள குறையாகக் கொள்ள லாம். காத்தாள்பவர்களும் கலந்து துய்த்துப் பயன் பெற வந்தவர்களும் இணைய வேண்டும். ஆனால், வந்த வர்கள் காத்தாள்பவர் இல்லாத போது கரைநின்றவர் களையே சந்திக்க வேண்டியவர்களாகத் தள்ளப்பட்டு விடு கிறார்கள். கரைநின்றவர்களும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள். அவர்தம் சொற்களை நம்பி, சமயத் துறையினுள் புகுந்து விட்டால், எந்த ஒரு தனிமனிதனும், சமயத்தால் அலைக்கழிக்கப் படுபவனாக அல்லலுறு கின்றானேயன்றி, நுழைந்த சமயத்தில் நின்று நிலைத்து, பயன் கொண்டு, வாழ்வு பெறும் நிலையுடையவனாக அவன் நிற்க முடியாது தவிக்கிறான். இத்தகைய நிலைகளை எடுத்துக் காட்டி, அதன் மூலம் தன் அல்லலை வெளிப்படுத்தியபின்,

''எழுந்திரீர்'' என்று தன் தமக்கையார் கூறிய கூற்றை நினைவிற் கொண்டு ''வார்த்தை இது வொப்பது கேட்டறியேன்'' என்று கூறியருளிய நிலையையும் உளங்கொள்ள வேண்டும். ''எழுந்திரீர்'' என்ற ஒருவார்த்தையால் சைவ சமயத்தில், அருள் வாழ்வில் என்றென்றும் தாம் உளராக வாழும் பேறு பெற்றமையை நினைந்து நினைந்து, கண்ணீர் மல்கிக் கூறும் நிலைமையை உணர்தல் வேண்டும்.

அப்பரடிகளின் திருப்பதிகக் கருத்தின் வண்ணம் சைவசமயக் காப்பாளர் யார்? அவர்தம் பணிகள் யாவை? என்பதை நாம் நினைப்பதைவிட அப்பரடிகள் நினைந்து, நினைந்ததோடன்றி எடுத்துக் காட்டியும் விளக்கியுள்ளார். அத்துடன் தலைமைக் காவலர் ஒருவர் இருக்கவும் வேண்டும் என்று எடுத்துக் காட்டுகின்றார். குளத்துநீர் நன்மையுடையது, தொன்மையானது, உயர்ந்த ஆற்றல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது என்ற அந்த அளவிலேயே 'கயம்' தன்னளவில் வாழ்ந்து விடும் என்று கருதலாகாது. காத்தாள்பவர் தேவை; தலைமைக் காவலரும் தேவை என்பதை அப்பரடிகள் தெளிவு பெற அமைத்துக் காட்டியுள்ளார்.

காத்தாள்பவர் என்ற வகையில் சைவசமய ஆக்கப் பணிகள் பலவற்றை அப்பரடிகள் திட்டமிட்டும் செயற்பட்டும் வாழ்ந்திருக்கிறார்கள். திருப்புகலூரில் திருஞான சம்பந்தருடனும் பிற அடியவர்களுடனும் கலந்து நின்று, உடனுறைவின் பயன் பெற்றதோடன்றி, பல தலங்களிலும் திருமடம் அமைத்தார். சமய உண்மைகளைத் தெளிவாக எடுத்துக் கூறும் அருளாளர்கள் அமையவேண்டும் என்றும் அத்தகைய அருளாளர் உண்டாவது நூலறிவினால் அன்று, திருத்தொண்டு முறையினாலேயே என்றும் வலியுறுத்தி அமைத்துள்ளார்கள். அப்பரடிகள் முதற்பதிகத்தில் அமைத்துக்காட்டிய கொள்கை விளக்கமாக மலர்வதே திருவாரூர்ப் புனிதர் பேரவை.

சங்கமிருந்து தமிழாய்ந்தது போன்றே திருத்தொண்டர்கள் இணைந்து நின்று தொழிற்பட்ட இயக்கம் ''புனிதர் பேரவை'' என்ற பெயரைக் கொள்கிறது.

சிவம் நின்ற நிலையை அறிவது சிவநீதி. சிவபரம் பொருளை அறிந்து, அடைந்து, துய்த்து அருளாளர்களாக —

திருத்தொண்டர்களாக மக்கள் மத்தியில் சைவநல் வாழ்வு வாழ்ந்து காட்டிய பெருமக்கள் சைவர் எனவும் அவர் வாழ்ந்த நீதி "சைவநீதி" எனவும் வேறுபிரித் தறியப் பெற்றன. திருநின்ற நடுநிலைப் பரம்பொருளில் நிலைத்து நின்று, மடுத்துச் சுவைத்து, வளமான வாழ்வியல் நெறியை ஏனைய மக்களுக்கு வாழ்ந்து காட்டிய திருத்தொண்டர்கள் அமைத்துக் காட்டிய வாழ்வியலறங்கள் சைவநீதி எனப் பெற்றன. இதனைத் திருஞானசம்பந்தர்,

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்று போற்றினர். ஆயினும், சைவநீதி என்பது தனித்து வாழ்ந்த திருநெறித் தொண்டரின் தனிப்படுநீதியன்று எனக் காட்டும் முறையில் சேக்கிழார் திருவாக்கில்,

"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதி செயும் நாயன்மார் தூய சொன்மலர்
பொதி நலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"

என்ற அருள்நிறை திருப்பாட்டு (பெரியபுராணம்-4) மலர்ந்தது எனக் கொள்ளவேண்டும்.

புனிதர் பேரவை உறுப்பினர்களே சைவசமயத்தைக் காத்தாள்பவர்களாக அமையவேண்டும். அவர்கள் அனைவரையும் இணைத்த தலைமைக் காவலரும் அமையவேண்டும். அத்தகைய அமைப்பு ஒன்று செயல்பட்டால் கரைநின்றவர்களெல்லாம் கண்டவாறு சொல்லும் நிலை உண்டாகியிருக்க முடியாது என்பதை அப்பரடிகளின் கருத்து விளக்கமாகக் கொள்ள வேண்டும். அவர்கள் தம் திருக்கையால் திருத்தொண்டு பேணியவர்களாக அமையவேண்டும். நூல்களைப் படித்து, இணைத்து, ஆய்ந்து சொற்போர் மடுப்பவர்களாக இருக்கலாகாது. அவற்றோடு ஆழ்ந்துநின்று துய்த்த அனுபவப் பேறும் உடையவர்களாக அமைய வேண்டும். அனுபவப்பேறு என்ற ஒன்றைப் பலவாறு விரித்துக் காட்டியே மற்றவர்களை மருட்டி விடுதல் கூடாது. தம்கையால் திருத்தொண்டு செய்தல் என்ற ஒன்றாலேயே அனைத்துப் பேறுகளும் பெற்றுச் சிறக்க முடியும்; தாமேயன்றி என் போன்றவர்களை (அப்பரடிகள்) "எழுந்திரீர்" என்ற வார்த்தையாலேயே அனைத்துவகை அருட் பேறுகளையும் துய்க்கச் செய்து ஆட்கொள்ள முடியும் என்றும் அமைத்துக் காட்டுவாராயினர்.

### சமண்சமயத்தில் அப்பரடிகள்

'கூற்ருயினவாறு' எனத் தொடங்கும் கோதில் திருப்பதிகத்தில் அப்பரடிகள் தான் முன்னே மேற்கொண்ட நிலைகள் பலவற்றை எடுத்துக் கூறுகிருர். சூலைநோயின் செயலை விரிவாகக் கூறுகிருர். அறியாமையாற் செய்தவைகள், இறைவன் இன்று இரக்கங் கொள்ளுதற்கு உரியனவாகச் செய்தவைகள் என்பனவாகிய சில செயல்களைக் கூறுகிருர். அவைகளையெல்லாம் பற்றிய அறிஞர்களின் ஆய்வுரைகளும் வெளிவந்துள்ளன.

முதல் திருப்பதிகத்தில் கூறப்பெறுஞ் செயல்கள் எல்லாவற்றையும் அப்பரடிகள் சமண் சமயத்தில் இருந்தபோது செய்தவைகள் என்று முடிவு செய்வது அத்துணைப் பொருத்த முடையதாகாது. அவ்வாறே சமண் சமயத்தில் இருந்தபோது சைவவழிபாட்டு முறைகளை மறைவாக மேற்கொண்டு வாழ்ந்தார் எனவும் அவ்வகையில் இருநெறிப்பட்ட வஞ்ச வாழ்வில் வாழ்ந்தார் எனவும் முடிவு கொள்ளுதலும் பொருத்தமுடையதன்று.

சமண் சமயத்தில் தம்மை இணைத்துக் கொண்டிருந்த காலத்தில் அப்பரடிகள் ஒரு கலைஞான முனிவராக மட்டுமே இருந்தார் என்ற குறிப்பைத் திரு. வி. க. அவர்கள் அமைத்துள்ளார்கள். சமய ஒழுக்கங்கள், நெறிமுறைகளைப் பின்பற்றி வாழாமல் தத்துவஞானத் தெளிவு பெற்றவராய், தத்துவ ஞானத் தெளிவைப் பிறருக்குத் தெளியக் கூறவல்லவராய் இருந்தார் என்று விளக்க முற்படுவதே திரு. வி. க. அவர்களின் கருத்து. அப்பரடிகள் தம்மை முற்ருகச் சமணராக அமைத்துக் கொள்ளாமல் சமணத்தோடு இசைவித்த வாழ்க்கையராக மட்டுமே இருந்தார் எனத் தெளிய வேண்டும் என்பது திரு. வி. க. அவர்களின் உள்ளக் கிடக்கை. அவ்வடிப்படையில் அப்பரடிகள் வாழ்க்கையை ஏற்ருல், அவர் சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன்னுமம் என்னுவில் மறந்தறியேன் என முதற்பதிகத்தில் வரும் திருப்பாட்டு வரிகள் உள்ளீடாக, அவர் சைவவொழுக்கம் மேற்பட்டு ஒழுகினுலும் அது குறையுடையதாகாது என அப்பரடிகள் செயலை நீதிப்படுத்துவதாக அமையும் என்ற கருத்தை வலியுறுத்

தவே. இக்காலத்திலும் பிறப்பால் ஒரு சமயத்தினை நெறிப் படுத்தி நிற்கும் வாழ்முறையை அமைத்துக் கொண்டவர்கள் பலவேறு தத்துவஞான விளக்கங்களைக் கூறுவதை நாம் காணமுடிகிறது. அவ்வகையில் அப்பரடிகளும் சமண் பாழியில் தங்கியிருந்த காலத்தில் சைவசமய நெறிமுறை பற்றி ஒழுகுபவராகவும் அதே சமயத்தில் சமணத் தத்துவ ஞானத்தில் பிற எவரும் அடையாத உய்த்துணர் ஞானமும் மெய்த்துவரு விளக்கமும் அளிக்கும் கலைஞானச் செல்வ ராகவும் திகழ்ந்தார் என அமைதிபடுத்திக் காண்பதும் காட்டுவதும் ஒருவகையில் முதற்பதிகத்தில் காணப் பெறும் அப்பரடிகளின் செயல்களை அறமுறைப் படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான்.

முதற்பதிகத்து முதல்வரியிலேயே "கொடுமை பல செய்தனன் நான் அறியேன்" என்று குறிப்பிடுகிறார். கொடுமை செய்தல் என்பதைச் சமண் சமயத்தில் இருந்த போதுதான் செய்தார் என்று கொள்ளவேண்டியதில்லை. சமண் சமயம் சார்தற்கு முன் சைவத்தில் இருந்த போதும் கடவுளை இகழ்ந்து பேசிய குறிப்பு அவர் வாழ்க்கையில் உண்டு.

திருவதிகை வீரட்டானத்து, ஏழைத் திருத்தாண்டகப் பதிக முழுவதிலும் இறுதி வரிவாக, "ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே" என்று குறிப்பிடுமிடத்தில் 'பண்டு' என்ற சொல் சமண் சமயஞ் சார்ந்த காலத்தை மட்டும் குறித்தது எனறு கொள்ளாமல் அதற்கு முன் னுள்ள காலத்தையும் குறித்ததாகக் கொள்வதில் தவறில்லை.

அடுத்து, அப்பரடிகள் சமண்சார்ந்த காலத்தே அருகனைக் கடவுளாக எண்ணி வழிபடும் நிலை சமணத்தில் உண்டாகி விட்டது. அருகனைக் குறிக்கும் பெயர்களில் 'சிவன்' என்ற பெயரும் இணைந்திருப்பதை நாம் இன்றும் காணலாம். அறுவகைச் சமயங்களுக்கும் அவ்வவர் பொருளாய் நின்றமூலப்பொருள் ஒன்றே என்றும் மூலமாய் நின்ற பரம்பொருள் ஒன்றேயாயினும் அவ்வச் சமயத்தவரும் அவரவர் விரும்பிய பெயர்களால் அமைத்து வழிபாடு செய்கிறார்கள் என்றும் கூறப்பெறும் சமயப் பொதுமைக் கருத்துக்களை அனைத்துச் சமயத்தவரும் ஏற்றும் போற்றியும்

வாழும் சமயவாதிகள் வாழ்ந்த காலத்தில் அப்பரடிகள் சமண்சமயம் சார்கிறார். சைவத்தில் சிவன் என்ற பெயரால் அழைக்கப்பெறும் பரம்பொருளே சமணத்தில் அருகன் என அழைக்கப் பெறுகிறான். பொருளால் ஒன்று; பெயரால் வேறு என்ற கருத்தை ஏற்று வாழும் பொதுமைப் பேச்சானது சமய வாதிகளிடை விறுவிறுப்புப் பெற்றிருந்த காலம் அது, அருகனை உருவில் அமைத்துக் காட்ட முற்பட்ட அந்நிலையிலேயே மற்றவர்கள் அவனை வழிபட்டு நிற்கும் நிலை உருவாகி விடுகிறது. இவ்வகையில் சைவத்தில் சிவன் எனநின்ற உருவமே சமணத்தில் அருகன் என நிற்கிறது.

தாய் தந்தையரால் அறிமுகம் செய்துவைக்கப் பெற்ற நிலையில் சிவன் என்ற பெயரால் நிகழ்த்திய வழிபாடும், பின்னர்ச் சமண் சமயத்தவரால் அறிமுகம் செய்து வைக்கப் பெற்ற நிலையில் அருகன் என்ற பெயரால் நிகழ்த்திய வழிபாடும் ஒரே மூலப் பொருளைச் சார்ந்தவை என்ற கருத்தே அப்பரடிகளுக்கு உறைப்பாயிருந்தது. அவ்வகையில் அப்பரடிகள் முதல் திருப்பதிகத்தில்,

> "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
> தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
> நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்
> உன்னுமம் என்னாவில் மறந்தறியேன்"

என்று கூறியவை முரண்பாடில்லாத — இருமைப்பட வாழ்தல் இல்லாத வழிபாட்டு முறையே என்று விளக்கங் கொள்வதில் தவறில்லை.

அப்பரடிகளுக்கு இருமை நிலையில் வாழும் கருத்து அமைந்திருக்குமேல் சமணத்திலிருந்து சைவம் சார எண்ணியிருக்க வேண்டாம். அவ்வாறே, சைவத்திலிருந்து சமணம் சார்ந்தது தவறுடைய செயல் எனக்கூறி வருந்தியிருக்கவும் வேண்டாம்.

சமண் சமயத்திலிருந்து சைவம் வருவதற்குச் சூலை நோய் காரணம் எனக் கொள்ளலாம். ஆனால், சைவத்திலிருந்து சமணம் செல்வதற்குக் காரணமாக எதுவும் அப்பரடிகள் வாக்கிலிருந்து கிடைக்காமையால் சேக்கிழார் திருவாக்கைச் சான்றாக எடுத்துக் கொண்டு, "நல்லாறு

தெரிதற்கு நம்பர் அருளாமையினால்" சென்றார் எனக் கூறுவர்.

சமயச் சார்பு பற்றிய கொள்கையில் "பிறப்பால் அமையும் சமயம்" என்பதில் அப்பரடிகள் அழுத்தமான கொள்கையுடையவராக அமைந்துள்ளார் என்பதை முதன் முதலில் நாம் ஒப்புதல் வேண்டும்.

முதல் திருப்பதிகத்தில் "ஏற்றாய் அடிக்கே" என்றும் "முன்னம் அடியேன் அறியாமையினால் முனிந்து, பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்" என்றும் "கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன், உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன்" என்றும் வருவன கொண்டு, இறைவன் அப்பரடிகளை ஆளாகக் கொண்டதும், அடிக்கே ஆளாக ஏற்றதும், அவனுக்குத் தாம் அடிப்பட்டு அடிமை ஆனதும் முன்பே நிகழ்ந்தவை. அவ்வகையில் எனக்கு என் தலைவனைப் போலவே, பிற சமயங்களும் அவ்வச்சமயத்தவர்களை,

> "ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கப்பொருள்
> வேறொன்றிலாதன"

என்றும்,

> "ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன"

என்றும், அந்த ஆறு சமயங்களும் தனித்தனி நின்றும் பயன்படுவனவே என்றும் கொள்ளும் கருத்தினை அப்பரடிகள் உணர்த்தினார் எனக் கொள்ளலாம்.

அவ்வகையில், ஒருவருக்குப் பிறப்பால் அமையும் சமயந் தவிர வேற்றுச் சமயம் சார வேண்டிய அவசியம் இல்லை என்று கருதினார் அப்பரடிகள் என்று கொள்வது ஒருவகைப் பொருத்தமான கருத்தே என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், சூலைநோய் பற்றிய ஆய்வை அப்பரடிகள் திருவாக்கின் அடிப்படையில் சிந்தித்தால் வேறு சில ஆய்வுகள் தோற்றம் பெறுகின்றன.

சூலைநோய் தமக்கு வருதற்குரிய ஊழ்வினை ஏதும் தம் முன்னைய வாழ்வில் இல்லை என்பது அப்பரடிகள் கருத்து. ஊழ்வினை அமைப்புக் கொள்கையைத் தத்துவநோக்கில் முன்பின் முரண்பாடு இன்றி ஆய்ந்தவர் அப்பரடிகள்.

ஊழ்வினைக் கொள்கையைச் சைவத்திலேயன்றிச் சமணத்திலும் நின்று ஆய்ந்து விளக்கங் கண்டவர் அப்பரடிகள். தம்முடைய முன்னை வாழ்வு அதற்குக் காரணமாக இல்லாமையோடு, தாம் தற்போது சார்ந்திருக்கும் அருகனுலும் நீக்கப்பெற இயலாத நிலையுடையதாக இருப்பதை உணருகிருர். ஊழ்வினைபற்றி வருகின்ற நோய்க்கு ஏற்றம் இறக்கம், கால வளர்ச்சியை ஒட்டித் தோற்றம் பெற்று வளர்ந்து முறுகி நிற்கும் நிலை காணப் பெறும். எந்த உயிரும் அனுபவிப்பதற்கேற்ப எடுத்த உடலில், அனுபவிப்பதற்கேற்ற அளவிலேயே இன்ப துன்பங்கள் அமையும். சூலைநோயானது தோற்றிய அளவிலேயே முதிர்ந்து, உயிரையே மாய்க்கும் வகையில் அமைகிறது. வேறு எந்த ஒரு வேலையையும் செய்ய இடைவெளி அமைப்பதாக அந் நோய் அமையவில்லை. எனவே, இந்த நோயைத் தரவும் நினைத்தால் நீக்கவும் ஆகிய தலைமைத் தன்மையுடைய ஒரு பொருள் உண்டு என உணர்கிருர் அப்பரடிகள். இக்கொள்கையை உணர்த்தும் போக்கிலேயே முதற்பதிகத்து நாலாந் திருப்பாட்டில்.

"தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்ருே
தலையாயவர் தங்கடன் ஆவது"

என்று குறிப்பிடுவதைத் திருவருளுணர்வுடன் சிந்திக்க வேண்டும். சமயங்களானவைகளின் தெய்வங்கள் பலவாக இருப்பினும் உயிர்களை நெறிப்படுத்தி நிலைநிறுத்தும் போக்கில் தலைமைத் தன்மை எய்தி நிற்கும் தெய்வநிலைப் பரம்பொருள் ஒன்று உண்டு எனக் குறித்து, சூலைநோயைத் தந்து நிறுத்தியதும், மற்றைத் தெய்வ வழிபாட்டால் நீக்க இயலாதவாறு சூலையை மடுத்து அமைத்ததும், உரியவனை வந்து அடைந்து வழிப்பட்டு முறையிட்டபோது அச்சூலையைத் தவிர்த்து நீக்கியதும் தலைமையை அறிவிக்கும் அருள் நிலைகள் எனக் குறிப்பிட்டுக் காட்டும் அப்பரடிகள் கொள்கையையும் இணைத்துக் காணவேண்டும். அதனுலேயே அப்பரடிகள் நாலாந் திருமுறைத் திருவையாற்றுத் திருநேரிசையில்

"தானலாது உலகமில்லை, சகமலாது அடிமையில்லை"

எனவும்,

"சகமலாது அடிமையில்லை தானலால் துணையுமில்லை"

எனவும் முறையே முதலாவது எட்டாவது திருப்பாட்டுக் களிற் கூறியவைகளை இணைத்துக் கண்டு தெளிய வேண்டும்.

எனவே, தலைமைத் தன்மையை உடைய பரம் பொருளைப் பிறப்பால் தலைவனாகப் பெற்றிருந்தும் சமண் சமயம் சார்ந்தமையைக் குறித்து வருந்தும் முறையில் அப் பரடிகள்,

"முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போனவாறே"

என்றும்,

"அருகிருக்கும் விதியின்றி அறம் இருக்க
மறம் விலைக்குக் கொண்டவாறே"

என்றும் குறிப்பிட்டுள்ளவைகளைக் கண்டு தெளியலாம்.

**அன்பே அமையும்**

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்கும் கோதில் திருப்பதிகத்தில் அப்பரடிகள் எடுத்துக் காட்டும் வேறோர் உண்மையையும் நாம் இங்கே உளங்கொள்ளுதல் வேண்டும்.

சூலைநோய் காரணமாக நிற்க, அப்பரடிகள் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் சில முடிவுகளை வெளியிடு கின்றார். இறைவன் என்னை அடிமையாக ஏற்றுக் கொண் டான்; அவ்வளவில் இரவும் பகலும் அவனைப் பிரியாது வணங்குவேன்; இது வரையில் யான் பல கொடுமைகள் செய்துளேன்; அவை அறியாமையால் நிகழ்ந்தவை என ஆணையிட்டுக் கூறிய பிறகும் சூலைநோய் தணியவில்லை; ஆண்டானாக நின்ற இறைவனோ அச்சூலையை நணுகாமல் துரந்தும் கரந்தும் அருள் செய்யவில்லை; அதுவேயுமன்றி அஞ்சேல் என்ற ஒரு சொல்லையும் கூடச் சொல்லவில்லை.

இதுவரை நடைபெற்றது பிழை என்று ஏன்று கொண்டதோடன்றி, உமக்கே ஆட்செய்கின்றேன் எனத் துணிந்து நின்ற பிறகுங்கூட, என் அடிமையைச் செயற் படுத்த முடியாது சுடுகின்றது சூலை. அறியாமையாற் பிழை செய்தேன் என அறுதியிட்டுக் கூறியும், உமக்கு இனி ஆட் செய்வதில் ஒருசிறிதும் பிழையேன் என வலியுறுத்திக்

கூறியும் யான் என்னை அடிமைப்பணியில் ஈடுபடுத்த முற்பட்ட போதும் சூலை என்னை வருத்துதலிலிருந்து நீங்கவில்லை.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு பல்லாற்றுனும் பிழைக்கு வருந்தியும், பிழைபட மாட்டேன் அடிமையில் என்று கூறியும் நின்ற பிறகும் சூலையின் வேகம் தணியவில்லையாதலினுல் என் போன்றவர்களால் உம்முடைய பண்புகளை அறுதியிட்டுச் சொல்லுதல் இயலாத தொன்ரும்.

அறிவால் ஆராய்ந்து அவன் தன்மையை அமைத்துத் தெளிவுபெறவோ தெளிவுபடுத்தவோ இயலாது என்பதுடன் அடிமைத் திறம் பேணும் அடியவர்களுக்கும் — சிவனை வழிபடும்சைவ அன்பர்களுக்கும் தவறு நேருங்கால் ஒறுத்தல் விதிக்கத் தவருன் என்பதும் தெளிய உணர முடிகின்றது. அந்நிலையில் அறிவால் ஆராய முற்படுபவர்களுக்கு அறியவொண்ணுதவனுக அமையும் அப்பரம் பொருள் அதனுடைய அடிமைத் திறம் பேணுபவர்களிடத்திலுங்கூட அறநேர்மையை எதிர்பார்க்கிறது. அறத்திலிருந்து வழுவியவர்கள் தன்னை வழிபடும் அன்பர்களாக இருந்தாலுங்கூட அதற்காக அவன் அவர்களை மன்னித்து விடுவதில்லை; தண்டனை வழங்குவதில் தவறுவதில்லை; அறியாமையாற் செய்தானுயினும் அதற்காக மன்னித்தல் இல்லை; அறியாமையிற் செய்தாலுங்கூட, அதற்குரிய தண்டனையைத் தராமல் இருப்பதில்லை.

மேலே குறிப்பிட்ட விளக்கங்களின் அடிப்படையில் அப்பரடிகள் இரண்டு கொள்கைகளை எடுத்துக் காட்டுகிருர்.

1. என்போலிகள் உம்மை இனித் தெளியார்
2. அடியார் படுவது இது.

அறிவாராய்ச்சியால் அறிய முற்படுபவர்களுக்கு அப்பாற்பட்டு நிற்கிருன். அடிமை பேணுபவர்களாயினும் அறநேர்மைக்கு மாருக நடப்பார்களாயின் அறப்பொதுமையில் நின்று அவர்களுக்குத் தக்க ஒறுத்தல் வழங்குவானேயின்றி, சார்பு பற்றி அறநேர்மைக்கு மாருக அவன் அருட்செயல் அமையாது என்று குறிப்பிட்டருளுகின்ருர்.

மேலே கூறப் பெற்ற விளக்கங்களின் அடிப்படையில் அப்பரடிகள் சைவசமய நெறியாளர்கள் பின்பற்ற வேண்டிய ஓர் உண்மையை எடுத்துக் காட்டி விளக்கு கின்ருர். அது என்ன என்பதை அவர்தம் திருவாக்கின் அடிப்படையிலேயே உணர வேண்டுமாகில் அது **"அன்பே அமையும்"** என வெளிப்படுகின்றது.

'அன்பே அமையும்' என்பதை இறைவனிடம் அடிமை பேணும் வகையிலும், அவ்வாறே ஏனைய உயிர்களிடம் தொண்டாற்றும் வகையிலும் கடைப்பிடிக்க வேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் அன்பைப் பெருக்கிய நிலையில் பணிசெய்தல் என்ற ஒன்றையே வாழ்வியற் குறிக் கோளாகக் கொண்டு செயற்படுத்துவோமாளுல் அதுவே பெருவாழ்வு வந்தணைதற்குரிய பீடுபெறு நன்னெறி எனக் கொள்ளுதல் வேண்டும் என்பது அப்பரடிகளின் திருவருட் குறிப்பு.

அப்பரடிகள் சமண்சமயம் சார்தற்குக் காரணமாக இருந்தது கொல்லாமை என்ற அறம். கொல்லாமை என்ற அறத்தின் அடிப்படையில் செயற்படும் சமயமாகச் சமணம் இருந்தது என்ற வகையில் அப்பரடிகளுக்கு ஒரு வகை ஈர்ப்பு இருந்தது என அறிஞர் கருதுகின்றனர். கொல்லாமையின் அடிப்படையில் அமைக்கப்பெறும் சமய வாழ்வு உயர்ந்த கொள்கைச் சமய வாழ்வு என்ற அறி வாய்வு முறை அப்பரடிகளை ஈடுபாடு கொள்ளச் செய்தது என்பதை நாம் முழுமையாகவே ஏற்கலாம். உயிர்களின் அனைத்துவகை நல்வாழ்வுக் கூறுகளும் 'கொல்லாமை' என்ற ஒரே அறத்தின் அடிப்படையில் அமைந்து விடு கின்றன என்று அறுதியிட்டு முடித்து விடமுடியாது என்ற கொள்கைக்குவந்து விடுகிருர் அப்பரடிகள். அதனுல் அப் பரடிகள் முதல் திருப்பதிகத்தில், முதன்மைச் சொல்லாக ஒருவகை நிறைமொழியை, மந்திர மொழியை அமைத்து இறைவனை வேண்டுகின்ருர்.

"கூற்ருயினவாறு விலக்ககிலீர்"

என்பது நிறைமொழியெனும் செம்மொழியாகவும், வேண்டிநிற்கும் திருவருள் மொழியாகவும், உலகில் வாழ் அனைத்து உயிர்களின் சார்பிலும் நின்று கேட்கும் வேண்டு கோள் மொழியாகவும் அமைகிறது. கூற்று என வந்து

நின்று தாக்கி வருத்தும் பல்வேறு பிணிகளையும் அவை போன்றவைகளையும் நீக்கவேண்டும் என்று முன்மொழிந்து கேட்கிறார் அப்பரடிகள். “துன்பே, கவலை பிணி என்ற இவற்றை நணுகாமல் துரந்து காந்துமிடீர்” என்று பின்னும் விரிவாகக் கேட்கும் அப்பரடிகள் வாக்கை உன்னும் போது, ஓர் உயிரின் வளர்ச்சிக்கு எது எது தடையாக இருக்குமோ, ஓர் உயிரை எது எது துன்புறுத்துவதாக அமையுமோ அப்படி நின்ற எல்லாவற்றையும் “கூற்று ஆயின” எனக் குறிப்பிட்டு அவைகளை முற்றாக விலக்கியருள வேண்டும் என்று பாடுகிடக்கிறார்.

கூற்று ஆயினவைகளை விலக்குக என்ற அளவில் கேட்காமல் கூற்று ஆயினவாறு விலக்ககிலீர் என்று கேட்பதிலும் அப்பரடிகள் அரிய நயம் ஒன்றை அமைத்தருளுகின்றார். உலக வழக்கில் நஞ்சு உயிரைக் கொல்வதாகவும் பால் உயிரை வளர்ப்பதாகவும் கருதும் நிலையுண்டு. நஞ்சு காரணமாக நின்று உயிரை வாழ்விப்பதும் பால் காரணமாக நின்று உயிரை அழிப்பதும் கூட அமையலாம். ஆகையால் எந்த ஒரு பொருளும் அழிப்பதற்காகவே ஆக்கப் பெற்றவை அன்று. ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்று பிறிதொன்றை அழித்துவிடுகிறது. ஆகையால், கூற்று ஆயின முறைமையை நீக்கியருளுக என்று வரங்கிடக்கிறார். உலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் இணைந்து நின்று உயிராக்கம் பேணி வாழவேண்டியவைகளாக இருக்கவும் சில பொருள்கள் சில சூழல்களில் சிலவற்றை அழிக்கும் பொருள்களாக — கூற்றம் என நின்று விடுகின்றன. பொருள்களின் வளர்ச்சியை ஏற்றல் வேண்டும். ஆனால் அவைகளின் வளர்ச்சி ஏனையவைகளின் அழிவை நோக்கியதாக அமையுமாயின், மற்றவைகளை அழிக்கும் அடிப்படையில் வளரும் வளர்ச்சியை மாற்றுதல் வேண்டும் என்பது அப்பரடிகளின் கருத்து.

மேலே குறிப்பிட்ட கொள்கையைச் சமய அடிப்படையிலும் வைத்து விளங்கிக் கொள்ள இயலும். பல்வேறு வகைப்பட்ட சமயங்களையும் அவ்வக் காலங்களில் மக்கள் மனநிலைகளுக் கேற்பத்தோன்றி வளருமாறு செய்தும் வாழ்வித்தும் நின்ற பரம்பொருள் ஒன்றே. சமணமும் சைவமும் அவ்வாறே மக்களின் மனவளர்ச்சி, ஆன்ம வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் தோற்றி

வளர்க்கப் பெற்றவைகளே. ஆனல், காலப்போக்கில் சமயச் சார்பினர் தம்முள் மாறுபட்டு, தம்முள் பகைத்து, ஒருவர்க்கு ஒருவர் கூற்று எனநிற்கும் தன்மையை ஏற்றுச் செயல்பட்டனர். ஒன்றை அழித்துத் தான் மற்றது வளரமுடியும் என்ற கருத்து உண்டாகிவிட்டது. இந்நிலையில் அப்பரடிகளின் வேண்டுகோள் "கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்" என்பதே. இணைந்து நின்று தத்தம் நெறிகளை வாழவைக்கப் பணியாற்ற வேண்டிய திருக்க, மாறுபட்டு நின்று மற்றதை அழிக்கும் கூற்றெனத் தம்மை வளர்த்துப் பணியாற்றும் நிலையை விலக்க வேண்டும் என்பதாகத் தம்முடைய வேண்டுகோளை விடுக்கின்ருர். எனவே, "கூற்ருயினவாறு விலக்ககிலீர்" என்பது அப்பரடிகளின் திருத்தொண்டு நெறியின் மூல முழுமுதற் கொள்கையாக அமைந்து, அது இறையருளால் நடாத்தி முடிக்கப்பெறுவது ஒன்று என்ற அடிப்படையில் இறைவனிடம் பெறும்வரமாக அமைத்துக் காட்டுகின்ருர்.

இறைவன் செயற்படுத்த வேண்டிய கொள்கையாகக் "கூற்ருயினவாறு விலக்ககிலீர்" என்பதை வேண்டிய அப்பரடிகள் மக்கள் செயற்பாட்டியக்கத்துக்குரிய அடிப்படைத் தொண்டாக அமைத்துக் காட்டுவது "அன்பே அமையும்" என்பதே.

கொல்லாமை, பொய்யாமை, கூடாவொழுக்கம் எனப் பல்வேறு அறங்களாக மக்கள் செயலாற்றக் கூடிய செயல் முறைத் திட்டத்தை வகுக்காமல் மக்கள் வாழ்வின் எல்லா வகை நிலைகளிலும் அன்பை மூல அறமாகக் கொண்டு, அன்பைச் செயல்திட்டமாக அமைத்து வளர்ப்பது ஒன்றே போதுமானது. அன்பே, அன்பே எனநின்று அன்பை எல்லா நிலைகளிலும் பெருகவைக்கும் செயல்முறைகளை மேற்கொள்வது ஒன்றே மக்கள் மேற்கொள்ள வேண்டிய முறை.

அறவாழ்வாயினும் சமயவாழ்வாயினும் அறிவியல் சார்ந்த குறிக்கோள் வாழ்வாயினும் நம்பிக்கை சார்ந்த மரபு வழிப்பட்ட வாழ்வாயினும் நாமே உணர்ந்து மேற்கொண்ட வாழ்வாயினும் முன்னேர் அமைத்துக் கொடுத்த அமைப்பியல் வாழ்வாயினும், நாம் மேற்கொள்ளவேண்டிய அடிப்

படைச் செயல் முறை ஒன்றே. ஒன்று மற்றதற்குக் கூற்று என நிற்கும் முறைக்கு ஆக்கம் தராமல் அனைத்துப் பொருள்களையும் இணைத்து வாழவும் வளர்க்கவும் ஆகிய 'அன்பு' முறையை மேற்கொண்டு ஒழுகுதல் என்ற ஒரே அமைப்பைப் பின்பற்ற வேண்டும். ஆண்டவனை உள்ளிட்ட அடிமைத் திறமாயினும் அனைத்துயிர்களை நோக்கிய அகிம்சைப் பணியாயினும் அனைத்தையும் இணைத்து நிறுத்தும் அடிப்படைக் குறிக்கோள் ஒன்றே; அது அன்பைப் பெருக்குதலே. இவ்வுண்மையைக் காரைக்காலம்மையார் தம் அற்புதத் திருவந்தாதியில்,

"பேரன்பே இன்னும் பெருக்கு"

என்று மொழிந்துள்ளமையை ஈண்டு இணைத்துச் சிந்தித்துத் தெளியலாம்.

### சைவநலம் என்னும் செம்மை

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற திறைமொழியாலும் "அன்பே அமையும்" என்ற கொள்கை விளக்கக் குறிப்பாலும் உணர்த்த முற்படுவது சைவநலம் என்னும் செம்மை. சைவநலம் என்பது எல்லா உயிருந்தொழுந் தன்மை. கொல்லாமை முதலிய அனைத்து அறங்களும் செயற்படுத்தப் பெறுமானால், அத்துணை அறங்களையும் மேற்கொண்டு வாழ்ந்தவன் என்பதை நாம் எவ்வாறு தெளிதல் இயலும்! கொல்லாமை முதலிய அறங்களின் நிலைக்களனாக வாழ்ந்தவனை உலகத்து எல்லா உயிரும் தொழும் என்று வரையறை செய்கிறார் திருவள்ளுவர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

என்பது திருவள்ளுவரின் திருக்குறள்.

ஒருவனைப் பார்த்தவுடன் அவனை எழுந்து நின்று கும்பிட்டு வணங்கவேண்டும் என்ற எண்ணம் பார்த்தவனுக்கு உண்டாகி, அவ்வாறே அவன் வணங்குவானாயின், அவனால் வணங்கப் பெற்றவன் 'சைவன்' எனப் பெறுகிறான். கொலை செய் யானையும் நின்று வணங்கி, வலம் வந்து செல்லுமேல், அத்தகைய செயல் சைவனால் நிகழ்த்தப் பெற்றது எனக் கொள்ளவேண்டும்.

கொலை செய் யானையின் கூற்று ஆயின தன்மையை விலக்கி, இணைந்துநின்று வணங்கி, வாழ்த்தி உயிர்களை வாழவைத்து நெறிமுறைப்படுத்தும் அன்பின் அடிப்படையில் வாழ்ந்தமையே சைவநல வாழ்வு எனப் பெறும். இவ்வுண்மையைக் கீழ்க்காணும் குறிப்பினால் நிறைவுபெற விளங்கிக் கொள்ளலாம்.

எல்லாச் சமய, தத்துவவாதிகளும் நிறைந்திருக்கும் ஓர் அவை. வெளியில் உள்ள ஒரு சாதாரண மனிதன் தனக்குரிய சந்தேகம் ஒன்றை — தத்துவ சம்பந்தமான ஐயம் ஒன்றைக் கேட்டு விளக்கம் பெற விழைகிறான். அவையினுள் சென்று நிற்கிறான். அனைத்துச் சமயவாதிகளும் சேர்ந்து ஒரே கூட்டமாக அமர்த்திருக்கிறார்கள். அவர்களுள் யார் தலைவர் யார் உறுப்பினர் என அறியும் தகுதி அவனுக்கு இல்லை. அவர்கள் எல்லாரையும் ஒருசேர ஒரு முறை நோக்குகிறான். இறுதியில் அவனுக்கு அவ்வவையில் ஒருவரை வணங்கவேண்டும் என்ற எண்ணமும் அவரிடம் சென்று சொன்னால் தம் ஐயத்தை அவர் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையும் உண்டாகின்றன. அவ்வெண்ணத்துக்குக் காரணமாய் நின்ற அவ்வுருவத்தின் முன் சென்று நின்று வணங்குகின்றான்; தன் ஐயத்தை அவரிடம் கூறுகிறான். பிறகுதான் அவன் தெரிந்து கொள்கிறான், அவன் வணங்கியது ஒரு சைவ சமயஞ் சார்ந்த சான்றோர் என்பதை.

இக்காட்சியை அமைத்து விளக்கஞ் செய்தவர் சாந்தலிங்க சுவாமிகள். கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்ற நான்கு நூல்களை அருளிய தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் தம்முடைய முதல் நூலாகிய 'கொலை மறுத்தலில்' இத்தகைய சைவ நலத்தை அமைத்துக் காட்டியுள்ளார்.

எனவே, எல்லாராலும் தொழப்பெறும் தெய்வ வாழ்வை உடையவனாக ஒருவனை ஆக்குவது சைவவாழ்வு; அத்தகைய வாழ்வே 'சைவநலம்' எனப் பெறுவது.

*முடிப்புரை*

திலகவதியம்மையாரால் உளராக ஆக்கப் பெற்ற திருவினராகிய திருநாவுக்கரசர்தம் வரலாற்று முதற்பகுதி

யானது திலகவதியாரின் "எழுந்திரீர்' என்ற நிறைமொழி யால் ஆக்கம் பெறுவதாகிறது. 'கூற்ருயினவாறு விலக்குக' என்ற வரநிறை மொழியை இறைவன் பால் சார்த்தி, 'அன்பே அமையும்' என்ற உள்நிறை மறைமொழியையும் அதன் செயற்பாட்டையும் உலகத்துயிர்கள் பால் சார்த்தி இணைந்த தொண்டாற்றியவர் திருநாவுக்கரசர் என்பதை அறிய முடிந்தது. அனைத்துயிர்களாலும் தொழப்பெறும் பெருவாழ்வு பெறுதலே 'சைவநலம்' என்ற கொள் கையைத் தம் வாழ்வாலும் வாக்காலும் விளக்கிய பெருமை யுடையவர் திருநாவுக்கரசர் என்பதையும் காண முடிந்தது. இது அவர் வாழ்வியல் வரலாற்றின் முதற்பகுதியின் தத்துவக் கோட்பாட்டு விளக்கம்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் சைவ நலம் அமைவது திருநாவுக்கரசருக்கே எனவும் உலகில் பெற்றவர்கள் என்ற பெயரைப் பெற்றவர்கள் புகழனும் மாதினியாருமே என்றும் பிறந்தவர் எனின் திருநாவுக் கரசரே என்றும் கூறிய இருவகைப் பெருமைகளை இணைத்து நின்று தொண்டாற்றிய பெருமைக்குரியவர் 'திலகவதியாரே' எனவும் கொள்ளவேண்டும். பிறசமயஞ் சென்று திரும்பியதால் சைவநலம் வாய்க்கும் என்று கூறியதன் ஒருபகுதியே இத்தலைப்பில் ஆய்வு செய்யப் பெற்றது. சைவநலத்தின் இரண்டாவது பகுதியை 'அந்தண்மை' என்ற அடுத்த தலைப்பானது திருநாவுக் கரசரின் இரண்டாம் பகுதி வரலாற்றுடன் இணைந்து நின்று ஆய்வு செய்கிறது.

# 4. அந்தணரும் போற்றும் அந்தண்மை

*முன்னுரை*

"உற்ருன் அலன் தவம் தீயில் நின்ருன் அலன்
ஊண் புனலா
அற்ருன் அலன் நுகர்வும் திருநாவுக்கரசு
எனும் ஓர்
சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும்
துன்பில் பதம்
பெற்ருன் ஒருநம்பி அப்பூதி என்னும்
பெருந்தகையே"

என்பது கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளின் **நால்வர் நான்மணிமாலையின்** 38-ஆம் பாட்டு. திங்களூர் என்ற ஊரில் வாழ்ந்த அந்தணர் குலத் தலைவர் அப்பூதி அடிகளார். அப்பூதியடிகள் துன்பில் பதம் எனப்பெறும் நன்முத்திப் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்ருர். அதற்காக அவர் தவம் முதலிய எந்த ஒரு வழியையும் பின்பற்றவில்லை. 'திருநாவுக்கரசு' என்ற ஒப்பற்ற சொல்லை இடைவிடாது எழுதியும் சொல்லியுமே பெற்றுவிட்டார். அப்பரடிகளுக்கு உரிய பெயராக இறைவன் அறிமுகப்படுத்திய சொல்லே 'திருநாவுக்கரசு' என்பது.

திருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயரை உணர்ந்தும் நுகர்ந்தும் கூறியுமே சிவமாந்தன்மைப் பெரு வாழ்வு பெற்ருள் திருமயிலைப் பூம்பாவை. நம்பியாரூரர் என்னும் திருப்பெயரை நினைந்தும் கூறியுமே சிவமாம் திருப்பெருகு வாழ்வைப் பெற்ருள் புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகள். அவ்வாறே திருநாவுக்கரசு என்ற பெயரை எழுதியும் கூறியுமே துன்பில் பதம் பெற்ருர் அப்பூதியடிகள் என்று கூறுதல் சைவமரபு. ஆனல், அப்பூதியடிகள் திருத்தொண்டர்களில் ஒருவராகும் பேறு பெறுகிருர். திருநாவலூரரால் திருத்தொண்டத் தொகையில்,

"ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்"

என்று கூறி வணங்கத்தகும் உயர் பேறு பெறுகிருர்.

திலகவதி அம்மையாரால் கூறப்பெற்ற அருள்வாக்கே "எழுந்திரீர்" என்பது. "வேந்தனும் ஓங்குக" என்ற திரு ஞானசம்பந்தரின் அருள் வாக்கானது எவ்வாறு மங்கையர்க்கரசியாரின் கணவஞரின் கூனை நிமிர்த்தி நேராக நிற்குமாறு செய்த தோடன்றி, அவனை ஓங்கி நிற்கு மாறும் செய்ததோ அவ்வாறே திலகவதியாரின் அருள் வாக்கானது திருநாவுக்கரசரை, சமண்சமயம் குறுகிய காரணத்தால் குனிந்து குறைப்பட்டு, பரிபவப் பட்டுக் குறுகி நின்ற தருமசேனரை நிமிர்ந்து நிற்கச் செய்த தோடன்றிச் சைவநலம் பெற்று ஓங்கி நிற்குமாறும் செய்தது. பின்னர் அவர் தந்த திருநீறு திருநாவுக் கரசருக்குப் பெருவாழ்வு என்னும் சைவநல வாழ்வைத் தந்தது. மூன்ருவது, அம்மையார் அருளிய திருவைந்தெழுத் தானது திருநாவுக்கரசருக்கு அந்தணரும் போற்றும் அந் தண்மையை அளித்தது. சைவநலம் என்ற அடிப்படையில் திருநாவுக்கரசரின் வரலாறு சென்ற தலைப்பில் அமைக்கப் பெற்றது. சைவநலம் என்பதைச் சிறப்பாக விளக்கும் முறையிலும் அந்தண்மை என்பதைத் தமிழகத்துச் சிறப்புவகை மரபுப் பின்னணியுடன் விளக்கும் வகையி லும் திருநாவுக்கரசரின் வரலாறு இப்பகுதியில் விளக்கப் பெறுகிறது.

சைவநலமும் அந்தண்மையும் வாழ்வியற் பின்னணி களாக நிற்க, திருநாவுக்கரசரின் வரலாற்று நிகழ்வுகளை விளக்குவதே இத்தலைப்பின் பொருட் பின்னணியாகும்.

**சைவநலம் சிறப்பாய்வு**

திருநாவுக்கரசருக்கே சைவநலம் வரும் என்பது சிவப் பிரகாச அடிகள் தம் நால்வர் நான்மணி மாலை என்ற நூலின் மூலம் வெளிப்படுத்திய ஓர் ஆய்வியல் மதிப்பீடு என்பது சென்ற தலைப்பில் அமைத்துக் காட்டப் பெற்றது.

வெய்யிலில் நின்று துன்புற்றவர்களுக்கே நிழலின் அனுபவப் பேறு சிறப்புறும்; வறுமையாளனுக்கே செல்வம் பல்வகையானும் சிறப்பாகத் துய்க்கப்பெற்று அனுபவம் பெறும். அவ்வகையில், சமண்சமயம் சார்ந்து

நின்றவர் சைவசமயம் வந்தபோது, அவருக்குச் சைவநலம் அனுபவப்பெறும் என்று சிவப்பிரகாச சுவாமிகள் திரு வாக்கினுக்குப் பொதுவிளக்கம் அளித்தல் மரபு. ஆயினும், சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்து மேலும் சில உண்மை களை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

சிவனடியவர்கள் இருவகையினர். சிவனே நேர்நின்று ஆட்கொள்ளப்பெற்ற திருவினர் ஒருவகை; சிவனடியவர் களாக நின்று சிவநலம் துய்த்த அருளாளர்களால் நேர் நின்று ஆட்கொள்ளப்பெற்ற திருவினர் இன்னொரு வகை.

திருஞானசம்பந்தர் சிவனே நேர்நின்று ஆட்கொள்ளப் பெற்ற திருவினர். சிவனடியவராக நின்று சிவநலம் துய்த்த திருஞானசம்பந்தரால் ஆட்கொள்ளப் பெற்ற பெருமையானது நின்ற சீர் நெடுமாறனுக்கு உண்டு. திரு ஞானசம்பந்தர் சிவநலம் துய்த்த சைவர். நின்றசீர் நெடு மாறன் சைவநலம் துய்த்தவன். திலகவதியார் சிவநலம் துய்த்த சைவர். திருநாவுக்கரசர் திலகவதியாரால் நேர் நின்று ஆட்கொள்ளப் பெற்றவராதலின் சைவநலம் துய்த்த வராகிருர்.

சிவனடியவர்கள் உலகத்துயிர்களோடு உடன்தோன்றி வாழ்பவர்கள். ஆகையினுல், உடன் தோன்றிய ஏனைய உயிர்களும் நன்னிலை பெறவேண்டும் என்று நினைந்தும் வருந்தியும் சிவத்தொண்டாற்றுபவர்களே சிவனடிய வர்கள். "தம்பியார் உளராக வேண்டும்" என்று நினைந் ததும் வருந்தியதும் அதற்காகச் செயல் பட்டதும் திலக வதியாருக்கும் திருநாவுக்கரசருக்கும் மட்டுமே இடைநின்று நிகழ்ந்தவை என்று எண்ணுதல் கூடாது. உலகத்துப் பிறப் பெடுத்து வாழ்ந்து வருபவர்களையெல்லாம் தம்பியர்கள் என நினைத்து அவர்கள்மேல் வைத்த தயை காரணமாக வாழ்பவர்களே சிவனடியார்கள்.

திலகவதியாரை நினைத்தவுடனேயே வயிற்றுநோய் தணிவு பெறுகிறது; எழுந்து செல்லலாம் என்ற துணிவு வருகிறது. "எழுந்திரீர்" என்ற அருள்வாக்கைக் கேட்டதும் திருநாவுக்கரசர் பெற்ற அனுபவம் ஒன்று உண்டு. அருண் மொழி கேட்ட அவ்வளவில் திருநாவுக்கரசர் பெற்ற அனுப வத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் காட்டுகின்ருர் சிவப்பிரகாச அடிகள்.

*கூர்தலும் மிளிர்தர நிற்றலும்*

"கூர்ந்து மிளிர் தரு நாவரசே"

என்பது திருநாவுக்கரசர் திலகவதியாரின் திருவருள் மொழி கேட்டபோது பெற்ற அனுபவ விளக்கத் தொடர். கூர்தல் — உள்ளது சிறத்தல்; (Evolution) பிறவிதோறும் உயிர் வளர்ச்சி பெற்று வருகிறது. அறிவு முதலிய உயிர்ப் பண்புகள் மெல்ல மெல்லக் குறை நீக்கி வளர்ச்சி பெறுகின்றன. உயிர்கள் தம் குணங்களில் படிமுறை வளர்ச்சி வழியில் மெல்ல மெல்ல வளர்ந்து நிறைவு பெறுகின்றன. பண்புகளால் நிறைவு பெற்ற உயிரானது கலைகளால் நிறைவு பெற்ற முழுமதியைப் போன்றது. ஆனால், நிலவுக்குரிய ஒளியானது சூரியனுடைய ஒளி.

திருநாவுக்கரசர் என்ற உயிர் படிமுறைவளர்ச்சியில் வந்து சிவநெறியில் பிறக்குமளவுக்குரிய எல்லையில் வந்து நிற்கிறது. படிமுறை வளர்ச்சியில் பொருள் பற்றிய ஆய்வறிவு வளர்ச்சியானது ஓர் உயிருக்குச் சமய வாழ்வினால் தான் நிறைவுற அமைகிறது. சமய வழிப்பட்ட பயிற்சியின் மூலம்தான் மெய்ப்பொருள் பொய்ப்பொருள் அனுபவம் பெற்று, உயிரானது தமக்குரிய வாழ்முதற் பொருள் ஒன்று உண்டு என உணர்ந்து அவ்வகையில் நிறையறிவு பெறுகிறது. அவ்வகையில், சமணமும் பரம் பொருளால் படைத்து அமைத்துக் கொடுக்கப் பெற்ற பொருளாய்வுப் பயிற்சிப் படி முறையே. திருநாவுக்கரசருடைய உயிரும் படிமுறை வளர்ச்சியில் சமண சமயம் காட்டும் பொருள் ஆய்வுப் படிமுறைப் பயிற்சியறிவை முன்னமே பெற்றிருக்க வேண்டும். அப்படியிருந்திருப்பின், சைவசமயம் சார்ந்தபின் சமண் சமயக் கொள்கையீர்ப்பு உண்டாக்கியிருக்க முடியாது. சமண் சமயப் படிநிலைக் கொள்கை அழுத்தமாகப் படியாமையால், திருநாவுக்கரசரின் உயிருக்கு, அடுத்துள்ள படிநிலைகளில் அமைந்த பொருளாய்வறிவும் அழுத்தமாகப் படிந்திருக்க இயலாது. அவ்வகையில், படிமுறைவளர்ச்சி நிலையில் அமைய வேண்டிய பொருட்கொள்கை பற்றிய அறிவின் படிநிலை வளர்ச்சியில் ஒருவகைத் தேக்கநிலை உண்டாகியிருந்திருக்கும், சைவ சமயத்தில் பிறந்து சிவனை அடையும் தகுதியைப் பெறவேண்டிய வாய்ப்பைப் பெற்றிருந்தும், அறிவின் நிறைவு என்ற ஒன்றைப் பெறுதலில் தேக்கநிலை

அமைந்துவிட்டது. இதைக் குறிப்பிடும் வகையிலேயே சிவபெருமான் கூற்றுகத் திலகவதியார் கனவில், முன்னமே முனியாகி எமை அடையத் தவம் செய்தான் எனவும் சிறு குறை நேர்ந்து விட்டது எனவும் அமைத்துக் காட்டப் பெறு கின்றன. இவ்வாறு உயிரின் வளர்ச்சிப்படிநிலையில் அமைய வேண்டிய குண நிறைவில் தேக்கம் அமைந்துவிட்ட நிலையில், அத்தகைய தேக்கத்தை நீக்கி, தேக்கம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை பெற்றிருக்க வேண்டிய வளர்ச்சியை ஒருசேர முழுமையாக ஆக்கித் தந்து, வாழ்வளிக்கும் ஆற்றல் சிவனடியவர்களுக்கே உண்டு எனத் தெரியவருகிறது. இதனை முயலக நோய் நீக்கம், ஆண்பனையைப் பெண்பனையாக்குதல், எலும்பைப் பெண்ணாக்குதல் என்ற மூன்று அருளியல் நிகழ்வுகளிலும் திருஞானசம்பந்தர் உயிர்களின் வளர்ச்சியில் அமைந்த தேக்க நிலைகளை நீக்க, அன்றைய நிலையில் இருக்க வேண்டிய படிமுறை வளர்ச்சி நிலை வரை ஆக்கமுறுத்திக் கொடுத்தருளிய நிகழ்வுகளோடு இணைத்துத் தெளிவு பெறலாம்.

## திருஞானசம்பந்தரின் அருளிப்பாட்டு நிலை

தேக்கம் பெற்றிருந்த உயிருக்கு அன்றுவரை உள்ள வளர்ச்சியைக் கொடுத்துவிட்டாலே அது அருள் நிகழ்வு தான். ஆனால், திருஞானசம்பந்தர் ஆக்கமுறுத்தியது வேறு நிலை. தேக்க நீக்கத்தோடன்றி அவ்வுயிர் அடைய வேண்டிய முழுமையான ஆக்கத்தையும், இனிப்பல பிறவிகள் எடுத்தும் பெறவேண்டிய ஆக்கத்தையும் தேக்க நீக்கம் செய்கின்ற அந்தக்காலத்திலேயே அடையும்படிக் கொடுத்து விடுகிறார். ஆண்பனையைப் பெண்பனை ஆக்கிய வரலாற்றில், அந்த உயிர் அப்பிறவிவரையில் பெற வேண்டிய வளர்ச்சியில் உள்ள தேக்கத்தை நீக்கி அன்றைய வரையில் பெற்றிருக்க வேண்டிய உணர்ச்சியை அளித்தார். அதுமட்டுமன்றி, அப்பனைமரங்கள் திருஞான சம்பந்தரால் பாடப் பெற்ற காரணத்தால் அப்பிறவியின் இறுதியில் சிவப்பேறும் எய்திவிட்டன. மரமாக நின்ற உயிர் மனிதனாக வளர்ச்சி பெற்று, மற்ற நிலையிலும் பல பிறவி எடுத்து, பின்னர் அடைய வேண்டிய சிவப் பேற்றினை, மரமாக நின்ற அப்பிறவியின் இறுதியிலேயே பெற்று விடுகின்றன. அவ்வாறே, எலும்பைப்

பெண்ணுக்கிய போதும், அரவு தீண்டி இறந்த காலத்தில் உள்ள வயதை விட, அன்றுவரையில் முறையாக வளர்ந் திருந்தால் எத்தனை வயது இருக்குமோ அந்த வயது வரையிற் கொண்டுவந்து நிறுத்தினர் என்பதுமட்டுமன்று; பின் பெறவேண்டிய சிவப்பேற்றையும் அப்பிறவியிலேயே அடையுமாறு அமைத்துக் கொடுத்து விடுகிறார். எனவே, தேக்க நீக்கமும், தேக்கத்தால் ஏற்பட்ட வளர்ச்சியின் குறைவை நீக்கிய நிறைவும், பின்னர்ப் பெற வேண்டிய வளர்ச்சிகளையும் இணைத்து ஒரே சமயத்தில் அருளிவிடும் பேரருளாற்றல் சிவனிடத்தில் காணப் பெறவில்லை; சிவனடியார்களிடத்திலேயே காணப் பெறுகிறது. அவ்வாறே, சுந்தரர் வரலாற்றிலும் முதலைவாய்ப் பிள்ளை யை அழைத்த அருள் நிகழ்வில் இவ்விளக்கத்தைத் தெளிவாகக் காணலாம்.

திருநாவுக்கரசர் வரலாற்றில் தேக்கநீக்கத்தையும், படிமுறை வளர்ச்சியில் அன்றுவரை வந்திருக்க வேண்டிய நிறைவையும், இனி வரவேண்டிய ஆக்கத்தையும் இணைத்து ஒரே சமயத்தில் ''எழுந்திரீர்'' என்ற அருள்வாக்கால் அமைத்துக் கொடுத்தருளிய பெருமை திலகவதியாருக்கே உண்டு. அதனாலேயே திருநாவுக்கரசர்,

''வார்த்தை இது ஒப்பது கேட்டறியேன்''

என்று முதற்பதிகத்தில் கூறுவாராயினர்.

மேலே குறிப்பிட்ட தேக்கநீக்கம் முதலாக உள்ள வளர்ச்சிகளை இணைத்துக் கூறும் வகையில் சிவப்பிரகாச ரின் வாக்கு அமைகிறது.

''கூர்ந்து மிளிர்தரு நாவரசே''

என்பது அத்தொடர். கூர்தல்—தேக்கநீக்கத்தையும் அன்று வரையில் வளர்ந்திருக்கவேண்டிய படிமுறை வளர்ச்சியை யும் குறித்தது. மிளிர்தருதல் — ஒளியாற் சிறந்து விளங்குதல். உயிர் நிறைவு பெற்றாலும் ஒளி பெறுவது சிவக்கலப்பினாலேயே. உயிரின் நிறைவுடன் முற்ற முடிந்த ஆக்கமாகிய சிவப்பேறும் பெற்று, சிவவொளி திகழும் ஒளிப்பிழம்பாக நின்றார் திருநாவுக்கரசர் என்பதைத் தெளிய விளக்கும் நிலையில் கூர்தல், மிளிர்தருதல் என்ற இருவகை நிலைகளையும் இணைத்துக் காட்டி, 'கூர்ந்து மிளிர்

திருநாவரசே' என்க் கூறினர் சிவப்பிரகாச அடிகள் எனக் கொள்ளவேண்டும்.

**சைவநலம் பற்றிச் சேக்கிழார்**

உள்ளது சிறத்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் வளர்ச்சியை எய்தி, முற்ற முடிந்த நிலையில் சிவப்பேறெய்துதல் என்பது **சிவநலம்** துய்ப்பது ஆகும். திலகவதியார் திருநாவுக்கரசருக்கு அளித்தது போல, தேக்க நீக்கம், படிமுறை வளர்ச்சி நிறைவு, எஞ்சியுள்ள படிநிலைகளிற் சென்று பிறந்து பெறவேண்டிய நிறைவுடன் சிவப்பேற்றையும் ஒரே சமயத்தில் அளித்துத் துய்க்கச் செய்த போது, அத்தகைய துய்ப்பானது "சைவநலம்" என வேறு பிரித்துணரப் பெறுகிறது. இவ்வாறு விள்க்கம் கொள்ளுவதற்குரிய அடிப்படைக் கருத்தைச் சேக்கிழார் திருஞான சம்பந்தர் புராணத்தில் அமைத்துக் காட்டுகின்றார்.

திருஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்தியவுடன் அவருக்கு எத்தகைய ஞானம் உண்டாயிற்று என்பதைக் கூற வந்த சேக்கிழார்,

> "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
> அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் எனும் அறிவும்
> இப்படியால் இதுவன்றித் தம் இசைவு கொண்டியலும்
> துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்"

என்று (பெரியபுராணம் 1974) அருளியுள்ளார். இத்திருவாக்கில் நான்கு செய்திகளை அவர் உணர்ந்தார் என்று கூறப்பெறுகிறது. (1) எப்பொருளும் ஆக்குவான் ஈசன் (2) அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள். (3) இப்படியால்இது. (4) தம் இசைவு கொண்டியலும் துப்புரவில்லார் துணிவு துகள் என்பனவே அவை.

எப்பொருளையும் ஆக்க முறுத்தும் நிலையினன் ஈசன்; அவனால் ஆக்க முறுத்தப் பெற்ற பொருளே அவன் அடியவர் என முன்னிரண்டு நிலைகளைப் பொதுவாக விளக்குவது சைவமரபு. எப்பொருளையும் படைப்பவன் ஈசன் என்று பொருள் கொள்வது முறையன்று. எந்த ஒரு சாதாரண நிலையில் உள்ள அல்லது எந்த ஒன்றற்கும் உதவாத ஒரு பொருளையும் தான் எண்ணியவாறு மிக உயர்ந்த பொரு

ளாக ஆக்குவது ஈசுரத்தன்மை. அதை உடையவன் ஈசன். ஈசுரத்தன்மையால் மிக உயர்ந்த ஆக்க நிலையில் உள்ள பொருள் அல்லது உள்ளவர்கள் ஆளுடையார் அடியார்கள் எனக் கொள்ளும் விளக்கத்தைச் சிறிதளவு மாற்றிக் கொள்ளவேண்டிய நிலை உண்டு. அத்தகைய நிலையைச் சிவனடியவர்கள் வரலாறு உண்டாக்கியிருக்கிறது. ஈசுரத் தன்மையை — எந்த ஒரு அற்பப் பொருளையும் மிக உயர்ந்த நிலையில் கொண்டு போய் நிறுத்தி ஆக்க முறுத்தவல்ல தன்மையை இவ்வுலகில் இன்றும் செய்தமைத்து வரலாறு படைப்பவர்கள் ஆளுடையார் அடியார்களே என அமைத்துக் காணுதல் வேண்டும்.

அடுத்து, மூன்றுவது நிலையில் திருஞானசம்பந்தர் பெற்ற அறிவானது காரணகாரிய உறவுநிலை. இவ்வுலக நிகழ்வு எதுவாயினும் அது காரணகாரிய அடிப்படையி லேயே நிகழும் என்பது. எனவே, அருளாளர் நிகழ்வு களுக்குக் காரணம் ஆராய்தல் தேவையில்லை என்பதோ பரம்பொருள் அல்லது கடவுள் நேர்நின்று நடத்தும் செயல் களுக்குக் காரணகாரிய உறவு இருக்கும் எனக் கொள்ள வேண்டியது அவசியம் இல்லை என்பதோ அறிவு முறைக்கு ஒவ்வாதது. இவ்வுலகில் நிகழ்த்தப் பெறுகின்ற, நிகழ் கின்ற எந்த ஒன்றும் காரணகாரிய உறவு முறையில் அமைந்ததே எனக்கொள்ள வேண்டியதுதான் திருஞான சம்பந்தர் ஞானப்பால் உண்டமையால் பெற்ற சிவஞானத் தின் மூன்றும் நிலை.

திருஞானசம்பந்தரின் மூன்றும்நிலை அறிவை நாம் ஏற் பதாலும் திருநாவுக்கரசரின் வயிற்று வலிக்குரிய காரணத் தையும் அவருக்கு நாவுக்கரசு என்ற சிறப்புப் பெயர் வழங்கியதன் காரணத்தையும் தெளிவாக அறிதல் வேண்டும். காரணத்தை நாம் அறிகிறேமா இல்லையா என்பது பொருளன்று. காரணம் உண்டு என நாம் ஒப்புதல் வேண்டும் என்பதே இவண் வேண்டப்பெறுவது.

சூலைநோய்க்குரிய காரணம் முன்னேயும் விளக்கப் பெற்றது. கொள்கையில் நிறைவு பெருமையே. அறவாழ் வுக்கும் சமயவாழ்வுக்கும் உள்ள வேறுபாடும் முன்னே காட்டப்பெற்றது.

## அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பு

அறவாழ்விலும் பொருள் பற்றிய அறிவு உண்டு. சமய வாழ்விலும் பொருள் பற்றிய அறிவு உண்டு. செல்வம் தன் மூலமாக வந்து போகிறது, பிற உயிர்களுக்குப் பயன்படும் வகையில் அதைச் செலவு செய்யவேண்டும் என்ற கொள்கை அறவாழ்வில் மலர்கிறது. செல்வம் இல்லையென்றால் கூட, பிற உயிர்களுக்கு ஆக்கம் விளையும் வகையில் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அதுவே அறவாழ்க்கை என்றுதான் கொள்ள வேண்டியுள்ளது.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றாகப் பகுத்துக் கொண்டு வாழ்வியல் விளக்கம் கூறும் முறை தமிழகத்துச் சான்றோர்க்குண்டு.

> "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"

என்பதும்,

> "அறம் பொருள் இன்பம் என்றமூன்றில்
> நடுவணது எய்த இருதலையும் எய்தும்"

என்பதும்,

> "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்பதும் முறையே அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் உயர்நிலையில் நிறுத்திக் கூறும் சான்றோர் வாக்குக்களே. ஆயினும், இங்கே குறிப்பிடப் பெற்ற மூவகை உரைகளிலும் வரும் அறம், பொருள், இன்பம் என்ற சொற்களுக்கு ஒரே வகையான விளக்கத்தை அமைத்துக் கொள்ளுதல் வழுவுடையதாகும். பொருளும் இன்பமும் அறத்துவழிப்படும் என்பது அறநூல் முடிவு. அவ்வாறே நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்ற இடத்தில் நடுவணது என்ற சொல்லானது செல்வத்தைக் குறிப்பதாகக் கொள்ளுவது இழுக்காகும். ஏனெனில், செல்வம் பெற்றஒருவன் முறையே அறத்தையும் இன்பத்தையும் பெற்று வாழ்கிறான் என்றால் அது எந்த அளவுக்குப் பொருந்தாத நிலை என்பதைஉணரலாம். இனி, இன்பத்தினுள் அறனும் பொருளும் அடங்கியுள்ளன

என்பதன் கருத்தானது அனுபவிக்கப்பெறும் பொருள் உரிமையையும் பொருளை அனுபவிக்கும் உரிமையையும் உள்ளடக்கியது என்பதே. இனி,

"ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள்
காதல் இருவர் கருத்தொருமித்து- ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்ற செய்யுள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் விளக்கும் நிலையும் உண்டு. இச் செய்யுள் ஒருவகைப் பொது விளக்கம். ஆனால், முன்னே குறிப்பிடப் பெற்றவை அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் ஒன்று தலைமை ஏற்கும்போது ஏனைய இரண்டும் எவ்வாறு உள்ளடங்கி நிற்கின்றன என்ற அடிப்படையில் அமைந்தவை. அங்கே அறம், பொருள், இன்பம் என்பவை ஒரே அடிப்படைப் பொருளில் வந்தவை அல்ல.

அறவாழ்வின் அடிப்படையில், அறவாழ்வுப் பயிற்சி யின் நிறைவில் பொருளாராய்ச்சி அமைகிறது. ஒருவன் தான் மேற்கொண்டு வாழும் அறவாழ்வின் எல்லையில் அறத்தின் எல்லை அல்லது ஆற்றல், அறவாழ்வில் தான் துய்த்த பொருள் பற்றிய மெய்மை, பொய்மை பற்றிய ஆய்வு அமைகின்றன.

அறமாயினும் இன்பமாயினும் அவை இருமை நிலை களில் இயங்குவனவே என்ற அனுபவநிலை உண்டாகிறது. தன்னைநோக்கிய அறம், பிற உயிர்களை நோக்கிய அறம், அறச்செயல்களையே எடுத்துக் கொண்டாலும் அறிவினால் மேற்கொள்வன என்றும் அன்பு முதலிய உள்ளத்துணர்ச்சி களால் மேற்கொள்வன என்றும் இருமை நிலை காணப் பெறுகிறது. தொடர்பு பற்றிச் செய்வன, தொடர்பு பற்றாது செய்வன என இருமைநிலை காணப் பெறுகிறது. திருக்குறளில், அறத்துப்பாலில் வரும் நடுவுநிலைமை என்பதும் ஓர் அறமே. அத்தலைப்பில் காணப்பெறும் தகுதி, பகுதியால் பாற்பட்டு ஒழுகல், செப்பம், எச்சம் போன்ற சொற்கள் அறவாழ்வில் நின்ற அனுபவப் பேற்றின் அடிப் படையில் உணர வேண்டிய சொற்களேயன்றி, அருந் தமிழ் இலக்கிய நிலையில் நின்று விளக்கம் கூறுதற்கேற்ற சொற்கள் அல்ல. இருமையின் இடையில் நடுநின்ற செம்

பொருள் அறிவும் அனுபவமும் வாய்க்கின்றன. எனவே, அறவாழ்வானது தொடக்கமாக அதன் வழியிலேயே இயங்கும்போது செம்பொருள் இன்னது என்பதும், செம் பொருள் பற்றிய அறிவும், செம்பொருளனுபவமும் வாய்த்து விடுகின்றன. எனவே, அறவாழ்வைத் தொடங்கினல் ஏனையவைகளுக்கு அது வழி வகுத்து விடும் என்பதாயிற்று.

நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்பது செம் பொருளாய்வின் முடிந்தநிலை அனுபவம். செம்பொருளைச் சார்ந்து நிற்றல் என்பதே செம்பொருளைப் பற்றி நிற்றல். செம்பொருள் பற்றுக்கோடாக, தான் அதைச் சார்ந்து நிற்கும் பொருளாக அமைந்து நிற்றல். இதனைத் தொல் காப்பியர்,

> "காமம் சான்ற கடைக்கோட் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்ற நூற்பாவின் மூலம் சிறந்தது பயிற்றல் என்ருர். இங்கே கூறப்பெறும் 'சிறந்தது' என்பது,

> "சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு" (31)

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு (358)

எனவரும் திருக்குறள்களில் சிறப்பு எனவும் சிறப்பு என்னும் செம்பொருள் எனவும் விளக்கப் பெறுகின்றது.

இனி, மூன்ரும் நிலையில் இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட இன்பப் பிரிநிலைகள், அவற்றில் ஈடுபடும் பொருள்கள், அவை மேற்கொள்ளவேண்டிய அறக் கோட் பாடுகள் என்றவகையில் இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்ற கொள்கை பேசப்பெறுகின்றது.

### அறவாழ்வும் சமய வாழ்வும்

எனவே, அறவாழ்வு தொடக்கமாக நிற்கச் சமய வாழ்வு மலர்கின்றது. அறவாழ்வு என்னும் பயிற்சியில்

செம்பொருள் இன்னது என்ற அறிவும், அதனையொட்டிச் செம்பொருட் காட்சியும், செம்பொருளனுபவமும் அமைகின்றன.

கொல்லாமை என்பது அறவாழ்வின் தனிநிலை அறம். ஆனால், அது வாய்மையை ஒட்டியதே. வாய்மை என்பது உண்மை பேசுதல் என்ற பொதுப்பொருளில் மேற்போக்கில் விளக்கப் பெற்றாலும் உண்மையில் நிற்றல் எனவும் உண்மையில் நின்று பேசுதல் எனவும் அனுபவ வழியில் பொருள் விளக்கம் அமையும்.

அறவாழ்வில் இருமைநிலை அமையும். இருமை நிலையின் இடையில் நிற்பது செம்பொருள். அது நடுநின்ற பொருளாயினும் இருமையையும் கடந்து நின்ற பொருள். செம்பொருளைப் பற்றிய அறிவும் அதுவே மெய்ப்பொருள், சத்தியப்பொருள் என்ற விளக்கமும் அமையும் போது தான், உயிராகிய தான் அதனைப்பற்றி நின்று, சார்ந்து நின்று, சத்தியத்தில் நின்று வாழ வேண்டிய பொருள் என்ற விளக்கமும் அனுபவ வாயிலாக அறியப்பெறும். வாய்மை என்பது ஒருவகை வெற்று அறக்கூறு எனக் கொள்ளுதல் தவறு. எனவே, அறவாழ்வானது வாய்மை வாழ்வாக மலர்வதுதான் சமய வாழ்வு. செம்பொருள் இது எனக் கண்டு, அதற்கு அடிமை பூண்டு வாழும் வாழ்வு.

எல்லா உயிர்களும் படிமுறை வளர்ச்சியில் பயிற்சி பெற்று வளர்ந்து வரும் நிலையில் அறவாழ்வு அமைகிறது. அறவாழ்வின் எல்லையில் பொருளாராய்ச்சி அமைகிறது. பொருளாராய்ச்சியின் முடிவு என்ன? அறத்தின் நிலையை உள்ளவாறு அறிந்து கொள்ளுதல், நடுநிலைப்பொருள் உண்டு என ஆய்ந்து காணுதல், அதில் நின்று அறநெறி இது எனத் தெளிதல் என்பவைகள் முழுக்க முழுக்கச் செயல்படும் போதுதான் அறவாழ்வின் உண்மை நிலை அனுபவப் பெறுகிறது. செம்பொருளைப் பற்றி வாழ்வதே; செம்பொருளில் நின்று வாழ்வதே அறவாழ்வு என்ற விளக்கம் அமைகிறது. அறத்தின் முடிந்த எல்லையாகிய "கொல்லாமை" என்ற அறத்தின் விளக்கமானது வாய்மை என்ற அறவிளக்கத்தின் மூலம்தான் உணரப்பெறுகிறது. வாய்மை என்பது வெற்று அறக்கோட்பாடன்று. வாய்மை

என்பது தன்னளவில் உண்மையானது; ஞானமாக நிற்பது; தானே தன்னொளியில் விளங்கிக் கொண்டிருப்பது. அதனாலேயே வாய்மையைத் திருவள்ளுவர் ''விளக்கு'' எனக் கூறினர். அறவாழ்வின் முடிந்த எல்லையாகிய உயர் நிலை கொல்லாமையே என்றாலும் அறவாழ்வை முற்றாக விளக்கும் ஆற்றல் வாய்மைக்கே உண்டு. வாய்மை என்ற அறத்தை மேற்கொள்ளும்போதுதான் அறவாழ்வின் அடிப் படையாகிய பொருளனுபவம் கிடைக்கிறது.

'வாய்மை' என்ற அறம்முழுமையாக அனுபவம் எய்து கின்ற நிலையில் அமைகின்ற வாழ்வே சமயவாழ்வு. ச+மயம் எனப் பிரிந்து நிற்க, சத்துப் பொருளின், மெய்ப் பொருளின் மயமாக நின்று வாழ்தலே சமய வாழ்வு எனப் பெற்றது.

எனவே, அறவாழ்வு சமய வாழ்வு என்ற படிமுறை வளர்ச்சியில் வரும் உயிரானது செம்பொருள் உண்டு எனத் தெளிவுபெற்று, அப்பொருளைச் சார்ந்து வாழ்வதே நம்கடமை என்ற அளவில் அடுத்த பிறவிக்கு வரும்போது, முன்பிறப்பு அறிவின் முதிர்வு காரணமாக, இப்பிறப்பில் சமய வாழ்வை இயல்பாகக் கடைப்பிடிக்கும் உயிராக அமைந்து விடுகிறது.

### தமக்கையும் தம்பியும் — படிநிலைவளர்ச்சி

திலகவதியம்மையார் முற்பிறவிகளில் அறவாழ்வை உணர்ந்து, 'வாய்மை' என்ற விளக்கின் அடிப்படையில் மெய்ப்பொருள் உண்டு எனத் தேர்ந்து, அப்பொருளைச் சார்ந்து நின்று, அப்பொருளுக்கு அடிமை எனத் தம்மை நிறுத்தி வாழ்தலே வாழ்வு என்ற படிநிலை வளர்ச்சிவரை வந்து, இப்பிறவியில் புகழனர்க்கும் மாதினியார்க்கும் பிள்ளையாகப் பிறப் பெய்துகிறார்கள். அவ்வகையில் முற் பிறப்புப் பயிற்சியினால் பரம்பொருளுக்குத் தொண்டு செய்து வாழ்தல் என்ற 'வாய்மை அறவாழ்வு' இயல்பாக அமைகிறது. வாய்மையில் நின்று, பொய்யா விளக்கத்தின் அடிப்படையில் தாம் மேற்கொள்ளவேண்டிய வாழ்வு எது எனத் தெளிவாக உணரவும் நின்று போற்றவும் வல்லவ ராக அமைகின்றார்கள். இதனாலேயே, சேக்கிழார் திலக வதியம்மையாரைக் குறிப்பிடும் போது ''தூண்டுதவ விளக்கு'' என்றே குறிப்பிட்டுப் போற்றுவாராயினர்.

திருநாவுக்கரசர் அறவாழ்வில் தலைநின்று இப்பிறப் பெய்துகின்றார். ஒரு மூலமுதற் பொருளைச் சார்ந்து நின்று வாழவேண்டும் என்ற அளவுக்குரிய படிநிலை வளர்ச்சியை மட்டுமே பெற்றநிலையில் திலகவதியாருக்குத் தம்பியராக அமைகிறார். பொருள் உண்டு என்றும், அதுவே மெய்ப் பொருள் என்றும், அதன் விளக்கத்தாலேயே வாழ்முறை அமையவேண்டும் என்றும் திட்டவட்டமான அறிவை முன் னுள்ள பிறவிகளில் பெற்றுவிட்டவர் திலகவதியார். ஆகை யால், இப்பிறவியில் நேரே மெய்ப்பொருளுக்குத் தொண்டு செய்யத் தம்மை ஆளாக்கி விடுகிறார். மூலமுதற்பொருள் உண்டு என்றும் அதனைச் சார்ந்து வாழவேண்டும் என்றும் அந்த அளவில் மட்டுமே அறிவு வளத்தை முன்னைப் பிறவி களில் பெற்று, இப்பிறவியை அடைந்தமையின் திருநாவுக் கரசர் திலகவதியாருக்குத் தம்பியார் ஆனார்.

மூலமாக நின்ற மெய்ப்பொருள் ஒன்று உண்டு அதனைச் சார்ந்து நின்று வாழவேண்டும் என்ற அறிவைப் பெறுவதற்கு எடுத்த பிறவிகள் பலவாக இருத்தல் வேண்டும். மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்ற உணர்வுடனும் அதைச் சார்ந்து வாழவேண்டும் என்ற கருத் துடனும் வந்து எடுத்த பிறவியைத்தான் '**பிறத்தல்**' எனச் சொல்வது மெய்ப்பொருள் மரபு. இதற்குமுன் உயிர் பெற்ற வளர்ச்சி வேறு; **பிறத்தல்** என்ற இப்பிறவி முதலாக உயிர் பெற இருக்கின்ற வளர்ச்சி வேறு. பிறந்த பிறகுதான் மெய்ப்பொருள் பற்றிய பெயர் பேசப்பெறு கிறது. மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்ற அளவில் மட்டுமே அறிவு பெற்ற உயிர் இப்பிறப்பில்தான் அப் பொருளைப் பற்றிய பெயர் முதலியவைகளைக் கற்றுப் பயிற்சி பெறுகிறது. பின்னர், அப்பெயருக்குரிய பொருளை அறிந்து அனுபவிக்க வேண்டும் என ஆசையுறுகிறது. இத் தகைய நிலைகளை மிகத்தெளிவாகத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் வரையறை செய்தளிக்கிறார்.

> "கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்
> உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
> திருவாய்ப் பொலியச் 'சிவாயநம' என்று நீறணிந்தேன்
> தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே"

என்பது திருநாவுக்கரசரின் திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரப்பதிகத்தின் ஆறாந் திருப்பாட்டு.

மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்றும் அதன் திருவடிகளைச் சார்ந்து வாழவேண்டும் என்றும் முற்பிறவி வரை பெற்ற வாழ்வியல் மூலமாக ஏற்ற அந்த அறிவுடன் கருவில் கிடந்து மீளப் பிறவியெடுக்கும் போது, அப் பிறவியில் அந்த உயிர் முன்னைப் பிறவிகளில் பெற்ற அறிவுடன் கருவில் நின்று, பின்னர்ப் பிறவியை ஏற்கிறது. ஆகையால் "கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையதாக இருந்தநிலை உண்டு.

அடுத்து எடுத்த பிறவிதான் 'பிறப்பு' என்று சொல்லக் கூடிய சிறப்புத் தகுதி உடையதாதலின், அப் பிறப்பில் நான் 'உருவாய்ப் பிறந்தேன், உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன்'. ஒரு பெயரின் மூல மாக அப்பொருள் நினைவில் நிறுத்தப் பெறுதலே அடுத் துள்ள பயிற்சி. பெயருக்கு உரிய பொருளை அடைந்து துய்த்து வாழவேண்டும் என ஆசையுற்று அவ்வேட்கை மிகுந்த காலத்தில்,

**திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந் தேன்** என்றார்.

"நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்பது முன்னைப் பிறவிகளில் பெற்ற அறிவு காரணமாகச் சிவம் என்ற பொருள் மெய்ப் பொருள் எனக்கொண்டு, அதன் தாள் பற்றி வாழவேண்டும் எனப் பிறந்தது முதல் பிறப்பு நிலை. இங்கே "நமச்சிவாய" என்பது நமப்பதமாகிய உயிர் சிவப்பதமாகிய மெய்ப் பொருளுடன் சார்ந்து நின்று வாழ வேண்டும் என்பதை உணர்த்த வந்த சொல்.

உருவாய்ப் பிறந்தபின் 'நமச்சிவாய' என்பதே நாமம் எனக் கொண்டு அதனைப் பயிற்சியில் கொள்கிறது உயிர். இவ்வுண்மையை,

"நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்றும்,

"நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே" எனவும் வரும் திருநாவுக்கரசரின் தேவாரப் பாட்டின் வரிகளால் உணரலாம். இந்நிலையில், 'நமச்சிவாய' என்பது அப் பொருளின் பெயர் என உணர்தலே அமைவது.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

எனத் திருஞானசம்பந்தரும் கூறியருளினர். கல்லில் கட்டிக் கடலில் வீழ்த்தியபோது, திருநாவுக்கரசர் அருளிய பதிகமாக வருவது நமச்சிவாயத் திருப்பதிகம். அதனுள்,

''இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே''

என்பது எட்டாந் திருப்பாட்டு. அத்திருப்பாட்டினுள் வாய்மை நின்ற விளக்காக நின்று அறவாழ்வை ஒளியுடையதாக்கிய அதுவே மெய்ப் பொருள் எனவும் ஏனையவை அதனைச் சாரநின்ற பொருள் எனவும் விளக்கிய நிலையில், அறவாழ்வின் செம்பொருள் விளக்கமாகவும் சமய வாழ்வின் சிவமெனும் முதற்பொருள் விளக்கமாகவும் அமைந்த பொருளே ''நமச்சிவாய'' என்பது. இவ்வாறு அறம், சமயம் என்ற இரண்டையும் இணைத்துக் காட்டினர். நமச்சிவாய என்பதை அப்பொருளின் நாமமாகக் கொண்டு பன்முறை அரற்றுதல் வேண்டும் என்ற வகையில்,

''நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே''

என்றார்.

இனி, மூன்றும் நிலையில், அப்பொருளை அடைந்து துய்த்தபோது, அதே திருவாக யான் பொலியும் நிலை உண்டாகிறது. அந்நிலையை விளக்க முற்படும் போது,

''திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்''

என்றார். இங்கே சிவமாக நின்று பொலியும் நமப்பதம், சிவமெனும் திருவாக நின்று பொலியும் உயிர் என்ற பொருளில் ''சிவாயநம'' என்ற நிறைமொழி அமைகிறது. 'நமச்சிவாய' என்பது நாமநிறைமொழி. 'சிவாயநம' என்பது திருவாய்ப் பொலியும் நிறைமொழி எனவே, மெய்ப்பொருள் உண்டு; அதனைச் சார்ந்து வாழவேண்டும் என்ற அறிவுடன் பிறத்தல், நாமம் பயிலல், துய்த்துத் திருவாய்ப் பொலிதல் என்ற மூன்று நிலைகளையும் இணைத்துச்

சொல்வதை மீளவும் அத்திருப்பாட்டைச் சிந்திப்பதன் மூலம் உணரலாம்.

"கருவாய்க்கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூர் அரனே"

என்பதே அத்திருப்பாட்டு. இதனையே,

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"

எனக் காரைக்காலம்மையார் தம்முடைய அற்புதத் திருவந்தாதியின் முதற்பாடலிற் கூறியருளுவதையும் இணைத்துச் சிந்திக்க வேண்டும். மேலே குறிப்பிடப் பெற்ற மூன்றையும் இணைய நிறுத்திய நிலையில் அமைவதே "சமய தீக்கை" என்பதையும் அமைத்துக் காணல் வேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்ற பல்வேறு விளக்கங்களையும் ஒருமுகப்படுத்தி — ஒருநெறியவாக்கி நிறுத்தி, நிறுத்திய அந்நிலையில் பெறத்தகு சில முடிவுகளை அமைத்துக்கொள்ளுதல் பயன் தரத்தக்கதாகும்.

திருநாவுக்கரசர் முற்பிறவிகளில் அறநெறிச் செம்மலாக வாழ்ந்து, அறவாழ்வின் கொல்லாமையை வாழ்வியல் முடிந்தபேறாகக் கொண்டு வாழ்ந்தவரே. வாய்மை என்ற பெயரில் அறம் பொருள் என்ற இரண்டையும் இணைத்த செம்பொருள் ஒன்று உண்டு என உணர்ந்த அந்நிலையில் அதன் கழல் பற்றி வாழவேண்டும் என்ற அறிவுடன் திலகவதியாருக்குத் தம்பியாராகப் பிறந்தார். திலகவதியார் திருநாவுக்கரசரின் பிறவிவரை அமைந்த அறிவு வளர்ச்சியை விட, பலபடி நிலை அறிவை முற்பிறவிகளில் பெற்றவர். 'வாய்மை' என்ற அறவாழ்வின் பொருளனுபவத்தைத் துய்த்து, தம்பியாருக்காக இருத்தல் நிலையை மேற்கொள்ளும் "தூண்டு தவ விளக்காக" அமைந்தவர்.

சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர வேண்டியநிலை திருநாவுக்கரசருடையது. அந்நிலையில் தாம் முற்பிறவியின் இறுதியில் அனுபவமாகக் கொண்டிருந்த கொல்லாமை என்ற அறத்தின் உந்துதலால், அவ்வறத்தையே மூல அறமாகக் கொண்ட சமண் சமயம் குறுகுதல் திருநாவுக்கரசருக்கு இயல்பாயிற்று.

அறவாழ்வின் முடிவில் செம்பொருள் உண்டு எனக் கொண்டதோடன்றி, அப்பொருள் 'சிவம்' எனவும் முற் பிறப்பிலேயே அறிந்திருந்தார். ஆனமையால் சிவனை வணங்கும் நெறி சார்ந்த குடும்பத்தில் பிறக்கும் நிலை அமைந்தது. செம்பொருள் உண்டென்றும், அது சிவம் என்றும் அமைந்த முற்பிறப்புணர்ச்சியானது நம்பிக்கை நிலையில் அவருக்கு அமைந்ததே. நம்பிக்கைநிலையில் அமைந்த ஒன்றைப் பலபிறவிகளில் அறிவால் அறிந்தும் அனுபவத்தால் உறுதிப் படுத்தியும் அமைத்துக் கொள்ள வேண்டும். முற்பிறவி வாழ்வில் "கொல்லாமை" என்ற அறத்தின் தாக்கம் இருந்ததே யொழிய, 'வாய்மை' என்ற அறவாழ்வின் அடிப்படைக் கொள்கையின் தாக்கம் அமையவில்லை. அதுவே திருநாவுக்கரசரின் முடக்கம், குறுக்கம் ஆக அமைந்தது.

பல பிறவிகளில் பிறந்து, முறையே சமணத்திலிருந்து பல்வேறு சமய உண்மைகளையும் பிறப்பாலும் அறிவாலும் அனுபவத்தாலும் தெளிந்து சிவநெறியைப் பின்பற்றுதல் அமையவேண்டியது. அது முறையான வளர்ச்சி.

திலகவதியார் என்ற சிவனடியவர் வேண்டுதலால் திருநாவுக்கரசருக்கு இயல்பாக ஏற்பட்ட முடக்கம் நீக்கப் பெறுகிறது. இனிப்பல பிறவிகள் ஏற்று, வருந்தி, உழன்று, பெறவேண்டிய படிமுறை வளர்ச்சிகளையெல்லாம் இப்பிற வியிலேயே பெற வேண்டியநிலை திருநாவுக்கரசருக்கும், அவற்றை அருளவேண்டிய நிலை சிவத்துக்கும் அமைகிறது.

மங்கையர்க்கரசியார் என்ற சிவனடியவரின் வேண்டு கோளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பேறுகளை யும், இயற்கை முடக்கமாகிய கூன் நீக்கத்தையும் செய்ய வேண்டிய நிலை சிவபரம்பொருளுக்கு அமைந்து விடுகிறது. கூன் நீக்கத்துக்குரிய காரணங்களை அமைத்துக் கொடுத்தது சிவபரம்பொருள். கூன் நீக்கம் திருஞான சம்பந்தர் என்ற அடியவராலேயே நிகழ்த்தப் பெறுகிறது. திருநாவுக்கரசரின் அறவாழ்வின் உண்மை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட முடக்கம், இனிப் பல பிறவிகள் எடுத்துப் பெற வேண்டிய சிவப் பேறு என்னும் ஆக்கம் என்ற இரண்டும் திலகவதியாராலேயே அளிக்கப் பெறு கின்றன. முற்பிறவியில் அமைந்த அறவாழ்வின் அடிப்

படை உண்மை நிலைபற்றிய கருத்துத் தெளிவின்மையே — 'வாய்மை' என்னும் நல்லற விளக்கம் சிறப்பாக அமையாமையால் நேர்ந்த குழப்பநிலையியே 'சூலை' என நின்றது.

"முன்னமே முனியாகி எமையடையத் தவம் செய்தான்"

என்பது "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும்" என்ற சிவநிலை — சைவநிலை, சைவம் இன்றும் உணர்த்தும் வரலாற்றுப் பொருள்நிலை. கொல்லாமையை முற்பிறவியிலும் மூல அறமாகக் கொண்டு, உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை என்ற அறநெறியைத் தவநெறியாகக் கொண்டு வாழ்ந்தவர் என்பதை உணர்த்தும் வகையில் 'முன்னமே முனியாகி எமையடையத் தவம் செய்தான்' என்ற கூற்றுனது சிவனால் வெளிப்படுத்தப் பெறுகிறது.

கருத்து விளக்கம் இல்லாமையால் நேரும் பிழைகள், பிழைகளை உண்மை எனக் கொண்ட வகையில் மேலும் அமையும் பிழைகள், இவைகளை முற்றாக நீக்கும் நிலையில் அமைக்கப் பெறுவது சூலை. கலிக்காமர்க்கும் இவ்வாறே அமைகிறது, கருத்து முடக்கத்தை நீக்குவதும் பலபிறவிகளில் பிறந்து இறையருளால் பெறவேண்டிய சிவப்பேற்றையும் இணைத்து வழங்கிய திருப்பெற்ற திருவாகி நின்றவர் திலகவதியாரே. 'எழுந்திரீர்' என்ற அருள்வாக்கால் கருத்து முடக்கம் நீங்கி, சிவப்பேறும் பெற்றார். அவ்வளவில், ஒரே பிறவியில், முன்னை நின்ற முடக்கும் பின்னை அமையத்தகும் பேறும் என்ற இரண்டையும் இணைத்துத் தந்தருளிய திலகவதியார் சிவனடியவராதலின், அவர் மூலமாகத் திருநாவுக்கரசர் 'சைவநலம்' பெற்றார். தொண்டன் என்றோ அடியன் என்றோ சொல்லுதல் போதாது, **தம்கையால் தொண்டு செய்தல்** என்ற நெறியில் திலகவதியார் திருநாவுக்கரசரை ஈடுபடுத்துகின்றார்.

பிறந்த நாளிலிருந்து நாமம்பரவும் இயல்புடையவராக இருந்தவர் திருநாவுக்கரசர். வாழ்வியல் மூலமாக அமைந்த முதற்பொருள் உண்டு என்ற அளவில் நாமம் பயிலும் சிறப்புடையவராயிருந்தார். பொருள் என்ற வகையில் அது அருக தேவனையும் குறித்தது. பொருளனுபவம் இல்லாமல், பொருள் பற்றிய ஆய்வறிவு இல்லாமல் நாமம் பயிலும் பயிற்சியைக் கொண்டிருந்தாராதலின், அந்நாமத்

தின் மெய்மைத் திருவானது பொலியுமாறு செய்தருளிய வர் திலகவதி அம்மையார். ஐந்தெழுத்தை ஓதித் திருநீறு அளித்தார். அதுவே திருநாவுக்கரசருக்குப் பெருவாழ்வாக அமைந்தது.

உண்மைப் பொருளின் நாமத்தை இடையறாது பயின்ற காரணத்தால் திருநாவுக்கரசரின் நாக்கானது திருவாய்ப் பொலியும் நாக்காக அமைந்தது; செந்நா என நின்றது. செம்பொருள் கண்டார் தம் 'திருநா' எனப்பெற்றது. நாவினுக்கு அருங்கலமாகிய நன்றுமம் பயின்ற காரணத் தால் இறையருளானது 'திருநாவுக்கரசு' என நின்றுமம் நயப்புற மன்னுக என அசரீரியால் வாய்மை மொழியப் பெற்றார். வாய்மையை முன்னுகக் கொண்டு கொல்லாமை யைப் பற்றி அறவாழ்வு வாழவேண்டியிருக்க, கொல் லாமையைச் சிறப்புறப் பின்பற்றியும் 'வாய்மை' என்ற மூல அறத்தின் முழுமையை அறிந்தும் நுகர்ந்தும் வாழ வேண்டிய நிலை அமையாமையால் நேர்ந்த முடக்கம் நீக்கம் பெற வேண்டியநிலையில் இப்பிறவியில் வாய்மையின் முழு மையை முற்றாக விளக்கும் வாழ்வியல் முறையானது திரு நாவுக்கரசருக்கு அமைகிறது.

நாமம் பயின்ற நலத்தின் சிறப்பால், பயின்ற நாவே நலம் பெற்ற செந்நா எனநின்று, நாவினைக்கொண்ட அந் நல்லவர் நாமமும் 'நாவுக்கரசு' எனப் பெற்று, அதுவே மற்றையவர்களுக்கு மந்திரமாக மறைமொழியாக நின்றது எனக்கொள்ளவேண்டும். அந்நிலையில் எடுத்த திருப் பதிகம்,

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்"

என நின்றது. இது பொருள் நின்ற நிலையில் அமையும் திரு வருள் விளக்கம்.

மதியும் அரவும், மானும் புலியும் ஏற்றுநிற்கும் திரு வுருவம் சிவனுடை உருவம். சிவன் ஏற்றுள்ள பொருள்கள் தம்முள் மாறு கொண்டவை. மதியும் அரவும் மானும் புலி யும் சிவன் முன்னிலையில் பகைநீங்கி வாழ்கின்றன. அருளின் முன்னிலையில் மதியும் அரவும் மானும் புலியும் தம்முடைய மறவுணர்வை விட்டுவிடுகின்றன. அவைகளும் தம்முள் மாறுபாடுநீங்கி அறவுணர்வுடன் வாழ்கின்றன.

ஒன்றன் அறக்கொள்கையும் மற்றதன் அறக்கொள்கையும் தத்தம் தனிநிலையில் மாறுபாடு கொண்டிருக்கலாம். ஆனால், திருவருளின் முன்னிலையில் மாறுபாடு, மறவுணர்வு இல்லை. அவ்வகையில் உலகத்து உயிர்களுக்கெல்லாம் அருளியலடிப்படையான அறவாழ்வு அமைய வேண்டும் என்று உலகுக்காக நலம் விளைக்க வேண்டி, சமுதாய நலத்தைக் கருத்தில் கொண்டு, கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்' என்ற முறையீட்டை முதன்மைப் படுத்திய காரணத்தால் அப்பதிகம் கோதில் திருப்பதிகம் எனநின்றது.

இந்நிலையில், பிறந்தால் நினைப்போற் பிறக்கவேண்டும் என்ற சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கின் வண்ணம் திலகவதியாருக்குப் பின்பிறந்த ஒருபேற்றினாலேயே பல்வகைப் பேறுகளும் பெற்றவராகிறார்.

### அந்தண்மையும் அறமும்

சிவநலம் கனியப் பெற்ற திலகவதியாரின் திருவருளால் சைவநலம் பெற்ற திருநாவுக்கரசர், நாமம் பயின்ற நலத்தால் உள்ளத்தாற் பொய்யாது இப்பிறவியில் வாழ்ந்த காரணத்தால் உலகத்தார் உள்ளத்துள் "உளராகும்" பேறு பெறுகின்றார். அதுவே வாய்மையின் வழாது நின்ற நிலை. அறமும் பொருளும் இணைந்த வாழ்வு. சிறப்பு என்னும் செம்பொருள் என்ற நடுநிலைப் பொருளை அணைந்து நின்று அத்தகைய நன் பொருள் மூலம் — வாய்மை மூலம் அறக்கோட்பாடுகளை உணர்ந்து வாழும் — பொய்யா விளக்கின் ஒளியில் அறமுணர்ந்து வாழும் வாழ்வை நெறியாகக் கொண்டு வாழும் வாழ்வு அமைகிறது திருநாவுக்கரசருக்கு.

> "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை"
> "கொல்லான் புலாலை மறுத்த அறநிலை"
> "உள்ளத்தாற் பொய்யா தொழுகும்நிலை"

என்பனவற்றை முன்னைப் பிறவியின் விளைவாலும் சைவ நலம் பெற்றமையாலும் உண்மையென உணர்ந்து உலக உயிர்களுக்கு அறம் பேணி வாழும் நிலையை மேற்கொண்டமையால் திருநாவுக்கரசர்

> "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுகலான்"

என்ற குறளுக்கு இலக்கணமாக அமைகிருர். அந்தணராம் பேறு பெறுகிருர். நாமம் பயின்ற நன்மையால் அறத்தின் இருமைநிலையை அறிந்து, அதனை அருளின் வழியில் ஒருமையில் நின்று மேற்கொள்ளவேண்டும் எனக் கண்டமையால்,

இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

எனவும்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

எனவும் நின்ற குறள்களுக்கு இலக்கியமாக நிற்கும் பெருந்தகைமை, செயற்கரிய செய்யும் பெரியர் நிலை ஆகியன திருநாவுக்கரசருக்கு அமைகின்றன. தம்மைப் பல்லாற்ருனும் துன்புறுத்திய சமணர்களை எத்துன்பத்துக்கும் ஆளாக்கவில்லை. உற்றநோய் நோன்றலை முற்பிறவி அனுபவத்தால் பெற்ருர். உயிர்க்குறுகண் செய்யாமை என்ற நிலையில் அவர் பெரியர் என நின்ருர்.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்ற சைவநலம், திருவாய்ப் பொலியும் நிலை அவரிடம் இருந்தது என்பதைக் கொல்லுமாறு ஏவப்பெற்ற யானை வணங்கிச் சென்ற நிகழ்வின் மூலம் உணரலாம்.

செம்மையுள் நிற்றல், செம்பொருளில் தம்மை இணைத்து நிற்றல் என்ற நிலையே அந்தணராம் நிலை. அதுவும் அறவோர் நிலையே. அந்தணரும் போற்றும் அந்தணராக நின்ருர் திருநாவுக்கரசர் என்பதை விளக்கும் நிலையே சமணர்கள் செய்த வஞ்சகச் செயல்களிஞல் தாக்குருமல் நின்றநிலை. சமணர் செய்த தீமைக்காக அவர்களை முனியாது நின்ற நிலையே நாவரசரின் அந்தண்மைக்குச் சான்று.

''அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்ற திருக்குறளின் வண்ணம் உலகத்துயிர்களெல்லாம் அறநெறியில் வாழ்வதற்குரிய இடையூற்றை நீக்க வேண்டும் என்ற வகையில் ''கூற்ருயினவாறு விலக்ககிலீர்''

என எடுத்த முதன் மொழியானது திருவருள் மெய்ம் மொழியாக நின்றது. திலகவதியாரால் சைவநலம் பெற்றும், இறைவனுல் திருநாவுக்கரசு என்ற நாமம் சிறப்புறமன்னும் பேறு பெற்றும் நின்ற திருநாவுக்கரசர் சிவ பெருமான் திருவடியிற் சேர்ந்து பேரின்பம் துய்க்க விரும்ப வில்லை. திலகவதி அம்மையார் நெறிப் படுத்தியவாறே திருத்தொண்டு செய்தலைக் குறிக்கோளாகக் கொண்டு உயிரறத்தை அருளறமாக அமைத்துத் தொண்டாற்ற முற் படுகிறார்.

திருநாவுக்கரசரைத் தொண்டு நெறிப்படுத்தி உள தாக்கிய திலகவதி அம்மையின் பின்னுள் வரலாறு அறியப் பெருமை நம் தவக்குறைவே.

### மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருவதிகையில் திருத்தொண்டு நெறிநின்ற திருநாவுக் கரசரைப் பல்லவமன்னனின் ஏவலர்கள் அழைக்க வரு கிறார்கள். தருமசேனர் சமண் சமயத்திலிருந்து நீங்கிச் சைவம் சேர்ந்தார். சூலைநோய் வந்ததாக நடித்து, அது தீர்க்கப் பெற்றது என்ற பொய்யைக் காரணமாக்கிச் சமணத்திலிருந்து சைவம் சென்றார் என்பது சமணர்கள் திருநாவுக்கரசரின் சமய மாற்றச் செயலைப் பல்லவமன்ன னுக்கு விளக்கிய முறை.

திருநாவுக்கரசர் சமண் சமயத்தை ஒருசமயம் என ஏற்றவர். பரம்பொருளால் அமைத்துக் காப்பாற்றப் பெற்ற சமயங்களுள் ஒன்று சமணம் என்ற விளக்கம் திரு நாவுக்கரசருடையது. சமண் சமயக் கொள்கைகளை யாண்டும் குறை கூறிப் பழிக்கவில்லை. சமணர்களின் நெறி களிலேயும் அவர்தம் "பொய்யை மெய்யாக்கும் வஞ்சகச் செயலே" கண்டிக்கப் பெற்றதாக இருந்தது.

சமணர்களின் சொற்கேட்ட பல்லவன் ஏவலர்களை அனுப்பித் திருநாவுக்கரசரை அழைத்துவரச் செய்கிறான். அனுப்பியபோது திருநாவுக்கரசரின் மதமாற்றத்துக்கு உரியகாரணத்தை விசாரித்தறிய வேண்டும் என்ற கொள் கையில்தான் அழைத்து வருமாறு ஆட்களை அனுப்புகிறான். ஆனால், திருநாவுக்கரசரும் பல்லவமன்னனும் நேர்நின்று சந்திக்கும் நிலையை நிகழாதவாறு செய்து விடுகிறார்கள்.

சமணர்கள் சொல்லியவாறு ஆணையிடும் அந்த அளவி லேயே பல்லவமன்னன் அமைந்து விடுகிருன். அரசன் வரப் பணித்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் திருநாவுக் கரசர் அருளிய திருப்பதிகமே **மறுமாற்றத் திருத் தாண்டகத் திருப்பதிகம்.**

### மறுமாற்றத் திருத்தாண்டகச் செய்தி

"கூற்ருயினவாறு" எனத் தொடங்கும் பதிகமே திரு நாவுக்கரசால் பாடப் பெற்ற முதல் திருப்பதிகமாகும். பண் முறையில் அமையப் பெற்ற திருப்பதிகங்களில் 'கொல்லி' என்னும் பண் அமையப் பெற்ற பதிகமாகும். அடுத்து வர லாற்று முறைப்படி, திருநாவுக்கரசரால் அருளப்பெற்ற பதிகம் "நாமார்க்குங் குடியல்லோம்"எனத்தொடங்கும்மறு மாற்றத் திருத்தாண்டகமே. வரலாற்று முறையில் இரண் டாம் பதிகமாக அமைந்தாலும், தாண்டகயாப்பில் அமைந்த பதிகங்களுள் இதுவே முதல் திருப்பதிகம். மன்னனால் அனுப்பப்பெற்ற ஆட்கள் வந்து அழைக்கவே, அவர்களுக்கு விடைகூறும் முறையில் அமைந்த பதிகம் 'தாண்டகம்' என்ற புதிய யாப்பை அடிப்படையாகக் கொண்டு எழு கிறது.

மறுமாற்றத் திருத்தாண்டகத்தைநோக்கும்போது அது அருளியல் அனுபவ வெளிப்பாடு எனத் தன் பண்புறுத்தி அமைவது புலனுகும். சிவானுபவநிலை வெளிப்படுகின்ற காலத்தில் சில சீர்களைக் கொண்டு வெளிப்பட இயலாத தாய்ப் பல சீர்களைச் சார்ந்து சுத்த தாளத்துடன் அமைவ தாய்த் தாண்டக யாப்பாக அமைகிறது.

அந்தண்மையில் நின்று அருளனுபவம் பெற்று, அந் நிலையிலும் அறவழியில் நின்று, உலகத்துயிர்களையெல் லாம் அறவழியில் நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் எவ்வுயிர்க்கும் அந்தண்மை பூண்டு ஒழுகிய நிலையில் 'கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்' என உலகத்துயிர்களை நோக்கிய அந்தண்மை நிலையில் எடுத்துப் பாடியதே திரு வருள் மெய்மை மொழித் திருப்பதிகம். ஒன்று ஒன்றை அழித்து வாழ்வது அருளியலன்று. ஒருபொருள் மற்றைப் பொருளின் வாழ்வை வளர்த்தல் உயிர் நியதியாக இருக்க வும், அதற்கு மாருக ஒருபொருள் மற்றைப் பொருளை

அழித்து வாழ முற்படுகிறது. அவ்வாறு ஒருபொருள் மற்றைப் பொருளுக்குக் கூற்று என அமையும் முறையை மாற்றியருளுதல் வேண்டும் என்பதே திருநாவுக்கரசர் எடுத்த மொழியின் மெய்மை விளக்கம், சூலை நோயானது கூற்று ஆயின முறையை விலக்ககிலீர் என அவ்வரிக்குப் பொருள் கொள்வது தவறு. செம்பொருளைக் காணவும், செம்பொருள் என்ற நன்பொருளில் நின்று பேசவும் ஆக அமைந்த பதிகமாதலின், அப்பதிகத்தில் வெளிப்படும் அருளனுபவ இயலையும் உண்மையின் உறைப்பையும் அடிப்படையாகக் கொண்டே அவருக்கு நாவுக்கரசர் என்ற நன்னமம் வழங்கப்பெறுகிறது. அத்தகைய பண்புகளின் அடிப்படையிலேயே "கோதில் திருப்பதிகம்" எனச் சேக்கிழார் அப்பதிகத்தைச் சிறப்புறுத்துகிருர்.

கோதில் திருப்பதிகம் போலவே மறுமாற்றத் திருத்தாண்டகமும் நலம்பல விளைக்கும் நல்ல திருப்பதிகமாகும். சமயப் பிணக்குகளும் மதமாற்றங்களும் மலிந்துவரும் இக்காலத்தே வரலாற்றடிப்படையில் நின்று, சமயவாழ்வின் ஏற்றத்தைத் தெளிவுற எடுத்துக் காட்டும் பதிகமாகும்.

சமய வாழ்வின் அடிப்படைச் சிக்கல் ஒன்றை வெளிப்படையாக எடுத்துக் காட்டி, அதனை விளக்கமுற விரித்துரைத்ததோடு அச்சிக்கலுக்குரிய வழியையும் அமைத்துத் தரும் நிலை முதற் பதிகத்திலுள்ளது.

முதற்பதிகத்தில் சூலைநோய் பற்றிய சுவடே தெரியாமல் அமைத்தருளிய திருப்பாட்டு ஒன்று உண்டு. ஒருவன் சமயவாழ்வு வாழத் தொடங்கியபின் சில வாழ்வியற் சிக்கல்களைச் சந்திக்கிருன். சிறப்பான வாழ்வியல் அமையவில்லையானல், அவன் வாழ்வைப் பார்க்கும் ஏனையோர் அவன் சார்ந்து வாழும் சமயத்தைச் சார்ந்து வாழ உடன்படார்கள். தொடக்கநிலையில் சமயவாழ்வை மேற்கொண்டவனுக்கேயன்றி, பழ அடியார்கள் வாழ்விலும் இதுதான் நியதி என்பதாக அமையுமானல் என் செய்வது?

"துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்"

என்பது 'கூற்ருயினவாறு' என்ற தொடக்கமுடைய முதற் பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாட்டின் இடைநின்ற இரண்டு வரிகள். சமயத் தலைவனாக ஒருகடவுளை ஏற்று வழிபட்டு வரும் நிலையில் துன்பம், கவலை, பிணி ஆகியவைகளை அச் சமயக் கடவுள் நீக்கி அருள் புரியவேண்டும். நீண்ட கால அடியவர்களே இவ்வாறு துன்புறுதல் நம்மால் காணப் பெறும் வரலாற்றுண்மையென்ருல் என்னைப்போல அண்மையில் வந்து அடிமை பேண முயல்பவர்கள் உம்மைத் தெளிய உணர்தல் இல்லை என்று கூறியவர்.

"அன்பே அமையும்"

என அதற்கொரு வழிமுறையைக் காட்டியருளுகின்ருர்: நாம் அவனுக்கு அடிமையானதும் அவன் நம்மை ஆளாகக் கொண்டதும் இன்றோ நேற்றோ நடைபெற்றதல்ல. எந்த ஒரு காரணத்தைக் காட்டியும் அவ்வடிமைத் தன்மையை மாற்றுதல் இயலாத தொன்று. அவனே வந்து அடிமைத் திறத்தை ஏற்று, ஆண்டானாக நின்ற நிலையில், இன்றுள்ள குறைகளை நீக்கி அருள் செய்யாமைக்குரிய காரணம் யாது என ஆராய்ந்தால் தெளிவாக உணர முடியவில்லை. காரணம் தெரியாமையால் விலக்கிக் கொள்ளவும் இய லாது. செய்யவேண்டிய ஒரேவழி "பேரன்பே இன்னும் பெருக்கு" என்பதே.

காரைக்காலம்மையார் தம்முடைய **அற்புதத் திருவந் தாதியில்**, இதே செய்தியை எடுத்து விளக்கி, இன்றைக்கு அவன் அருளாமையால் நம் உறவை அறுத்துக் கொள்ள லாகாது. அடிமைத்திறம் என்பது மிகுவெற்றியை எளிதில் தரும் உரிமை. உரிமையை இழந்துவிடுதல் ஆகாது. அது குனியவலமாம் அடிமை, அது சீர்வல்ல தாயம். ஆகையால்,

இடர்களையாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும்-சுடர்உருவில்
என்பருக் கோலத்து எரியாடும் அம்மானூர்க்கு
அன்பு அருது என்நெஞ்சவர்க்கு

என அற்புதத்திருவந்தாதி இரண்டாம் பாட்டாற் கூறி, "பேரன்பே இன்னும்பெருக்கு" என நெறிப்படுத்தியவாறே முதற்பதிகத்திலும் திருநாவுக்கரசர் சமய வாழ்வில் அமை யும் சிக்கலை எடுத்துக் காட்டி, அத்தகைய நிலையில், அவன் அருளவில்லை என்று வருந்தி, வேறு சமயம் சார்வது

வருந்தத்தக்கது என எடுத்துக்காட்டி, அக்கடவுளிடத்தில் ''அன்பு செய்தலே அமையும்'' என்று எடுத்துக்காட்டி நெறிப்படுத்துவாராயினர்.

அவ்வாறே, திருநாவுக்கரசர் அடுத்து அருளிய மறு மாற்றத் திருத்தாண்டகமும் சைவசமய வாழ்வில் நின்ற வர்க்குரிய ஏற்றம், பீடுறு நிலை ஆகியவைகளை எடுத்துக் காட்டி, சைவ சமய அருளியலனுபவத்தை மிக எளிதில் பெறமுடியும் எனவும் கூறி நிறுவும் திருப்பதிகமாகும்.

சமணர்தம் பொய்யுரை கேட்டு, அமைச்சர் முதலி யோரை அனுப்பி, நாவுக்கரசரைக் கொண்டு வருக என ஆணையிடுகிறான் பல்லவமன்னன். அவர்கள் வந்து அழைத்த போது, நீர் ஆர், உம்முடைய மன்னவன் தான் ஆரே எனக்கேட்டு, இவர்கள் ஏவலுக்கு வரக்கூடிய எளிமை யுடையவர்கள் நாம் இல்லை என்று கூறும் வகையில் மறு மாற்றத் திருத்தாண்டகம் அமைகிறது. அதைக்கேட்ட ஏவலர்கள், தாங்கள் வரவில்லையானால், எங்கள் பணியில் முட்டுப் பட்டவராவோம் எனக் கூறி வேண்டியபோது, ஏவலர்தம் நலம் கருதியே உடன்போக ஒருப்படுகிறார். சென்றதோடன்றி, சமணர்கள் தம்மைப் பற்றிச் செய்த தவறு என எங்கேயும் கூறவோ, மன்னவனிடம் முறை யிடவோ செய்யவில்லை. கோமாற்கே ஆளாக நின்ற பெருந் தகைமையால் அரசனை வேண்டி நின்று முறையிட விரும்ப வில்லை. பெருந்தகைமையுடன் உலகளாவிய உயர் நலம் பேணும் அந்தண்மை சான்ற அறவாளராகவும் திகழ்ந்தார் திருநாவுக்கரசர்.

### சேக்கிழார் வகுத்தளித்த செம்மை

கோதில் திருப்பதிகம் எனப்பெறும் ''கூற்றாயின வாறு'' என்ற பதிகம் பாடி, திருவருள் பெற்று, சூலை நோய் நீங்கப் பெற்றதோடன்றி, 'நாவுக்கரசு' என்னும் நாமமும் அருளப்பெற்றார். வரலாற்று முறையில் அடுத்துவரும் திருப்பதிகம், மறுமாற்றத் திருப்பதிகம். நாவரசு என நின்றவர் புவியரசனின் ஏவலர்களிடம் பேசிய பேச்சு என்றாலும் அப்பதிகத்தில் காணப்பெறும் திருவருளனுப வத்தைத் திருவருள் வழிநின்று உணர்ந்த தெய்வச் சேக் கிழார் திருநாவுக்கரசரின் அருள் நலங்கெழுமிய வரலா றொன்றை அமைத்துக் காணவும் காட்டவும் முற்படுகிறார்.

சூலைநோய் தம்மைவிட்டு நீங்கிவிட்டது என்ற நிலையைத் திருநாவுக்கரசர் மறுமாற்றத் திருத்தாண்டகத்தில்தான் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

"என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே"

என்பது திருநாவுக்கரசரின் மறுமாற்றத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தின் ஐந்தாம் திருப்பாட்டு.

மேலே கண்ட திருப்பாட்டினுள் "உறுபிணியார் செறல் ஒழிந்திட்டு ஓடிப் போனார்" என்ற திருவாக்கினால் அறியப் பெறுவது சூலைநோய் என்னை அழிப்பதை விட்டு விட்டு ஓடிவிட்டது என்பதே. எனவே, சிறு தெய்வ ஆற்றல்; சிவனின் தலைமைத்தன்மை, அவனின் அருள்வன்மை ஆகிய வைகளை உணரமுடிகிறது. "கூற்றாயினவாறு" என்று தொடங்கும் முதற்பதிகத்துக்கும் மறுமாற்றத் திருத் தாண்டகப் பதிகத்துக்கும் இடையில் உள்ள அருள்நிலை அனுபவ வளர்ச்சி, கால அளவு முதலியவைகளைக் கருத்திற் கொள்ளுகிறார் சேக்கிழார். திருநாவுக்கரசர் என்ற தனியொருவர் சைவசமயம் சென்றமையாற் கேடு பெரிதும் வந்து விடாது. சமணம் அரசுச் சமயமாக இருக் கிறது. சமண சமயத்தில் தருமசேனர் என்ற பட்டம் பெற்றுப் பெருந்தலைவராக இருந்த ஒருவர் சமணத்தை விட்டுச் சைவம் சென்று சேர்ந்தார் என்பது அத்துணை எளிமையாகக் கருதக் கூடியதன்று. திருநாவுக்கரசரின் இச்செயலால் வரலாற்றுப் பெருமை படைத்ததாகச் சைவத்தில் மறுமலர்ச்சித் திட்டம் ஏதும் அமைக்கப்பெற வில்லை. அன்றி, சைவத்திலிருந்து சமணம் சென்றார், மீளவும் சைவம் வந்து சேர்ந்தார் என்ற வகையில் அவர் தம் அருளிப்பாடுகளாகிய திருப்பதிகங்களை மூலமாக வைத்துக் கொண்டு, திருநாவுக்கரசரால் சைவசமயத்தில் காணப்பெற்ற குறை என்ன? மீளவும் சைவம் வந்த போது அவர் காண, துய்க்க நின்ற நிறை என்ன? திரு

நாவுக்கரசரின் அனுபவ உண்மைகளை எவ்வாறு சைவக் கொள்கைகளாக அமைத்துத் திருத்தம் செய்யலாம் என்ற சிந்தனையில் கூட, சைவம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாக இன்றுவரையில் வரலாற்று முறையில் ஏதும் சான்றில்லை. திருநாவுக்கரசர் என்ற தனிப்பட்டவரின் நன்மை, தீமை அனுபவம் என்ற அந்த அளவில் மட்டுமே சைவம் கருதியிருக்கிறது.

மேலே கூறப்பெற்ற நிலைக்கு ஒரு காரணம் கூறப் பெறுகிறது. சமயங்களின் வெற்றி தோல்வி என்பது அவ்வக்காலங்களில் இருந்தவர்களின் வாதத்திறமையின் வெற்று தோல்வியேயன்றி, சமயங்களின் வெற்றி தோல்வியன்று என்பதே. சமயத்தின் வெற்றி தோல்வி என்பதை நாம் வரலாற்று முறையில் முதன்முதலாகச் சந்திப்பது திருநாவுக்கரசர் வரலாற்றில்தான். மாணிக்கவாசகர் நிகழ்ச்சியாக வரும் 'புத்தரை வாதத்தில் வெல்லுதல்' என்பது திருநாவுக்கரசருக்கு முன்னோ பின்னோ எனக்கூற இயலாது. ஏனெனில், மாணிக்க வாசகரின் காலம்பற்றி இன்னமும் கருத்து வேறுபாடு உண்டு. திருநாவுக் கரசருக்குப் பிறகு வரலாற்றில் திருஞானசம்பந்தரைச் சந்திக்கிறோம்.

திருநாவுக்கரசர் வரலாற்றில் சமணர்களுடன் வாதம் செய்து, வெற்றி பெற்று, சைவக் கொள்கையானது சமணக் கொள்கையை விட உயர்ந்தது என நிலை நாட்ட வில்லை. சிவபெருமான் திருவடியைச் சார்ந்ததால் சூலை நோய் நீங்கியது. ஆனால், சூலைநோய் நீக்கத்துக்கு முன்பே சைவத்தில் சேர்ந்து விட்டார். தமக்கையார் அருளிய திரு வருள் மெய்ம் மொழியாகிய "எழுந்திரீர்" என்பதனைப் பெற்ற அனுபவமே சைவஞ் சார்தற்குரிய காரணமாக நின்றது. இதனை "முன்னம் அறியாமையினால் பல கொடு மைகள் செய்தேன்; இப்போது என் தவறுணர்ந்து உனக்கு ஆளும்பட்டேன்; ஆட்பட்ட பிறகும் என் பணிகளை நான் செய்ய முற்படும் போது, இச்சூலை, அவைகளையும் செய்ய வொட்டாது என்னைச் சுடுகின்றது. ஆட்பட்ட என்னை ஆளாக ஏற்றுக் கொண்ட நீவிரோ சூலையை அழிக்கவில்லை. அது என்னைத் துன்புறுத்துவதிலிருந்து என்னைக் காப்பாற்றவில்லை. 'அஞ்சேல்' என்ற ஒரு வார்த்தையைக் கூடச் சொல்லவில்லை" என்று கதறுகிறார். சூலைநோயை

நீக்க இயலாமை காரணமாகச் சமணத்திலிருந்து வெளியே வந்து விட்டார் திருநாவுக்கரசர் என்ற அளவிற் கூறலாம். சமணத்திலிருந்து வரும்போதும் சைவம் சார்தல் வேண்டும் என்று புறப்பட்டு வரவில்லை. தமக்கையாரைச் சார்ந்தால் சூலைநோய்த் தாக்குதலிலிருந்து விடுதலை பெற லாம் என்ற உள்ளுணர்வே முதற்காரணம். தமக்கை யாரிடம் சென்று அவர் கூறிய கூற்றையும் சிந்திக்க வேண்டும்.

> "இந்த உடற் கொடுஞ் சூலைக்கு இடைந்து அடைந்தேன் இனி
> உய்ந்து கரை ஏறுநெறி உரைத்தருளும்" என்றார். [மயங்காது

சைவத்தில் சேரப் போகிறேன் என்றோ, சிவனுக்கு ஆட் பட்டால் இந்நோயைத் தீர்த்துவிடுவான் என்றோ குறிப்பிட வில்லை. சூலைநோய் பற்றியவுடன் அதுவரையில் துணையாக இருந்தவர்களோ, துணையாக இருந்தவைகளோ புறம் நீங்குவதை உணர்கிறார். தனித்து விடப்படுகிறார். உணவு அமைத்துக் கொடுக்கும் பணியாளனைத் தவிர வேறுயாரும் இல்லை. அவனும் தான் வந்த போதே தன்னுடன் வந்தவன். இந்நிலையில் தமக்கையாரை நினைக்கிறார். நினைத்த அளவில் நோயின் தாக்கம் சற்றுக் குறைகிறது. இதுவரையிலும் தாம் அதனைத் தடுக்க எடுத்த செயல்களாற் பெருகி வந்த சூலைநோய்த் துன்பம் தமக்கையாரை நினைக்கும் அந்த அளவில் சற்றே குறைவதை அனுபவத்திற் காண்கிறார். தமக்கையிடம் சென்றால் இவ்வயிற்று வலியிலிருந்து தீர்வு பெறலாம் என்ற நம்பிக்கையே அவர் சமணத்திலிருந்து வெளியேறக் காரணம். அப்போதும் சமணத்திலிருந்து வெளியேறும் எண்ணமில்லை. அத்தகைய எண்ணம் இருந் திருப்பின், சமண்சமயத்திலுள்ள குறைகளை உய்த் துணர்ந்து கூறி, வென்றே வெளியேறியிருப்பார். மறை வாக, இராப்பொழுதில், சற்றேறப்ப இருபது கல் தூரம் நடந்து, விடியற்காலையில், தமக்கையார் திருக்கோயில் திருத்தொண்டுக்குப் புறப்படும் நேரத்தில் திருவதிகையை அடைந்து தமக்கையாரைக் காணும் நிலையை மேற்கொண் டார். அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறார். அவரும் திருவருளை உணர்ந்து 'எழுந்திரீர்' எனச் சொல்லித் திருநீறு கொடுத்து விட்டுச் சென்று விடுகிறார். திருத்தொண்டினைத் தம்கையால் செய்து சிறந்த திலகவதி அம்மையாரின் திரு வருள் மெய்ம் மொழியே முதன்மை அனுபவத்தைத் தந்து

பின்னர் அவர் மேற்கொள்ளுவதற்குரிய நெறியை வகுத்துக் கொடுத்ததாகிறது. பின்னரும் திருநாவுக்கரசர் சமணர்களோடு வாதம் செய்து சமணத்தைத் தோல்வியுறச் செய்யவில்லை. சமணர்களும் திருநாவுக்கரசரை வாதத்துக்கு அழைத்ததாக வரலாறு இல்லை. ஆயினும், சமணர் செய்த கொடுமைகளைத் திருவருள் வலத்தால் தோல்வியுறச் செய்கிறார். திருநாவுக்கரசர்மேல் சமணர் கூறும் இரண்டு குறைகளைச் சேக்கிழார் திருவாக்கால் அறிகிறோம். (1) வயிற்று வலி வந்தது போல் நடித்து, இங்கே செய்த மந்திரம் முதலியவற்றால் போகவில்லை என்று கூறி, சைவம் சென்று விட்டார். (2) சமணர் செய்த கொடுமைகளைச் சமண சமயத்தில் கற்ற மந்திர வித்தைகளின் மூலமாகவே வென்றார்.

திருநாவுக்கரசரும் சூலைநோயும் பற்றிய வேறொரு கருத்தும் சமணர்களிடம் இருந்திருக்கும் எனத் தெரிகிறது. அதற்கு விடைகூறும் வகையில் மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் ஒரு செய்தியைக் கூறுகிறார் திருநாவுக்கரசர்.

"நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன வாசகம்
எல்லாம் மறந்தோம் அன்றே"

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. சமணசமயக் கொள்கை, தத்துவ உண்மை போன்றவைகள் பொதுவாக அறியத்தக்கவை. நூல்களைக் கொண்டேயும் அறியக் கூடியவை. ஆனால் தனி நிலையில், நூல்கள் முதலானவைகளால் உணரப் பெறமுடியாமல், வல்லார் வழிநின்று கேட்கக் கூடியவைகளாக இருந்த மறைமொழிகளையே எம்மை நினையச் சொன்ன வாசகம் என்று கூறினாராதல் வேண்டும். அவைகளைத் திருநாவுக்கரசர் சூலைநோய் வந்தவுடன் உபயோகப்படுத்தி இருக்கவேண்டும். பயன் பெறாமையால் அந்த வாசகங்களும் பயனற்றவை என்பதை நினைந்து அன்றே மறந்து விட்டதாகக் கூறுகிறார். சமண சமயத்தை விட்டு வரும் போதே அந்த வாசகங்களும் விடப்பெற்றுவிட்டன எனக் கொள்ளுதல் வேண்டும்.

இனித் திருஞானசம்பந்தர் வரலாற்றில் சைவசமண சமயங்களின் வாதம், வெற்றி போன்றவை இடம் பெறுகின்றன. ஆனால், அங்குள்ள அமைப்பு வேறு. நோய் நீக்கமே வாதத்தின் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. திரு

நாவுக்கரசர் வரலாற்றில் அமைத்துக் கூறிய குறை இங்கே தோன்றுவதற்கு இடமில்லாததாக வரலாறு அமைந்து விடுகிறது. திருஞானசம்பந்தர் வரலாற்றில் கூன் பாண்டிய னுக்கு வெப்புநோய் வருகிறது. இங்கே நோயைப் பற்றிய முடிவைச் சொல்ல வேண்டியவன் கூன்பாண்டியனே. ஆனல், அவன் சமண் சமயத்தில் இருக்கும் போது நோய் பற்றுகிறது. கூன்பாண்டியன் உடம்பில் உள்ள நோயை ஒருபக்கம் திருஞானசம்பந்தரும் மற்றைப்பக்கம் சமணர் களும் தத்தம் சமய வலிமையினல் தீர்க்க முயல் கின்றனர். இங்கே, கூன்பாண்டியன் நிச்சயமாகத் திரு ஞானசம்பந்தர்க்காகச் சமண் சமயத்தைக் குறை கூறான். இங்கேயுங் கூட, எடுத்த எடுப்பிலேயே நோய் தீர்த்தலுக்கு யார் காரணம் என்று கூற இயலாமை நேரிடவில்லை. முதலில் ஞானசம்பந்தர் பக்கம் உள்ள நோய் அதைவிட்டு நீங்கி, சமணர் ஏற்றுக் கொண்ட பக்கத்தைச் சார்கிறது. சமணர் பக்கம் மிகுவெப்பமும் சம்பந்தர் பக்கம் மிகு தண் மையும் இருப்பதை நேரில் அனுபவித்து உணர்கிறுன் கூன் பாண்டியன். சமணர்களால் இயலாத நிலையில் சம்பந்தர் நோய்நீக்கம் செய்கிருர். இங்கே முடிவு சொல்ல வேண்டிய வன் கூன்பாண்டியனுக அமைந்துவிடுகிருன். எனவே, திரு நாவுக்கரசர் வரலாற்றில் நேர்ந்த சிக்கல் இங்கே நிகழ வில்லை. பின்னர் வரும் வாதங்கள் கொள்கை பற்றிய வாதங்களே. முடிவினை உறுதிப்படுத்தும் பொறுப்பு இயற்கைப் பொருள்களாகிய நெருப்பையும் நீரையும் சார் கின்றன. அவை, திருநாவுக்கரசர் வரலாற்றில் அமைந்த நீற்றறையும், கல்லில் காட்டிக் கடலில் போட்டதையும் ஒரு வகையில் ஒத்தவைகளே. ஆனல், திருநாவுக்கரசர் மறு மாற்றத் திருத்தாண்டகத்தில், தாம் பெற்றுள்ள சிறப்புக் களையும், அவைகளை அளிக்கக்கூடிய காரணங்களையும் தெளிவாக எடுத்துக் கூறி விளக்குகின்றுர்.

(1) 'மாதேவா' என்று சொன்னல் வரும் அனுபவம்

(2) நமச்சிவாய என்னும் நாமப் பெருமை

(3) சிவன் என்று சொல்பவர்யாரோ அவர் என்னை உடையவர்.

*'மாதேவா'* என்ற சொல்லைச் சொன்னதும் பரம்பொருள் அனுபவம் வருகிறது என்று குறிப்பிடுகின்றுர்.

"வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப்பெற்றேம்
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றேம்
காராண்ட மழை போலக் கண்ணீர்சோரக்
கன்மனமே நன்மனமாய்க் கரையப் பெற்றேம்"

என்பது மறுமாற்றத் திருத்தாண்டகத்தின் மூன்றுந் திருப் பாட்டு. இத்தகைய அனுபவத்தையும் நீற்றறை அனுபவத் தையும் இணைத்துக் காணலாம்.

அடுத்து, 'நமச்சிவாய' என்ற சொல்லைச் சொல்ல வல்லோம் என்றுகூறி, அதனால்,

"செறுவாரும் செறமாட்டார் தீமைதானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற்செல்லோம்
நறவார் பொன்னிதழி நறுந்தாரோன் சீரால்
நமச்சிவாயஞ் சொல்ல வல்லோம்"

என்பது மறுமாற்றத் திருத்தாண்டகத்தின் நாலாந் திருப் பாட்டு.

அடுத்த நிலையில், சிவன் என்ற சொல்லைச் சொல்லுப வர் யாரோ அவர் என்னை உடையவர், எனக்கூறி, அவர் என் போன்றவர்களை உடைமைகளாக அமைத்து, ஏற்று, உடைமைகளுக்குச் சிறப்பளிக்கக் கூடிய வகையில் அரும் பெரும் தகுதி நிலையடைந்தவர் என்கிறார்.

சைவனுக ஒருவன் இருப்பதற்கும் வாழ்வதற்கும் உரிய தகுதி என்ன? இவ்வினாவுக்கு உலகளாவிய உயிரறமாக 'சிவன்' என்ற நாமத்தைச் சொன்னாலே சைவன் ஆகிறான் என்பதே விடை. அதற்கும் ஒருபடி மேலே சென்று, அப்படிச் சொன்னவனுக்கு நானும் என் போன்றவர்களும் உடைமைகள். உடைமைகளை வாழ வைத்து நன்னிலையில் நிறுத்தும் உடைமையாளர்கள் அவர்கள் என்றார். மேலும் விளக்கிக் கூறும் முறையில்

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

என்ற, அப்பன் நீ எனத் தொடங்கும் தனித் திருத் தாண்டகத்தின் பத்தாந் திருப்பாட்டினை அருளிச் செய்வா ராயினர்.

'கூற்றுயினவாறு' என்ற முதற்பதிகம் பாடியகாலத் துக்கும், 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற மறுமாற்றத் திருத்தாண்டகம் பாடிய காலத்துக்கும் உள்ள இடை வெளிக் காலம் மிகக் குறுகியதே. தருமசேனர் சைவம் சேர்ந்த செய்தி மிக விரைவில் பரவியிருக்கும். பல்லவ மன்னனுக்கு இச்செய்தி எட்டுவதற்குள் நாம் சென்று அரசனைக் கண்டு நிலைமையை மாற்றிச் சொல்லவில்லை யானல் நம் விருத்தி கெடும், மன்னன் மாற்றுச்சமயம் புகுவான். நம் சமயம் அழியும் எனக் கருதி விரைந்து சென்றுர்கள் சமணர்கள். பல்லவமன்னனும் அவர்தம் உரைகேட்டு, உடனே அமைச்சரை உள்ளிட்ட ஏவலர்களை அனுப்புகின்றுன். பதினைந்து நாட்கால எல்லை கூட முழுமையாக ஆகியிருக்க முடியாத அத்தகைய கால இடைவெளிக்குள், மறுமாற்றத்திருத்தாண்டகம் எடுத்து விளக்கும் அருளனுப நிலைகளைத் திருநாவுக்கரசர் எவ்வாறு பெற்றுர்? மிகக் குறுகிய கால அளவையில், மிகப்பெரிய அருளனுபவம் பெறுதற்குரிய வகையில் திருநாவுக் கரசருக்கு அமைந்த சாதனம் யாது? இதற்குரிய விடையைத் தெளிவாக அமைத்துக் காட்டுகின்ற சேக்கிழாரின் செயலே **சேக்கிழார் வகுத்த செம்மை** என்ற தலைப்பைப் பெறுவ தாயிற்று.

"மையல் துறை ஏறி மகிழ்ந்து அலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ் சிவசின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அரு உணர்வும்
ஈறின்றி எழுந் திருவாசகமும்
கையில் திகழும் உழவாரமுடன் கைத்தொண்டு
கலந்து கசிந்தனரே"

என்பதே அவர் மேற் கொண்ட செயல். மெய்மைத் திருப்பணி வாய்மை நெறி தவரு மனமும், ஈறின்றி எழும் திருவாசகமும், கையில் மேற்கொண்ட உழவாரமும் கொண்டு மெய்மைபொருந்திய திருப்பணி செய்யத் தொடங்கினர். மெய்மைத்திறம் மேவ அவர் மேற்கொண்ட

திருப்பணியே மிகக்குறைந்த கால அளவையில் உயர் அருளனுபவ இன்பம் கொடுப்பதாயிற்று எனத் திருத் தொண்டினை இடைநிறுத்திக் காரணமாக்கிச் செம்மைபெற வகுத்துக் காட்டினார் சேக்கிழார்.

திருஞானசம்பந்தர் செந்தமிழ் உறைப்புடன் பாட வல்லவர் என்று மதிப்பீடுசெய்தவர் திருநாவுக்கரசர். ஆனால், திருத்தொண்டின் உறைப்புடையவர் திருநாவுக் கரசர். கைத்திருத்தொண்டுசெய் கடப்பாடு என்பது திலகவதி அம்மையார் அமைத்துத் தந்த தொண்டு மரபு.

திருநாவுக்கரசரைப் பற்றி அப்பூதி அடிகள் ஆய்ந் துரைக்கும் சில அமுதமொழிகளையும் நாம் காணுதல் வேண்டும். அப்பூதியடிகள் வைத்த தண்ணீர்ப் பந்தலில் திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் என எழுதப் பெற்றுள்ளது. அதைக்கண்ட திருநாவுக்கரசர், நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் நும் பெயர் எழுதாது வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்ன எனக் கேட்டார். திருநாவுக்கரசர் என்ற பெயரை 'வேறொருபேர்' என்று சொன்னமைக்காக நிலையழிந்த சிந்தையரானார் விழுந்து புரண்டு அழுகிறார் அப்பூதியடிகள்.

> "நன்று அருளிச் செய்திலீர்" நாணில் அமண்பதகருடன்
> ஒன்றிய மன்னவன் சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
> வென்றவர் தம் திருப்பேரோ வேறொருபேர்?

என்று சினங்கொண்டார். பின்னரும்,

> "நன்மை உடையவர் கழற்கீழ் நயந்த திருத்தொண்டாலே
> இம்மையிலும் பிழைப்பதென எம்போல்வாரும் தெளியச்
> செம்மைபுரி திருநாவுக்கரசர்"

என்றும் திறனாய்வு செய்தவர் அப்பூதியடிகள். அதுவும் திருநாவுக்கரசரின் திருமுன்பிலேயே, அவர் யார் என்று தெரியாமல், அவர்தம் செயலைத் திறனாய்வு செய்கிறார்.

> "மன்னவன் செய்த சூட்சிகளைத் திருத்தொண்டின்
> உறைப்பினால் வென்றவர்"

> "திருத்தொண்டினால் இம்மையிலும் பிழைப்பது
> என என்னைப் போன்றவர்களும் தெளிந்து
> கொள்ளுமாறு செம்மை புரிபவர்"

என்ற இரண்டு செய்திகளை அமைத்துத் தந்துள்ளார். அவற்றுள் "திருத்தொண்டினால் இம்மையும் பிழைப்பது" என்பது ஆய்வுக்குரியது. இப்பிறவியில் வாழும் ஒருவர் தமக்கு முன்வினை காரணமாக வரும் இடையூறுகளையும், சூழ்ச்சிகளால் வரும் தொல்லைகளையும் பிழைபடுமாறு செய்து, அவற்றின் இடையூறுகளிலிருந்து பிழைத்து — தப்பித்து வாழமுடியும். அவ்வாறு, பிராரப்த கன்மத்தால் வரும் துன்பங்களையும் பிறவற்றையும் நீக்கி வாழ வைக்கவும் நல்லின்பத்தில் வாழவைக்கவும் உரிய ஆற்றல் திருத்தொண்டுக்கு மட்டுமே உண்டு. அவர் வென்று வாழ்ந்ததுடன் நாம் அவ்வாறு வென்று வாழ்வதற்காகவும் உரிய செம்மையைச் செய்து வாழ்பவர் — திருத்தொண்டினைச் செய்து வாழ்பவர் திருநாவுக்கரசர்.

எனவே, சைவ நலம் பெற்றதோடு, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகிய நிலையில் அந்தண்மையுடையவர் ஆகிறார். அதுவும், அப்பூதியடிகள் என்ற அந்தணர் போற்றும் அந்தண்மையாளர் ஆகிறார்.

### நாவுக்கரசரின் நால்வகை வெற்றி

சமண் சமயத்தவர் உரையின் அடிப்படையில், அவருரைத்தவாறே திருநாவுக்கரசரை நீற்றறையில் இடுகவென ஆணை அமைத்தன் மூலம் தம்மை முதற் கொடுமைக்கு ஆளாக்கிக் கொண்டான் பல்லவமன்னன். நாவுக்கரசரை நேரிருந்து பார்க்கும் நல்லூழ் இன்மை காரணத்தாலும், சமண் சமயத் துறவோர்தம் சொல், செயல் ஆகியவைகளை ஐயமுற்று நினைத்தல் ஆகாது என்னும் கொள்கையாலும் முதன் முறையேயன்றி நான்கு முறைகளிலும் தீமை செயற்கு ஆணையிடுவதன் மூலம் மன்னன் தம்மைக் கொடுமைக்கு ஆளாக்கிக் கொண்டு விடுகின்றான்.

திருநாவுக்கரசரும் மன்னவன் எதிர் சென்று உண்மையை உரைத்தல் வேண்டும் என நினைத்தாரில்லை. சிவபரம் பொருளிடத்துத் தம்மை முற்றாக ஒப்படைத்த நிலையில் நாதன் அடிமைத் திறம் பேணும் நமக்கு வேந்தனாவான் அவர் என்ற நிலையில் தம் அணுகுமுறையை அவர் மேற்கொண்டு விடுகிறார்.

சுட்ட கிளிஞ்சல்கள் நிறைந்து சுண்ணாம்புத் தழல் வீசும் அறையில் நாவரசரை உள்ளே தள்ளிப் பூட்டினர்.

அங்கிலையில் அப்பரடிகளுக்கு நீற்றறையானது சிவனுடைய திருவடி நீழலாய் இன்பம் தந்தது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது ஐந்தாந் திருமுறையில் 90 ஆவது பதிகமாக நின்ற தனித் திருக்குறுந்தொகையின் முதல் திருப்பாட்டு. இப் பதிகத்துள் இந்த முதல் திருப்பாட்டைத்தவிர ஏனைய பாட்டுக்களில் திருவடி அனுபவம் பற்றிய குறிப்பேதும் இல்லை.

மரபு வழியில் இந்நிகழ்ச்சியானது பேசப்பெறுவதும் அதற்குச் சான்ருக மேலே உள்ள திருப்பாட்டினைக் காட்டுவதும் தவிர, வேறு அகச்சான்று ஏதும் காணப்பெற வில்லை.

குற்றம் செய்தாரை நீற்றறையில் இடல் என்ற தண்டனைக் கொள்கைக்குரிய சான்றும் நமக்கு அருகியே கிடைக்கிறது. ஆனல், இத்திருப்பதிகத்தின் மூலம் மக்களையும் அவர்தம் வாழ்வையும் நெறிமுறைப் படுத்தும் முறையில் திருநாவுக்கரசர் பெரிதும் வற்புறுத்துவது மனத் திண்மை. இரண்டாவதாக அவர் வன்மையாக உரைப்பது **'நடலையல்லோம்'** என்பது.

"மண்பாதலம் புக்கு மால்கடல் மூடி மற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்
நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

என்பது கல்லே தெப்பமாகக் கொண்டு கரையேறி, திருப் பாதிரிப்புலியூரை அடைந்தவுடன், தோன்ருத்துணையாயிருந்த இறைவனைப் பாடி வணங்கும் பதிகத்தில் அமைந்த ஒன்பதாந் திருப்பாட்டு. கடவுட் சுடரான் என்பது சிவப் பிரகாசன் என்ற பொருளில் வந்தது.

அடுத்து, 'நடலையல்லோம்' என்பதை மறுமாற்றத் திருத்தாண்டகத்து முதல் திருப்பாட்டிலேயே அமைத் தருளுகின்ருர். நடலை என்பது கால் நடைகள் என்ற

பொருளில் வந்தது. நாமார்க்கும் குடியல்லோம், ஆனல், தாமார்க்கும் குடியல்லாச் சங்கரனுக்கே மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணேயே கருதினேம் என்று சொல் லும் போது, நாம் அவனுக்கு அடிமையேயாயினும் கால் நடை போன்ற அடிமையன்று, காரணகாரிய நிலேயில் அறியவும், ஆட்படவும், அவன் திருவடியை நின்று துய்க்க வும் ஆகிய உரிமைகளேக் கொண்டுள்ளோம் என்றும் அறிவுறுத்துகின்ருர்.

நீற்றறையில் அடிகளே ஏழுநாட்கள் பூட்டி வைத்திருந் தனர் என்பர். நிகழ்ச்சியின் உறுதிப்பாடு எவ்வாருக இருப்பினும், திருவடி அனுபவம் எவ்வாறு என்பதைச் செம்மையுறத் தெரிவிக்கும் திருப்பாட்டாக இருப்பது 'மாசில் வீணேயும்' — என்பதே.

வெம்மையுடைய நீற்றறையானது தண்மையுடைய பொய்கையாக இருந்தது.

சுண்ணும்பு எரியும் போது எழும் ஒலியும் ஒளியும் முறையே மாசில் வீணேயும் மாலேமதியமும் தரும் ஒலியையும் ஒளியையும் போல இருந்தன.

துய்க்கும் நிலேயில் நம்மால் பெரிதும் வரவேற்கப்படு வனவாகிய தென்றலும் இளவேனிலும் போல இருந்தது.

பொய்கையில் வண்டுபாடும் நிலே அமைந்து இனிமை உறுத்துதல் போல நீற்றறையிலும் இன்ஞெலி அனுபவம் இருந்தது.

திருவடியின்பம் என்பது ஐவகைப் புலன் அனுபவங் களுக்கும் இடந்தந்து துய்க்க வைக்கும் இனிய இன்ப அனுபவம் என எடுத்துக் காட்டினுர்.

மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் ''மாதேவா'' என்ற வாழ்த்தொலியை எழுப்பியவுடனேயே உள்ளம் நெக்கு நெக்கு உருகி வெளிப்படும் இன்ப அனுபவம் உண்டாகும் எனபதை வெளியிட்டுள்ளார்.

ஏழுநாட்கள் இவ்வனுபவத்தில் கழிந்தவையாக, மன்ன வனே அமணர்களே, அழைத்து, ''பாருமினி நீற்றறையை'' எனக் கூறினுன். அமணர்கள் எப்போதுமே திறக்க

வேண்டும் என்ற கொள்கையிலிருந்தாலும் பல்லவ மன்னன் உள்ளத்தில் ஓரளவு முதற்கொடுமையால் உறுத்தல் அமைந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

சமணசமயத்தில் முன் இருந்தபோது கற்ற மந்திர வித்தையினுல் இவ்வாறு பிழைத்திருந்தான் என மன்னவனிடம் கூறி, நஞ்சினை அமுதாகக் கொடுக்கும் இரண்டாம் கொடுமைச் செயலில் தலைநின்றனர். தமக்குச் சமணர்கள் நஞ்சினை உணவாகத் தந்ததையும், அதனை அமுதாக மாற்றிய அருள் திறத்தையும் நினைந்து இறைவனை நன்றியுணர்வுடன் உருகிப்பாடும் நிலையில்,

> "வஞ்சனைப் பாற்சோறுக்கி வழக்கிலா அமணர் தந்த
> நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே"

எனத் திருநனிபள்ளித் திருப்பதிகத்திற் குறிப்பிட்டுக் கூறுவாராயினர்.

திருநாவுக்கரசருக்கு நஞ்சும் ஊறு செய்யாமை கண்டு, பட்டத்து யானைக்கு வெறியூட்டி, அதனை ஏவி, மிதித்துக் கொல்லுமாறு செய்யவேண்டும் என மன்னனிடம் கூறி, அவ்வாறே செய்யும் செயற் பாட்டு நிலையையும் உண்டாக்கினர்.

பட்டத்து யானையானது கொலை வெறியுடன் தம்மை நோக்கி வரும்போது பாடிய பதிகமாகச் "சுண்ணவெண்" என்ற தொடக்கத்தினையுடைய திருப்பதிகத்தைக் காட்டுவது மரபு. இப்பதிகத்தில் வரும் திருப்பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும்,

> "உடையார் ஒருவர் தமர் நாம்
> அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை"

என்ற முடிநிலை அமைக்கப் பெற்றுள்ளது. மதயானையைத் தம்மேல் ஏவிய செயலுக்குரிய உண்மைத் தன்மையை அறிவிக்கும் முறையில் தனிக்குறுந்தொகைத் திருப்பதிகத்தில்,

> "மலையே வந்து விழினும் மனிதர்காள்
> நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
> தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
> கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே"

என வரும் திருப்பாட்டினை அமைத்துள்ளார் என்க் கொள்வது மரபு.

''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'' எனத் தொடங்கிய பதிகம் முடியும் வரையிற் கொலையானையும் செவி மடுத்தது.

"தண்டமிழ் மாலைகள் பாடித் தம்பெருமான் சரணைக்
கொண்ட கருத்தில் இருந்து குலாவிய அன்புறுகொள்கைத்
தொண்டரை முன்வலமாகச் சூழ்ந்து எதிர்தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களுங்காண இறைஞ்சி எழுந்தது வேழம்''

என்பது சேக்கிழார் (பெரியபுராணம் 1387) திருவாக்கு.

இனி, நாலாவது நிலையில் அமையும் கொடுமையே திருநாவுக்கரசரைக் கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்துதல். இவ்விடத்தில் பல்லவமன்னனின் ஆணையையே தெளிவாக அமைத்துக் காட்டுகின்ருர் சேக்கிழார்.

"ஆங்கது கேட்ட அரசன் அவ்வினை மாக்களை நோக்கித்
தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமமுறக் கொடுபோகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்து ஓர்படகில்
வீங்கொலி வேலையில் எற்றி வீழ்த்துமின் என்று விடுத்தான்''

என்பது பெரியபுராணப் (1393) பாட்டு.

நாவுக்கரசரைக் கல்லிற் பிணைத்துக் கடலில் வீழ்த்திய போது அவர் பாடியுய்ந்த திருப்பதிகம் நமச்சிவாயப் பதிகம். அப்பதிகத்து முதல் திருப்பாட்டிலேயே,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே''

என இச்செய்தியை எடுத்துக் கூறி அமைத்துள்ளார். தம்மைக் கல்லிற் பிணித்துக் கடலில் போட்டதையும், அப்போது தாம் எவ்வாறு உய்ந்தேன் என்பதையும் எடுத்துக் கூறும் வகையில்,

''கல்லினேடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என் வாக்கினல்
நெல்லும் நீள்வயல் நீலக்குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தே னன்றே''

என்ற திருநீலக்குடித் திருப்பதிகப் பாட்டினை அமைக்கின்றார். கல்லே தெப்பமாக அமைய, இன்றைய தென்னாற்காடு மாவட்டத்துக் கடலூர் என்னும் பெயருடைய திருப்பாதிரிப்புலியூருக்கு அண்மையில் ஒருகல் தொலைவில் உள்ள இடத்தில் கரையேறுகிறார். அப்பரடிகள் கரையேறிய காரணத்தால் அது அன்றுமுதல் இன்றுவரையில் கரையேறவிட்ட குப்பம் என வழங்கப் பெற்று வருகிறது. திருப்பாதிரிப்புலியூருக்கு வடக்கே இப்போது ஓடிக்கொண்டிருக்கும் கெடிலநதியானது அப்பரடிகள் காலத்தில் திருப்பாதிரிப் புலியூருக்குத் தென்பால் ஓடிக் கொண்டிருந்தது. கடலோடு கலக்கும் கெடிலநதியின் மூலமாகத் தெப்பம் வந்து கரைசேர்த்தது. கரையேறியவுடன் சென்று திருப்பாதிரிப்புலியூர் இறைவனைக் கண்டு வணங்கி, "ஈன்றாளு மாய்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளுகிறார். திருப்பாதிரிப் புலியூரே பாடலிபுத்ரம் எனநின்று, சமண்பாழிகளை உடையதாயிருந்தது. அங்கேதான் திருநாவுக்கரசரும் தருமசேனராக இருந்த காலத்தில் தங்கியிருந்தார். பல்லவமன்னன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவனாதலின், அப்பரடிகளைக் கல்லிற் பிணைத்து எறியப்பெற்ற கடலிடம் மகாபலிபுரத்தை ஒட்டிய வங்காள விரிகுடாப் பகுதியாக இருக்கவேண்டும் எனக் கொள்வர்.

பல்லவமன்னன் திருப்பாதிரிப்புலியூரை இடமாகக் கொண்டு ஆட்சி செய்தான் என மறை. திருநாவுக்கரசு அவர்கள் கொள்வதற்கு உரிய காரணம் தெரியவில்லை.

மேலே கூறப்பெற்ற நால்வகைக் கொடுமைகளிலிருந்தும் திருநாவுக்கரசர் எவ்வாறு மீண்டு உய்ந்தார் என்ற வினவை உடன் கொண்டு விளக்கம் கூறும் பணியில் அறிஞர் பெருமக்கள் முயன்றுள்ளார்கள்.

சென்னை சட்டக்கல்லூரிப் பேராசிரியராக இருந்த கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தாம் எழுதி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட "அப்பர் சுவாமிகள் சரித்திரம்" என்ற நூலில் இந்நான்கு கொடுமைகளிலிருந்தும் நாவரசர் எவ்வாறு உய்ந்தார் என்பதற்குக் காரணம் கூறுகிறார்.

(1) ஈசனடியார்க்கு ஏதும் இடையூறு விளையாது

(2) அப்பரடிகள் இறைவன் திருவடிக்கண் தன்செயலற்றுத் தானற்று முதல்வன் இணையடிகளில் ஏகமாய் நின்றே தனது முற்செய் வினைக்கு ஈடாகவரும் செய்திகளை நாயனார் உணர்ந்தமையால், அவர்க்கு நேர்ந்த பேரிடை யூறுகள் யாவும் சிவபோகமாகவே விளைந்தன.

(3) துரியநிலை கடந்து அதீதத் தன்மையுற்றுச் சிவபோகத்தேன் பருகுதலிலேயே ஆழ்ந்த சிந்தையுடையார் தமது வெளி யுடம்பிற்கு வரும் இடையூறுகளைச் சிறிதும் உணரார்.

(4) ஒரே உடம்புதானும் மனநிலை காரணமாகவும் திருவருள் இயக்கத்தாலும் மாறிப் பல இயல்புகளை எய்துதல் இய லாத தொன்றன்று.

மேலே குறிப்பிடப் பெற்ற நான்கு காரணங்களை அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

அடுத்து மறை. திருநாவுக்கரசு அவர்கள் தாம் இயற்றிய 'பெரியபுராண ஆய்வுரை' என்ற நூலிற் காட்டும் காரணங்கள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

(1) சிவபிரான்பால் ஆழ்ந்த அன்பினுல், நம்பிக்கை அளித்த உறுதிப்பாட்டால் திருநாவுக்கரசரை அந்நீற்றறை யாதோர் ஊறும் செய்திலது.

(2) அரசனுக்குள்ள ஆற்றல் — ஆணை அவன் பேரன்பைப் பெற்று, அவனுக்கு அணுக்கராயுள்ள அமைச்சர் படைத்தலைவர் ஆகியோர்கட்கும் உளவாவது போல, சிவனுடைய ஆற்றலுக்கு அடங்கி நிற்கும் நஞ்சு, அவனுக்கு நன்மை செய்யும் நஞ்சு அவன் அடியா ராகிய அப்பரடிகளுக்கும் தீங்கு செய்யாது நன்மை செய்தது.

(3) விலங்கினங்கள் தம்பார்வையாலேயே பிறஉயிர்களின் உள்ளங்களை, எண்ணங்களை எளிதில் உணர்ந்திடும் ஆற்றலை இயல்பாகப் பெற்றுள்ளன. யானைமேல் அன்பு கொண்டு பார்க்கும் போது அதுவும் அப்பரடிகள் உள்ளத்தை உணர்ந்து ஊறுசெய்யவில்லை; மாறுகப் பணிந்தது.

(4) கல்தெப்பமானதும் மிதந்ததும் இறைவன் அருளிப்பாட்டினு லேயே என்பதனை நீலக்குடியரன் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் என ஐயத்துக் கிடமின்றி அப்பரடி களே தெளிவாகக் கூறிவிட்டார். ஆகையால், வேறு காரணம் தேடவேண்டுவதின்று.

மேலே கூறப்பெற்ற இருபேராசிரியப் பெருந்தகைகளும் ஆய்ந்துணர்ந்து கூறிய எட்டுக் காரணங்களையும் மதித்துப் போற்றி ஏற்றல் சைவமரபு. அப்பரடிகளைத் திருவருள் காப்பாற்றியது என்றாலும் அதுவும் காரணகாரிய அமைப்பில் இணைத்துச் சிந்தித்து அறியக் கூடியதே என்ற வகையில் கூறப்பெற்ற காரணங்கள் சைவசமயத்தை அரண் செய்து காக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவைகளே.

மேலே குறிப்பிடப் பெற்ற இருபெருந்தகைகளும் கருதியமை போலவே சேக்கிழாரும் கருதியிருக்கிறார். நான்கு தீமைகளிலிருந்தும் தப்பி, வாழும் பேறு பெற்றமைக்குரிய ஒரே ஒரு காரணத்தை ஆராய்ந்து கண்டு, அக்காரணத்தை அப்பூதியடிகள் திருவாக்கினால் வெளிப்படுத்தியுள்ளார் சேக்கிழார்.

''நன்றருளிச் செய்திலீர் நாணில் அமண் பதகருடன்
ஒன்றிய மன்னவன் சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்''

என்ற பெரியபுராணத்து 1800 ஆம் திருப்பாட்டினால் சேக்கிழார் கருதும் காரணம் ஒன்றே ஒன்றுதான். அது திருத்தொண்டின் உறைப்பு என்பதே.

திருத்தொண்டின் உறைப்பு என்பதைத் தீமை நீக்கங்களுக்கு உரிய நேர்க்காரணமாகக் கொள்ளமுடியாது. திருத்தொண்டின் உறைப்பால் சிவன் அத்தீமைகளிலிருந்து காப்பாற்றினான் எனக் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்வது அறிவியல் வழிவந்த விளக்கமாகாது, நம்பிக்கை வழி வந்த விளக்கம் என்பதாகவே கொள்ள வேண்டிவரும்.

சேக்கிழார் 'திருத்தொண்டு' என்ற காரணத்தை அந்த அளவில் மட்டுமே விட்டுவிடவில்லை. அடுத்த திருப்பாட்டில், அப்பூதியடிகள் வாயிலாகவே,

''நம்மையுடையவர் கழற்கீழ் நயந்த திருத்தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பது என என்போல்வாரும் தெளியச்
செம்மைபுரி திருநாவுக்கரசர்''

என்று கூறுகிறார். சமணர்கள் செய்த தீமைகளைத்தான் மட்டுமே திருத்தொண்டால் வென்றார் என்பதன்று; இம்மை

யிலும் நம்மை வந்து தாக்குகின்ற முன்வினைப் பயன்கள், ஊழ் வினையின் தாக்கம் போன்றவைகளையும் நாம் பிழைக்கச் செய்து, அதிலிருந்து மீண்டு வாழமுடியும் என்ற கொள்கையை என் போன்றவர்களும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகவே, இன்றும் திருத்தொண்டு நெறியில் நிற்கிறார் திருநாவுக்கரசர் என்றும் விளக்குகின்றார்.

அப்பூதியடிகள் மூலமாகச் சேக்கிழார் கூறும் காரணம் ஒருபுறம் இருக்க, பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை கூறும் காரணங்களுள் முதலாவது சிவனடியார்களுக்குத் துன்பமே விளையாது என்பது. சிவனடியார்களுக்குத் துன்பம் விளையும், விளைந்திருக்கிறது. திருத்தொண்டர் புராணத்துள் வரும் அடியவர்களுக்குத் துன்பமே வரவில்லை எனநாம் முடிவு செய்தல் இயலாதது.

இரண்டாவதாக அவர் கூறுவது, துன்பே வந்தாலும் சிவனுடன் ஏகமாய் நிற்றலால், அவைகளும் சிவபோகமாகவே விளைந்துவிடும் என்பது. சிவத்துடன் ஏகமாய் நிற்றலின் மூலம் உயிரானது தனது முன்வினைகளை இப்பிறவியிற் பெறும் போது சிவபோகமாகவே அமைத்துத் துய்க்கும் என விளக்கம் தரின், திருநாவுக்கரசருக்குச் சமணர் தீமை செய்த காலத்தில் அவர் சிவனுடன் ஏகமாய் நிற்கவும் தன்னுடைய வினைகளையும் சிவபோகமாகத் துய்க்கும் நிலைபெற்றிருந்தார் என்பதாகும். அத்தகு வளர்ச்சி பெற்றிருப்பின் திருநாவுக்கரசர் வாழ்வின் பிற்பட்ட காலத்தே கயிலை செல்ல எண்ணுதல், வாய்மூர் இறைவன் தமக்குக் காட்சி நல்காமல் மறைத்தமை பற்றி வருந்துதல் ஆகியவை நேர்ந்திரா எனக் கொள்ளலே முறை. அதுவே கருத்தாயின்,

"அமணர் தந்த நஞ்சு அமுது ஆக்கினர்"

என்றும்,

"நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன்"

என்றும் தனிவினைகளை அமைத்துக் கூறவேண்டிய அவசியம் அப்பரடிகளுக்கு ஏன் வந்தது என்ற வினா எழும்.

மூன்றாவதாக அவர் அமைக்கும் காரணம் சிவானந்தத் தேன் பருகி, அதில் திளைத்துச் செம்மாந் திருக்கும் போது

புறவுடலில் நடைபெறும் அனுபவநிலைகளை அறியார் என்பதாம். மரபு வழியில் நின்று சிந்தித்தால் இந்த நான்கு நிகழ்விடங்களிலும் அப்பரடிகள் பதிகம் பாடியிருக்கின்றார். மேலும், கடலிலிருந்து கரையேறிய போது, நீலக்குடி அரன் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் என்றே வெளிப்படையாகப் புறவுடல் நிகழ்வை அமைத்துக் காட்டுகின்றார். திருநாவுக்கரசர்.

இனி, நாலாவதாக அவர் கூறும் காரணம் உடல் மாற்றம். திருவருள் இயக்கத்தால் அப்பரடிகளின் புறவுடல் திருவருள் மயமாக நிற்கும் மாற்றம் பெற்றுவிட்டது என்பதாம். திருவருளால் மாற்றம் பெற்ற உடல் திருநாவுக்கரசருடையது என்றால், அது கயிலை செல்லுங்கால் தேய்ந்து குறைவு பெற்றிருக்காது; வாய்மூரடிகளைக் காணாது வருந்தியிருக்காது. திருப்பைஞ் நீலியில் பசியால் வருந்தியிருக்காது.

மேலே கூறப்பெற்ற விடைகள் தத்துவப் பின்னணியை மூலமாகக் கொண்டு அமைக்கப் பெற்றவை. வரலாற்றடிப்படையில் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கேற்ப விடைகள் நான்காக அமைக்கப் பெற்றுள்ளனவாயினும் இரண்டு அடிப்படைக் கூறுகளைக் கொண்டு அவை மலர்ந்தன எனக் கொள்ளலாம்.

(1) உயிரானது சிவபரம் பொருளுடன் இரண்டற இணைந்து நிற்கும் அத்துவிதக்கலப்பில், உயிரனுபவம் என்ற நிலையில் தனி அனுபவம் ஏதும் நிகழுமா எனில், தன் செயலற்று, இந்தத்தான் அற்று நின்ற நிலையில், அவ்வுயிரில் காணப்பெறும் செயலெல்லாம் சிவன் செயலாகவே அமையும். அவ்வுயிர் உடலோடு அமைந்திருக்குங் காலத்தில் இத்தகைய அத்துவிதக் கலப்பு அனுபவம் வரும் போது, பசுகரணங்கள் என்று சொல்லப்பெறும் உயிர் நின்ற உடம்பானது, சிவன் நின்று தொழிற்படுத்துவதாகவே தொழிற்படும். சிவத்தோடு இணைந்து தான்கெட்டு நிற்பவர்களின் கருவிகரணங்கள் சிவ கரணங்களே.

இத்தகு நிலையை அப்பரடிகள் தம்முடைய வாழ்நாளில் பெற்று விளங்கினரா என்பது பின்னர் ஆராயப் பெற வேண்டிய ஒன்று. சமணர் செய்த நான்கு கொடுமைகளி

விருந்தும் அப்பரடிகள் எவ்வாறு நீங்கி வெற்றி பெற்றார் என்பதே இவ்விடத்தில் ஆய்வுக் குரியதாகின்றது. கல்லிற் கட்டிக் கடலில் இட்டபோது ''நீலக்குடியரன் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன்'' என்ற அப்பரடிகள் வாக்கே அமைந்த நிலையில் அவர் சிவபரம் பொருளுடன் ஏகத்வம் பெற்று, அத்வைதக் கலப்பில் திகழ்ந்து கொண்டிருப்பதாகக் கொள்ள முடியாது.

(2) அப்பரடிகள் உடல் திருவருள் தாக்கம் பெற்று, திருவருளுடம்பாக மாற்றம் பெற்று விட்டது என்பதும் மேலே குறிப்பிட்ட தத்துவ விளக்கத்தை ஒட்டி அமைகின்ற விடையே. அப்பரடிகளின் திருவுடல் திருவருள் நிலையமாக மாற்றம் பெற்றுவிட்டது எனின், அதற்குரிய அடிப்படைச் சாதனங்களாக அப்பரடிகள் மேற் கொண்டவை என்ன? என்ற வினா எழும். அருளுடம்பாக மாற்றம் பெற்றுவிட்ட பிறகு, மீளவும் புலாலுடம்பாக முன்னை நிலைக்குப் போகாது. அருளுடம்பாக மாறுவதற்கு முன்னர் நடைபெற்ற வினைகள், அருளுடம்பாக மாறியபின் நிகழா. அருளுடம்பாக மாறி நின்றதாயின் மின்னார் சூலமும் இடபக் குறியும் என்மேற் பொறித்துவை என வேண்டு கைக்குத் தேவையே இல்லை என உணர்தல் வேண்டும்.

அடுத்து, பேராசிரியர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் அமைக்கும் காரணங்களையும் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

சிவபிரானிடத்தில் நம்பிக்கை, உறுப்பாடு என்ற பண்புகளில் உறைத்து நின்றார் அப்பரடிகள். நம்பிக்கை நிலையில் உறைத்து நிற்கும்போது அவரை நீற்றறை ஒன்றும் செய்யவில்லை என்பதே. நம்பிக்கையின் அடிப் படையில் தீச்சட்டி ஏந்தும் போது, தீயானது சுடவில்லை என்பது பொருளன்று. தீயின் சூட்டை எதிர்த்து நின்று தாங்கும் அளவுக்கு அவருடம்பானது அவர்தம் நம்பிக்கை யால் வலிமை பெறுகிறது என்பதே. நம்பிக்கை ஒரு சிறிது தளர்ந்தாலும் உடனே தீக்காயங்கள் நேர்வதை இன்றும் காணலாம். நம்பிக்கையினால் தாக்கும் பொருளில், அதன் செயலில் மாற்றம் இல்லை. தாக்கப் பெறும் பொருள் தன்னை வலிமையால் மிகுவித்துக் கொள்கிறது என்பதே. ஆனால், அப்பரடிகள் வாழ்வில் தாக்கி அழிவு செய்ய வந்த

பொருள்கள், தம்முடைய தன்மையை மாற்றிக் கொண்டு, அப்பரடிகளுக்கு நன்மை செய்தன என்பதே.

நீற்றறை வெம்மையைக் கொடுக்க அப்பரடிகள் நம்பிக்கையால் அவ்வெம்மையைத் தாங்கியிருந்தார் என்பதன்று நிகழ்ச்சி. நீற்றறையானது பொய்கையாக நின்று இன்ப அனுபவம் தருகிறது. நஞ்சு அமுதாக மாறி நின்று தம் பணியைச் செய்கிறது; கொல்லும் யானை வணங்கிச் செல்கிறது. கடலினுள் அப்பரடிகளை ஆழ்த்த வேண்டிய கருங்கல் தெப்பமாக நின்று அவரைக் கரை சேர்க்கிறது. இத்தகைய மாற்றம் தனக்கு அயலான பொருள்களில் நிகழ்கிறது என்பதை நோக்கினல், அப்பரடிகளின் நம்பிக்கை அவருக்கு அயலான பொருளிடத்தில் மாற்றத்தை உண்டாக்குமா? என்பதே அடிப்படை வினு.

சிவனுக்கு நஞ்சு தீங்கு செய்யாது. அவ்வாறே சிவன் அடியவர்களிடத்திலும் நஞ்சு தீமை செய்யாது என்பது அடுத்த விடை. நஞ்சானது இவர் சிவன் அடியவரா அல்லாதவரா என்று ஆய்ந்து செயற்படுதற்குரிய அறிவுப் பொருளன்று. அப்பரடிகளும் நஞ்சு என்னை ஒன்றும் செய்யாது; ஏனெனில், யான் சிவனுடைய அடியவன் என்று சொல்லவில்லை. வஞ்சனையாகப் பாற்சோற்றுடன் கலந்து அமணர் தந்த நஞ்சினை அமுதமாக மாற்றி என்னைக் காத்தார் நனிபள்ளி அடிகள் — நஞ்சமுது ஆக்குவித்தார் — என்பதே அப்பரடிகள் கூறிய விளக்கம்.

அடுத்ததாக வருவது விலங்குகளின் மனேதத்துவக் கொள்கை. விலங்கானது எதிர்நிற்பவர்களின் உள்ளத்துணர்ச்சிகளைத் தெளிவாக விளங்கிக் கொள்கிறது என்பது ஆசிரியர் தரும் விளக்கம். அவைகளுக்குத் தீங்கு செய்வதில்லை என்று உறுதிகொண்டு அவைகளிடம் பேரன்பு கொண்டால் அவைகள் தீமை செய்வதில்லை; மாருக அன்பு காட்டுகின்றன என்பது அடுத்து வரும் விளக்கம். அப்பரடிகள் அனைத்துயிர்களிடத்திலும் அன்பு கொண்டவர்; யானையையும் கண்டு அஞ்சியிருக்க மாட்டார். மாருக அன்பு காட்டியிருப்பார். அப்பரடிகள் அன்புடன் இருப்பதைக் கண்ட யானையும் பெருமானை அன்புப் பார்வையால் பார்த்து மகிழ்ந்து வாளா நின்றது. பார்த்து, மகிழ்ந்து நின்ற செயலைச் சேக்கிழார் வலம்

வந்தது, தாழ்ந்து இறைஞ்சியது என்று இனிமையமையக் கூறியுள்ளார் என்பதே. மேலும், யானையைக் கண்டதும் அப்பரடிகள் சிவனுடைய வீரச் செயல்களை நினைந்து அஞ் சாமையை வரவழைத்துக் கொள்கிறார். வீரத்தை நினைத்த நெஞ்சம் பின்னர்ச் சிவபிரான் திருவுருவில் அன்பால் ஆழ்ந்து விடுகிறது. அவ்வளவில் எதிர் நிற்கும் யானையை அவர் மறந்தார்; யானையோ அப்பரடிகள் அன்பில் திளைத் திருப்பதைக் கண்டு, தானும் அன்பால் அவர்முன் மகிழ்ந்து நின்று சென்று விடுகிறது என்பதே.

இங்கே, அப்பரடிகள் முன் கொண்டு வரப்பெறும் வேழம் கொலை செய்வதற்கென்றே பழக்கப்படுத்தப் பெற்ற களிறு. மேலும், அதற்குக் கொலை செய்யும் வெறியை உண்டாக்கி அழைத்து வருகிறார்கள். 'கோபாதி சயம்' என்பது அதன் பெயர் என்று கருதப் பெறுகிறது. கூடத்தைக் குத்தி, ஒரு குன்றமெனப் புறப்பட்டு, யானை வேடத்தில் வரும் கூற்றுவன் என வருகிறது என்பது சேக் கிழார் வாக்கு. அப்பரடிகளும் அந்த யானையைக் 'கொலை செய் யானை' என்றே விளக்கமுறக் கூறுகிறார். எனவே, அப்பரடிகளுக்கு முன்கொண்டு வந்து நிறுத்தப் பெற்ற யானையானது இயல்பான யானை எனக் கொண்டு விளக்கம் செய்ய இயலாது. மேலும், உடனிருப்பவர்கள் அதனைக் கொலை செய்யுமாறு தூண்டிக் கொண்டே — வெறி யேற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அப்பரடிகளும் அனைய வர்க்கும் அறிவுரையாக அமைத்துக் கூறும் முறையில், ஈசன் தமர் நாம் என்ற எண்ணத்தை மிகுதிப் படுத்துங்கள்; ஈசன் தமராகிய நமக்கு அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை எனக் கூறி, நிலையிற் கலங்கக் கூடாது; அஞ்சாமையுடன் இருக்க வேண்டும் என்ற அளவே அமைத்துக் காட்டுகின்றார். எனவே, அப்பரடிகளும் பேரன்பு காட்டி அந்தயானையைத் தன் வயப்படுத்தும் முயற்சியில் நின்றதாகத் தெரியவில்லை; வந்த யானையும், அப்பரடிகள் காட்டும் பேரன்பின் திறத்தில் மகிழ்ந்து நின்றது என்பதாகத் தெரியவில்லை; ஏனெனில் கொலைக் குரிய களிறே அது. மேலும், சேக்கிழார் அருளிய யானை வலம் வந்தது, வீழ்ந்து வணங்கியது ஆகியவைகளை நயச் சுவை படக் கூறிய கூற்றாகவே ஏற்கவேண்டும் என்பது ஆசிரியர் கருத்து.

அடுத்துவரும் கல் தெப்பமாகிய நிகழ்வில், ஆசிரியர் யோக சத்தி, சித்து விளையாட்டு என்பன போன்றவை களின் அடிப்படையிற் கூறப்பெறும் விளக்கம் பொருந்தாது என்றும் அப்பரடிகள் போன்ற அருளாளர்கள் அவ் வாறுள்ள செயல்களைச் செய்யார் என்றும் மறுத்திருப்பது அனைவரும் போற்றுவதற்குரிய கொள்கையாகும். "அரன் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன்" என்று அப்பரடிகளே தெளிவாகக் கூறிவிட்ட பிறகு, வேறு சான்றுகளை நாம் அமைத்து விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி விடுகின்றார்.

நாற்பெருந் தீமைகளை அப்பரடிகள் எவ்வாறு சந்தித் தார்; வெற்றிபெற்றார் என்பது ஓரளவு முன்னேயும் விளக்கப் பெற்றுள்ளது. சேக்கிழார் அப்பூதியடிகள் வாக் காக அமைத்துக் காட்டும் காரணம் "திருத்தொண்டின் உறைப்பால் வென்றவர்" என்பதே.

திருநாவுக்கரசரே இதற்குரிய விளக்கத்தை அளிக்கும் முறையை மீளவும் இங்கே இணைத்துச் சிந்திக்க வேண்டும். மறுமாற்றத் திருத்தாண்டகமே அவரது அருள்நிலை போன்ற பல்வகை நிலைகளையும் எடுத்து விளக்கும் பதிக மாக அமைகிறது.

திருநாவுக்கரசர் முதன்முதல் அருளிய கோதில் திருப் பதிகத்துத் தொடக்கம் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்பது. அது சூலைநோயையும் அதன் தாக்கத்துக்குள் ளான தம்மையும் உளப்படுத்திக் கூறிய உரையன்று. உலகில் வாழும் உயிர்களுக்கு அமைத்துக் கொடுக்கப் பெற்ற இவ்வுலகம் இறையருளின் விளக்கமாகத் திகழ் வது. அவற்றுள், ஒன்று மற்றொன்றற்கு முரணானதாக, ஒன்று மற்றொன்றை எதிர்ப்பதாக ஆகிநின்ற முறையை விலக்கவேண்டும் எனக் கேட்கிறார். எனவே, இது உலக ளாவிய அனைத்துயிரும் பிறபொருள்களும் இணைந்து வாழும் நிலையை — ஒன்றோடு ஒன்று முரண்பட்டு அழித்துக் கொள்ளும் நிலையை மாற்றி அவை தம்முள் இணைந்து வாழும் நிலையை உண்டாக்கி யருளவேண்டும் என்பதே.

அடுத்த நிலையில், அப்பரடிகள் அருளிய பதிகம் மறு மாற்றத் திருத்தாண்டகம். முதற்பதிகத்துக்கும் மறு

மாற்றப் பதிகத்துக்கும் இடையில் உள்ள இடை வெளியில் அப்பரடிகள் பெற்ற பயிற்சி, அதனுல் பெற்ற அருளனுபவம் ஆகியவைகளை எடுத்து விளக்கும் முறையில் மறுமாற்றத் திருத்தாண்டகம் அமைகிறது. இடைவெளிக் காலத்தில் மெய்மைத் திருத்தொண்டில், கைத்திருத் தொண்டில் நிற்கிருர். திலகவதியார் அமைத்துக் காட்டிய வழியில் நிற்கிருர். மனம், மொழி, மெய் என்ற மூன்றற்கும் தனித்தனித் தொண்டினை அமைக்கிருர். இம்மூன்றும் ஒருவகை மூல முழுமைப் பொருளைச் சார்ந்து நிற்க, அதனை மெய்மைப் பொருளென ஏற்றுத் தொண்டு செய்கிருர். அப்பொழுது அம்மூலப்பொருள் மூன்ருக நின்று அனுபவப் படுகிறது.

மாதேவா, மாதேவா என்று வாழ்த்த முற்பட்டதும் உடலும் உள்ளமும் கரைந்து கரைந்து உருக ஒருவகைப் பேரானந்த அனுபவநிலை அமைந்து விடுகிறது. இது மெய்யானது மெய்மைத் தொண்டின் நிலைத்து ஈடுபட்டதன் பயனுக, இந்த உடலானது மெய்மைப் பொருளனுபவத்தை அடைந்து இன்புறுகிறது. உடல் அந்த இன்பத்தை நன்கு துய்க்குமாறு உள்ளமும் உயிரும் கரைந்து கரைந்து நின்று அந்த அனுபவத்துக்குத் துணை செய்கின்றன. இது மெய்மைத் திருத்தொண்டால் விளைந்த உடலனுபவம்.

"நமச்சிவாய என்பது இரண்டாம் நிலைத் திருத்தொண்டனுபவம்
நமச்சிவாய என்பதைச் சொல்லும் வல்லமை"

பெற்றேன். மனம் சிவபரம் பொருளில் ஒடுங்கி நிற்க, வாயானது அதனை வலிமையுடன் சொல்ல, மெய்யானது அதனைத் தன்னுடைய உடற் கவசமாக ஏற்றுக் கொண்டு, ஏனைய திருத்தொண்டுகளைச் செய்யும் முறையே திருவலகிடுதல், திருமெழுக்கிடல் போன்ற தொண்டுகளுடன் உள்ளத்தொண்டாகிய நமசிவாயத் தொண்டும் இணைந்து நிற்கிறது. அதனுல் வரும்பயன். அனைவரும் நமக்கு உறவாக வந்து அமைகிருர்கள். நாம் கட்டியிருப்பது கோவணமானுலும் அனைத்து வழிப்பட்ட மக்களையும் மற்றை உயிர்ப் பொருள்களையும் நமக்கு உறவாக அமைக்கும் ஆற்றல் மேலே குறிப்பிட்ட மந்திரத்தோடு இணைந்த திருத்தொண்டின் பலனுக அமைகிறது.

அடுத்து, செறுவாரும் செறமாட்டார்
தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே

என்ற இரண்டு பயன்களையும் தருகிறது. அழிக்க வருப வர்கள் அழிக்கமாட்டார். தீமை தரும் தன்மையுடைய பொருளும் நன்மையாக மாறி நின்று சிறப்பளிக்கும் நிலை பெறும் என்று எடுத்துக் காட்டுகிறார்.

மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் மூன்றாவது திருப் பாட்டில் மேலே கூறிய செய்திகளைக் கூறிய அப்பரடிகள், நாலாந் திருப்பாட்டில்,

என்றும் யாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிர் ஆவாரும் இல்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்சிவபெருமான்
திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோம் அல்லோம்
உறுபிணியார் செயல் ஒழிந்திட்டு ஓடிப்போனார்

எனப் பலவற்றையும் அடுக்கிக் கூறினார். என்றைக்கும் யாரிடத்திலும் நாம் தோற்றுப் போதல் என்பது இனி இல்லை; இவ்வுலகில் எமக்கு எதிராக நிற்பவர் யாரும் இல்லை என்று கூறியபின் இறுதியில் உறுபிணியார் செறல் ஒழிந்திட்டு ஓடிப் போனார்; வந்த பிணியும் என்னை அழிக்க வந்த நோயும் அழிக்க முடியாமல் என்னை விட்டே ஓடிவிட்டது என நமச்சிவாயத்தோடு இணைந்து செய்த தொண்டின் பயன் கூறினார்.

மூன்றாவதாக, 'சிவன்' என்ற சொல்லைச் சொல்லும் அடியவர்கள் இவ்வுலகில் எம்மைக் காக்கும் தொழில் மேற் கொண்டுள்ளார்கள். அவர்களிடத்தில் யாங்கள் அடைக் கலம் என நின்றுள்ளோம். அது எங்களுக்கு இறுதி நிலைக் காப்பாக அமைகிறது.

மேலே குறிப்பிடப் பெற்ற மாதேவா, நமச்சிவாய, சிவன் என நின்ற பொருள் பற்றிய பிறசொல்லும், சிவனும் என இவ்வாறு மூன்றாக வகுத்து, அதற்கேற்ப உடல், மனம், மொழி என்ற மூன்றையும் இணைத்துத் தொண்டாற் றினார் அப்பரடிகள்.

மூன்றாக நின்ற நிலைகள் ஒன்றேதான். மூன்றாகப் பிரித்து விளக்குகிறார் எனக் கொள்ளவேண்டும். அவ்வகை யில் நீற்றறையானது 'மாதேவா' என்று சொன்ன சொல்லில் அமையும் இறைநிலை அனுபவத்தைத் தருகிறது.

அதற்குத் துணையாக நின்ற 'நமச்சிவாய' என்பதால் தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே என்ற கொள்கையின் படி நீற்றறையானது திருவடியாக மாறி நிழல் தருகிறது.

சிவபெருமானுக்கே ஆட்பட்டு, அவனுக்கே அடிமை என நின்று திருத்தொண்டைச் செய்தேன் ஆனமையின் அவனே நேர்நின்று நஞ்சை அமுதாக மாற்றினன். நமச்சிவாய என்று சொன்னதாலும் என்னை அழிக்கவந்த நஞ்சு அழிக்காது போய்விட்டது என அப்பரடிகளே கூறும் விளக்கத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

அனைத்துயிர்களையும் உறவாக்கி, பகை நீக்கி, தீமை நீக்கி நன்மையாகச் சிறக்க வைத்து வாழ் நிலைப்படுத்தும் தன்மை 'நமச்சிவாய' என்பதற்கு உண்டு. அனைத்துயிர்களையும் உறவாக்கும் நிலையில் யானையும் உறவாக நின்றது. "செறு வாரும் செறமாட்டார்" என்ற கூற்றின்படி அழிப்பதற்காகவே வந்தவரும் அழிக்கமாட்டார் எனக் கொண்டு, பின்னர், தீமை தானும் நன்மையாய்ச் சிறப்பதே என்ற வகையில் தீய பண்பு நீங்கிய யானையானது நன்மையை மிகுவித்துக் கொள்ளும் நிலையில் அப்பரடிகளை வலம் வந்து, காலில் வீழ்ந்து பணிந்து சென்றது என்ற நிகழ்வு அமைகிறது. இதுவும் நமச்சிவாயப் பயனே. இங்கே 'தமராவார்' என்ற உறவு நிலையும் உடன் சிந்திக்கப் பெற்றது. அதனுலேயே, "உடையார் ஒருவர் தமர் நாம்" என்பதை எல்லாத் திருப்பாட்டுக்களிலும் அமைத்துக் காட்டினர்.

இனி, நாலாவதாக நின்ற கல் தெப்பமாதல் என்ற நிகழ்வில் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் என அவரே கூறும் காரணம் ஏற்புடையதே.

ஆனல், அடுத்த ஒன்றையும் இங்கே இணைத்துச் சிந்திக்க வேண்டும். 'சிவன்' என்று சொல்பவரின் தலைமைக் காவல். சிவன் என்று சொல்பவர் தலைமைக் காவல் செய்திட, அவரின் காவலில் உள்ளோம் என்பது சிவனடியவர்களை மூலமாக வைத்து, அவர்கள் அமைத்த வழியில் யாங்கள் நின்றும் திருத்தொண்டு செய்தும் வருவதால் யாங்கள் சைவநலம் பெற்றவர்கள்.

எனவே, மறுமாற்றத் திருத்தாண்டகத்தை முழுமையாக ஆழ்ந்து சிந்திப்போமானல் சைவ அடியவர்களை

முன்னிட்டுக் கொண்டு மேற்கொள்ளுகின்ற திருத்தொண்டின் நிலையையும் நிறைமொழி அமைப்புக்களுடன் இணைந்து நின்ற திருத்தொண்டின் பெருமையும் பயனும் எவ்வாறு அமைகின்றன என்பதையும் திருவருள் நெறிநின்று உணரலாம். இவற்றின் சுருக்கமாகவே, சேக்கிழார் அப்பூதியடிகள் வாக்காக அமைத்து, சமணர் செய்த சூழ்ச்சிகளைத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் திருநாவுக்கரசர் என அமைத்துக் காட்டினர் என்பதையும் உளங்கொள்ளவேண்டும்.

மாதேவா எனத் துய்த்தும், நமச்சிவாய என அரற்றியும், சிவன் என்பதன் செம்மையுள் நின்றும் மெய்மைத் திருத்தொண்டினை ஆற்றிய முறையில் அவர்தம் திருமேனி வடிவழகு எவ்வாறு அமைகிறது என்பதையும் சேக்கிழார் அமைத்துக் காட்டியுள்ளார். திருவதிகையிலிருந்து பல்லவ மன்னன் ஏவலர் அழைக்கச் சென்று, மீளவும் திருவதிகைக்கு எழுந்தருளும் திருநாவுக்கரசரைத்

> "தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
> நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
> பாய்வது போல் அன்புநீர் பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
> மேய செவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

என்பது (பெரியபுராணம் 1410) சேக்கிழார் திருவாக்கு.

**பல்லவமன்னன் தாமே சைவனுதல்**

திருநாவுக்கரசர் கல்லே தெப்பமாகக் கொண்டு கரையேறிய செய்தியைச் செவிமடுத்த பல்லவன் அமணர்தம் குருமார்கள் கூற்றினை உண்மையென நினைந்து அதனல் திருநாவுக்கரசருக்குச் செய்த கொடுமைகளை நினைந்து வருந்தி, திருவதிகை சென்று திருநாவுக்கரசரைப் பணிந்து, சிவம் பெருக்கும் சைவநெறியில் தம்மை இணைத்துக் கொண்டான். பின்னர்ப் பாடலிபுத்திரத்தில் இருந்த சமண் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்துக் கொண்டுவந்து திருவதிகையில் 'குணபரஈச்சரம்' என்ற கோயிலைக் கட்டினன்.

சைவசமயத்திலிருந்து சமணம் சார்ந்து, அங்கே, சமண் சமயத் தத்துவ நூல்களை ஆய்ந்து தெளிந்து, நுண்ணிதின் உணர்ந்தும் உணர்த்தியும் நின்ற காரணத்தால் சமண்

சமயத் தலைமை பூண்டு தருமசேனரானுர். அவரே சைவம் சார்ந்தபோது, சமண் சமயத்தைப் பற்றி எங்கேயும் இழித்துப் பேசவில்லை. சமணர்கள் பொய்மை பேணு கின்ருர்கள்; சமணர்கள் தங்களுடைய கூடாவொழுக்கச் செயல்களால் சமணத்துக்கு ஊறு தேடிவைத்தார்களே யன்றி, சமணத்தால் சமணர்கள் கேடெய்திஞர்கள் இல்லை.

திருநாவுக்கரசரும் பல்லவமன்னனைச் சைவம் சார வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவில்லை. பல்லவமன்ன னையேயன்றி வேறு யாரையும் சைவசமயம் திரும்புமாறு கேட்டுக் கொள்ளவும் இல்லை.

உலகத் துயிர்களெல்லாம் அறநெறியில் வாழ வேண்டும் என்ற கருத்தில் அவைகளெல்லாம் படிநிலை வளர்ச்சியுற்றுச் சிறக்கவேண்டும் என்ற வகையில் திருத் தொண்டு நெறியை உலகத்துயிர்கள் முன்னேற்றங் கருதி மேற்கொண்டு, செயலாற்றிய வகையில் திருநாவுக்கரசர் அந்தணர் என நின்ருர். திங்களூர் அப்பூதியடிகள் என்ற அந்தணராற் பாராட்டப் பெற்றவர் ஆதலின், அவர் அந்தணரும் போற்றும் அந்தணராகின்ருர் எனக் கொள் ளுதல் வேண்டும்.

*முடிப்புரை*

அந்தணர்தம் தவக்குலத்துத் தலைமை தாங்கி நின்ற அப்பூதி என்னும் அந்தணரால் போற்றி வணங்கப் பெற்ற திருவுடைய அந்தணராகிய திருநாவுக்கரசரின் அந்தண்மை என்பதை மையக் கருத்தாகக் கொண்டு சிவநலம், சைவ நலம் என்பன எத்தகைய அனுபவ விளக்கங்களைக் குறித் தன என்பதை விளக்கும் வகையில் சிவப்பிரகாச அடிகள் அமைத்துக் காட்டிய "கூர்ந்து மிளிர்தரு நாவரசே; உமக்கே வரும் சைவநலம்" என்ற வரியில் குறிக்கப் பெறும் கூர்தல் என்பது உள்ளது சிறத்தல் என்ற கொள்கையின் வண்ணம், உயிர்களின் படி முறை வளர்ச்சி முறையில் அமைந்துவிட்ட ஒருவகைத் தேக்கத்தினை நீக்குதல் என்ப தாகவும் உயிர்கள் இனிமேற் பலபிறவிகள் எடுத்து வளர்ச்சி பெறவேண்டியவைகளை, பலபிறவிகளை எடுத்துப் பெருமல் இப்பிறவியிலேயே பெற்றுச் சிறத்தல் என்பதே மிளிர்தரல் என்பதாகவும் கொண்டு, இவ்விரு கூறுகளும் இணைய நின்ற நிலையே சைவநலம் என நிறுவப் பெற்றது.

திருஞானசம்பந்தரால் பெண்பனையாக ஆக்கப்பெற்ற நிலையில் அம்மரங்கள் சைவநலம் பெற்றன.

திலகவதியார் முன்பிறக்க, திருநாவுக்கரசர் தம்பியாராகப் பிறக்க, திலகவதியார் சிவநலம் பெற்ற தொண்டராக நின்றூர். திலகவதியாரால் அனைத்து வளங்களும் வழங்கப் பெற்ற நிலையில் திருநாவுக்கரசர் சைவநலம் பெற்றவராக அமைகின்றூர். சைவநலம் என்பது சிவனடியார்களால் வழங்கப் பெறுவதாய், தேக்கநீக்கமும் ஆக்கப் பேறும் இணைந்ததாய் நின்ற பேரின்ப வாழ்வு என்பது விளக்கப்பெற்றது.

அறவாழ்வும் சமயவாழ்வும் எந்த ஒரு அடிப்படை நிலையில் வேறுபடுகின்றன என்பதை எடுத்துக் காட்டி, தொடக்கத்திலேயே சமய வழிப்பட்டதாய், தம்கையாலேயே செய்யப் பெறுவதாய் அமைந்த திருத்தொண்டினை நேர்நின்று கடைப்பிடித்த திலகவதியார் தொண்டு நெறியும்; அறத்தின் வழிப்பட்டதாய், சமூக நலத்தை உள்ளடக்கியதாய் அமைத்து எடுத்துக் கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசரின் தொண்டு நெறியும் எவ்வாறு அமைகின்றன என்பதும்; திருத்தொண்டின் அமைப்பும், திலகவதியார் முற்பட நிற்க, திருநாவுக்கரசர் பிற்பட நிற்க அமைந்த பிறவி அமைப்பும் விளக்கப் பெற்றன.

அறவாழ்வின் முடிந்த முடிநிலை கொல்லாமை என நிற்பினும் அது வாய்மையுடன் இணைந்தால் தான் முழுமை பெறும். அறவாழ்வில் நடுநிலைமை என்ற ஓர் அறம் உண்டு. நடுநிலையில் நிற்றல் என்பது செம்பொருளில் தோய்ந்து நிற்றல் என்பதாகும். அறவாழ்வில் அமையும் இருமை நிலையை உள்ளவாறு அறிந்து அறவாழ்வை மேற்கொள்ளுவதற்கு நடுநிலைமை என்ற அறத்தின் மூலம் செம்பொருளில் நிற்றல் வேண்டும் எனத் திருக்குறள் அமைக்கிறது. இருமைக்கு இடைநின்ற செம்பொருளில் நிற்றலே வாய்மை எனப்பெறுகிறது. வாய்மையுடன் இணைந்த கொல்லாமை என்பதே சமயவாழ்வு. வாய்மையுடன் இணைந்த கொல்லாமை என்பதே திலகவதியார் நின்ற சமயவாழ்வு. கொல்லாமை முதலிய அனைத்து அறங்களையும் மேற்கொண்ட அறவாழ்வு நிலை தம்பியாருடையது.

தம்பியாரைச் செம்பொருள் உணர்வுடன் வாய்மையின் இணைந்த கொல்லாமையில் நிலை நிறுத்தியவர் திலக

வதியார். தம்கையால் செய் திருத்தொண்டே அத்தகு நிலையை அளித்தது.

வாய்மையுடன் இணைந்த கொல்லாமையே அந்தண்மை. திருத்தொண்டு நெறியில் இது மெய்மைத் திருத்தொண்டின் பயனாகும். தமக்கையார் மூலமாகச் சைவநலம் பெற்ற திருநாவுக்கரசர் தாம் மேற்கொண்ட மெய்மைத் திருத்தொண்டின் மூலமாக அந்தண்மை பெறுகிறார். அந்தண்மை பெற்ற நிலையில் மலரும் பதிகமே மறுமாற்றத் திருத்தாண்டகம். மெய்ம்மைத் திருத்தொண்டினால் விளைந்த ஏற்றமிகு சமய வாழ்வின் தன்மைகளை மறுமாற்றத் திருத்தாண்டகம் எவ்வாறு விளக்குகின்றது என்பதும் விளக்கப் பெற்றது.

மாதேவா, நமச்சிவாய, சிவன் என்ற மூன்று சொற்களையும் திருத்தொண்டில் ஈடுபடுத்தி நின்றால் வரும் அருளியல் அனுபவம் என்ன என்பதும் சமணர்களால் இழைக்கப் பெற்ற நால்வகைத் தீங்குகளை நாவுக்கரசர் எவ்வாறு வென்று சிறந்தார் என்பதும் விரிவும் விளக்கமும் அமைய எழுதப் பெற்றன.

சமணர் செய்த சூழ்ச்சிகளைத் திருத்தொண்டின் உறைப்பால் வென்றார் என்பது சேக்கிழாரின் உள்ளக் கிடக்கை. அதனை அப்பூதியடிகள் புராணத்தில் அப்பூதியடிகள் வாக்காகவே சேக்கிழார் அமைத்துக் காட்டுகின்றார். மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் உள்ள விளக்கங்களையும் இணைத்து ஆய்வு செய்யப் பெற்றன.

மாதேவா, நமச்சிவாய, சிவன் என்ற சொற்களையும் பயிற்சியில் நிறுத்தி, மெய்மைத் திருத்தொண்டில் உறைப்புடன் நின்றவர்க்கு எத்தகைய வடிவமைப்பு அமையும் என்ற விளக்கத்தையும் அமைத்து, சமணர் சூழ்ச்சிகளை வென்றபின் திருவதிகையை அடையும் போது அவருக்கு அமைந்ததாக மக்களால் அறிந்து அனுபவிக்க நின்ற திருவுருவமே எனவும் அதுவே அந்தண்மை தழுவிய அழகிய திருவுருவம் எனவும் கொள்ள வேண்டும் என்பது விளக்கி அமைக்கப்பெற்றது.

# 5. சிவகதிச் செலவில் திருநாவுக்கரசர்

*முன்னுரை*

*சிவன் எனும் ஓசையல்லது திருநின்ற செம்மை உளதே என்று திருநின்ற செம்மையை வாழ்முதற் பொருளாக்கி, உலகுக்கு அதன் ஆற்றலைப் பற்றி அருள் முரசு கொட்டியவர் திருநாவுக்கரசர். திருநின்ற செம்மை என்பது இந்நூலின் இரண்டாந் தலைப்பிலும், 'செம்மை' என்ற சொல்லைச் சைவநலம் என்னும் செம்மை எனவும் அந்தணரும் போற்றும் அந்தண்மை எனவும் இந்நூலின் நான்காந் தலைப்பிலும் ஆய்வு செய்யப் பெற்றது.*

*'திருநின்ற செம்மை' என்பதையே* **செம்மைபுரி திருநாவுக்கரசர்** *என அந்தணர்கள் தாம்பரவும் அந்தணர் திலகமாகிய அப்பூதியடிகள் வாக்கினால் சேக்கிழார் அமைத்துக் காட்டுகின்றார். திருத்தொண்டின் நெறியை உணர்த்தும் தொடரே திருநின்ற செம்மை, செம்மை புரிதல் என்பவையாயினும், திருநின்ற செம்மை என்பதைச் 'சிவகதி' என்ற மாற்றமுடன் அமைத்து, அது எவ்வாறு தோற்றம் பெறுகிறது, எவ்வெப்படிநிலைகளில் வளர்ச்சி பெறுகிறது என்பதை வரையறை செய்தமைக்கும் ஆய்வியல் நுண்மையை நாம் திருநாவுக்கரசரிடமே காண முடிகிறது.*

*மறுமாற்றத் திருத்தாண்டகமானது திலகவதியம்மையாரின் திருவருட் சைவநலங் கெழுமி நின்ற காரணத்தாலும் திருவாளன் திருநீற்றைக் கைத் திருத்தொண்டு செய்து சிறந்த அம்மையார் திருக்கரத்தால் பெற்ற அருட்பெருமையாலும், எழுந்திரீர் என்ற திருவருள் வாக்காலும் பெற்று நின்ற சைவ நலமானது திருநாவுக்கரசரிடம் தோற்றுவித்த திருவருள் மெய்ம்மொழி. அது திலகவதியம்மையார் திருநாவுக்கரசர் மூலம் திருவருளால் வெளிப்படுத்திய அருள்*

மொழியாக நின்று சைவசமயஞ் சார்ந்த மக்களுக்கெல்லாம் தத்தம் நிலையுணருமாறு செய்த செம்மைத் திருப்பதிகம் எனவும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் வெளிப்பட்ட மெய்மைகள் திருநாவுக்கரசரின் வாழ்வியல் விளக்கங்களாகப் படிநிலை வரிசைப்பட அனுபவப்படுகின்றன எனக் கொள்ளுமாறு அப்பதிக அமைப்பு முறை காணப் பெறுகின்றது. அவ்வாறே, சிவகதியின் படிநிலை வளர்ச்சியை அறிந்து கொள்ளும் துலாக்கோல் என்ன, அப்பரடிகளே அமைத்துக் கொடுத்த நியதிகளைக் கொண்டு விளங்கும் திருப்பாட்டே

"மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்தி"

என அமைந்த தொடக்கத்தைக் கொண்டது. சிவகதியை அறத்தின் அடிப்படையில் தொடங்கும் நாவுக்கரசர் 'செம்மையுள் நிற்றலை' மூல இலக்கணமாக அமைத்து விளக்குகின்றார். பலவகையான மாற்றங்களுக் கிடையில் பரம்பொருள் செம்பொருளாக அமைந்து, பின்னர் செம்மை என நிற்கிறது. செம்மையில் நிற்றல் உயிர்களின் பண்பாக அமைகிறது என்று அமைத்தார்.

திருநின்ற செம்மையின் வளர்ச்சிப் படிநிலைகளைச் சிவகதி என்ற பொதுமைப் பெயராக நிறுத்தி, அந்நெறியிற் செல்லும் செலவையும், கொள்ளும் விளக்கத்தையும், திருநாவுக்கரசர் தாமே எடுத்துக்கூறி விளக்கும் கொள்கையையும் இணைத்து ஒருநெறிய மனம் வைத்துணர்ந்து விளக்கம் அமைத்துக் காண்பதே இத்தலைப்பின் பொருட்பின்னணியாகும்.

'சிவகதிச் செலவில் திருநாவுக்கரசர்' என்ற தலைப்பானது அவர்தம் வாழ்வியல் நிகழ்வுகள் முழுமைக்கும் அமையக் கூடிய பொதுத் தலைப்பேயாயினும், இம்முதற் பகுதி வரலாற்றுக்கு மட்டுமே இத்தலைப்பு அமைகிறது. இரண்டாம் பகுதியில் வரும் திருநாவுக்கரசர் தம் வாழ்வியல் நிகழ்வுகளுக்கு வேறு தலைப்புக்கள் அங்கே கொடுக்கப் பெறும். அவ்வாறு கொடுக்கப் பெறுவதன் சிறப்பு விளக்கமும் அங்கங்கே கொடுக்கப் பெறும்.

### இருகூற்று வாழ்வியல்

திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை இருபகுதிகளாக அமைத்துக்காண்பது ஆய்வுமுறைக்குப் பொருந்துவதாகும். சமணர்தம் சொற்கேட்டுப் பல்லவமன்னன் திருநாவுக்கரசருக்கு இழைத்த தீமைகளில் வெற்றி பெற்றுத் திருவதிகை சேர்தல் வரை முற்பகுதியாகக் கொள்ளலாம். இம் முதற்பகுதியில் அவர்தம் வாழ்வியலில் துன்பங்களை நேர்நின்று ஏற்ற நிலையும், பின்னர் அவைகளை நீக்கிநின்ற நிலையும் அமைகின்றன. சுருங்கக் கூறின், அப்பரடிகளின் வென்று வாழ்ந்த வாழ்வு என இம் முற்பகுதியை அமைக்கலாம். இரண்டாம்பகுதி முழுவதும், அவர் சிவநெறியில் நின்று, வளர்ந்து, இன்ப ஆக்கம் பெற்ற வாழ்வியற் பகுதி எனக் கொள்ளலாம். முதற்பகுதியின் இறுதியிலேயே தம் கொள்கையையும், கொள்கையானது ஏன்றுநிற்கும் வாழ்வியற் பயனையும், அப்பயனை அடைதற்குரிய நெறிமுறைகளையும் வகுத்தமைத்துக் கொண்டு, தம் வாழ்வியலை மேற்கொண்டிருக்கிறார் ஆதலின், அவர்தம் வாழ்வியல் முதற்பகுதியைப் பின்னணியாக நிறுத்தி, 'செம்மை' என்பதற்கு அவரே எத்தகைய விளக்கத்தையும், விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நெறியையும் அமைத்துக் காட்டுகின்றார் எனத் தெளிய வேண்டும்.

### செம்மை - சிவகதி - இணைப்பு

பல்லவமன்னன் இழைத்த கொடுமைகளுள் இறுதியானது அப்பரடிகளைக் கல்லிற் கட்டிக் கடலில் இட்டதே. கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்திய போது,

> "கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
> ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
> நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
> நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே"

எனவும்,

> "சொற்றுணை வேதியன் சோதி வானவன்
> பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
> கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
> நற்றுணை யாவது நமச்சி வாயவே"

எனவும் திருநாவுக்கரசரே அருளிய திருப்பாட்டுக்களால் 'நமச்சிவாய' என்னும் நாமத்தை அரற்றியே அவர் உய்ந்தாரென்பதை அறியலாம்.

'நமச்சிவாய' என்ற நாமத்தைச் சொல்லி அதனுற் பெற்ற பயனைச்,

> "செறுவாருஞ் செறமாட்டார், தீமைதானும்
> நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்"

என, மறுமாற்றத் திருத்தாண்டகத்து, நான்காந் தாண்டகத்தால் அமைத்துக் காட்டினுர். கல்லிற் பிணித்துக் கடலில் ஆழ்த்திய காலத்தே அவர் அரற்றிய நாமம் 'நமச்சிவாய' என்பதே. ஆயினும், கல்லே தெப்பமாக அமைய, அதன் மேல் அமர்ந்து, அத்தெப்பம் அவரைக் கரை சேர்க்கும் வரை இருந்த கால அளவையில் அவரால் அருளப்பெற்ற பதிகமே நமச்சிவாயத் திருப்பதிகம் எனக் கொள்வது சைவமரபு.

'நமச்சிவாய' என்பது சிவனுடைய நல்ல நாமம் என்ருலும், அது வாய்மை என்ற விளக்கு எனக் கருதுகிருர். வாய்மை அல்லது பொய்யாமையை விளக்கு எனக் கொள்வது திருவள்ளுவர் கொள்கை. அவ்வாறே,

> "இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
> சொல்லக விளக்கது சோதி யுள்ளது
> பல்லக விளக்கது பலரும் காண்பது
> நல்லக விளக்கது நமச்சி வாயவே"

என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்து 8-ஆம் திருப்பாட்டில், சொல்லக விளக்கமாய் நின்று சோதியை வீசியதும், நல்லக விளக்காக நின்றதும் நமச்சிவாய என்று கூறி, அப்பெயரை 'வாய்மை' என நிறுத்தி, 'நமச்சிவாயமும் வாய்மையும்' ஒன்றென நின்றவை என்று எடுத்துக் காட்டினுர். பின்னர்,

> "முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
> தன்னெறி யேசரண் ஆதல் திண்ணமே
> அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
> நன்னெறி யாவது நமச்சி வாயவே"

என, அதே பதிகத்து 9-ஆம் திருப்பாட்டிற் கூறியருளினுர்.

'நமச்சிவாய' என்பது மெய்மை சார்ந்த பெயர் என அப்பரடிகள் எண்ணி, அப்பெயரால் உணர்த்தப் பெறும்

நெறியே முதல்நெறி, அதனைச் சென்று சேர்தல் திண்ணம். அவ்வாறு சென்று சேர்பவர்களுக்கு நல்லவழியாகவும் நின்று துணை செய்வது நமச்சிவாயவே என்று துணிந்து கூறுவதற்குக் காரணம், அவர் தம் அனுபவத்தில் பெற்ற வெற்றியே.

'நமச்சிவாய' என்ற நாமம் மட்டுமல்லாமல், அந்த நாமத்தால் உணர்த்தப் பெறுபவனே முதல்வன் என்றும், அவனால் அமைக்கப் பெற்ற நெறிகள் பலவாயினும், அவனுடைய பெயராலேயே அமைந்த நெறிதான் முதல் நெறியாக அமையும் என்றும், அவனுடைய நெறியைச் சென்று அடைந்தவர்களுக்கெல்லாம் வழித்துணையாக நின்று வாழவைத்தது நமச்சிவாயவே என்றும் துணிந்தமைக்குக் காரணம் 'வாய்மை' என்ற அறம் பற்றிய அவர் தம் கொள்கையே. எனவே, கடலிலிருந்து கரையேறும் முன்னமேயே, நமச்சிவாய என்ற சொல்லால் உணர்த்தப் பெறும் தலைவன் திருவடியைச் சார்ந்து அவன் நெறியைப் பற்றி நிற்றல் திண்ணம் என முடிவு செய்து விடுகிறார்.

அடுத்த நிலையில், அப்பரடிகள் திருப்பாதிரிப்புலியூர் இறைவனைச் சென்று வணங்கிப் பதிகம் அருளுகின்றார். அப்பதிகத்தில்,

> "திருந்தா அமணர்தம் தீநெறிப் பட்டுத் திகைத்து முத்தி
> தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்"

என அப்பதிகத்துப் பத்தாந் திருப்பாட்டில் முத்திதருந்தாள் சிவனது திருத்தாளே எனக்கூறி, அது என்னுள் இருக்க வேண்டும் எனவரம் கேட்டு, அத்தகைய திருவடியையுடையவன் நமச்சிவாய என்னும் நாமம் சொன்ன என்னுள்ளே, அவ்வாறே சொன்ன அடியவர்கள் உள்ளத்தே தோன்றாத் துணையாய் இருந்தனன் என்று அங்கேயும் 'மெய்மை' என்பதை மூலமாகக் கொண்டே பதிகத்தை அமைக்கிறார். அடுத்து,

> "கருவாய்க் கிடந்துன் கழலேநி னையுங் கருத்துடையேன்
> உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
> திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
> தருவாய் சிவகதி நீபா திரிப்புலியூ ரரனே"

என்று அப்பரடிகள் அருளுவது திருப்பாதிரிப் புலியூர்ப் பதிகத்து ஆறாந் திருப்பாட்டு. இதன் பொருள் முன்னையும்

விளக்கப் பெற்றுள்ளது. இத்திருப்பாட்டின் மூலமாக, நமச்சிவாயம் என்ற மெய்மை நாமத்தால் உணரப் பெறும் முதல்வனின் பெயரால் அமைந்த நெறியின் பெயர் **''சிவகதி''** என்பதை அறிகிறோம்.

> ''நொய்யவர் விழுமியாரும் நூலின்நுண் ணெறியைக் காட்டும்
> மெய்யவர் பொய்யும் இல்லார் உடலெனும் இடிஞ்சில் தன்னில்
> நெய்யமர் திரியுமாகி நெஞ்சத்துள் விளக்கும் ஆகிச்
> செய்யவர்''

என, தாம் ஏற்ற நெறிக்குரியவர் மெய்யவர், பொய்யில்லார், தேட முற்படின் நம் உடலகத்தேயே கிடைப்பர், உடலகத்தேயும் நெஞ்சத்துள் விளக்கு என நிற்பவர்; அவர் செய்யர் எனத் திருச்செம்பொன் பள்ளித் திருப்பதிகத்து இரண்டாம் திருப்பாட்டில் அமைத்துக் காட்டினார். இங்கே காட்டப் பெற்றவற்றின் விளக்கமாகவும், சிவகதியை அடையும் வழியைத் தெற்றென எடுத்துக் கூறும் இலக்கண வரையறையாகவும் அப்பரடிகளே அமைத்துக் காட்டும் திருப்பாட்டினைக் கீழே காணலாம்.

> "மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
> வித்தைவித்திப்
> பொய்ம்மையாம் களையைவாங்கிப், பொறையெனும்
> நீரைப்பாய்ச்சித்
> தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
> செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே''

என்பது பொதுத் தனித் திருநேரிசை 76-ஆம் பதிகத்து 2-ஆம் திருப்பாட்டு.

மேலே குறிப்பிடப் பெற்ற திருப்பாட்டில் முதல் இரண்டு வரிகளிலுங் கூறப்பெறுவன யாவும் நல்லறங்களே. மெய்மையே முயற்சி, சிவகதி அடையவேண்டும் என்ற விருப்பமே விதை, பொய்மையை நீக்க வேண்டும், பொறுமை என்பதே நீராக அமையும் என்றார். முன்னிரண்டு வரிகளைப் போலப் பின்னிரண்டு வரிகளில் உள்ளவைகளை அத்துணை எளிமையாக அமைக்கவில்லை என்பதுபொதுவான மதிப்பீடு. அவை மூன்று

தம்மையும் நோக்கிக் காணல்
தகவெனும் வேலி அமைத்தல்
செம்மையுள் நிற்றல்

என்பனவே அவை. தம்மையும் நோக்கிக் காணல் என்பவைகளை நுணுகி ஆய்ந்து தெளிதற்கு முன்னால் அப்பரடிகள் வாழ்வில் அமைந்த மாற்றங்களையும் இணைத்துக் காண வேண்டும்.

திருநாவுக்கரசர் மருள் நீக்கியாராக இருந்த காலத்தே அறந்திகழ் நாவரசு என்னத் திகழ்ந்தவர். தன்னைநோக்கி வருவாருக்கு நலஞ் செய்தல், சமுதாய அறங்கள், ஒன்றற்கும் பற்றாத ஏழைகளுக்குரிய ஈகை முதலிய பன்னோக்கு அறங்களை மிகுதியாகச் செய்தவர். கொடை முதலிய நல்லறங்கள் செய்யினும் தனியொருவன் அறவாழ்வு வாழ்வதற்குரிய அறங்களை மேற்கொண்ட அவர், தனி வாழ்விற் சிறந்த அறமாகக் 'கொல்லாமை' என்ற ஒன்றை ஏற்கிறார். அதனை முதன்மை அறமாக ஏற்றமையாலேயே சமண சமயம் சார்கிறார். பிறகு அவர் உணர்ந்த சிறந்த அறங்கள் சிலவும் உண்டு. அவற்றுள் தலையாய அறங்கள் இரண்டு. **செய்ந்நன்றியறிதலும் வாய்மையும்.**

திருவாரூர்ப் பெருமானை வணங்கிப்பாடும் நிலையில்

"பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே"

என்று பொய்மைக்கு அஞ்ச வேண்டும் என்று கூறிய அப்பரடிகள்,

"கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்றிவ்வாறு பத்துத் திருப்பாட்டுக்கள் இணைந்த பழமொழிப் பதிகம் அருளிச் செய்கிறார். அதில் ஒன்று,

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னையோர் உருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டு
என்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்டு
அருள்செய்த ஆரூரர் தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல் விட்டுக்
காக்கைப்பின் போன வாறே"

என்ற இரண்டாந் திருப்பாட்டு, கையிற் கிடைத்த முயலை விட்டு விட்டுக் காக்கையின் பின்னால் அலைந்து கொண்டிருந்த பழமொழி போல என் வாழ்க்கை அமைந்தது என்றாலும், அவ்வாறு சென்றது செய்ந்நன்றி கொன்ற செயல் என எண்ணி உருகுகிறார். எலும்பை முதலில் வைத்து அதன்மேல் நரம்பு தோல் இவைகளைப் புகச் செய்து முதன் முதல் எனக்கு இந்த உருவத்தை அமைத்துக் கொடுத்தான். நான் வினைகளை அனுபவிக்க முற்பட்டபோது தானே முன்பிருந்து வினைநீக்கி என்னுள்ளங் கோயிலாக்கி ஆட்கொண்டான். இப்படி, யான் நினையா முன்னே, அவன் என்னை நினைந்து, அடிமை கொண்டு, என் இடர் கெடுத்து, என் உடம்பு முதலியவைகளை அமைத்துக் கொடுத்த முன்னவனை யான் மறந்து புறம் போந்தேன், பண்டு இகழ்ந்தேன் என்றெல்லாம் கூறி வருந்துகின்றார். அறங்கள் பலவற்றுள்ளும் சிறந்த அறமாகச் செய்ந்நன்றி மறவாமை திருவள்ளுவரால் பேசப் பெறுகிறது.

**வாய்மையெனும் பொய்யா விளக்கு**

செய்ந்நன்றி மறவாமை என்ற அறமானது திருநாவுக்கரசரை உருகவைத்துச் செயல் மேற்படுத்திய அறம். அவரை உறுதியுடன் வாழ்வியலில் நிற்க வைத்தபேரறம் வாய்மையே. கொல்லாமை என்ற அறம் திருநாவுக்கரசரை ஈர்த்துச் சமண் சமயஞ் சாரச் செய்தது போலவே 'பொய்யாமை' என்ற அறமே அவர்கள் மேல் வெறுப்புக் கொள்ளவும் வைத்தது.

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற முதல் திருப்பதிகம் கோதில் திருப்பதிகமாக மலர்வதற்கு உரிய காரணம் அப்பதிகத்தில் திருநாவுக்கரசர் பேசிய வாய்மையே.

செய்நன்றி அறிதலில் தாம் தவறிவிட்ட காரணத்தால் எப்போதும் தம்மால் வழுவாமற் காக்கவேண்டிய அறமாக அவர் செய்நன்றியறிதலைக் கொண்டாரேனும், வாழ்வியல் விளக்கமாக, பிறரை உய்விப்பதாக அவர் மேற்கொண்ட அறம் வாய்மையே.

சமணர் செய்த தீமைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றியமையினால் சைவநெறியின் மெய்மையை அனுப

வத்தால் உணர்ந்த அப்பரடிகள் தமக்கு உடம்பு முதலியன கொடுத்து, அவ்வப்போதும் உடனிருந்து நல்லன செய்து காப்பாற்றி வரும் சிவபரம் பொருளுக்குத் தொண்டாற்ற வேண்டியது கடமை என எண்ணுகிறார்.

செய்ந்நன்றி மறவாமை, மெய்மை என்ற அறங்களின் அகத்தாக்கங்களினாலும், தம்முடைய தமக்கையார் சிவபரம் பொருளுக்குத் தம்மைத் தொண்டாக ஆக்கிக் கொண்ட நிலையினாலும், தாமும் அவ்வாறே சிவபரம் பொருளுக்குத் தொண்டு புரிய வேண்டியது கடமை எனக் கருதுகிறார். சிறந்த அறமாகச் 'செய்ந்நன்றி மறவாமை' திருவள்ளுவ ரால் பேசப் பெறுகிறது என்பதும் நினைவிற்குரியது.

### செய்நன்றியின் ஏற்றமே — அடிமை எனநிற்றல்

அப்பரடிகள் இறைவன் முன்னாக எனக்குப் பல நன்மைகளை எடுத்து நின்று தானே அமைத்துக் கொடுத் துள்ளான் என்று பேசுகிறார். அவ்வகையில், அவனுக்கு முன்னிருந்து அடிமை பேணித் தொண்டாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என ஏன்று கொள்கிறார். இவ்வகையில், தம்முடைய தமக்கையாரும் அடிமை எனநின்று தொண்டு செய்ததை எண்ணுகின்றார். தம்மையும் தொண்டுக்கு ஆளாக்கியதை எண்ணுகின்றார். அவ்வகையில் உலகில் உள்ள அனைத்துயிர்களும் அவனுக்கு அடிமை பேணு வதைத் தவிர வேறு நிலையில்லை என உணர்கிறார்.

### செம்மையுள் நிற்றல்

தம்மைப் போலவே, எல்லா உயிர்களையும் ஆளாக்கித் தொண்டு செய்து கொண்டு, அவ்வவ்வுயிர்களுக்குள்ளே அப்பெருமானும் தோன்றாத் துணையாய் வாழ்ந்து கொண் டிருக்கிறான். அவ்வப்போது எனக்கு அறிவுரை கூறி, அறம் காட்டி, மறம் படுத்து, அப்போதைக்கப்போதும் அடியவர் கட்கு ஆரமுதாம் ஆரூரரை எப்போதும் நினையாதே, ஓர் அறமும் சொல்லவியலாமல் பொய்யே செய்தவர்களைப் போய் நாடியிருந்த செயல், இருட்டறையில் மலடு கறந்து வருந்தியதை ஒத்தது எனக் கரைகிறார்.

இந்நிலையில், அனைத்துப் பொருள்களும் 'சிவன்' என்ப வனுக்கு அடிமையும் உடைமையுமே என நினைந்து, அனைத் துயிர்களுக்கும் நன்மை செய்தல் என்ற வகையில் தம்மை

அப்பரம் பொருளுக்கு 'அடிமை' என நிறுத்தினர். தம்முடைய தமக்கையார் திருக்கோயில் திருத்தொண்டு மட்டுமே செய்தார்கள். தமக்கையாரைப் போலத் திருக்கோயில் திருத்தொண்டும், பார்வாழத் திருவீதித்திருத்தொண்டு முதலியவைகளும் மேற் கொள்ளப்பெற்றன. திருநாவுக்கரசர் சமுதாயத் தொண்டினையும் மேற்கொண்ட தன் அடிப்படைக் கருத்து ஒன்றே. உலகில் காணும் அனைத்துயிர்கள், உலகப் பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் முறையே அடிமைகளும் உடைமைகளும் என இறைவன் ஏற்றுள்ளான். அப்பொருளின் அடிமை என்ற கொள்கையில் அவனுக்குரிய தொண்டினை அந்த அந்த உயிர்கள், பொருள்கள் ஆகியவைகளின் மூலம் செய்யத் தொடங்கினர் என்பதே. எனவே, உலகத்துயிர்களேயோ, உலகப் பொருள்களையோ நினைவிற் கொள்ளாமல் அவைகளை அடிமைகளும் உடைமைகளும் என நிறுத்திய செம்பொருளுக்கே தன்னுடைய திருத்தொண்டினைச் செய்தார். அவ்வகையில் திருநாவுக்கரசர் 'செம்மையுள் நிற்றல்' என்பதன் விளக்கமாகத் தொண்டு பேணினர். அந்நிலையில் செம்மைபுரி திருநாவுக்கரசர் எனப் பெற்றார் எனக்கொள்வது ஒருவகை விளக்கம்.

மேலே கூறப்பெற்ற அறத்தின் அடிப்படையிலேயே தமக்குக் கொடுமை செய்த அமணர்களைத் தாம் கொடுமைப் படுத்தவில்லை. அவர்கள் பொறாமையாற் செய்தாலும், அங்கே உள்ள சிவபரம்பொருள் கள்ளத்தாற் மறைக்கப் பெற்றுள்ளது என்று கருதியே அவர்களுக்காகவும் வருந்தினர்.

அடுத்து, பல்லவமன்னன் சைவசமயம் சேர விரும்பி வந்தபோதும் அதனைப் பெரிய பேருகக் கொள்ளவில்லை. உண்மையுணர்ந்து, அவனுக்கு ஆக்கம் தரும் நெறியென்று அவன் செய்ந்நன்றி உணர்ந்தவனாய், அவன் யாருக்குத் தொண்டாற்ற வேண்டுமோ அவனுக்குத் தொண்டாற்ற முற்பட்டான் என்ற அளவிலேயே பல்லவமன்னன் செயலை ஏற்றார் அப்பரடிகள்.

### மற்றை இரண்டு

செம்மையில் நிற்றல் என்பதன் பொருள் இதுவாயின், 'தம்மையே நோக்கிக் கண்டு, தகவு எனும் வேலியிட்டு'

என்ற இரு பகுதிகளுக்கும் உரிய விளக்கம் யாவையென வும் கண்டு கொள்ளுதல் பயனுடைத்தாம்.

தம்மையே நோக்கிக் காணுதலும் தகவு எனும் வேலி யிட்டு அம்மரபினைக் காத்தலும் அப்பரடிகள் மேற்கொண்ட அரிய பண்பு.

தம்மை இருமையாக நோக்கிக் கண்டார். உயிரும் உடம்பும் எனத் தம்மை இரண்டாக நிறுத்தி, இரண்டும் மெய்ப் பொருளாம் இறைவனுக்குத் தனித்தனி அடிமைகள் என்பதாக அமைத்தார். உடல் தமக்கு அடிமையாக அமைய, தாம் மட்டுமே இறைவனுக்கு அடிமை என நிற்றல் முறையுடையதன்று எனக் கருதினார். மேலும், ஓர் உயி ரானது தான்மட்டுமே அடிமை பேணத்தக்கது என நினை யாமல், தன்னோடு இணைந்துள்ள உடம்பையும் அடிமைப் பணி செய்யப் பழக்கவேண்டும். அதனாலேயே அப்பரடிகள், 'அங்கமாலை' என்ற பதிகம் பாடி, அவர்தம் உடம்பையும் நேரே அவனுக்கு அடிமை என அமைத்துக் காட்டினார்.

உயிரையும் உடம்பையும் இணைத்து நின்ற நிலையில் உடம்பிலும் உயிரிலும் தனித்தனியே நின்றாலும், அப்பரம் பொருள் உயிரையும் உடலையும் கடந்ததாய், உடலையும் உயிரையும் பணி கொள்ள வல்லதாய், இரண்டையும் இணைத்து நின்றதாய் அமையும் பொருளே செம்பொருள் எனக் கண்டு, அதனில் நின்று இருமையையும் அடிமை பேண வைத்தார். அவர் செம்மையில் நின்ற பண்பைக் கீழ் வருமாறு அமைக்கலாம்.

(1) உலகத்து உயிர், உலகப் பொருள் ஆகிய எல்லா வற்றையும் அவ்வந்நிலையில் ஆக்கி, அளித்து அருள்பொழி யும் முதன்மைப் பொருளும், தம்மை அவ்வாறு அமைத்த முதன்மைப் பொருளும் ஒன்று எனக் கருதி அவ்வகையில் எல்லாவற்றுக்கும் அடிமை என நின்று தொண்டாற்றுதல். இவ்வகையில் எல்லா உயிர்களையும், உயிர்கள் என்ற வகை யில் கருதி அறம் செய்யும் அந்தணாளர்களிலும் வேறுபட நின்றார்.

(2) அப்பரடிகள் தம்மையும் நோக்கிக் கண்டார். தம் உயிரும் தம் உடம்பும் தனித்தனியே அம்முதல்வன் அடிமைகள், அவ்வகையில் தன் உடம்பு தனக்கு அடிமை

யன்று எனக் கருதினர். தான் அடிமையாக இருக்க முடியுமே யன்றி, வேறொன்றைத் தமக்கு அடிமையாக ஏற்கலாகாது என எண்ணினர்.

(3) அப்பரடிகள் தம்உயிரையும் தம் உடம்பையும் இணைத்து நின்று, இரண்டன் நலத்தையும் நோக்கி அருள வல்ல பரம்பொருள் இரண்டற்கும் மேலே நின்றது, இரண்டையுங் கடந்தது, இரண்டனையும் இணைத்து வாழ வைக்கும் செம்பொருள் எனக் கண்டு, அதுவே தம்மை வாழ்விக்கும் முதல் எனக் கண்டு அதைச் சார்ந்து நின்றார்.

அவ்வகையில், மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் ஒரு குறிப்பினை விளக்கமாக அமைத்துப் பேசுவதை ஆய்தல் வேண்டும்.

> "தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
> சங்கரன் நற்சங்க வெண் குழை ஓர் காதிற்
> கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
> கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே"

என்ற முதல் திருத்தாண்டகத்திலேயே, தாம் ஆர்க்குங் குடியல்லாதவன் என்று அவன் தலைமையை ஏற்றது 'மெய்ம்மையாம் உழவினால் விளைந்த செயல். மெய்ம்மையின் அடிப்படையில் தலைமையை ஏற்ற நாவுக்கரசர் தம் உயிரையும் உடம்பையும் இணைத்த நிலையில் 'நாம்' என்ற பன்மை முடிவு அமைத்து, இரண்டையும் இணைக்கும் செம்பொருளாக அமைந்த அடியிணைகளுக்கு அடிமை எனக் குறிப்பிட்டார்.

### செம்மையுள் நிற்றல் - வேறுவிளக்கம்

உலகத்து உயிர்களும் ஏனைப் பொருள்களும் உடையானுக்கு அடிமையும் உடைமையும் என நிறுத்தி, அவ்வாறு எண்ணியமைக்குத் தம்மையே தாம் நோக்கிக் கண்ட ஆய்வியல் முறையே காரணம் என அமைத்து, தன்னுடைய உயிரும் உடம்பும் தத்தம் தனிநிலைகளில் அச்செம்பொருளுக்கு அடிமைகள் என நிறுத்தி, அவ்வகையில் அவைகள் இரண்டையும் இணைக்கும் செம்பொருளாக அமைந்த அடியிணைகளை எண்ணி, ஏத்தி வணங்கி நிற்றல் செம்மையில் நிற்றல் எனப்பெற்றது.

செம்மையுள் நிற்றல் என்பதற்கே வேறொரு விளக்கமும், அதனால் வரும் கொள்கை அமைப்பும், செயல் முறை அமைப்பும் திருநாவுக்கரசரின் வாழ்வியல் நிகழ்வாக நின்று, சிவகதியின் அடுத்து படிநிலையை விளக்கும் வளப்பம் உடையதாக அமைகிறது.

### மெய்கண்டாரின் அவையடக்கம்

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் தலைமைத் தன்மை உடையதாகத் திகழும் நூல் சிவஞான போதம். சிவஞான போதத்தை அருளிய மெய்கண்டார் சாந்தாசாரியார் நால்வரில் முதல் நின்ற பெருமையுடையவர். 'சிவஞான போதம்' என்ற நூலில் மெய்கண்டார்,

> ''தம்மை உணர்ந்து தமையுடைய தன் உணர்வார்
> எம்மை உடைமை என இகழார் — தம்மை
> உணரார் உணரார் உடங்கியைந்து தம்முட்
> புணராமை கேளாம் புறன்''

என்ற செய்யுளைத் தம் அவை அடக்கமாக அமைத்தருளியுள்ளார்.

தம்மை உணர்தலும், அவ்வுணர்வின் அடிப்படையில் தமையுடைய தலைவனை உணர்தலும் என்ற இரண்டும் தாம் நிலைநிறுத்தி எண்ணிய கொள்கைக்குரிய ஆய்வியல் முறை. அவ்வாறு உணர்ந்தவர்கள் என்னை உடைமைப் பொருள் என எண்ணி இகழமாட்டார்கள். இந்த முறையில் உணராதவர்கள் உண்மையை உள்ளவாறு உணர முடியாதவர்களே. அவ்வாறு உணர முடியாத போது ''வேறுபட்ட கருத்துக்களும் தம்முள் இயைந்து நின்று கூடுதல் உண்டாகா''. ஆகையினால், இத்தகைய ஆய்வியல் முறையில் மெய்ப்பொருளை நாடாதவர்கள் கொள்கையை நாம் ஏற்பதற்கில்லை எனக்கூறி, பொருள்களை ஆராய்ந்தறிவதற்குத் தக்க ஆய்வுமுறை வேண்டும், அத்தகைய ஆய்வு முறையே 'தம்மை உணர்ந்து தமையுடைய தன் உணர்தல்' என்றார். சரியான ஆய்வு முறையை ஏற்றுக் கொள்ளாமையின், முடிவுகளைப் பற்றி நாம் வாதமிடுதல் பொருந்தாது என அமைத்துக் காட்டுகின்றார்.

தம்மை உணர்தல் என்பதற்குத் தம்மை உடைமைப் பொருளென உணர்தல் வேண்டும். உடைமைப் பொருளின்

தன்மையை உணர்ந்தபின் உடையானை உணர்தல் வேண்டும். இனி, தம்மை உடைமைப் பொருள் என உணர் தற்கும் அறிவாராய்ச்சியின் வழிநின்று உணராமல் திரு வருளின் வழிநின்று உணர்தல் வேண்டும் என்றார்.

மெய்ப் பொருட் கொள்கையை வரையறை செய்து நிறுவுதல் என்ற பணிமேற் கொண்டு நின்ற காரணத்தால் மெய்கண்டார் இவ்வாறு தம்மை உடைமை என அமைத்துக் கொண்டு ஆய்வினைத் தொடங்க வேண்டும் என்றார்.

ஆனால், திருநாவுக்கரசர் சிவகதி விளைதற்கு உரிய அடிப்படைப் பயிற்சி முறையை அறத்தின் அடிப்படையி லேயே அமைத்துக் காட்டுகின்றார்.

'மெய்மை' என்பதே அடிப்படை. 'மெய்மை' இது என உணர்ந்ததும் அதனை ஏற்று அடைந்து துய்த்து இன் புற வேண்டும் என்ற விருப்பம் வேண்டும். பொய்மை என்ற களையை நீக்க வேண்டும். பொறுமையின் அடிப் படையில் நிற்க வேண்டும். இவ்வடிப்படையில் புறத்தே உள்ளவைகளை ஆராய்வதோடு தம்மையும் நோக்கிக் காண வேண்டும். பெருந்தகைமையின் அடிப்படையில் எல்லைக் கோடு அமைய வேண்டும். அங்கே, நடுநிலையில் நிற்க முற் பட்டால் சிவகதி விளையும் என்பதே. அறம் எங்கே நிற் கின்றதோ அதுவே செம்மைப் பொருள். அப்படி நின்ற வுடன் அல்லது நின்ற அந்நிலையே "சிவகதி" என்று விளக்குகின்றார்.

சிவபரம் பொருளே செல்லும் வழியாகவும், சென்று அடையத்தகும் பயனாகவும் இருத்தலின் "சிவகதி" என மக்கள் அடைந்துய்ய வேண்டிய நெறியையும் பயனையும் எடுத்துக்கூறி விளக்கினார். சிவகதியைச் சார்தற்கு அற நெறியே வலியுறுத்தப் பெறுகிறது அப்பரடிகளால்.

பொய்யா விளக்கு எனப் பெறும் வாய்மையை முதன்மை அறமாகக் கொள்ளுகின்றார். விருப்பம் என்பதை விதையாக அமைத்தல் வேண்டும். பொய்யை முற்றாக அகற்றிப் பொறையை நீராகப் பாய்ச்சுதல் வேண்டும். இவ் வளவில் அடிப்படையாக அமைந்தன எல்லாம் அறவாழ் வின் மூல அறங்களே.

திருத்தொண்டர் புராணம் எனப்பெறும் பெரிய புராணத்து அடியவர்கள் எல்லாரும் அறவழியின் அடிப் படையில் எழுந்த அருள் நெறியில் வாழ்ந்து சிறந்த தொண்டர்களே.

திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் உள்ள திருத் தொண்டர்களின் பெருமையை இறைவனே நேர் நின்று திருநாவலூரருக்கு விளக்கிக் கூறி, பின்னர், திரு நாவலூரரை அவ்வடியவர்களின் வழித் தொண்டராக விளங்கும் வண்ணம் ஆட்படுத்துகின்றார். பெரியபுராணத் திருத்தொண்டர்கள் அனைவரும் அருளின் நீர்மைத் திருத் தொண்டு செய்தவர்கள் என்று சிறப்பித்துப் பேசப் பெறு கிறது. அவர்தம் பெருமையை இறைவனே நேர்நின்று கூறும் வகையில்,

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் என்று"

என்ற பெரியபுராணத் திருப்பாட்டு (196) மலர்கிறது.

திருத்தொண்டர்களின் அருளின் நீர்மைத் திருத் தொண்டினை விளக்க முற்படும் போது இருமையும் கடந்து நின்றார் என்றும் ஒருமையால் உலகை வெல்வார் என்றும் அவர் நின்ற அந்த நிலையே அருமையாம் நிலை என்றும் பாராட்டப் பெறுகிறது. இதனை விளக்கும் வகையில் கீழ்க் கண்ட வரலாறு காட்டப் பெறுகிறது.

திருவாரூரை ஆட்சி செய்த மனுவேந்தன் என்பான் மெய்ம்மையான மனு என்பவனின் நீதியைக் கடைப் பிடித்தமையால் தன் பெயரையும் மன்னுநீதிச் சோழன் என ஆக்கப் பெற்றவன். அவனுடைய நீதியின் தன்மை யைச் **செற்றம் நீக்கிய செம்மை** என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார். மனுநீதிச் சோழன் மகன் வீதிவிடங்கன். ஆரூர்ப் பெருமானை வணங்கத் தேரூர்ந்து சென்ற வீதி விடங்கனின் தேரில் பசுங்கன்று ஒன்று அறியாமே வந்து சிக்கி இறந்தது. அதை அறிந்த தாய்ப்பசுவானது கதறி வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது.

செய்தியறிந்த மனுநீதிச் சோழன் மந்திரிகளுடன் சூழ்ந்து, செய்வதென் என்று சிந்தித்தான். அப்போது

அமைச்சர்கள் கழுவாய் அமைத்து விடலாம் என்று கூறினர். அறியாத பசுங்கன்று தானே வந்து தேர்க்காலில் சிக்கி இறந்தமைக்காக வீதிவிடங்கனுக்குத் தண்டனை கொடுக்க அமைச்சர்கள் உடன்படவில்லை.

அந்நிலையில் அரசன், ஓர் உயிரைக் கொலை செய்த நிலையில், அவ்வுயிர் ஆணா பெண்ணா, மிருகமா மனிதனா என்ற அடிப்படையில் ஆய்வு செய்யாமல் இறைவன் எல்லா உயிர்களிடத்திலும் நின்று விளங்கவும், விளக்க முறுத்தவும் பணிபுரிகின்றான். ஆனமையால், அவனை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்க வேண்டும் என்று கூறி, எவ்வுயிர் களிடத்தும் கொலைப்பாதகத்தைச் சமமாகக் கொள்ள வேண்டும் என்று கூறித் தன் மைந்தனைத் தேர்க்காலில் இட்டு, தானே தேரைச் செலுத்துகின்றான். அந்நிலையில் வீதி விடங்கனேயன்றி, பசுங்கன்றும், மந்திரியும் உயிர் பிழைத்து எழுந்தார்கள்.

இவ்வரலாற்றில், நேர்நின்று அறம் வழங்கப் பெற்றது என்பர் திருவருட் பிரகாச வள்ளலார். உயர்வு தாழ்வு களுக்குக் காரணமாக இருந்த உடம்பையோ, பல பிறவிகள் இறந்திறந்துழலும் உயிரையோ சார்ந்து நீதி வழங்காமல் இருமையுங் கடந்ததாய், அவைகளை இணைத்ததாய் அமைந்த ஒருமையின் உயர்வு கருதி, அவ்வொருமையை, செம்மை நிலைநின்ற செம்பொருள் என்றும் செம்பொருளில் நின்று நீதி அமைத்தமையின் செம்மையுள் நின்றான் என்றும் கருதப்பெற்றான் சோழ அரசன்.

இனி, திருத்தொண்டர் புராணத்து வரும் வரலாறுகள் பெரிதும் அறச்சிக்கலை அடிப்படையாகக் கொண்டவை. ஒன்றோடு ஒன்று முரண்பட்ட இருநிலைகள் தம்முள் எதிர்த்து நிற்கும் நிலையில், அறம் என்ற நேர்வழியில் நின்றவர்களே தொண்டர்கள். அவ்வாறு நின்றவுடன், முரண்பாடுகளின் இடையில் அறம் என நின்ற செம்பொருள் நேர் நின்று காட்சி கொடுத்து அவ்வறச் சிக்கலில் இறந்தோரை எழுப்பிக் கொடுக்கும் வரலாற்றை அமைக்கிறது. இத் தகைய வரலாற்றில் இடம் பெறும் திருத்தொண்டர்கள் அனைவரும் ''நேர்நின்றார்'' என்றே கூறப் பெறுதலின் இவர்களும் செம்மையுள் நின்றார் என விளக்கப் பெறு கின்றனர்.

சைவ மரபு நிலையில் கடவுள், "நிலைவில்லார்" எனப் பெயர் பெறுகிறார். ஒன்றோடொன்று முரண்பட்ட பொருள்களுக்கு இடையிலே அவைகளை வாழவைத்து அருளறமாக விளங்கிக் கொண்டிருப்பதே சிவமெனும் செம் பொருள் என்று கொள்கிறது. இவ்வடிப் படையிலேயே "நிலைவில்லார்" என்ற பெயரால் பரம்பொருள் சுட்டியுணரப் பெறுகிறது. 'அந்தம் ஆதி' என்பதும் அவ்வாறே. அந்தம் ஆதி என்பதன் சுருக்க நிலையே 'அந்தி' என்பதும் அந்தி வண்ணத்தான் என்பதும்.

"சிந்தையுட் சிவமாய் நின்ற செம்மை யோடு
அந்தியாய் அனலாய்ப் புனல் வானமாய்ப்
புந்தியாய்ப் புகுந்து உள்ளம் நிறைந்த எம்
எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே"

என்பது திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகை 162-ஆம் பதிகத்தின் ஐந்தாந் திருப்பாட்டு.

இருமாறுபட்ட கருத்துக்கள் இணைந்து மூன்றாவதாகிய ஓர் இணைப்புக் கருத்தை உண்டாக்கும் என்பது தமிழகத்துச் சைவம் ஏற்றுக் கொண்ட கருத்தன்று. தம்முள் ஒத்த மாறுபாடுகொண்ட, முரண்கொண்ட இரண்டு கருத்துக்கள் எதிர் எதிர் நிற்கின்றன என்னின் அவைகளை நிறுத்தவல்ல ஆற்றல் இரண்டையுங் கடந்ததாய், இரண்டற்கும் இடைநின்றதாய், இரண்டையும் வாழவைப்பதாய் அமைந்த ஒன்று உண்டு எனக் கருதப் பெற்றது. அதுவே செம்பொருள் என்றும் 'செம்மை' என்றும் கருதப் பெற்றது. எனவே, மாறுபாடுகொண்ட அறங்கள், கொள்கைகள் மோதும் போது, இடையில் அறம் சார்ந்த நிலையில் நிற்றல் செம்பொருளில் நிற்றல் எனப் பெறும். இதையே நேர்நிற்றல் எனக்கூறுவர்.

மேலே குறிப்பிடப் பெற்ற கருத்தை ஏற்கும் வகையில் அப்பரடிகள் மறுமாற்றத் திருத்தாண்டகத்துள் அமைக்கும் கருத்தையும் முறையே சிந்திக்க வேண்டும்.

"இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதும் குறை விலோம் இடர்கள் தீர்ந்தோம்"

என்பது மறுமாற்றத் திருத்தாண்டகத்தின் இரண்டாந் திருத்தாண்டகத்தின் மூன்றாம் வரி.

விடை என்பது ஆனேறு. ஆனேறு அறத்தினை உணர்த்தும் அடையாளம். சிவபெருமான் விடையேறி என அழைக்கப் பெறுவதன் நோக்கம் அவன் அறவூர்தியன் என்பதே. இகலுடைய விடையுடையான், என்பது தம்முள் முரண்கொண்ட அறக்கொள்கைகளை உடையான் எனக் குறிக்கப் பெறலும் ஒருவிளக்கம். ஆயினும், நாவரசர் கருதுவது ஆனேறு ஊர்தியாக உள்ளது; அதே ஆனேறு கொடியாகவும் உள்ளது. மேலும் கீழுமாக, முரண்பாடு கொண்ட வகையில் ஆனேறு நிற்க, இரண்டையும் இணைக்கும் இணைப்புப் பொருளாக, செம்பொருளாக, செம்மையாக நின்றவன் சிவன் எனக் கொள்ளும் முறையில் அவன் நடுநின்றான் எனப் பெற்றான். அவனே என் அடிமையை ஏன்று கொண்டான்; இனியேதும் குறைவு இல்லோம்; இடர்களுந் தீர்ந்தோம் என்றார்.

பல்லவமன்னன் அழைத்தபோது செல்லக் கடவதாகிய அறம் அப்பரடிகளுக்கு இல்லை. ஆயினும், ஏவலர்களிடம் அமைந்த உயிரிரக்கம். பரம்பொருள் நின்று வாழும் இடம். அவர்களுக்கு ஊறுவரின் செம்பொருள் அங்கிருந்து பிரியும். எனவே, அப்பரடிகள் சென்றது, ஏவலர்கள் செம்மை சான்ற பரம்பொருளைத் தாங்கியவர்கள் என்ற வகையில் அவர்களும் தம்மை ஒத்தவர்களே என்ற செம்மையில் நின்ற அறத்தை அடிப்படையாகக் கொண்டது.

பின்னர், நீற்றறையிலிடல், நஞ்சு உண்ணத் தருதல் போன்றவை முரண்கொண்ட அறங்களின் தாக்கங்கள். அங்கேயெல்லாம் உறுதியுடன் திருவருளில் நின்றார். திருவருளே மாறுபட்ட அனுபவத்தைக் கொடுத்து வாழ வைத்தது.

இங்கே, பொய்மையால், மெய்மை அழிக்கப் பெறாது என்ற செம்மையில் நின்றார். மாறுபட்ட — முரண்பட்ட அறங்களுக்கு இடையில், இரண்டையுங் கடந்ததாய், இரண்டையும் இணைத்து நிற்பதாய் அமைந்த செம்பொருள் ஒன்று உண்டு எனத் திண்ணமாக எண்ணி, அச்செம்பொருளில் நின்றதே அப்பரடிகள் பெற்ற வெற்றியின் அடிப்படை.

இவ்வகையில், மறுமாற்றத் திருத்தாண்டகம் ஏற்கும் செம்மையுள் நிற்றல் என்பதற்கு அப்பரடிகள் வாழ்வே

இலக்கியமாக அமைந்தது என்று அருள் நெறியின் துணைக் கொண்டு அறிதல் வேண்டும்.

*அப்பரடிகள் போற்றும் அரிய செம்மை*

கடவுள் எனநின்ற ஒருமைப் பொருள் தன் தனிநிலையில் எல்லாவற்றையும் கடந்த பொருளாகவும் அதன் செயல் நிலையில் எல்லாப் பொருள்களின் உள்நின்று இயக்கும் செயல்முதற் பொருளாகவும் உள்ளது. அவைகளை ஒரு பொருளின் இரு நிலைகள் அல்லது கூறுகள் எனக் கொள்ள வேண்டும்.

கடவுள் என்ற அப்பரம் பொருளின் தனிநிலையை, கடந்து நின்ற நிலையை, மேன்மேற் பெருகும் இயற்கை நெகிழ்ச்சியாக நின்ற நிலையை அருள் எனலாம். அதே பரம் பொருள் அனைத்துயிர்களையும், அனைத்துப் பொருள்களையும் இயக்கும் நிலையில், இயவுள் என்ற நிலையில் அனைத்துயிர்களின் அகத்தும் புறத்தும், ஏனைய உலகப் பொருள்களிலும், உலகின் அகத்திலும் அன்பு எனச் செறிந்து நின்றது.

கடவுள் எனநின்ற கடந்த பொருளை, ஒருமைப் பொருளை, இருபண்புகளின் இணைப்பு என நிறுத்தி ஏற்றுக் கொண்ட வகையில், அதன் இருபண்பின் தனிநிலைகளை உணர்த்தும் இரு அமைப்புக்களை முறையே சிவம் — சத்தி என நிறுத்தி அறிய வேண்டியது இயற்கையாயிற்று.

அருளாய் நின்ற தன் தனி நிலையில் சிவம்; உலகங்களை, உயிர்களை இயக்கும் நிலையில் அன்பு எனவந்து நின்று பொருந்திய நிலையே சத்தி.

பரம்பொருளானது தாம் — தம் — தனி நிலையில் அருள்; தாம் — தம் — தமி — அருள் என நின்ற நிலையே 'சத்' என நின்ற சத்தியநிலை. அதுவே உள்ளது என உணருமாறு நின்ற உண்மைநிலை அல்லது உளதாம் நிலை.

உளதாம் நிலையே சத்திய நிலையானால், அப்பொருளின் சத்திநிலையே இருத்தல் நிலை. உளதாம் நிலையும் இருத்தல் நிலையும் அப்பொருளின் இருநிலைகள். அனைத்துப் பொருள்களிலும் தன்னை இருப்பதாக இருத்தி, அவ்வப்பொருள்களை

யும் இருத்தல் உடைய பொருளாக நிறுத்தியும் செயற் பட வைத்தும் நின்ற நிலையே இருத்தல் நிலை.

உள்ளது இருப்பது என்ற இருநிலைகளையுடைய ஒரே பொருளைச் சத்திய நிலையும் சக்தி நிலையுமாக இணைந்து நிற்கும் பொருள் எனக் கொள்வது மரபு.

உண்மையும் மெய்மையும் ஒரே பொருளின் இருப்பைப் பற்றிய இருநிலைகள். உளது எனவும் இருப்பது எனவும் இருநிலைகளில் ஒருபொருளை அறிகிறோம் அல்லது கொள்கிறோம். அவற்றைச் சத்திய நிலையும் சத்தி நிலையும் அல்லது சிவநிலையும் சத்திநிலையும் எனக் கொள்வது சைவ மரபுணர்த்தும் சாத்திரக் கொள்கை. எனவே, கடவுளை உண்டு எனவும் கொள்ளலாம் இருப்பது எனவும் கொள்ள லாம்.

உண்டு என்பது பொருளின் தனிநிலை. அதையே 'உண்மை' எனவும் சொல்லலாம். உண்மை வேறு உளதாம் பொருள் வேறு எனக் கொள்ளல் இல்லை.

உண்டு என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. உள்ளது என்ற பொருளில் குறிப்பு வினைமுற்று என்று கொள்வது ஒருபொருள். வினைநிலையில் அவ்வாறு இணைத்துப் பொருள் செய்யாமல், அதன் தனிநிலையாகிய, பண்பு என நிற்கும் நிலையாகிய 'உண்மை' என்றே பொருள் கொள்வது இரண்டாம் பொருள். இங்கே குறிப்பிடப் பெற்ற இருவேறு நிலைகளையும் வேறு பிரித்து உணர்த்தி இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர்,

"உண்டு என் கிளவி உண்மை செப்பின்"

என்ற நூற்பாவின் (430) மூலம் உண்மையின் தனி நிலையை 'உள்' எனவும் அதன் செயற்பாட்டு வடிவமாக, குறிப்பு வினைமுற்றாக நின்று அதன் செயற்படுநிலை இன்னது எனக் குறிக்க வரும்போது 'உண்டு' எனவும் அமைத்துக் காட்டினார்.

'உண்மை' என்ற தனிநிலையும் அதன் செயற்படுநிலை யாய் 'உண்டு' எனக் குறிப்புவினை முற்றாய் நின்றநிலையும் ஆகிய இரண்டுமே காலத்தால் தாக்கப் பெறாதவை. திணை,

பால், எண், இடம் ஆகியவைகளையும் கடந்து நிற்பன. அதனாலேயே.

"வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன"

என்ற இலக்கண நூற்பாவும் அமையலாயிற்று. இதனைத் தமிழ் மரபோடு இணைந்த இலக்கண அமைப்பிலும் கண்டு தெளிய வேண்டும்.

'அ' என்ற முதன்மை எழுத்தானது கடந்த நிலையைக் கொண்ட பொருளை குறிக்கும் வரிவடிவம்.

கடந்த நிலைப் பொருளுக்கு உளது என நிற்றலும் இருப்பது என நிற்றலும் என்ற இருநிலைகள் உண்டு என முன்னே குறிப்பிட்டமையை விளக்க முறையே 'உ', 'இ' என்ற இரு வரிவடிவங்கள் அமைக்கப்பெற்றன. உள்ளது எனவும் இருப்பது எனவும் அமைந்த இருநிலைகளின் குறியீடுகளே 'உ' என்பதும் 'இ' என்பதும். 'உ' என்ற குறியீட்டினால் குறிக்கப்பெறும் நிலை அப்பொருளின் தனிநிலை. அதுவே, அனைத்துப் பொருள்களிலும் செயற்படுத்தும் நிலையில் இருப்பது என நின்று காலத்தோடு இணைந்து வரும் மாறுபாடுகளுக்கெல்லாம் உடனாகை இருப்பது என்பதைக் குறிக்க வந்த வரி வடிவமே 'இ' என்பது. இவைகளில் இருப்பது என்பதை உணர்ந்த பின்னரே 'உளது' என்பதை உணரமுடியும் ஆகையால், 'இ' என்பதை முன்னிறுத்தி, அதன் பின்னர் 'உ' என்பது நின்றது. இவ்வகையில், அ, இ, உ என்ற மூன்றையும் முதல்நிலை வரிவடிவங்களாக உணரவும் உணர்த்தவும் செய்தனர் தமிழ்ச் சான்றோர்.

அ, இ, உ என்பவைகளைப் பொருளும் அதன் இருநிலைகளும் எனக் கொள்ளவேண்டும்.

'அ' — கடந்த நிலைப்பொருள். அப்பொருள் சேய்மைச் சுட்டு என்ற அளவில் மட்டுமே உணரப் பெறும் நிலை.

'இ' — கடந்த நிலைப்பொருளின் இருத்தல் நிலை. நம்மால் அண்மையில், இருப்பதாகச் சுட்டிச் சொல்லக் கூடிய, அக்கடந்த நிலையின் ஒருபண்பு.

'உ' — கடந்த நிலைப்பொருளின் உளதாம் நிலை. சுட்டளவிலேயே உணரப்பெறும் நிலை.

இதனாலேயே இம்மூன்றும் சுட்டு என நின்று சுட்டுப்பொருள் தரவும் செய்யும் குறியீடுகள் என நிறுத்தினர்.

'எ' — கடந்த நிலைப்பொருளின் இருப்பு நிலையும் ஏனைய உயிர்களின் இருப்புநிலையும் இணைய நின்ற நிலை.

'ஒ' — கடந்த நிலைப்பொருளின் உளதாம் நிலையும் ஏனைய உயிர்களும் இணைய நின்ற நிலை.

சைவ சமயக் கொள்கையின்படி உயிர்கள் கடவுளால் படைக்கப் பெற்றவைகள் அல்ல. பரம்பொருளைப் போன்று தொன்று தொட்டு இருப்பவைகளேயாயினும், அவை தனித்து நில்லா; சார்ந்தே நிற்கும்.

பரம்பொருள் தன்னளவில் அ, இ, உ என்பவைகளை ஒன்றென நிறுத்தித் தனித்து நிற்கும் ஆற்றலுடையது. ஆனால், ஏனைய உயிர்கள் அப்பரம்பொருளின் 'இ', அல்லது 'உ' என்ற நிலைகளைச் சார்ந்தே இருக்கும் நிலை உடையவைகள்.

ஏனைய உயிர்களோடு உடனாய் நின்று, அவைகளை இருப்பனவாகவும் உள்ளனவாகவும் ஆக்கும் பணியில் ஈடுபட்ட 'இ', 'உ' என்பவைகளே 'எ' 'ஒ' என நின்றன. ஏனைய உயிர்களின் உடனாக நின்று இயக்கினாலும் அவை 'அ' எனப் பெறும் கடந்த நிலைப் பரம்பொருளின் தனிநிலைகள். ஆகையால் அவைகளை எ, ஒ என்பனவற்றிலிருந்து வேறு பிரித்துக் காணவேண்டும். அதனாலேயே, 'அ, இ, உ,' என்ற மூன்றும் சுட்டு என நிற்கும் தனிநிலைகள். சுட்டு என்பது சொற் பொருள் போல அமைந்த நிலை அன்று. குறியீடு என நின்று சுட்டுப் பொருளை உணர்த்தும். ஏனைய உயிர்களைக் கொண்டு அவைகளின் செயற்படு நிலைகளை அறிந்த பின், இவ்வாறு மூன்று தனிநிலைகள் இருக்க வேண்டும் என்ற வகையில் அமைக்கப் பெற்றவைகளே அவைகள் எனத் தெரிந்து கொள்வதே சுட்டெழுத்துக்களின் பொருள். அ, இ, உ என்பவை ஒன்றும் அதன் இருநிலைகளும் என உணர்த்தும் வகையில் இணைத்து அறிவிக்க முற்பட்ட போது அமைந்த உருவமே ஆய்த எழுத்து.

அ　　　0
இ　உ　　00

முப்புள்ளியாய் அல்லது மூன்று வளைவுச் சுழிகளாய் அமைந்த **தனிநிலை** எழுத்து. அ+இதம் எனப் பிரித்து அ என்பதும் அதன் இது எனச் சுட்டப் பெறும் நிலைகளும் எனப் பொருள் கூறி, அ இதம் என்பதே ஆயிதம் என நின்று, பின்னர் ஆய்தம் என நின்றது எனவும் கொள்ள லாம்.

அ, இ, உ, எ, ஒ என்பன தலைமை உயிரும் அதன் இரு நிலைகளும், அதன் இருநிலைகளோடு இணைந்த ஏனைய உயிர் களும் எனக் கொள்ளல் வேண்டும். இவ்வைந்து நிலைகளும் செயல் மேற் கொள்ளும் போக்கில் தத்தம் சத்திகளுடன் இணைய நின்ற போது ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்ற ஐந்து எழுத்துக்கள் அமைந்தன. கடந்த நிலைப்பரம்பொருளைச் சுட்டும் 'அ' என்பதும் செயற்படுமா எனின் அது தன்னள வில் தனித்தும், பெருகி நின்று ஏனையவற்றில் கலந்தும் செயற்படுத்திக் கொண்டிருக்கும்.

அடுத்து ஐ, ஔ என இரண்டு எழுத்துக்கள் உயிரெழுத்துக்களுடன் இணைந்து நிற்கும். அகரத்தின் இகரமும் ஏனைய உயிரும் அவைகளை இணைக்கும் மெய்யும் ஆகியவைகளின் கூட்டு வடிவம் 'ஐ'. அவ்வாறே அகரத்தின் உகரமும் ஏனைய உயிரும் அவைகளை இணைக்கும் மெய்யும் ஆகியவைகளின் கூட்டு வடிவம் 'ஔ'.

ய், வ் என்ற இரு இடையின மெய்கள் உயிர்களுடன் இணைந்து, இ, உ என்பனவற்றின் ஆக்கத் தொழிலால் ஏனைய உயிர்களைப் போலவே இருப்பதாம் நிலையும், உளதாம் நிலையும் பெறும் என்பதே அவ்வெழுத்துக்களின் உட்கிடை.

அகரத்தின் இருதனிநிலைகளாகிய, இ, உ என்பவை தனித்த அமைப்பினவாதலின் அவை குறுமை இயல் உகரம் எனவும் குறுமை இயல் இகரம் எனவும் அமையும். அத்தகைய 'உ' கரத்தால் விளையும் மாற்றங்களை — உளதாம் நிலை வரிவடிவத்தால் அமையும் மாற்றங்களைத் தனித்து விளக்கும் முறையிலேயே குற்றுயலுகரப் புணரியல் தனி இடம் பெறலாயிற்று. எண் வடிவாக நிற்கும் போது அதற்குத் தனிவடிவும் ஆற்றலும் உண்டு.

'ஐ' எனத் தன்னை உயர்த்திக் கொண்ட உயிர், உட லோடு இணைந்து தன்னை வளர்த்துக் கொண்ட உயிர் கால

மாற்றங்களைக் கடந்த இருப்புடையதாக இருக்கும். எனினும், காலமே அழியும் போது அதுவும் அழியும். அழியும், என்றால் இல்லாமலே போய்விடாது. 'அ' எனநின்ற பரம்பொருளின் 'இ' என்ற நிலையில் ஒடுங்கி, பின்னர் 'அ' என்பதனுள் ஒடுங்கும். 'அ' என்ற கடந்தபொருளே ஒடுக்கி உளதாம் பொருள். ஏனையவை ஒடுங்கி உளதாம் பொருள்.

உயிர்களுக்கு அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று உண்டு. அவைகளைச் செயற்படுத்தி வாழ்விக்க வேண்டி இறைவனும் ஞானசக்தி, இச்சாசக்தி கிரியாசக்தி என்ற மூன்று சத்திகளை அமைத்துப் பணிபுரிவான். உயிர்களுக்கு அமையும் உடம்பானது உயிரின் அறிவு, இச்சை, செயல் களுக்கு ஏற்ப, சாத்துவிகம், தாமசம், இராசதம் என்ற மூன்று குணங்களைக் கொண்டதாக அமையும்.

எனவே, உலகத்துயிர்கள் அகரத்தின் இருநிலை களாகிய இ, உ என்பனவற்றின் உடனாய்நின்று செய்த உதவியையும் அவைகள் தம் இச்சை, கிரியை, ஞானம் என்ற சத்திகளுடன் இணைந்து நின்று செய்த உதவியையும், உடலாக நின்று சத்துவம், இராசதம், தாமசம் என்ற முக்குணத்தாக்கங்களினால் பெறும் உதவியையும் கொண்டு தன்னை வளர்த்து, தன்னை இருப்பதாக ஆக்கி, பின்னர் உள்ளதாக ஆக்குதல் வேண்டும். இவ்வகையில்,

'என்னையும் இருப்பதாக்கினன்'

என்ற மணிவாசகர் வாக்கினையும், இந்நூலின் முதல் தலைப் பில் அமைத்த இருந்தார், உளரானர் என்பவை பற்றிய விளக்கங்களையும் இணைத்துக் காணவேண்டும்.

இனி, உடம்பு (மெய்) உயிருக்காக, அதன் வளர்ச்சிக் காக அமைத்துக் கொடுக்கப் பெற்றதுதான். உயிரின் குணங்களாக அமைந்த அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றற்கும் இணையாக நின்று அவைகளை வளர்ப்பதற்கே சாத்துவிகம், தாமசம், இராசதம் என்ற மூன்று குணங் களுடன் உடம்பு அமைகிறது. முக்குணங்களின் ஏற்றத் தாழ்வுகளாலேயே வன்மை, மென்மை, இடைமை என்ற முப்பிரிவு மெய்கள் (உடம்புகள்) அமைகின்றன.

இனி, ஒலிகளால் சொல் அமைகின்றது. மண், நீர் முதலியவைகளால் பொருள் அமைகின்றது. ஒலியின்

மூலம் அறிவு இயக்கம் அமையும். பொருளின் வழியே அறிவுக்கு மூலமாகிய அனுபவம் அமையும். ஒலியால் அமையும் சொல்லாயினும், மண் முதலியவைகளால் அமையும் பொருளாயினும் அவை அனைத்தும் அறிவற்றவை; உயிர் மட்டுமே அறிவுத் தொடர்புடையது. உடலும் உயிரும் நின்ற நிலையில் 'அறிவு' எப்படி இயக்கம் பெறுகிறது?

உடலும் உயிரும் ஒன்ருேடு ஒன்று இணைந்து நின்று எதையும் பெற இயலாதவை. இவ்விடத்தில் அப்பரடிகள் ஒரு வினவை எழுப்புகின்ருர்.

"மனிதர் காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற் கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே"

என்பது பொதுத் தனித் திருக்குறுந்தொகைப் பதிகம் 205-இல் ஏழாம் திருப்பாட்டு.

கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே என்றதன் குறிப்பைச் சிந்திக்க வேண்டும். பொருள் நிலையில் நிற்கும் கனியைக் கடித்துத் தின்னலாம். ஆனல், அதன் ஒலி நிலையை நம்மால் அனுபவிக்க இயலாது. நமச்சிவாயம் என்பது ஒரு கனியெனில் நம்மால் எப்படிச் சுவைக்க முடியும்! ஒலியனுபவம் இல்லையாளுல் அறிவில் அக்கனியைப் பற்றிய எழுச்சி அமையாது. இதனை விளக்கி, நம் அனுபவத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கட்டுப் படுத்துதல் வேண்டும் என்ற நிலையில், இரண்டு நிலைகளையும் இரு வேறு வகைகளில் அறிந்து கட்டுப்படுத்த வேண்டும் என்ற குறிப்பினை நீத்தார் பெருமையிற் காணலாம்.

"உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து"

என்று அறிவையும், அவ்வாறே

"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தன்
வகை தெரிவான் கட்டே உலகு"

என்று பொருள் பற்றிய நிலையையும் தனித்தனியே ஒருமைப்படுத்தி நிறுத்த வேண்டும் எனக் கூறுவது திருக்குறள் நீத்தார் பெருமை.

இங்கேயும் ஒருசெம்மை உண்டு. உடம்பும் உயிரும் இணைந்து நின்ருலும் பயன்பெற முடியாத அளவுக்கு ஒத்த இடைவெளி இருக்கிறது. முதலில் நிற்பன முதலாகிய அனைத்திலும் தனித்தனியே கலந்து வந்து பின்னர்த் தன்னை என்னேடும் என்னைத்தன்னேடும் கலக்க வைத்துக் கொள்ளும் ஒரு பொருள் உண்டு என்ருர்.

இரண்டு வேறுபட்ட பொருள்களுக்கு இடையில் கலந்து நின்ற புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோம் என்று எடுத்துக் காட்டினர்.

"நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினெடு காற்ருகி நெடுவானுகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
அன்புடையார்க்கு எளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை"

என்பது மறுமாற்றத் தாண்டகத்தின் ஏழாம் தாண்டகம். இவ்வாறு அனைத்துடனும் கலந்ததாய், பின் என்னுள் கலந்ததாய்நின்ற பொருள் தனிநிலையில், தற்பரமாய், கடந்ததாய் நின்ற 'அ' என்னும் பொருளே. எந்த ஒன்றுடனும் சாராது நேர்நின்று கலத்தலின் அதுவே அருட்கலப்பாய்ச் செம்மை என நின்ற செம்பொருள் ஆயிற்று.

'அ'காரம் என நின்ற அத்தனி நிலைப் பொருளே நேர் நின்று தொண்டாற்றும் செம்மைப் பொருள் என்பதைத் 'தற்பரம்' என்று குறிப்பிட்டதோடு நில்லாமல் இறுதித் தாண்டகத்தாலும் குறிப்பிடுகின்ருர்.

"தென்திசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கு என்ருலும்
குணமாகக் கொள்ளோம் எண்குணத்துளோமே"

என்று குறிப்பிடுவதன் நுட்பம் உணர்தல் வேண்டும். தென்திசைக்கோன் குற்றேவல் செய்கிறேன் எனக் கூறிய போது, குற்றேவல் முக்குணசம்பந்தமாகிய உடம்பைப் பற்றியது, திருத்தொண்டு என்பது இறைமையின் எண் குணத்தோடு இயைபுடையது என்ருர் அப்பரடிகள். திருத்தொண்டானது முக்குண நிலைகளைச் சார்ந்து உடம்பை வளர்க்கும் குற்றேவல் ஆகாது. உயிர்களின் அறிவை வளர்த்தல் மூலம் முக்குண வயத்ததாகிய உடம்பையும் வளர்ப்பதே திருத்தொண்டு என்ருர்.

தற்பரமாய் நின்ற கடந்த நிலைப்பொருள் செம்பொருள் எனக் கலந்து நிற்கின்றது. அப்பொருள் 'அ' என நிற்பது ஆதலின், 'அ' என்பது எட்டையும் குறிக்கு மாதலின் எண் வகைக் குணத்துள் நின்றது எனப்பெற்றது. அக்குணங் களைக் கொண்ட அகரத்தை உள்ளத்தே நினைந்து, அத் தகைய அகரநிலைப் பொருள் எல்லா உயிர்களிலும் கலந்து நிற்பது எனக்கொண்டு, அவ்வகையில் அனைத்துயிர்க்கும் தொண்டு சிறக்குமாறு பணியாற்றுதல்.

எனவே, செம்மையில் நின்று, எண் குணம் கைவரப் பெற்று, எண் குண நிலையினனைக் கொண்டிருக்கும் ஏனைய உயிர்களுக்கும் தொண்டாற்றுதல் என்பதும் செம்மையில் நிற்றலே.

இங்கே, அப்பரடிகள் பெற்ற 'செம்மையில் நிற்றல்' என்ற அனுபவமானது 'ஓம்' என்ற ஓரெழுத்து நேர்நிலை அனுபவம். அ, இ, உ என்ற ஓரெழுத்து நிலையை, அகரத்தை உயிருக்கும், இகரத்தை உடம்புக்கும் என நிறுத்தி, 'உ' என்பதை அருளமுதாக நேர்நிறுத்தி, செம்மை என நின்ற கடந்த பொருளில் நின்று, அதன்மூலம் திருத் தொண்டு புரிந்தாரெனக் கொள்ளல் வேண்டும்.

*முடிப்புரை*

பல்லவமன்னனுடன் அமணர்கள் செய்த நால்வகைக் கொடுமைகளை வென்று, திருவதிகை வீரட்டானஞ் சேர்ந் தார் திருநாவுக்கரசர். திருந்தா அமணர்தம் தீநெறிகளை வெல்வதற்குக் காரணம் அவர் செய்த திருத் தொண்டே என்பது சேக்கிழார் வாக்கு. திருத்தொண்டின் உறைப் பாலே வென்றவர் என அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை விளக்கமுறுத்துகின்றார். மேலும், அவர் திருநாவுக்கரசரை

> "இம்மையிலும் பிழைப்பது என என் போல்வாரும் தெளியச்
> செம்மைபுரி திருநாவுக்கரசர்"

என்று சிறப்பு முறையிலும் விளக்க முற்பட்டார். சூலை நோய் காரணமாகத் திருவதிகை சேர்ந்து, உடனேயே பல்லவமன்னன் அழைக்கச் சென்ற திருநாவுக்கரசர் அத் துணைக் குறுகிய கால அளவையில் எத்தகைய பெருந் தொண்டுகளை ஆற்றியிருக்க முடியும் என்பதே அடிப்படை வினா. தாம் சமணர் செய்த கொடுமைகளிலிருந்து வென்று மீண்டமைக்குத் தம்முடைய எந்த ஒரு தொண்டினையும்

காரணமாக அமைத்துக் காட்டவில்லை திருநாவுக்கரசர். இந் நிலையில், திலகவதியாரால் தொண்டுநெறிப்படுத்தப் பெற்ற திருநாவுக்கரசர் திலகவதியார் அருளிய சைவநலத் தால் பேரருள் அனுபவம் வாய்க்கப் பெற்றிருக்கிறார். தம்பியார் உளராக வேண்டும் என்று தூண்டு தவ விளக்காக அமைந்த திலகவதியார், திருநாவுக்கரசரை அருள்நெறியால் தெளிவும் அனுபவமும் பெறச் செய்து உளராக ஆக்கியிருக்கிறார் எனக் கொள்ள வேண்டும். அதனாலேயே, பல்லவமன்னனின் ஏவலர் வந்ததும் அவர் களிடம் கூறிய மாற்றத்தை உள்ளீடாகக் கொண்டு வந்த மறுமாற்றத் திருத்தாண்டகமே திருநாவுக்கரசரின் திருத் தொண்டு நெறிக்குரிய சான்றுகள் பலவற்றை எடுத்து விளக்கும் அருள் வாய்ப்புடையதாக அமைந்தது எனக் கொள்ள வேண்டும். தம் கையால்திருத்தொண்டு என்ற மரபுமுறையை முதன்முதலாக அமைத்துத் தொண்டின் திறம் பேணிய திலகவதியம்மையின் திருவருள் வெளிப் பாடே திருநாவுக்கரசரிடம் பதிந்து, திருத்தொண்டு நெறி என்ற சிவகதியாய் வெளி வரலாயிற்று எனக் கொள்ளுதல் வேண்டும்.

'மெய்ம்மையாம் உழவைச் செய்து' எனத் தொடங்கும் அப்பரடிகளின் திருப்பாட்டானது திருத்தொண்டு நெறிக் கென அமைந்த அளவுகோல் எனக் கொண்டு, அந்த அளவு கோலின் வழிநின்று ஆராய்ந்தால் மறுமாற்றத் திருத் தாண்டகம் முழுவதும் 'செம்மையுள் நிற்றல்' என்ற கொள் கையைப் பல்லாற்றாலும் விளக்கி அமைக்கும் திருப்பெற்று விளங்குகின்றது எனக் கொள்ளலாம்.

செய்ந்நன்றி உணர்வு, வாய்மை என்ற இரண்டு அடிப் படை அறங்கள் வாழ்வியல் அறங்களாக நிற்க, கொல் லாமை போன்ற நல்லறங்கள் துணை நிற்க, திருநாவுக் கரசர் அறத்தினைச் செயற்படுத்தி வாழ்வதற்கு மூல முதற்பொருளாக நின்று விளங்கும் 'செம்மை' என்ற ஒன்றை, இன்னது என ஆய்ந்து காணவும், ஆய்ந்து காணப் பெற்ற 'செம்மை' என்ற தனிநிலைப் பொருளில் நின்று தொண்டாற்றவும் வல்லமை பெற்றிருந்தார். செம்மை என்ற நடுநிலைப் பொருளில், உயர் செம்பொருளில் நின்றே உலகத்துயிர்களுக்கெல்லாம் திருத்தொண்டு பேணினார்.

# 6. முதற்பகுதியின் முடிப்புரை

'திருநாவுக்கரசர் — ஓர் ஆய்வு' என்ற இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. திருநாவுக்கரசரின் வாழ்வியல் நிகழ்வுகளை இரண்டாகப் பிரித்து ஆய்வு செய்து காணலாம். திலகவதியாரை உடன் தோன்றினராகக் கொண்டு வாழ்ந்த அவர் சமண் சமயம் சார்ந்து, அங்கே தருமசேனராம் தலைமைத் தகுதியையும் பெற்று, மீளவும் சூலைநோய் காரணமாகச் சைவம் திரும்ப, அதனைப் பொருத சமணர்தம் சொற் கேட்டுப் பல்லவமன்னன் இழைத்த கொடுமைகளை வென்றுநின்ற வாழ்வுத்திறம் முதற்பகுதி. பிற்பகுதியில் அவர் பலதலங்களுக்கும் சென்று வழிபாடு செய்தல், திருவருள் நெறிசார் திருத்தொண்டாற்றுதல், இறுதியில் பூம்புகலூர் மேவிய புண்ணியன் திருவடிகளில் சென்று கலத்தல் ஆகியவைகள் இணைகின்றன.

முதற்பகுதியில் திருநாவுக்கரசர் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் மூலமாய் நின்று தொண்டாற்றியவர் திலகவதியாரே. திருநின்ற செம்மையைத் தன்னகத்துக் கொண்டு விளங்கும் சைவப் பெருநெறியின் தூண்டு தவவிளக்கென நின்று, அருள்நெறியில் தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயையும், அனைத்துயிர்களும் உளவாக வேண்டும் என வைத்த அருளும் காரணமாக இவ்வுலகில் தம்முடைய இருப்பினை அமைத்துக் கொண்ட திலகவதியார் சைவ சமயம் சந்திக்க இருக்கின்ற சிக்கல்களையும் தீர் திறன்களையும் முன் கூட்டியே அறிந்து, வழிவகைகளை வகுத்த தோடன்றிச் செயற்படுத்திக் காட்டியும் வாழ்ந்த தவ மூதாட்டியாவர்.

சைவசமயத்திலிருந்து பிறசமயம் சென்று சேர்பவர்களைப் பற்றிக் கவலை கொள்ளாதிருப்பினும், பிறசமயத்திலிருந்து சைவம் நோக்கி வரும் மக்களை எதிர்காலத்திற்

காணமுடியும் எனக் கண்டு, அவ்வாறு வருபவர்களைத் திரு வாளன் திருநீறு கொடுத்தல் என்ற அந்த ஒரேயொரு செயலின் மூலமே கூட, சைவசமயம் சாரவைத்து விடலாம் என வகுத்தும் நெறிப்படுத்தியும் அமைத்தார். அவ்வாறு, திருநீறு கொடுத்துச் சைவசமயம் சார்தற்கு அனுமதி கொடுப்பவர்கள் **தம்கையால்** திருத்தொண்டு செய் கடமைப்பாட்டில் நின்றவராக இருத்தல் வேண்டும். புலைத் தொழிலும் இழிகுணமும் படைத்தாரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில், அவரை வணங்கும் பேறுடையோம் என்றும், ‘சிவன்’ என்று சொல்லும் நாவு டையார், எவரோ அவர் சைவப் பெருமக்களால் வணங்கு தற்குரியர் என்றும் கூறி, சைவசமயத்தவர் சாதி, இனம், தொழில், சமுதாயத்தில் அவர் ஏற்றுள்ள பொருளாதார அமைப்புநிலை ஆகியவைகளால் தாக்குண்ணப் பெருதவர் என்பதைச் சைவநீதி என அமைத்துக் காட்டிய பெருமை திலகவதியார்க்கு உண்டு. மலையே வந்து வீழினும் கலங் கலாகாது என்ற மனத் திண்மையானது சைவம் தந்த பேறு எனவும் பல்லவமன்னன் அமைத்த கொடுமைகளை நேர்நின்று ஏற்று, மந்திர மாய வித்தைகளால் வென்று வந்தார் எனக் கருதப் பெற முடியாதவாறு, நமச்சிவாயம் சொல்ல வல்லோம், நமச்சிவாயம் நவிற்றி உய்ந்தேன் என்றும் எடுத்துக் காட்டி, உடையார் ஒருவர் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை என்றெல்லாம் கூறியதோடு நின்றுவிடாமல் வாழ்ந்தும் காட்டிய வன்மையாளர் எனத் திருநாவுக்கரசரை நிறுத் திய பெருமை திலகவதி அம்மையார்க்கு உண்டு.

பிறப்பால் உரிய சமயத்திலிருந்து வேற்றுச் சமயம் சார்தல் என்ற கொள்கையைப் பல்லாற்றுனும் ஆராய்ந்து, நல்லனகொண்டு, அல்லன நீக்கும் வகையில் சிவநெறியை வகுத்தும், செயற்படுத்தித் தெளிவித்தும் சைவசமயத் துக்குத் தொண்டுபேணிய நிலையை அடிப்படையாகக் கொண்டது திருநாவுக்கரசரின் வாழ்வியல் பிற்பகுதி. திருநாவுக்கரசரின் வாழ்வியற் பிற்பகுதியின் ஆக்கம் சிறப் பியல்புகள் ஆகியவை இரண்டாம் பகுதியில் விளக்கப் பெறும்.

இம்முதற்பகுதியில், திலகவதியார் மேற்கொண்ட திருத்தொண்டு நெறி, அவர் சைவசமயத்துக்கு உறுதி தரு

வனவாக அமைத்துக் காட்டிய கொள்கைகள், அவர் வரலாறு ஆகியவை விளக்கப் பெற்றன. சிவநலம் வேறு, சைவநலம் வேறு என்ற தத்துவம் திலகவதியார் வாழ்வின் மூலம் விளக்கப் பெற்றது.

அடுத்து, திருநாவுக்கரசர் சமணஞ் சார்தற்குரிய சூழல், காரணம் முதலியவைகளுடன் அறவாழ்வின் அடிப்படையில்தான் சமய வாழ்வு மலரும் என்ற கொள்கையும், அற வழியில் நின்று செய்யும் சமுதாயத் தொண்டும் சமயவழியில் நின்று செய்யும் சமுதாயத் தொண்டும் எந்த அடிப்படையில் வேறுபடுகின்றன என்ற வகையில் அமைந்த தொண்டு நெறிக் கொள்கையும் விளக்கப் பெற்றன.

கொல்லாமை உயர்ந்த அறமே; ஆயினும், கொல்லாமையை மட்டுமே கொண்டு உண்மை அறவாழ்வையோ உண்மைச் சமய வாழ்வையோ ஒருவன் மேற்கொள்ள முடியாது. வாய்மை என்பதே வாழ்வின் விளக்கமாக நிற்கும் தனிநிலை அறம். மெய்ம்மையை அடிப்படைக் கொள்கையாக ஏற்று, பொய்மை கொலை ஆகியவைகளை நீக்கி, பொறுமை என்ற அறம் துணையாக, 'செம்மை' எனப் பெரும் பேரறத்தில் நிற்க வேண்டும்.

செய்ந்நன்றி அறிதல், வாய்மை என்ற இரண்டு அறங்களின் அடிப்படையில் 'நடுவுநிலைமை' என்ற அறத்தை ஆய்ந்து தெளிதல் வேண்டும். நடுநிற்றல் என்பதை (Middle path, Golden Mean) இருமாறுபட்ட முனைப்பு வழிகளை மேற்கொள்ளாமல் இடைநிற்றல், மிதமான கொள்கையில் நிற்றல், பொன்மயமான நடு என்றெல்லாம் மேலைநாட்டுத் தத்துவ மேதை பிளேட்டோ போன்றவர்களும் இந்திய நாட்டு அறப்பேரொளி எனப்பெறும் புத்தர் போன்றவர்களும் எடுத்து விளக்கிய நேரத்தில்,

> "தம்மையே நோக்கிக் காணல்
> தகவெனும் வேலி இடல்"

என்ற இருநிலைமைகளைக் கொண்ட ஒருமைத் தத்துவ ஆய்வு முறையை அமைத்துக் காணவேண்டும் என வழி வகுத்தவர் அப்பரடிகள். அவ்வகை ஆய்வின் அடிப்படையில், நம்மால் காணவும், அறியவும், துய்க்கவும் இயலுவதான செம்பொருள் நிற்கும் என்றார். அதனை இருமையின்

இடைநின்ற உயர் ஒருமை என்றார். அதனை இருமையின் இடையிற் காணலாம் ஆயினும், அதுஇருமையைக் கடந்த ஒருமைச் செம்பொருள் என நிறுத்தினர் அப்பரடிகள்.

செம்மையில் நிற்றல் என்பதே அறவாழ்வையும் சமய வாழ்வையும், தனிமனித வாழ்வையும் பொதுமக்கள் வாழ்வையும், அறத்தின் அடிப்படையில் நேர்ந்த முரண்பட்ட வாழ்க்கைகளையும் நடுநின்று இணைக்கும் வாழ்வியற் பேரறமாகும். ‘செம்மையில் நிற்றல்’ என்ற பேரறத்தை எந்த எந்த வழிகளில் அனுபவமாக ஆக்கிக் கண்டிருக்கிறார் திருநாவுக்கரசர் என்ற செய்தியும் இம்முதற்பகுதியில் விளக்கப் பெற்றன. இம்முதற் பகுதியைத் தொடங்கியும் முடித்தும் வைக்கும் மூல அரணம் என நின்று விளக்கிய, திருநாவுக்கரசரின் வாய்மை மொழியை முன்னிறுத்தி, இம் முதற்பகுதி நிறைவெய்துகிறது.

“மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பராயின் சிவகதி விளையு மன்றே”

திருநாவுக்கரசர் 4.76.2.

# பொருண்மை - அகரவரிசை


'அ' என்பது பரம்பொருளின் கடந்தநிலை; அதன் இருத்தல் நிலை 'இ'; உளதாதல் நிலை 'உ' 157

'அ' என்ற பரம்பொருள் மூன்றாய்நின்ற நிலையைக் குறிப்பதே ஆய்தம் ஃ 160

அடிமையின் நிலையில் அன்பே அமையும் 75

'அடியின் கீழ் இருக்க' அம்மையார் வாக்கு 35

அந்தணரும் போற்றும் அந்தண்மை 83

அந்தண்மையும் அறமும் 103

அப்பரடிகள் இருமைநிலையில் வாழவில்லை 72

அப்பரடிகள் தீமைநேர்ந்த காலை செம்மையில் நின்றமுறை 156

அம்பொன் மணி நூல் தாங்காத திலகவதியார் 27

அம்மையப்பர் உளராதற்கும் தம்பியார் உளராதற்கும் இடைநின்ற நடுவிருத்தல் 46

அம்மையப்பர் என்பதுடன் உடன் தோன்றினர் இணைப்பு 22-23

''அம்மையாரைத் தந்தார் ஆரூரர்'' 38-39

அறம் பொருள் இன்பம் — வைப்பு முறை 91-93

அறவாழ்வும் சமய வாழ்வும் 50; 93

ஆசான் என்பதன் பொருள் 43

ஆசு எனநிற்றல் 44

ஆய்தம் என்ற தனிநிலை 160

ஆளுடைய அரசுகள்-இராமலிங்கர் 2

இகலுடைய விடையுடையான் 155

இரு என்ற தனிமொழி 29

இருத்தலும் உளதாதலும் 28

இருப்பதாக்குதல் — திருக்களிற்றுப்படியார் 34-35

உடற்குணமும் உயிர்க்குணமும் 164

உடன் பிறந்தாரின் தயவு நின்ற செயல் 40

உண்டு என்பதற்குத் தொல்காப்பியர் தரும் விளக்கம் 158
உயிரெழுத்துக்களின் அமைப்புமுறை 159-160
உளராதல் நிலையானது இருத்தல் நிலையை உடன்கொண்டதே 36
உளரானுர் உளரானுர் 16
உறுபிணியார் செயல் ஒழிந்திட்டு ஓடிப் போனுர்-விளக்கம் 110-113
'எண்குணத்துளோம்' என்ற அப்பரடிகள் வாக்கு 165
எழுந்திரீர் என்ற அருள் வாக்கு 58; 62
என்னையும் இருப்பதாக்கினன், மணிவாசகர் 33
ஒருவர் தலைக்காவல் இலாமை 64-69
ஒலியாலும் பொருளாலும் இணைந்த அனுபவம் தேவை 163
ஓம் என்ற ஓரெழுத்து அனுபவமே செம்மையில் நிற்றல் 165
கரையேறிய இடம், கரையேற விட்ட குப்பம், ஆய்வு 123
காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமை 64-70
குற்றேவல் வேறு; தொண்டு வேறு 164
கூற்ருயினவாறு விலக்ககிலீர் — பொருள் 77-80
சத்திய நிலையும் சத்திநிலையும் 157
சமணர்களுடன் வாதம் — சம்பந்தர் அப்பர் வரலாற்று ஒப்பாய்வு 113
சமண் சமயத்தில் அப்பரடிகள், திரு.வி.க. 70-75
சிவப்பிரகாசர் நோக்கில் அப்பர் 26; 37; 42; 83
சிவம்பெருக்கும் திரு 14
'சும்மா இரு' அருணகிரிநாதர் 30
சூலை தந்த வாழ்வு நிலை 57
சூலைநோய்க்கு முன்வினை இல்லை 73
சூலை மடுத்தாளுதல் — இரண்டு முறை 56
செம்மை — சிவகதி இணைப்பு 141
செம்மையில் நின்ற நாவரசர் திருவுரு 116
செம்மையுள் நிற்றல் — மூவகை விளக்கம் 150-160
சேக்கிழார் வகுத்தளித்த செம்மை 109
சைவசமயக் கடவுள் 'மலைவில்லார்' 155
சைவநலம் 37
சைவநலம் என்னும் செம்மை 80-81
சைவநலம் சிறப்பாய்வு 84-90
சைவனுக இருப்பதற்குத் தகுதி 115
ஞானப்பால் தந்த நால்வகை அறிவு 89

ஞானியாரடிகளின் திலகவதியம்மை துதி 40
தமக்கையார் இல்லெனில் யானும் உளேன் அலன் 41
தமக்கையும் தம்பியும் படிநிலை வளர்ச்சி 95-97
தம் கைத்திருத் தொண்டு 49
தம்மையும் நோக்கிக் காணல், தகவெனும் வேலி, செம்மையில் நிற்றல் 144
தலைமைக் கடவுள் பணி 74
திருத்தொண்டு நெறிக்கு மூலமானவர் திலகவதியாரே 59
திருநாவுக்கரசரின் குடும்பம் 37
திருநாவுக்கரசரின் பதிகங்கள் வரலாறு 7
,, முற்பிறவி வரலாறு 54
திருநாவுக்கரசு என்னும் திருப்பெயர் 60
திருநின்ற செம்மை 13
திருப்பாட்டு என்பது மரபுப்பெயர் 2
திருவாமூர் திருவாமூர் 14
திருவைந்தெழுத்தும், உடல் உயிர் இருப்பும் 31
திலகவதி, புனிதவதி, பதுமவதி 20-21
திலகவதியாரின் இருத்தலும் திருநாவுக்கரசரின் உளதாதலும் 18-19
திலகவதியார் — மங்கையர்க்கரசியார் — தொண்டுகள் 100
தூண்டு தவவிளக்கும் சுடரொளியும் 53
நடுவிருத்தல் எனப்பெறும் இருத்தல் நிலை 46
நடுவிருத்தல் என்பதை மணிவாசகர் விளக்கும் முறை 46-47
நம்பியாண்டார் நம்பியின் திருஏகாதசமாலை 9-12
,, திருத்தொண்டர் திருவந்தாதி 3
நாவரசரின் நால்வகை வெற்றிபற்றிய அறிஞர் கருத்தும் ஆய்வும் 117
பதி, பசு, பாசம் என்பவை பத்தென நிற்றல் 32-34
பிறந்தால் திருநாவுக்கரசரைப் போல் பிறக்க வேண்டும் — சிவப்பிரகாசர் 42
பெரியபுராண அடியவர்கள் நேர்நின்றவர்களே 154
பெரியபுராண அடியவர்கள் வாழ்க்கை அறநெறிமீதெழுந்த அருள் நெறி 153
பொது ஆட்டிற்கு வல்லன் — சிவப்பிரகாசர் 26-27
பொருள்களின் இருப்புக்குத் தம் இருப்பைத் தருதல் 26
மருள்நீக்கியாரின் சமுதாயத் தொண்டு 48-49

மருள் நீக்கியார் தருமசேனராதல் 52

மறுமாற்றத் திருத்தாண்டகம் வழங்கும் செய்தி 105-108

மனுநீதிச் சோழன் நின்ற செம்மை 153

மனுநீதிச் சோழன் நீதி — உத்தரபாகத்து நீதி — இராமலிங்கர் 154

முதற்பதிகப் பொருண்மையும் ஆய்வும் 60

வாய்மையும் செய்நன்றியும் 146-147

*எம் வெளியீடுகளில் இவருடையன :*

1. வீரசைவம் 1977
(தத்துவத்துறைப் பொன்விழா வெளியீடு)
2. திருமுறைத் தெளிவே சிவஞானபோதம் 1979
3. திருஞான சம்பந்தர்—ஓர் ஆய்வு முதற்பகுதி 1981
4. திருஞான சம்பந்தர்—ஓர் ஆய்வு இரண்டாம்பகுதி 1982
5. சிதம்பரம் இராமலிங்கரின் சித்திவளாகம் 1983
(சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒரு நூற்றுண்டின் மேனிக்கு வெள்ளி விழா வெளியீடு)

*நூலாசிரியரைப் பற்றி :*

1929-இல் பிறந்த இவர் திருப்பாதிரிப்புலியூர், தவத்திரு ஞானியாரடிகளின் மாணுக்கராவார். மயிலம், சிவஞான பாலய சுவாமிகள் அருள் வழியில் புலவர் கல்வியையும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஓ. எல்., எம்.ஏ. (தத்துவம்), டாக்டர் ஆகிய கல்வித் தகுதிகளையும் பெற்று, அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையிலும் தத்துவத் துறையிலும் விரிவுரையாளராகவும், பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியில் இரண்டாண்டுகள் முதுகலைப் பேராசிரியராகவும் பணியாற்றிய இவர் இப்போது இந்நிறுவனத்தில் துணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிருர்.